மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**


# நாட்டுப்புறவியல்


**2023-2024**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012

## நாட்டுப்புறவியல்

**அலகு 1 நாட்டுப்புறவியல் அடிப்படை கருத்தாக்கம்**

நாட்டுப்புறவியல் அறிமுகம், வழக்காறுகள் குறித்த சிந்தனைகள், வரையறைகள், வரையறைகளின் பொது அலகுகள், வழக்காறுகளின் பொதுப் பண்புகள், தமிழில் நாட்டுபுறவியல் வரலாறு, நாட்டுப்புற இலக்கியமும் ஏட்டிலக்கியமும், நாட்டுப்புறவியல் கோட்பாடுகள்

**அலகு 2 நாட்டுப்புற இலக்கியம்**

நாட்டுப்புறப் பாடல்கள் (தாலாட்டு, குழந்தை, தொழில், விளையாட்டு, கொண்டாட்டம், உணர்ச்சி, ஒப்பாரி, சடங்கு, காதல்,பிற), கதைகள், கதைப்பாடல்கள் (சமூக, புராண, இதிகாச வரலாறு பிற)மரபுக் கதைகள், கதையடைவுகள், பழமொழிகள், விடுகதைகள்

**அலகு 3 நாட்டுப்புற நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும்**

மக்கள் வாழ்வியல், தொழில், தொழில் கருவிகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சமயம், வழிபாடுகள் (சிறுதெய்வம், பெருந்தெய்வம்), வழிபடு முறைகள், விழாக்கள், சடங்குகள், விளையாட்டுகள், வட்டாரச் சொற்கள், மருத்துவம், பண்பாடு, மக்கள் பெயராய்வு, ஊர்ப் பெயராய்வு, நாட்டுப்புறத் தொழில் நுட்பவியல்

**அலகு 4 நாட்டுப்புறக் கலைகள்**

நிகழ்த்துக் கலைகள், ஆட்டங்கள் (கும்மி, கோலாட்டம், தப்பாட்டம் (பறை), கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை, தோற்பாவை),புழங்குப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், கட்டடக்கலை, இசை, பாரம்பரிய தொழில் நுட்பம்

**அலகு 5 நாட்டுப்புறவியல் கோட்பாடுகளும், நவீனமும்**

சங்க இலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கிய கூறுகள், திரைப்படங்களில் நாட்டுப்பறவியலின் தாக்கம், பயன்பாட்டு நிலையில் நாட்டுப்புறவியல், நாட்டுப்புறவியலும் பிற இயல்களும் (சமூகவியல், மானுடவியல், வரலாற்றியல், உளவியல், மொழியியல்) நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் போன்றவற்றின் இன்றைய நிலை,நாட்டுப்புற படைப்புகளின் நவீன வடிவங்கள், கள ஆய்வு முறைகள் .

## அலகு 1

## நாட்டுப்புறவியல் அடிப்படை கருத்தாக்கம்

### நாட்டுப்புறவியல் அறிமுகம்

மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாதது போன்று, மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் உள்ளோம். மொழியின் தோற்றம் உருவான போதே மனித இனமும் தன் சிந்தனைத் திறனை வளர்க்க முற்பட்டபோதே வாய்மொழி இலக்கிய வகை கருக்கொண்டது எனலாம். உலகில் மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் முகிழ்த்தன எனக் கூறலாம். எனவே, மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றி விட்டன எனக் கருதலாம். மண்ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையும் குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும். நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப்பாடல்களிலே காணலாம். இவைகள் ஏட்டில் ஏறாவிடினும் எழுத்திலே வாராவிடினும் பாட்டிலே இடம்பெறாவிடினும் நம் நெஞ்சிலிருந்து மட்டும் நீங்காது நிற்கும்.

நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற இயலை நாட்டுப்புற மக்களின் மரபுப்பட்ட படைப்புக்கள் (Traditional Creations) என்பர், பொதுமக்களைச் சார்ந்த மரபு முறைகள் (Popular antiquities) என்ற பெயரிலும் மக்கள் இலக்கியம் (Popular literature) என்ற பெயரிலும் பொதுப் புராணவியல் (Common mythology) என்ற பெயரிலும் எஞ்சியது (Remains) என்ற பெயரிலும் வழங்கிவந்தது. பின்னர் நாட்டுப்புறவியலைக் குறிக்கும் 'Folklore' என்ற சொல் 1846இல் வில்லியம் ஜான் தாமஸ் (WJ. Thoms) அவர்களால்

உருவாக்கப்பெற்றது. இதற்குப் பின்னரே இத்துறையில் முறையான ஆய்வு தொடங்கிற்று. மனிதனின் சடங்கு முறைகள், கதைப்பாடல்கள், பழமொழி, நாட்டுப்புறப் பாடல் முதலியவற்றைக் குறிப்பதாகக் கூறியுள்ளார். பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (cultural survival) நாட்டுப் புறவியல் என்பது அவர் கருத்தாகும். 1846 இல் எத்தீனியம் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் 'Folklore' என்ற தலைப்பிட்டு எழுதினார். 'ஐந்து ஆண்டுக்குப்பின் இந்த சொல்லைத் தலைப்பாகக் கொண்ட The dialect and Folklore of Northamptanshire, John Stembug என்ற முதல் நூல் வெளிவந்தது. பின்னர் இச்சொல் உலகமொழிகளில் நிலைபெறத் தொடங்கிற்று. ரொமன்ஸ் மொழியினர் இச்சொல்லை அப்படியே ஏற்றுக்கொண்ட போதிலும், டூட்டானிக் மொழியினர் 'Volkskunde' என்ற சொல்லையே விரும்பிப் பயன்படுத்துகின்றனர்.

Folklore என்பது Folk, Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும். 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் 'Folk' என்ற சொல் விவசாய மக்களைக் குறித்து, பின்னர் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களைக் குறித்தது. பொதுவான தொழில், மொழி, சமயம் முதலியவற்றைப் பின் பற்றும் குழுவை Folk என்பர். பொதுவாக கிராமப்புற, படிப்பறிவில்லாத, மக்களைக் குறிக்கும் 'Lore' என்பதற்கு 'மரபுச் செய்தித் தொகுதி' என்றும் 'வழக்காறு' என்றும் பொருள் கொள்ளலாம். Folklore என்பது நாட்டுப்புறமக்களின் அறிவு எனப் பொருள்படும். நாட்டுப்புற வழக்காற்றை Folklore என்றும் நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் ஆய்வை 'Folkloristics' என்றும் கூறலாம்.எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இச் சொல்லின் ஆதிக்கத்தைக் காணலாம். ஜெர்மன் மொழியில் 'die folklore' என்றும் பிரெஞ்சு மொழியில் lefolklore' என்றும் இத்தாலிய மொழியில் 'ilfolklore' என்றும் ஸ்பானிஷ் மொழியில் 'cl folklore' என்றும் ரஷ்ய மொழியில் 'Folklor' என்றும் வழங்கி வருவதைக் காணலாம். இம்மொழிகளிலெல்லாம் இச்சொல் வழக்கிற்கு வருமுன் வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

வில்லியம் பாஸ்கம் (William Bascom) என்ற மானிடவியல் பேரறிஞர் 'Verbal art' என்ற சொல்லை உருவாக்கினார். Verbal art என்பது வாய்மொழிக்கலை என்றும் Non-Verbal art என்பது வாய்மொழிச் சாரா கலை என்றும் கூறலாம். வாய்மொழி இலக்கியத்தில் அடங்காத இசை, மந்திரங்கள் முதலியவற்றை எதில் அடக்குவது

என்று எண்ணியே Verbal art என்ற தொடரை உருவாக்கினார். ஆனால், இச்சொல் நீண்ட நாட்கள் வழக்கில் இல்லை.

நாட்டுப்புற இலக்கியத்திற்கு ஐந்து முக்கியப் பண்புகள் இருப்பதாக ஜான் ஹெரால்டு பிருண்வார்ட் (Jan Harold Brunward) குறிப்பிடுகிறார்.

1. வாய்மொழியாகப் பரவல் (It is oral)

2. மரபு வழிப்பட்டது (It is traditional)

3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல் (It exists in different Versions)

4. ஆசிரியர் இல்லாமை (It is usually anonymous)

5. ஒருவித வாய்பாட்டுக்குள் அடங்குவது (It tends to become formalized)

இவ்வைந்து பண்புகளுள் முதல் மூன்றும் மிகமிக இன்றியமையாத பண்புகள் எனக் குறிப்பிடுகின்றார். நாட்டுப்புற வழக்காறுகள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. நாட்டுப்புறப் பாடல், கதைகள், பழமொழி, விடுகதை போன்றவைகள் பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. நாட்டுப் புறவியல் பேரறிஞர் ரிச்சார்டு எம். டார்சன் (Richard M. Dorson) அவர்களும் 'நாட்டுப்புற வழக்காற்றியல் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்கவேண்டும்' என்கிறார். வில்லியம் பாஸ்கம் அவர்களும் நாட்டுப்புற வழக்காறுகள் எல்லாம் வாய்வழி வெளிப்படுத்தப்படுபவை என்கிறார். வாய்மொழி இலக்கியத்தின் அடுத்த பண்பு மரபாகும். மரபு என்பது வாய்வழி பரப்பப்படும் இயல்பையே கூறுவதாகக் குறிப்பிடுகின்றார். வீரயுகப் பாடல்கள் மரபாலேயே கூட அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறப் பாடல்களும் மரபு என்ற பண்பு இருப்பதால்தான் பல தலைமுறைகளாக. எழுத்திலக்கியச் செல்வாக்கிடையே வாழ்ந்து வருகின்றன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களால் வாய்மொழியாகப் பாடப்படுவன. ஒருவரே ஒரு பாட்டை இரண்டுமுறை பாடினால் அப்பாட்டில் வேறு பாட்டைக் காணலாம். நாட்டுப்புற மக்கள் முன்னோர் பாடியதைக் கேட்டு நினைவுபடுத்தி மீண்டும் பாடுகின்றனர். அவ்வாறு நினைவுபடுத்திப் பாடும்போது சிலவற்றை மறக்க நேரிடும். மறந்துவிட்டதற்குப் பதிலாக சில அடிகளைப் புதிதாகச்

சேர்த்துப் பாடுவர். இவ்வாறு பாடல்களை மாற்றிப் பாடுவதற்கு மூன்று காரணிகள் அடிப்படையாக அமைகின்றன.

i ) நிலவியல் சூழல்(Geographical environment)

ii) சமுதாயச் சூழல் (Social environment)

iii) வட்டார வழக்கு வேறுபாடு (Dialect variation)

இக்காரணிகளால் பாடலில் மாற்றம் காணப்படுகின்றது. பிறர் பாடியதை நினைவில் வைத்துப் பாடுவதால் பல்வேறு வகையான திரிபு வடிவங்கள் பாடல்கள் கிடைக்கின்றன. நாட்டுப்புறப் இடம்விட்டு இடம் இயல்பினதாலும் அவை பெயர்ந்து செல்லும் பல்வேறு வடிவங்களாகத் திரிபடைகின்றன. நாட்டுப் பண்பாட்டியல் துறை ஒன்றின் ஒவ்வொரு சான்றும் ஒரு மாற்று வடிவம் என்று கூறுதல் வழக்கம் என்கிறார் ஸ்டித்தாம்சன் (Stith Thompson) அவர்கள். ஆசிரியர் பெயர் அறியவொண்ணாமை வாய்மொழி இலக்கியத்தின் இயல்பாகக் கூறப்படுகின்றது. ஆனால், பௌரா அவர்கள் ஆசிரியரின்மைக்கு ஒரு விளக்கம் தருகின்றார். 'ஆசிரியரின்மைக்குரிய காரணத்தை எளிதாக விளக்கலாம். ஒவ்வொரு பாடலும் அது பாடப்படும் போது ஒருமுறை நிலைபேறு பெறுகின்றது. அதனைப் பாடிய புலவன் யார் என்று மக்களுக்குத் தெரியும். அதனால் அவன் தன் பெயரைத் தன் பாடலில் சொல்லத் தேவையில்லை' என்கிறார் பௌரா (Bowra)'. ஆனால், இக்கூற்று பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. உதாரணமாக, பெரும்பாலான நாட்டுப்பாடல்கள் மக்கள் பாடல்களாகத் திகழ்கின்றன. பழமொழி, விடுகதை போன்ற நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஆசிரியர் பெயர் அறிதல் இயலாத தொன்றாகும். இவை மனித சமுதாயத்தின் கூட்டு முயற்சியின் விளைவாகப் பரிணமித்தவை ஆகும். எனவே, நாட்டுப்புற இலக்கியங்களுக்கு ஆசிரியரின்மையை ஒரு முக்கிய கூறாகக் கருதப்பட வேண்டும். அடுத்த பண்பு ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கக் கூடியது. இது அமைப்பியல் தொடர்புடையது. ஆய்வுடன் எந்தவொன்றையும் வகைப்படுத்த வேண்டுமெனின், அதன் உள்ளமைப்பை ஆராயவேண்டும். வரையறை செய்வதற்குப் பாடம் (Text) அமைப்பு (Structure) சூழல் (context) ஆகிய மூன்று படிநிலைகளைக் கொள்ள வேண்டும்.

பழமொழி, விடுகதை போன்ற அமைப்பை ஆராய்ந்தால், அவை ஒருவித வாய்பாட்டுக்குள் அடங்கியிருப் பதைக் காண்கிறோம். இஃது அமைப்பியல் ஆய்வின் பயனாகும். ஏட்டிலக்கியத்தில் ஏதேனும் ஒருவரி திரும்பத் திரும்ப வரின், அது கூறியது கூறல் எனும் குற்றத்தின் பாற்படும். ஆனால், நாட்டுப் புறவியலில் சில அடிகள் திரும்பத் திரும்ப வருதல் (Repetitions) இயல்பாகும். நினைவில் வைத்துப் பாடுவதாலும் பாடியது மறவாமல் இருக்கவும் சில அடிகள் திரும்பத் திரும்பப் பாடப்படுகின்றன.

நாட்டுப்புறவியல் (Folklore) விளக்கம் குறித்து நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்கள் அளிக்கின்றனர். எழுதப்பெற்ற இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்றால், நாட்டுப்புற இலக்கியம் சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடி எனலாம். நாட்டுப்புற இலக்கியம் கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமின்றி அவர்களது உணர்வுகளையும் பிரதிபலித்து நிற்கின்றது என இந்தியாவின் மூத்த நாட்டுப் புறவியல் பேரறிஞர் சங்கர் சென்குப்தா (Sankar Sen gupta) கூறுகிறார். எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாடு (oral culture) அனைத்துமே நாட்டுப்புறவியல் என போர்ட்கின் கூறுகிறார். பிரான்சிஸ் லீ உட்லி வாய்மொழியாகப் பரப்பப்படும் இலக்கியமே நாட்டுப்புறவியல் என வரையறை செய்கிறார். 'நாகரிகம் வாய்ந்த மக்களின் மரபு வழி வந்த படைப்புக்களும் நாட்டுப்புறவியலாகும். இவை ஒலிகளையும் சொற்களையும் ஒருவித ஓசை அமைப்புக்குட்படுத்தி அமைக்கப்பட்டவையாகும். மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நடனம் முதலியவையும் இவற்றுள் அடங்கும். மேலும் நாட்டுப்புறவியல் நாட்டுப்புற மக்களைப் பற்றிய ஒரு அறிவியல் அல்ல ஆனால் மரபு சார்ந்த நாட்டுப்புற மக்களின் அறிவியலாகும். 'மரபு சார்ந்த நாட்டுப்புற மக்களின் அறிவியல்' என்கிறார் ஜோன்ஸ் பாலிஸ்' (Jones Balys) அவர்கள்.

மானிடவியல் பேரறிஞர் வில்லியம் பாஸ்கம் அவர்கள் புராண மரபுக் கதைகள், கதைகள், பழமொழி, விடுகதை, பாடல், கலையின்பாற்பட்ட கூறுகள், அனைத்தின் அறிவையும் நாட்டுப்புறவியல் என்ற சொல் உணர்த்துகிறது எனக் கூறுவதோடு. இலக்கியத்தைப் போலவே நாட்டுப்புற இலக்கியமும் இசை, நடனம்,

ஓவியம் முதலியவற்றோடு தொடர்புடையது. ஆனால் வெளிப்படுத்தும் முறையில்தான் வேறுபடுகின்றது என்கிறார்.

'Folklore' என்பது மக்களால் பரம்பரை பரம்பரையாக மரபு வழி உண்டாக்கப்பட்ட ஆக்கங்கள் (creation) எனவும் 'எழுத்துருவமில்லாத மொழிகளைக் கொண்ட மக்களிடையே காணப்படுவன எல்லாம் இதில் அடங்கும்' எனவும் 'புராணம், நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், விடுகதைகள்" போன்றவை எனவும் 'குடிமக்களிடையே காணப்படும் கலாச்சாரத்தின் ஒரு பகுதி எனவும் 'பழமையான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சின்னங்கள்... என்றெல்லாம் அறிஞர்கள் விளக்கம் அளிக்கின்றனர். அலெக்ஸாண்டர் கிராப்பி என்பார், இச்சொல் வழக்காறுகளை மட்டுமின்றி (Folklore is an historical science) என்றும் குறிப்பிட்டு சொல்கிறார்.

மக்களது நம்பிக்கைகள், கதைகள், விளையாட்டு, ஆடல், பாடல் ஆகியவற்றை விளக்குவதே நாட்டுப்புறவியல் என்றும் அஃது அனைத்து மக்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப் பெற்று, தலைமுறை தலைமுறையாக வழங்கப்பெற்று. பயிற்சி பெற்ற, ஆய்வாளர்களின் முயற்சியால் எழுத்துருவாக்கம் பெறுகின்றது என்றும் கெர்ட்ரூத் கூரத் (Gertrude P. Kurath) கூறுகிறார். நாட்டுப்புற இலக்கியம் என்பது உயிரோடுள்ள புதைவடிவமாகும். அஃது அழிந்து போக மறுப்பதுடன் மனித சமுதாயத்தின் இலட்சக்கணக்கான ஆண்டு வாழ்வின் அனுபவங்களின் பண்பாட்டின் அறிவியலின் படிவங்களாகும் என்கிறார் சார்லஸ் பிரான்சிஸ் போர்ட்டர் (Charles Francis Pottcr) எனும் அறிஞர். மக்களது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவற்றில் காணப்படும் பதிவுபெறா மரபுகளை (unrecorded tradition) ஆராயும் அறிவியலே நாட்டுப்புறவியல் என குரோகன் டை (K. Krohen Die) குறிப்பிடுகின்றார்.

இன்றுவரை நாகரிக சமுதாயத்திலுள்ள கல்லாத மக்களிடையே எஞ்சியுள்ள நம்பிக்கைகள், வழக்கங்கள், மரபுகள், புராணங்கள், பழமரபுக் கதைகள், மூட நம்பிக்கைகள், திருவிழாச் சடங்குகள். மரபு விளையாட்டுப் பாடல்கள், கலைகள், ஆட்டங்கள் முதலியவற்றைப் பற்றி ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் என்கிறார் ஜான் எல். மிஷ் (John L. Mish) அவர்கள், நாட்டுப்புறச் சமுதாயத்தில் நிலவும் வாய்மொழியாக வழங்கும் கதை, பாடல், பழமொழி, விடுகதைப் பற்றி ஆய்வது

நாட்டுப் புறவியலாகும். வாய்மொழியாகப் பரப்பப்படும் பண்பாட்டை ஆராய்வதும் நாட்டுப்புறவியலாகும். மரபு வழிபட்ட படைப்புக்களான உரைநடை, பாடல்களைத் தவிர பண்பாட்டு மானிட வியலாளர் குறிப்பிடும் கலை, கைவினைப் பொருள், நம்பிக்கை, வழக்கங்கள் பற்றியும் நாட்டுப்புறவியல் ஆராய்கின்றது என்கிறார். எர்மின் டபில்யூ வோக்ஸின் (Erminiz W. Voegelin) அவர்கள். கூரத் போன்றே ஜேம்ஸன் அவர்களும் நாட்டுப்புறவியல் (Folklore) என்ற சொல் பண்பாட்டு இனவியல் எனப் பொருள்படுவது என்றும் இவ்வியலுக்கு வேண்டிய மூலப்பொருட்களைப் பண்டைப் புராணங்கள், பழைய மரபுக் கதைகள், பாடல்கள், கதைகள் போன்றவை என்றும் குறிப்பிடுவர். இவர் கருத்துப்படி Folklore என்ற சொல் முதலில் வழக்காறுகளைக் குறிப்பிடுவதாகத் தோன்றிப் பின்னர் வழக்காறுகளையும் வழக்காறு பற்றி ஆயும் ஆய்வினையும் குறிப்பிடுவதாக மாறிற்று.

Folklore என்ற சொல் நாட்டுப்புற மக்களின் வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பாடல், கதை, பழமொழி, விடுகதை, மந்திர தந்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பதோடு, தனி மனிதர்களின் கூட்டு முயற்சியாகப் பரிணமிப்பதோடு மாற்று வடிவங்களும் மீண்டும் மீண்டும் வருதலுமாகிய பண்புகளையும் கொண்டது என மரியா லீச் (Maria Leach) குறிப்பிடுகின்றார். இச்சொல் ஒரு நூற்றாண்டுப் பழமை வாய்ந்தது எனினும் அதன் பொருள்' குறித்துக் கருத்தொற்றுமை ஏற்படவில்லை என்றும் மரபுகள் தலைமுறை தலைமுறையாக நினைவுகூர்தல் மூலம் பாதுகாக்கப்படுவதோடு வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், நாட்டுப்புறவியல் எனக் கூறலாம் என்கிறார் ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) அவர்கள். நாட்டுப்புறவியலின் கூறுகளை அல்லது வடிவங்களை முழுமையாக ஆராயும் வரை, நாட்டுப்புறவியல் ஒரு துறை என்பதை முழுமையாக விளக்க இயலாது என்கிறார் ஆலன் டாண்டீஸ் (Alan Dundes) எனும் அறிஞர்.' சுருங்கக் கூறின் நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புக்கள் எனலாம். தமிழில், 'நாட்டுப் பண்பாட்டியல், நாட்டார் வழக்காற்றியல்' நாட்டுப்புறவியல் என்று வழங்குகின்றது எனினும் நாட்டுப்புறவியல் என்பதே நிலைத்து நிற்கின்றது.

**நாட்டார் வழக்காறு குறித்த சிந்தனை**

டண்டிஸ் என்பவர் ஒவ்வொரு வழக்காறும் தனித்தனியாக வரையறுக்கப்பட்டால் தன நாட்டார் வழக்காற்றை வரையறுக்க முடியும் என்கிறார்.

புராணக் கதைகள், பழமரபுக் கதைகள், நட்டார் கதைகள், நகைப்புகள், பழமொழிகள், விடுகதைகள், மந்திரங்கள், வாழ்த்துகள், சாபங்கள், சபதங்கள், வசவுகள், எதிருரைகள், இடித்துரைகள், நையாண்டிகள், பாராட்டுகள், நாப்புரட்டுகள், வரவேற்புரைகள், விடைபெறும் வாய்ப்பாடுகள் நாட்டார் வழக்காறுகளுள் அடங்கும். நாட்டார் ஆடைகள், நாட்டார் நடனம், நாட்டார் நாடகம், நாட்டார் கலை, நாட்டார் நம்பிக்கை, நாட்டார் மருத்துவம், நாட்டார் இசைக்கருவிகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் பேச்சு, நாட்டார் உவமைகள், நாட்டார் உருவங்கள், வழி இசை, பெயர்கள் போன்றவையும் நாட்டார் வழக்காறுகளுள் அடங்கும்.

**நாட்டார் வழக்காற்றியல் சொல்**

நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல் ஒரு நுற்றாண்டு பழமை வாய்ந்தது. இதன் பொருள் குறித்து அறிஞரிடையே கருத்து ஒருமைப்பாடு ஏற்படவில்லை. நாட்டார் வழக்காற்றியலில் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு பொதுக் கருத்து அது மரபு சார்ந்தது என்பதாகும். நினைவாற்றல், வழக்கம் முதலியவற்றால் பாதுகாக்கப்பட்ட ஒன்றாகும். உலகில் உள்ள மக்களின் பழமொழிகள் அனைத்தும் நாட்டார் வழக்காற்றியலில் குடும்பப் பழக்கங்கள், கட்டிட வகைகள் புழங்கும் பொருள் வகைகள் இவையும் நாட்டார் வழக்காற்றியலில் அடங்கும் மேற்குறிப்பிட்டவையில் பிந்தியவை ஒரு பழங்குடி அல்லது கல்வியறிவற்ற ஒரு சமூகத்தினரிடையே காணப்பட்டால் அவற்றை இன ஒப்பியலில் அடக்குவர். இது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை இவை அனைத்தும் அறிஞரால் நாட்டார் வழக்காற்றியல் என கருதப்படுகிறது. இவை மரபு சார்ந்தவையாகும் என்று ஸ்டித் தாம்சன் குறிப்பிடுகிறார். பி.ஏ. போட்கின் என்ற அறிஞர் எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாட்டில் எல்லாமே நாட்டார் வழக்காற்றியல் என்கிறார். இதுவரை வரையறுத்தவர்கள் புறப்பண்புகளை வைத்தே வரையறுக்க முயன்றுள்ளார்.

**வரையறை**

மரியா லீச் என்பவர் வெளியிட்ட நாட்டார் வழக்காற்றியல் அகராதியில் இருபத்தொரு வரையறைகள் காணப்படுகின்றன. வாய்மொழி, பரவல், மரபு, எச்சம் சார்ந்தது, சமூகம் சார்ந்தது ஆகியவையே அந்த சொற்கள். மரபு இருபத்தோரு

வரையறையில் பதின்மூன்றில் காணப்படுகிறது. வாய்மொழி பெருவழக்கில் வரையரையில் காணப்படவில்லை. மரபு என்ற சொல்லுக்கு வாய்மொழி பரவல் வேறு சொல்லாக உள்ளது. எச்சம், சமூகம் சார்ந்தவை என்பவை பெரிதும் கருத்து மாறுபாட்டிற்குரியவை. எச்சம் என்பது கருத்தாக்கம் என்ற முறையில் ஆறு வரையறைகளில் காணப்படுகிறது.

**வரையறைகளின் பொது அலகுகள்**

- வாய்மொழியாகப் பரப்பப்டுவது
- மரபு வழிப்பட்டது
- ஆசிரியரற்றது
- ஒரு வித வாய்ப்பாடுகளுக்குள் அடங்குவது
- ஒரு குழுவினரால் பகிர்ந்து கொள்ளப்படுவது
- பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது

**வழக்காறுகளின் பண்புகள்**

நாட்டுப்புற வழக்காறு என்பது நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற இலக்கியம், கலைகள், என்பனவாகும். இவ்விரு பகுதிகளும் சில முக்கியமான பண்புகளைக் கொண்டு விளங்குகின்றன.

1) நிலைத்த தன்மை உடையன
2) நிலையற்ற தன்மையும் உண்டு
3) இடையிலே நிறுத்தி வைக்கப்படுதலுண்டு
4) தள்ளி வைத்தல் என்பது உண்டு
5) மக்கள் விரும்பும் பண்பின
6) சுவையும், அழகியல் கூறும் கொண்டவை
7) சமூக அடையாளங்களைக் கொண்டவை
8) பார்வையாளன், படிப்பாளரின் மாற்றத்தையும் ஏற்கும் பண்பின.

**நாட்டுப்புறவியல் - வரலாறு**

நாட்டுப்புற இலக்கியத்தை, எழுத்து இலக்கிய வடிவத்தின் முதல்நிலை என்றும், அடித்தள நிலை என்றும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தகு நிலையில் நாட்டுப்புற இலக்கியம் என்பது அழகிய ஒரு நுண்கலை (Fine Art) என்று குறிப்பிட வேண்டும். பொதுவாகக் கலையின் சுவையினைக் கண்ணால் கண்டும், காதால் கேட்டும் அனுபவிக்க இயலும். ஆனால் இலக்கியத்தின் சுவையினைக் கருத்தால் மட்டுமே உணர முடியும். எனவே இலக்கியத்தின் வரலாற்றை அறிய வேண்டும் என்று

எண்ணும் போது, அந்த இலக்கியத்தின் படைப்பாளனோடும் அந்த நூலோடும் சேர்த்தே சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறு வரலாற்று ஆய்வில் படைப்பாளனையும் (Author) படைப்பையும் (Text) ஒருசேர இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

“தலைமை வாய்ந்த இலக்கிய வரலாறுகள் பலவும் நாகரிகப் பண்பாட்டு வரலாறுகளாகவோ அல்லது திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுதிகளாகவோ உள்ளன” என்று ரெனி வெல்லாக் தமது நூலில் கூறுவது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம், கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர். ஆனால், நாட்டுப்புறவியல் இவற்றுடன் நின்றுவிடாமல் நாட்டுப்புற நம்பிக்கை, ஆடல் ஓவியம், பொருள்சார் பண்பாடு (Material culture) ஆகியவற்றை யும் ஆராய்கிறது. டான் யோடர் (Don Yoder) அவர்கள் 'Fok Life' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். நாட்டுப்புற வாழ்வியல் (Folk life) நாட்டுப்புறப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பெறும் ஆய்வு முறையே நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு ஆகும். தொடக்க காலத்தில் நாட்டுப்புறவியல் பேரறிஞர்கள் பாடல், கதை, கதைப்பாடல், பழமொழி, விடுகதை பற்றியே ஆராய்ந்தனர். ஆனால், இன்று நாட்டுப்புறவியலின் ஆய்வு விரிந்து பரந்து பட்டுள்ளது. உழவுத் தொழிலின் வரலாற்றைப் பற்றியும் நாட்டுப்புறப் பேச்சு வழக்குப் பற்றியும் (Folk speech) நாட்டுப் புறக் கட்டிடக் கலை, உணவு, உடை பற்றியும் நாட்டுப்புற மருத்துவம் பற்றியும் ஆராயப் படுகின்றன. நாட்டுப்புறவியல் சம்பந்தமான அனைத்துத் துறைகளையும் ஆராயும் அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. உலகியல் சார்ந்த பண்புகளை எல்லாம் கலந்த இப்பண்பாட்டு ஆய்வை நாட்டுப்புற வாழ்வியல் (Folk life) என டான்யோடர் குறிப்பிடுகின்றார். Verbal art, Folk life போன்ற சொற்கள் வழக்கில் நின்று நிலவவில்லை. Folk lore என்ற சொல்லே நிலைத்து வழக்கில் பயின்று வருகின்றது.

**நாட்டுப்புற இலக்கியமும் ஏட்டிலக்கியமும்**

ஏட்டிலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழ்வது வாய்மொழி இலக்கியமே. ஏட்டில் எழுதாத பாமர மக்களின் பரம்பரைச் சொத்தாக இருந்தது, இது படிப்படியே

வரிவடிவம் பெற்றது. நாட்டுப்புறப் பாடல்களைப் பாடிய வாய், இலக்கணத்தைப் படித்ததில்லை. கிராமப்புறங்களில் வாழும் பாமரமக்கள் படிப்பறியா மக்கள் தம் வாழ்விலும் வாக்கிலும் பழந்தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காத்து வருகின்றனர். அவர்கள் பாடும் பாடல்கள் யாவும் யதார்த்தமானவை. எனவே, அவர்களின் உள்ளத்தில் உணர்ச்சி துடித்தது. உயிர்ப்பு விளையாடியது. இதயம் விரிந்தது. தேனருவி பெருக்கெடுத்தது. வாய்மொழிப்பாடல் வயலெல்லாம் பாய்ந்து வளம் தந்தது. "தாய் ஆழம் காணமுடியாத அன்புக்கடல். அக்கடலில் விளையும் வலம்புரி முத்தே தாலாட்டு" என்பார் தமிழண்ணல். தூங்கி எழுவதற்காக பல பாடல்கள் இலக்கியத்தில் உள்ளன. தேம்பி அழுவதற்காகப் பல பாடல்கள் இலக்கியத்தில் உள்ளன. ஆனால், மயங்கி உறங்குவதற்காக உள்ள பாடல்கள்தான் நாட்டுப்புறப் பாடல்களில் அதிகம் காணப்படுகின்றன. அளவும், ஓசையும் தாலாட்டு, தாயின் அன்பின் வெளிப்பாடு. தாயின் மகிழ்ச்சியையும் துக்கத்தையும் வெளிப்படுத்த இது ஒரு கருவியாகப் பயன்படுகிறது. குழந்தையின் உறக்கத்திற்கு ஏற்பப் "பலூன்" போன்று அதிகம் நீளுவதும், கொஞ்சம் குறைவதும் உண்டு. தாலட்டுப் பாடும் பெண்கள் அனைவரும் ஒரே இசையிலே பாடுவார்கள் என்று கூற முடியாது. ஒலிமுறையே தாலாட்டின் உயிர். பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களில் ஓசை இனிமையும், பொருட்சிறப்பும், உணர்ச்சியும், உயிரோட்டமும் இருக்கும். தாலாட்டுப் பாடும் தாயின் ஒருவிதமான ஓசையின் ஒழுங்கே குழந்தையின் செவிகளில் பாய்ந்து மனதைக்கிறங்க வைத்து, கண்களை உறங்க வைக்கிறது.

**நாட்டுப்புறவியல் கோட்பாடுகள்**

நாட்டுப்புறவியல், கோட்பாடுகள் என்ற இரு பகுதிகள் உள்ளன. இதில் நாட்டுப்புறவியல் குறித்த விளக்கங்களை முந்தைய ஐந்து பகுதிகளும் விளக்கியுள்ளன. எனவே கோட்பாடு என்ற சொல்லாட்சி விளக்கத்தோடு, நாட்டுப்புறவியலில் இக்கோட்பாடு எங்ஙனம் பொருந்தியுள்ளது என்பதையும் எடுத்துரைப்பது இப்பாடப் பகுதியாகும். கோட்பாடு என்பதை ஒரு கருத்தாக்கம் (ideology) என்பர் அறிஞர்கள். கொள்கையின் தன்மையினைக் கொண்டதே கோட்பாடு.

‘கற்பு’ என்பது ஒரு கோட்பாடு. நடைமுறை வாழ்வில் நாம் ஏற்றுக் கொண்டுள்ள கோட்பாடு. இதன் வாழ்வியல் நெறிமுறை (Standard of life)

என்னவென்றால், ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்பதாகும். எனவே ஓர் ஆணும், ஒரு பெண்ணும் மட்டுமே, சமுதாய நிகழ்வாகிய திருமணச் சடங்கின் மூலம் இணைந்து வாழும் வாழ்க்கையே கற்புக் கோட்பாட்டினைக் கொண்டது என்று கூறப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு கொள்கையின் சிந்தனைத் தெளிவினாலும் - ஏற்றுக் கொள்ளல் என்பதாலும் - சமுதாய நிலைப்பாட்டினாலும் கோட்பாடுகள் உருவாகின்றன.

நாட்டுப்புற வழக்காறுகளைப் புரிந்து கொள்வது என்பது அவற்றைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், வெளியிடுவதிலும், ஆவணப்படுத்துவதிலும் மட்டும் அடங்கி இருப்பதில்லை; அதனையும் தாண்டி, பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் அவற்றைப் புரிந்து கொள்வதிலும் அர்த்தப்படுத்துவதிலும்தான் அடங்கி இருக்கிறது.

**கோட்பாடுகளின் நோக்கம்**

உலகளாவிய நாட்டுப்புறவியல் ஆய்வு என்பது நாட்டுப்புறவியலின் தனித்த சிறப்பான விரிந்த நோக்கப் பார்வையாகும். அதாவது நாட்டுப்புற வழக்காறுகளை வட்டார, தேசிய, சர்வ தேசிய அளவில் புரிந்து கொள்ளுதல்; இதற்குப் பல்வேறு வகையான வழக்காறுகளை, பல்வேறு வட்டார, மொழி, பண்பாட்டுச் சூழல்களிலிருந்து திரட்டி அவற்றை ஒப்பாய்வு செய்தல்; அவற்றுக்கு இடையில் காணப்படும் உலகளாவிய கூறுகளைக் கண்டுபிடித்தல் ஆகியவையே இதன் அடிப்படை நோக்கமாகும். மேலும் நாட்டுப்புற வழக்காறுகளில் பண்பாட்டுத் தனித் தன்மைகளையும், அத்தனித் தன்மைகளுக்கான காரணங்களையும் அறிவதும் இக்கோட்பாடுகளின் நோக்கமாகும்.

**கோட்பாடுகளின் பயன்பாடு**

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சர்ட் எம். டார்சன் பன்னிரண்டு ஆய்வுக் கோட்பாடுகளைப் பற்றிக் கூறுகின்றார். இவை அனைத்தும், அக்கோட்பாடுகள் தோன்றிய காலக்கட்டங்களில் செல்வாக்குச் செலுத்திய அறிவியல், சமூக அறிவியல் முதலிய அறிவுப் புலங்கள் முன்வைத்த வாய்பாடுகளின் (Paradigms) அடிப்படையில் உருவானவை ஆகும். 19ஆம் நூற்றாண்டைப் பொறுத்த வரை பரிணாம வாதம் (Evolutionism), தேசிய வாதம் (Nationalism), வரலாற்று மீட்டுருவாக்கம் (Historical Reconstruction) போன்றவை நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாடுகளுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டில் அமைப்பியல் வாதம், பண்பாட்டியல் கோட்பாடு, சூழலியல் கோட்பாடு, நிகழ்த்துதல் கோட்பாடு முதலியன வழிகாட்டிகளாக அமைந்தன. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இலக்கியம் மற்றும் சமூக அறிவியல் புலங்களில் வளமடைந்த பின்நவீனத்துவம், குறியியல், பொருள் கோடலியல், உளப்பகுப்பாய்வு போன்ற கோட்பாடுகள் தோன்றின. இக்கோட்பாடுகள் இன்றைய நாட்டுப்புற வழக்காறுகளை ஆய்வு செய்வதற்கு மிகவும் பயனுள்ளவையாக உள்ளன.

நாம் மேற்கொள்ளும் கோட்பாடுகளில் எதை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் அவ்வாய்வு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்குள் சுருங்கிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, எந்த ஒரு கோட்பாட்டையும் பல பண்பாட்டுச் சூழல்களிலும் ஆராய்ந்து அக்கோட்பாடு பல பண்பாடுகளுக்கும் பொருந்துகிறதா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பொருத்தமாக அமைந்தால் தான் அக்கோட்பாடு உலகளாவிய பயன்பாட்டைக் கொண்டதாகக் கருதப்படும். அதே சமயம் அவ்வாறு சொல்லப்படுகின்ற கோட்பாட்டை அப்படியே எல்லாரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆதரவு, எதிர்ப்பு, மாற்றம், எல்லாமே தோன்றும். ஆனால் அவை அனைத்தும் அக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கு உதவும். கோட்பாடு வெற்றி பெற வேண்டும் என்றால் அதில் நம்பகமான தரவுகள், ஆழமான பகுப்பாய்வு, அறிவுப் பூர்வமான அல்லது தர்க்கப் பூர்வமான விவாதங்கள், பல பண்பாடுகளுக்கும் பொருந்தும் தன்மை போன்றவைகள் இருப்பது முக்கியம் ஆகும்.

நாட்டுப்புறவியல் கோட்பாடுகளை இருவகைப்படுத்தலாம்.

1) இருநிலைக் காலக் கோட்பாடுகள்(Diachronic Theories)

2) ஒருநிலைக் காலக் கோட்பாடுகள்(Synchronic Theories)

**இருநிலைக் காலக் கோட்பாடுகள் (DiachronicTheories)**

இருநிலைக் காலக் கோட்பாடுகள் (Diachronic Theories) கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் இணைப்பவையாக அமையும். தோற்றம், பரிணாமம், மரபுகள், வரலாற்று மீட்டுருவாக்கம், தேசிய வாதம், காதலின்பம் (Romantic) பற்றிய கோட்பாடுகள் இந்த வகையைச் சார்ந்தவையாகும். இந்தக் கோட்பாடுகள் 19ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்தன.

**ஒருநிலைக் காலக் கோட்பாடுகள் (Synchronic Theories)**

இருபதாம் நூற்றாண்டில் ஒருநிலைக் காலக் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. இக்கோட்பாடுகள் நிகழ்காலத்திற்கு முக்கியத்துவம் தந்தன. அமைப்பு, வடிவம், அர்த்தம், பயன்பாடு முதலியவற்றுக்கு முக்கியத்துவம் தந்தன.

கோட்பாடுகள் என்பன முடிவானவை என்பதல்ல. அவை, நாட்டுப்புற மரபுகள், வழக்காறுகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ள உதவும் கருவிகளே. முன்னமே சொன்னது போல 12 கோட்பாடுகளை நாட்டுப்புற வழக்காற்று அறிஞர்கள் முன்வைக்கின்றனர். ஆனால் நம் பாடப் பகுதியில் பக்க வரையறை கருதி மூன்று கோட்பாடுகள் மட்டுமே விளக்கப் பெறுகின்றன. அவையாவன:அமைப்பியல் கோட்பாடு,வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு, சூழல் கோட்பாடு போன்றவை ஆகும்.

**வினாக்கள்**

1. நாட்டுப்புறவியல் என்றால் என்ன விளக்குக
2. நாட்டார் வழக்காறுகளின் வரையறைகளையும் பண்புகளையும் விவரிக்க
3. நாட்டுப்புறவியல் வரலாறு விளக்குக
4. நாட்டுப்புற இலக்கியம் ஏட்டு இலக்கியமே வரையறுக்க
5. நாட்டுப்புறவியல் கோட்பாடுகளை விளக்குக

## அலகு 2

## நாட்டுப்புற இலக்கியம்

### நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப் புறப்பாடல்களாகும். நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப் பாடலின் பொருளாகின்றன. மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புறப்பாடல்கள். நாட்டுப்பாடல், நாடோடிப்பாடல். நாட்டார் பாடல். வாய்மொழிப் பாடல். பாமரர் பாடல், பரம்பரைப் பாடல், கிராமியப் பாடல், கல்லாதார் பாடல், மக்கள் பாடல், ஏட்டில் எழுதாக் கவிதை, மலையருவி, காட்டுப்பூக்கள், வனமலர். காற்றிலே என்றெல்லாம் நாட்டுப்புறப் பாடலை மிதந்த கவிதை அழைக்கின்றனர். ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு இயல்பைக் காட்டுவதாக உள்ளன. நாட்டுப்புறப் பாடல் என்பதே நின்று நிலவுகின்றது.

நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் காடு கழனிகளிலும் தோட்ட வயல்களிலும் தொழில் செய்யும் இடங்களிலும் பிறக் கின்றன. நிலத்தை உழும்போதும் ஏற்றம் இறைக்கும் போதும் நாற்று நடும்போதும் களையெடுக்கும் போதும் கதிர் அறுக்கும் நாட்டுப்புற போதும் உழுதுண்டு வாழும் மக்கள் பாடுகின்றனர். மக்களின் வாழ்க்கை தாலாட்டுப் பாடலில் தொடங்கி விளையாட்டு, காதல் பாடல்களில் வளர்ந்து திருமணப்பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகின்றது. இன்ப துன்பங்களைப் பற்றி மக்களே பாடுவதால் இதனை மக்கள் இலக்கியம் என்றும் கூறுவர். நீல வானத்தையும் பசுமை நிறைந்த நிலத்தையும் வானுற ஓங்கிவளர்ந்த மலையையும் முத்து விளையும் கடலையும் மலையின் முடியையும் கடலின் அடியையும் இணைக்கும் வற்றாத ஆறுகளையும் ஆறு பாய்ந்து கொழிக்கும் வயல்களையும் வயல்களில் உழைக்கும் மனித இனத்தைப் பற்றியும் நாட்டுப்புறப் பாடல்களில் காண்கிறோம். மனித உள்ளத்தின அழுத்தத்தையும் அங்கே தோன்றி எதிரொலிக்கும் பல்வேறு இதய ஒலிகளையும் இன்ப துன்பங்களையும் ஆசாபாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும்

நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம். எனவே ஒரு நாட்டு நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்கங்களை வரலாற்றை நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புறப் பாடல்கள்.

நாட்டுப்புறப் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. நாட்டுப்புறப் பாடலகளை இயற்கைப் பாடல்கள் எனலாம். இயற்கை அன்னை தன்னை தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி நாட்டுப்புறப் பாடல் இப்பாடலின் முகம் பார்க்கத் படைப்பாளிகள் இம்மண்ணின் மைந்தர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை. இனியவை, எழுதப்படாதவை, வாயில் பிறந்து செவிகளில் உலவி காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை. தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டிருப்பவை என்று பிறநகள் எவரால் பிறந்தது என எடுத்துச் சொல்ல இயலாத பணயும் புரங்கும் பெற்றவை. நாட்டுப்புறப் பாடல்கள் என்னும் பறவை இசைச்சிறகால் காலவானில் சுட்டினறிக் கவலையினறிய பறக்கின்றன. நாட்டுப்புறப்பாடல்களில் ஓசை இருக்கும்; உணாச்சி இருக்கும்; சொல் தொடை அழகிருக்கும். எனினும் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும். எனவேதான் நாட்டுப்புறப் பாடல்களைத் தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மலருக்கும் மலையினினறு வீழும் அருவிக்கும் ஒப்பிடுகின்றனர். நாட்டுப் புறப்பாடலில் இசைக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. 'பண்ணுடன் பாடப்படாத நாட்டுப்புறப் பாடல்கள் எல்லாம் சிறகில்லாப் பறவைகள்' என சத்தியார்த்தி கூறுவது குறிப்பிடத் தக்கது. அவை மனித உணர்வின் வடிகாலாகத் திகழ்கின்றன. எந்த மண்ணில் வாழ்ந்தனரோ எந்த வேலையைச் செய்தனரோ எதைக் கேட்டனரோ எதை உணர்ந்தனரோ எவ்லாவற்றையும் கற்பனை நிறைந்த கவிதைகளாகப் பொழிகின்றனர்.

நாட்டுப்புறப் பாடல்கள் நேற்று தோன்றியவை அல்ல. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் பேசத் தொடங்கிய நாளன்றே நாட்டுப்புறப் பாடல்களும் முகிழ்த்தன. தொடக்ககால மனிதர்கள ஏடும் எழுத்தாணியும் கொண்டு கவிதை புனைவதற்கு முன்பே நாட்டுப்புறப்பாடல்கள் தோன்றி விட்டன எனத் தொல்காப்பியம் மூலம் அறிகிறோம்.

**தொல்காப்பியமும் நாட்டுப்புறப்பாடலும்**

தொல்காப்பியர் நாட்டுப்புற இலக்கியத்திற்குக் கூறும் வரையறையைக் காண்போம். தொல்காப்பியா எழு யாப்பு வகைகளைக் குறிப்பிடும்போது.

பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்

(தொல். செய். 79)

யாப்பின் வழியது என்று கூறுவதாகக் கூறுகிறார். தொல்காப்பியர் அடிவரையில்லாத செய்யுட்கள் இவை எனக் கூறி இலக்கணமும் கூறுகிறார்.

எழுநிலத்து எழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை இல்லன ஆறென மொழிப.

(தொல். செய்.164)

முதலில் அடிவரையுள்ள செய்யுட்களுக்கு இலக்கணம் கூறி, அடுத்து அடிவரையில்லாச் செய்யுட்களுக்கு இலக்கணம் கூறுகிறார் ஆறென மொழிப் என்று கூறுவதால் பன்னெடுங்கால மாக வழக்கில் வழங்கி வருபவை எனத் தெரிகிறது. அதோடு அடிவரையில்லாத ஆறு வகைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

அவைதாம்
நூலி னான உரையி னான
நொடியோடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான.

(தொல். செய்.165)

இச்சூத்திரத்தில் நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம் குறிப்பு மொழி என்னும் ஆறுவகைகள் சொல்லப்படுகின்றன. நூல் என்பது புலவர் இயற்றிய இலக்கணம். உரை என்பது உரைநடை. பிசி என்பது விடுகதை, முதுமொழி என்பது பழமொழி. மந்திரம் என்பது காமாலை மந்திரம் போலத் தமிழில் வழங்கிய மந்திரம். குறிப்பு மொழி என்பது குறிப்பால் பொருளை உணர்த்தும் வகையாகும். இவை எழுதப்பெறும் இலக்கியத்திற்குரிய இலக்கணமானாலும் வழக்கு மொழியிலும் வழங்கும் என்பதைக் கூறுகிறார். வாய்மொழியாக வழங்கும் இத்தகைய இலக்கியங்

களை மேலைநாட்டார் 'Folk literature' என அழைக்கின்றனர். தொல்காப்பியர் 'பண்ணததி' என்ற ஒன்றின் இலக் கணத்தைக் கூறுகிறார்.

பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே.

(தொல். செய். 180)

இதற்குப் பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி என்றவாறு' என்று பேராசிரியர் உரை எழுதியுள்ளார். பின் மெய் வழக்கில்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃதும் எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருளைப் பண்ணத்தி என்பது. அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டு மடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப் பாட்டும் இட கண்டும் முதலாயின; அவற்றை மேலதே போலப் பாட்டென்றாராயினார். நோக்கு முதலாயின உறுப்பு இன்மையின் என்பது. அவை வல்லார் வாய்க் கேட்டுணாக' என்று பண்ணத்தியைப் பற்றிச் சில இயல்புகளைக் கூறியுள்ளார். (தொலகாப்பியா கூறும் பண்ணத்தி இன்றைய நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கின்றது எனலாம். பண்ணத்தி என்ற சொல்லுக்குப் 'பண்ணை விரும்புவது' என்று பொருள். இசைப் பாட்டில் வரையறையான பொருள் அமைந்திருக்கும். 'இப்பாட்டிலும் இன்னோசை இருப்பினும் இசைப்பாட்டிற்குரிய வரையறை இல்லை ஆதலின் பண் ணமைந்த பாடல் என்று சொல்லாமல் பண்ணத்தி என்றார்' என்று இ.வா. ஜெகந்நாதன் அவர்கள்' கூறுவது பண்ணத்தி பற்றிய சிறந்த விளக்கமாகும்.

நாட்டுப்புறப்பாடல்கள் நெகிழ்ந்த தொடரமைப்பைச் (Free phrase genre) சார்ந்தவையாகும். எழுத்திலக்கியத்தைப் போன்று நாட்டுப்புறப் பாடல்களிலும் எதுகை, மோனை, இயைபு. இரட்டைக்கிளவி போன்றவற்றைக் காணவாம். நாட்டுப்புறப் பாடலுக்கு அடிவரையறை இல்லை. குழந்தைப் பாடல்களில் அடிகள் குறைந்ததாகவும் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களில் அடிகள் அதிகமாகவும் உள்ளன. நாட்டுப்புறப் பாடல்களிலும் பாடவேறுபாடு உண்டு. உவமை, உருவகம், வருணனை,

கற்பனை, அந்தாதி அமைப்பு போன்றவற்றை நாட்டுப்புறப் பாடல்களிலும் காணலாம்.

**நாட்டுப்புறப்பாடல் வகைப்பாடு (classification of folk songs)**

எந்தவொரு அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் (collection) வகைப்படுத்தலும் (classification) ஆய்வு செய்தலும் (analys) முக்கிய ஆய்வு நெறிமுறையாகக் கருதப்படுகின்றன. வகைப்படுத்துதல் என்பது ஒரே மாதிரியாக இருப்பனவற்றை இனங்கண்டு வகைப்படுத்தலாகும். வகைப்படுத்துதல் எவ்வளவுக் கெவ்வளவு நுணுக்கமாகவும் செம்மையாகவும் அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வுகள் நுணுக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மரியா லீச் (Maria Lcach) நாட்டுப்புறப்பாடல்களை ஐந்து வகையாக வகைப்படுத்துகிறார்.

1. உணர்ச்சிப் பாடல்கள் (Emotional)
2. வாழ்வியல் பாடல்கள் (Daily life)
3. வாழ்வின் முக்கிய நிகழ்வின் பாடல்கள் (crucial movement of life)
    - i) பிறப்பு (Birth)
    - ii) திருமணம் (திருமணம்)
    - iii) இறப்பு (Death)
    - iv) பிரிவு (parting)
    - v) தாயக நாட்டம் (Nostalgia)
    - vi) போர்ப்பாடல் (War)
4. குழந்தைப் பாடல்கள்
5. சமயப் பாடல்கள்.

பௌரா (Bowra) ஆறு வகையாக வகைப்படுத்துகிறார்.

1. இயற்கைப் பாடல்கள் (Nature)
2. காதல் பாடல்கள் (Love)
3. மணவாழ்வு (married)
4. தாலாட்டு (lullaby)
5. தொழில் பாடல் (work)

6. விழாப்பாடல் (Festival)

டாக்டர் சக்திவேல் அவர்கள் சூழல் அடிப்படையில் எட்டாக வகுத்து, உட்பிரிவுகளையும் வகைப்படுத்தப்படுத்தியுள்ளார்.

**நாட்டுப்புறப் பாடல்கள்**

1. தாலாட்டுப் பாடல்கள்
2. குழந்தைப் பாடல்கள்
3. காதல் பாடல்கள்
4. தொழில் பாடல்கள்
5. கொண்டாட்டப் பாடல்கள்
6. பக்திப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள்
8. பன்மலர்ப் பாடல்கள்

**1. தாலாட்டுப் பாடல்கள்**

தாய்மை உணாவின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்துப் பிறக்கின்றது. எனவேதான் 'தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு என்பார் தமிழண்ணல்', தாலாட்டு என்ற சொல்லைத் தால் +ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனும் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். தாலாட்டு என்ற சொல் சில இடங்களில் 'ராராட்டு' என வழங்கி வருகிறது. மேலும் தாலாட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, ரோராட்டு, ராராட்டு. தொட்டில் பாட்டு. ஓலாட்டு. திருத்தாலாட்டு எனப் பல்வேறு பெயர்கள் இன்றைய உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கி வருகின்றன. தமிழில் தாலாட்டு என்று கூறுவது போன்று மலையாளத்தில் “தாராட்டு” என்றும், தெலுங்கில் 'ஊஞ்சோதி' என்றும், கன்னடத்தில் 'ஜோகுல' என்றும் கூறுவர். 'இருவர்' கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தார் கொள்ளும் வாஞ்சையைவிட, ஏன் உலகளக்கும் அருளினையும்விட, பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது, உணர்ச்சிமயமானது. இத்தகைய தாயும் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு என்று தமிழண்ணலும், தாய் ஆழங்காண முடியாத கடல். அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு” என்று அன்புக் டாக்டர் ஆறு. அழகப்பனும் கூறுகின்றனர். இத்தகைய தாலாட்டு மனிதகுலத் தொடக்க முதல்

தொடர்ந்து வருகின்றது. உலகில் தாய்மையும் சேய்மையும் இருக்கும் வரை, பாசமும் பற்றும் உள்ள வரை, பாடலும் இசையும் நிலவும் வரை மனித சமுதாயத்தில் தாலாட்டுகள் இருக்கும். நடையழகில் ஜெயங்கொண்டானையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மணிவாசகரையும், நாகரிகவிளக்கத்தில் சங்கப் புலவர்களையும் ஒப்புவமையாகப் பெற்றுப் பெருமையாக விளங்குகிறது தாலாட்டு' என்பார் தமிழண்ணல். தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும் எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

தாலாட்டுப் பாடல்களைக் கருவாகக் கொண்டு எழுந்த இடைக்கால இலக்கியங்கள் 'தாராட்டு' என்றும், பிள்ளைத் தமிழ் பிரபந்தங்கள். 'தாலேலோ' என்றும் குறிப்பிடுகின்றன. தமிழ் மொழியில் முதன் முதலாகத் தாலாட்டுப் பாடியவர். பெரியாழ்வார் ஆவார். தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறு பற்றிக் கூறப்பட்டுள்ளது: 'குழவி மருங்கிலும் கிழவதாகும்' (புறத்திணை-82) என்றும், 'கண்படை கண்ணிய கண்படை நிலையும் தொல்காப்பியர் கூறுகின்றார். சங்க இலக்கியமான பரிபாடலில் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது.

வரையழி வாலருவி வாதாலாட்ட (6-52)

பெரியாழ்வார் கண்ணைத் தொட்டிலி லிட்டு,

மாணிக்கங் கட்டி
வயிரம் இடைகட்டி
............தாலேலோ (1-3-1)

எனத் தாலாட்டுகிறார். பெரியாழ்வாரைத் தொடர்ந்து குலசேகர ஆழ்வாரும் இராமனைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டு கிறார். களவியலுரை, தேவாரம், முத்தொள்ளாயிரம், கம்ப இராமாயணம், விறலிவிடு தூது போன்ற தமிழ் இலக்கியங்களிலும் தாலாட்டுப் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. தாலாட்டிற்கு 'ஓலுறுத்தல்' எனும் சொல்லாட்சி பெருங் கதையிலும் சூளாமணியிலும் காணப்படுகின்றது. சீராட்டுதல் என்ற சொல்லாட்சி தாலாட்டுதல் என்ற பொருளையும் தருவதைப் பிரபுலிங்கலீலை மூலம் அறிகிறோம். பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தாலாட்டு பிரபந்த நிலையை அடைந்தது. புதிய பிரபந்த

வகைகளுள் ஒன்றான பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தில் தாலப்பருவம் என்ற பருவத்தை அமைத்துக் குழந்தை தாலாட்டுவதையே அப்பருவத்திற்குரிய பொருளாகக் கொண்டனர். தாலாட்டு சிற்றிலக்கியமாக இருந்த நிலைமாறி, தனிப்பாடல் நிலையைப் பாரதிக்குப் பின் பெற்றது.

தாலாட்டுப் பாடல்கள் குறுகிய அளவு உடையன. ஆனால், பெரும்பாலான தாலாட்டுப் பாடல்களுக்கு அடிவரையறை இல்லையென்றே கூறலாம். தாயின் மனநிலைக்கேற்பவும் குழந்தையின் உறக்கநிலைக்கேற்பவும் தாலாட்டுப் பாடல்கள் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருக்கும். தாலாட்டின் பண் நீலாம்பரி ஆகும். தாய்மார்கள் நினைத்தபோது பாடுவதால் தாலாட்டுப் பாடல்களில் நினைத்த படி பாட வேறுபாடு இருப்பதை காணலாம். தாலாட்டுப் பாடல்களில் தொடக்கம் வெறும் நாவசைகளின் ஒலிகளேயாகும்.

தாலாட்டின் பாடற்பொருளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்: பெரும்

1. குழந்தையைப் பற்றியன.

2. குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியன.

3. குழந்தைகளின் உறவினரைப் பற்றியன.

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்ற வாழ்விலே பிள்ளைக்கனியமுது ஒன்று பெற்றிடவேண்டும் என்று அனை வரும் விரும்புவது இயற்கையே. அப்பிள்ளைக்கனியமுது இல்லாவிட்டால் அவர்களது வாழ்க்கை பற்றுக்கோடு இல்லாமல் போவதாலும் அவர்களது குலக்கொம்பு வளர வாய்ப்பில்லாமல் போவதாலும் சமூகம் அவர்களை மலடி, மலடி என்று தூற்றுவதாலும் பிள்ளைப்பேற்றை அனைவரும் விரும்புகின்றனர். பிள்ளைக்கனியமுதுக்காக ஏங்கும் பாடலை இங்குக் காண்போம்.

'கிண்ணியிலே போட்ட சோற்றைக் கீ

றித் தின்னப் பிள்ளை இல்லை

ஊருக்குப் போகையிலே

உடன்வரப் பிள்ளை இல்லை'

என்று வருந்துவதோடு,

'பூக்கிற காலத்திலே

பூமாறிப் போனேனே!

காய்க்கிற காலத்திலே

காய்மாறிப் போனேனே'

என்று வெந்து சாகின்றாள்.

ஒரு தாய் மகப்பேற்றை விரும்பித் தான்செய்த தான தருமங்களை ஒரு தாலாட்டில் அடுக்கிக் கூறுகிறாள்:

'எட்டாத கோவிலுக்கு

எட்டி விளக்கேற்றி
தூரத்துக் கோவிலுக்குத்
தூண்டா விளக்கேற்றி
சோதி பரதேசிகளுக்குத்
தூமடமும் கட்டிவைத்து
நல்ல தண்ணீர்க் கிணறுகளும்
....கட்டிவைத்து'

என்று பாடுகிறாள்.

வரம் பெற்றுப் பிறந்த குழந்தையைத் தாய் வருணிக்கிறாள்;

''மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ

தேசப் பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ
எங்கள்குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்
தங்கமலி பொக்கிஷத்தைத் தானாள வந்தகண்ணோ
என்று வருணிக்கிறாள்.

தாய் தான் பெற்ற பிள்ளையமுதைத் தொட்டிலிலிட்டு ஆட்டுகின்றாள். தாலாட்டும்பொழுது அவள் உள்ளத்திலே ஆயிரம் கற்பனைகள். அக் கற்பனைகளெல்லாம் தாலாட்டுப் பாடல்களில் வெளி வருகின்றன. தாய்மாமன் வாங்கி 'வந்த பாலூட்டும் சங்கின் அழகை ஒரு தாய் தனது தாலாட்டுப் பாடலில் கூறுகின்றாள்;

'கடைக்குக் கடை பார்த்துக்

கல்லிழைத்த சங்கெடுத்துச்
சுத்திச் சிகப்பிழைத்துத் தூருக்கே
பச்சைவைத்து வாய்க்கு வயிரம் வைத்து
வாங்கி வந்தார் தாய்மாமன்'.

தாலாட்டு தாய்க்குரிய இலக்கியமாகையால் அதில் தாய் மாமனின் பெருமையும் அவர்கள் தரும் சீர்வரிசைகளின் சிறப்பும் சிறப்பாகச்

சொல்லப்படுகின்றன. பொதுவாகப் பெண்களனை வரும் தாய்வீட்டுப் பெருமையைப் பேசிக் கொள்வதிலேயே பெருமை அடைவார்கள்.) குழந்தையின் தாய்மாமனுடைய செல்வச் செழிப்பையும் மகனின் கல்வியறிவையும் ஒருசேர இணைத்துப் பார்க்கும் தாயுள்ளம் அதனைப் பாட்டாக வடிக்கின்றது:

வெள்ளியால் செய்த
ஏட்டில் வைர எழுத்தாணி கொண்டெழுத
பள்ளியில் சேர்க்க மாமன்
பரிவுடன் வந்திடுவார்

'தாலாட்டு' என்ற சொல்லாட்சி பற்றியும், தாலாட்டின் அமைப்பு, தோற்றம் வளர்ச்சி பற்றியும், தாலாட்டின் பாடற் பொருளான குழந்தையைப் பற்றியும், குழந்தைகளின் கருவியைப் பற்றியும், குழந்தையின் உறவினரைப்பற்றியும் மிகச் சுருக்கமாகக் கண்டோம்.

**2. குழந்தைப் பாடல்கள்**

உலகில் ஈடு இணையற்ற செல்வம் குழந்தைச் செல்வம். குழந்தைச் செல்வம் 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கௌவியும் அழந்தும் நெய்யுடை அடியில் மெய்பட விதிர்த்தும் குறும்பு செய்து மழலை பேரி' நம்மை மகிழ்விக்கிறது மானபோலத் துள்ளி, மலர் போல் சிரித்து, தேன் போலப் பேசித் ஓரியும் பருவம் குழந்தைப்பருவம். அப்பருவத்தில் எழும் பாடல்கள் பல குழந்தைகளுக்காகக் குழந்தையைப் பெற்ற தாயும், தந்தையும் தமக்கையும், குழந்தையின் பாட்டியும் பாடும் பாடல் உளஅவையும் குழந்தைகளுக்காகப் பாடும் பாடல்களே.

குழந்தை உலகப் பாட்டுகள் குழந்தை உள்ளத்தைப் புலப் படுத்துவனவாக அமைந்திருக்கும். டாக்டர் ஆறு அழகப்பள் கூறுவதுபோல குழந்தைப் பாடல்களுக்குப் பதவுரை, நயவுரை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பெரும்பாலான குழந்தைப் பாடல்களில் பொருளுள்ள பாடல்களைக் காணமுடி வாது ஓசை நிறைவுள்ள பாடல்களே அதிகம் காணப்படும். இப்பாடல்களை எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமையும் இனிமையும் இருக்கும். வட்டார வழக்குச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் நிறையக் காணலாம்.

குழந்தைப் குழந்தைகள் பாடல்களை இருவகையாகப் பிரிப்பர். ஒன்று பாடுவது. மற்றொன்று குழந்தைகளுக்காக மற்றவர்கள் பாடுவது பெற்று வளர்த்த

தாய், தந்தை, உடன் பிறந்த தமக்கை, பாட்டி முதலியோர் பாடுவா. 'குழந்தைகளே பாடும் பாடல்களை ஆண் குழந்தைகள் பாடும் பாடல்கள் என்றும், பெண் குழந்தைகள் பாடும் பாடல்கள் என்றும், இருவரும் இணைந்து பாடும் பாடல்கள் என்றும் இருவரில் யார் வேண்டுமானாலும் பாடும் பாடல்கள் என்றும் நான்குவகையாக டாக்டர் சு. சண்முகசுந்தரம் பகுக்கின்றார். டாக்டர் தி. நடராசன் அவர்கள் சிறுவர்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல்களை முதற்கண் இருவகையாகப் பாகுபடுத்தலாம் என்கிறார். )

1. விளையாட்டின் பொழுது பாடுவது (Play songs).

2. ஓய்வானபொழுது பாடுவது ( Pastimeorrecreationsongs).

குழந்தைப் பாடல்களுக்கென்று சில அமைப்புகள் உள. அமைப்பில் தாலாட்டையும், ஒப்பாரியையும், அவை தெம்மாங்கையும் விட வேறுபட்டுத் தோன்றுகின்றன. குழந்தைப் பாடல்களின் எளிய அமைப்பைக் கொண்டு அதனைப் புரிந்து கொள்ளலாம். ஈர்டிப் பாடல்களும் நீண்ட பாடல்களும் உண்டு. சில பாடல்கள் வினா விடை முறையில் அமைந்திருப்பதையும் காணலாம். குழந்தைப்பாடல்கள் இப்பொருனைப் பற்றிதால் இருக்கும் என்று கூற முடியாது இயற்கைப் பொருட்களும், செயற்கைப் பொருட்களும். விளையாட்டும் வேடிக்கையும் குழந்தைப் பாடல்களின் பாடற் பொருளாகின்றன.

குழந்தை வளர்ச்சி நிலையின் ஒவ்வொரு கட்டத்திலும் பாடல்கள் மாறுபடுகின்றன. குழந்தை தவழும்போதும் உண்ணும் போதும் சாய்ந்தாடும்போதும் கை வீசும்போதும் உற்றாரும் பெற்றோரும் பாட்டுப்பாடுவர். குழந்தைகள் ஓடி -84 விளையாடும் சிறுவர்களாக மாறி வளர்கின்ற நிலையில் அவர்கள் பாடும் பாடல்கள் முன்னைய நிலையினின்றும் மாறுபடுகின்றன. இப்பாடல்கள் குழந்தைகளால் பாடப்படுவனவாகும். சிறுவர் உலகம் விந்தையான உலகம். காக்கை கதை சொல்லும்; குயில் பாடும்; மலர் சிரிக்கும்: நிலவு பேசும்; விண் மீன் விளையாடும். வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் விளையாட்டுகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவ்விளையாட்டுப் பாடல்களை உடர் பயிற்சி விளையாட்டுப் பாடல்கள் (Physicalplaysongs) வாய்மொழி விளையாட்டுப் பாடல்கள் (Verbal play songs) என இரண்டாகப் பகுக்கலாமென டாகடர் பொதுவாகச் சிறுவர் பாடும் ஆறு. இரமநாதன் கூறுகிறார். பாடல்களை நாப்பயிற்சிப் பாடல்கள், எண்ணுப் பயிற்சிப்

பாடல்கள். அறிவு வளர்ச்சிப் பாடல்கள், நீதிப் பாடல்கள், பக்திப்பாடல்கள், பறவை மிருகங்களைப் பற்றிய பாடல்கள், விழாக் காலப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள். வினாவிடைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் எனப் பத்து வகையாகப் பகுக்கலாம். விளையாட்டுப் பாடல்களையும் சிறுவர் விளையாட்டுப் பாடல்கள், சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள், சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பாடல்கள் என மேலும் பகுக்கலாம். சில குழந்தைப் பாடல்களை இங்குக் காண்போம்.

**சடுகுடு விளையாட்டுப் பாடல்**

'சடுகுடு மயிலைலே ரெண்டானே
தவறி விழுந்தது கிழட்டானே
தூக்கி விட்டது இளவட்டம்
இளவட்டம் இளவட்டம்'.

**எண்ணுப் பயிற்சிப் பாடல்**

ஒரு குடம் தண்ணிமொண்டு
ஒரே பூ பூத்ததாம்
இரண்டு குடம் தண்ணிமொண்டு
இரண்டே பூ பூத்ததாம்
மூன்று குடம் தண்ணிமொண்டு
மூன்றே பூ பூத்ததாம்
நான்கு குடம் தண்ணிமொண்டு
நான்கே பூ பூத்ததாம்
ஐந்து குடம் தண்ணிமொண்டு
ஐந்தே பூ பூத்ததாம்
.............................
.............................

சிறு குழந்தைகளுக்கு ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு மேலே கண்ட பாடல் களைப்பாடுவர்.

**வினா விடைப் பாடல்**

என்னாக் கொம்பு மான் கொம்பு
தேன் தேன்
என்னாத் தேன்
கொம்புத் தேன்
என்னா மான்

காட்டு மான்
என்னா காடு
ஆற்காடு
என்னா ஆறு
பாலாறு என்னாப் பால்
கள்ளிப் பால் என்னாக் கள்ளி
எலை கள்ளி
என்னா எலை
வாழ எலை
என்னா வாழை
கல் வாழை
என்னாக் கல்
திண்டுக்கல்.

**3. காதல் பாடல்கள்**

அகத்தின்கண் மறைந்தும் புறத்தின்கண் புலப்பட்டும் மெய்ப்பாடுகளால் தாக்கப்பெறும் வலிய சக்தியே காதல். ஆண் பெண் என்ற தத்துவத்தின் வித்தாகவும் அவற்றின் வாழ்வுக்கும் வளமைக்கும் அடிப்படையாகவும் காதல் விளங்குவதைக் காணலாம். மனித இனம் தோன்றிய அன்றே காதல் உணர்வுகளும் தோன்றியிருக்க வேண்டும். தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். மனித வாழவில் இன்பமும் துன்பமும் கலந்திருப்பதைப் போன்று இன்பம் என்ற உணர்ச்சிக்குக் காதல் பாட்டுகளையும், அன்பு என்ற உணர்ச்சிக்குத் தாலாட்டுகளையும், துன்பம் என்ற உணர்ச்சிக்கு ஒப்பாரிப் பாடல்களையும் எடுத்துக்காட்டாகக் கூறுவர். பருவமடைந்த இரு உள்ளங்கள் ஒன்றாகச் சேர வேண்டும் என்ற வேட்கையால் எழும் உணாச்சி எல்லா மனங்களுக்கும் பொதுவானதாகும். உளவியலார் கூறுவது போனறு மனிதன் பிறக்கும் போதே அவ்வுணர்வு தன்னோடு இருப்பினும், பருவம் அடையும் போது அவ்வுணர்வு மலர்ந்து மணம் வீசுகிறது. அவ் வுணர்வுகளை வெளிப்படுத்தும் வடிகாலாக இக் காதல் பாட்டுகள் உள்ளன.

இலக்கியக் காதலும் நாட்டுப்புறக் காதலும் சில வகையில் ஒன்றுபட்டும் சில வகையில் வேறுபட்டும் நிற்கின்றன. தலைவன் தலைவி வனப்பு நோக்கிக் காதல் உண்டாவது இலக்கியக் காதல் உறவின் அடிப்படையில் எழுதுவது நாட்டுப்புறக் காதல், நாட்டுப் புறக் காதலில் காதலன் பெயரைக் கூறுவது சர்வ சாதாரணமாகக்

காணப்படுகின்றது. இலக்கியத் தோழியை இங்குக் கான முடியாது. காதலனும் காதலியும் நேருக்கு நேர் சந்தித்துத் தமது இன்ப, துன்பங்களையும் விருப்பு, வெறுப்புகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். இலக்கியக் காதலைப் போன்றே நாட்டுப்புறக் காதலிலும் கைக்கிளையும் பெருந்திணையும் உண்டு.

காதல் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று காதலர்களே பாடுவது. மற்றொன்று காதலர்கள் அல்லாதவர்கள் தொழில் செய்யும்போது காதல் பாட்டுகள் பாடுவது. ஆனால், பெரும்பாலும் நாட்டுப்புறக் காதல் தொழில் செய்யுமிடங்களில் தான் பிறக்கிறது. வண்டிக்காரன் பாடும் தெம்மாங்குப் பாடல் களில் காதல் சுவையைக் காணலாம், உறவில் இன்பம் காண்பதும் பிரிவில் வேதனையடைவதும் இவர்களது பாடற் பொருளாகும். காதலர்கள் சந்திக்கும் பொழுது பகற்குறி, இரவுக்குறி முதலியவற்றைக் குறித்தலும், பகற்குறி யிடையீடு. இரவுக்குறி யிடையீடு ஏற்படுதலும், அதனை நினைந்து வேதனைப்படுவதும் நாட்டுப்புறக் காதலில் காண்கிறோம். சந்திப்பு வளர வளரத் திருமணம் செய்து கொள்ளும் உறுதிமொழியும் பிறக்கிறது இதற்கிடையே ஊடலும் ஊடல்தணிதலும், பிரிவும் பிரிவகற்றலும், இற்செறித்தலும் உடன்போக்கும் நடைபெறு கின்றன. பரத்தையை நாடிச் செல்வதையும் கள்ளக்காதலையும் அதன் விளைவான விவகாரத்தையும் காண்கிறோம். இலக்கியத் தில் காணப்படும் களவு, கற்பு போன்றவற்றை ஓரளவு நாட்டுப் புறப் பாடல்களிலும் காணலாம்.

தனது அன்புக் காதலியை வருணித்துத் தோ பார்க்க. வரும்படி ஆசையுடன் காதலன் அழைக்கிறான்.

'அன்ன நடையழகி
அலங்கார உடையழகி
பின்னல் நடையழகி - செல்லம்மா
புறப்படம்மா தேருபார்க்க

என்று பாடுகிறான். அதற்கு அவள்,

'மதன வடிவழகா
மாமோகச் சொல்லழகா
வண்ண உருவழகா - என் ஆசை மச்சானே

வரமாட்டேன் தேரு பார்க்க'

என்கிறாள்.

நாட்டுப்புறக்காதலில் காதலனும் காதலியும் சந்தித்து நெருங்கி உறவாடினாலும் காதலியானவள் தனது கற்புக்குப் பங்கம் ஏற்படாது காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றாள். காதலன் எப்போதும் துடிப்பு மிக்கவனாகவே உள்ளான். அத்துடிப்பை ஒருவாறு ஆற்றுப்படுத்துகின்றாள். அந் நிகழ்ச்சியைக் கீழ்க்கண்ட பாடல்கள் மூலம் அறியலாம்:

'மண்குடம் கொண்டு

மலையோரம் தண்ணிக்குப்போகும்-மாமன் மகளே

உன் இரண்டு மண்குடத்தின் விலை என்ன ?

எனக் கேட்கிறான்.

'மண்குடம் போனால்

மறுகுடம் வாங்கலாம்

மானம் போனால்-மாமன் மகனே

உலகம் என்ன சொல்லும் ?'

எனப் பதிலளிக்கிறாள்:

பரத்தையர் தொடர்பு, கள்ளக்காதல், மனக்கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் கணவன், மனைவியரிடையே உறவு முறிவதுண்டு. அவ்வாறு உறவுமுறிந்த பெண்ணொருத்தி தன் மனக் குமுறலைப் பாட்டாக வடிக்கின்றாள்:

'கூடினமே கூடினமே

கூட்டுவண்டிக் காளைபோல

விட்டுப் பிரிஞ்சமையா ஒத்தவண்டிக் காளைபோல',

**4. தொழில் பாடல்கள்**

இயற்கையைத் தனக்குச் சாதனமாகப் பயன்படுத்திக கொள்ளும் செயலே பழங்காலத்தில் தொழில் எனக் கருதப் பட்டது இன்று தொழிலே உலகத்தை இயங்கும். சாதியாக வளர்ந்துள்ளது. 'வினையே ஆடவர்க்குயிரே' என்றும், செய்யும். தொழிலே தெய்வம்' என்றும் நம்புகின்றனர். பொதுவாகத் தொழில் புரியும்போது பாடும் பாடல்களைத் தொழில் பாடலாள் என்கிறோம். தொழிலின சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்கப் பாடுகின்றனர். தொழிலாளர்கள்

தங்கள் வேதனைக்கு வடிகாலாகவும் பயன்படுத்துகின்றனர். மனிதர்கள் கூடித் தொழில் செய்யும்போது அக்கூட்டுறலிலே பிறப்பது தொழில் பாடல்கள். தொழில் பாடல்களிலே அன்பு மலாவதையும், பாசம் பொங்குவதையும், உழைப்பின ஆர்வத்தை யும் நன்மையில் ஈடுபாட்டையும், தீமையில் வெறுப்பையும் காண்கிறோம். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப துன்பங்களையும் நெஞ்சக் குமுறல்களையும் ஆசாபாசங்களையும் விருப்பு வெறுப்புகளையும் வெளியிடுகின்றன. தொழில் பாடல்களை ஏலோலங்கிடி பாட்டு, தில்லாலங்கடி பாட்டு. தெம்மாங்குப் பாட்டு, ஏற்றப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் வழங்குவர்.

தொழிற்பாடல்கள் சில குறியீடுகளுடன் தொடங்குகின்றன. விவசாயப் பாடல்களில் ஏலேலோக குயிலே ஏலங்குடிலேலே ஏலேலே அன்னக்கிளி, ஏலேலோ குயிலே, பொலி பொலி பொலி என்றும், சுப்பற் பாட்டுகளில் ஏலேலோ ஐலசா, ஏலை ஏலோ சல சலா என்றும், பாரந்தூக்குவோர்கள் ஐலசா ஐலசா, ஏலம் பிடி ஏலம் என்றும் வண்டியோட்டுவோர் ஏலங்கிடிலேலோ என்றும் பாடுவர்.

தொழிற்பாடல்களில் அத்தொழில்களைப் பற்றிய குறிப்புக் களைத் தவிர வேறுபல பொருட்களைப்பற்றியும் பாடுவர். தொழிற்பாடல்களில் தொழிலுக்கு அடுத்தபடியாகக் காதல் இடம் பெறுவதுண்டு. வழிபாடுகளும் புராணக் கூறுகளும் இடம் பெறுகின்றன. தொழிற்பாடல்கள் மூலம் மக்கள் செய்த தொழில்களைப் பற்றியும், அதனாலேற்பட்ட ஏற்றத்தாழ்வு களைப்பற்றியும், சமுதாய அமைப்பு பற்றியும் அறிகிறோம். இன்று தொழிற்பாடல்கள் சமுதாயத்தில் எழுச்சியையும் ஏற்படுத்துகின்றன.

**ஏற்றப்பாட்டு**

ஏற்றம் இறைக்கும்போது பாடும் பாடல்களை ஏற்றப்பாட்டு என்பர். பயிர்த்தொழில் பாடல்களில் ஏற்றப்பாட்டிறகுத் தனிச்சிறப்பிடம் உண்டு. 'ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை' என்ற பழமொழி இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஏற்றம் இறைக்கத் தொடங்குமுன் உழவர்கள் தாங்கள் வழிபடும் தெய்வங்களை அருள்புரியவேண்டும் என விரும்புவர்.

'பெருமாளே வாரீர்

சிவனாரே வாரீர்

சிவனும் பெருமாளும்

சேர்ந்து மடலேறும்

அரியும் சிவனும்

அமர்ந்து மடலேறும்'.

ஏற்றம் இறைக்கச் செல்லும் நேரம் வைகறைப் பொழு தாகும். இலைகள் மீதும் புல்லின மீதும் பனித்துளிகள் முத்து முத்தாய் விளங்குகின்றன. அதைக்கண்ட நாட்டுப்புறப்பாவலன் அக்காட்சியைத் தனது ஏற்றப்பாடலில் வடிக்கின்றான்.

'மூங்கில் இலைமேலே

தேங்கும் பனிநீரே!

கோவை இலைமேலே

கொள்ளும் பனிநீரே!

பாவை இவைமேலே

படரும் பனிநீரே!

வாழை இலைமேலே

படரும் பனிநீரே!'

**படகுக்காரன் பாட்டு**

நதியிலே படகு மிதந்து செல்கிறது. மாலைச் செவ்வானம் நீரிலே பிரதிபலிக்கிறது. படகிலே படகோட்டியும் காதலியும் உள்ளனர். அவன் உள்ளத்திலே இன்பம் பொங்கி வழிகிறது. படகோட்டி இனியநாதம் இசைக்க ஆரம்பிக்கிறான். 'மண்ணை நம்பி' என்று அவன் பாட, 'ஏலேலோ' என்று அவள் கூற. 'மரமிருக்க' என்று அவன் பாட, 'ஐலசா' என அவள் பாடுகிறாள். அவள் ஏலேலோ ஐலசா என்று கூறாவிட்டால் பாட்டுக்குத் தாளமே அமைவதில்லை.

'மண்ணை நம்பி - ஏலேலோ

மரம் இருக்க ஐலசா

மரத்தை நம்பி ஏலேலோ –

கிளை யிருக்க ஐலசா

கிளையை நம்பி ஏலேலோ

கோல் இருக்க – ஐலசா

கோலை நம்பி ஏலேலோ

பூ விருக்க ஜலசா

பூவை நம்பி ஏலேலோ

பிஞ்சிருக்க ஜலசா

பிஞ்சிருக்க ஜலசா

பிஞ்சை நம்பி – ஏலேலோ

காயிருக்க ஜலசா

காயை நம்பி ஏலேலோ

பழ மிருக்க ஜலசா

பழத்தை நம்பி ஏலேலோ

நீ யிருக்க –ஜலசா

உன்னை நம்பி – ஏலேலோ

- நானிருக்கேன் ஜலசா

மண்ணிலிருந்து தொடங்கி பழம் வரை சென்று 'உன்னை நம்பி நானிருக்கேன்' என்று தொடர்புபடுத்தி முடிக்கிறான் படகுக்காரன். மண்ணில் தொடங்கி கனிக்குமேல் கனியாக அவளைக் காண்பதற்குத்தான் என்பதை நேரடியாகக் கூறாமல் எங்கேயோ ஆரம்பித்து, அழகிய நிலைக்களனை ஏற்படுத்தி அதன் முடிவாக முக்கியக் கருத்தை அமைக்கிறான் நாட்டுப்புறப் பாவலன்.

**மீனவர் பாடல்**

மீனவர்கள் இரவில் சென்று கடலில் மீன் பிடிக்கும்போது நட்சத்திரங்கள்தாம் அவர்களுக்கு விளக்காகும். பரந்த கடலே அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடம். அலையே அவர்களது தோழர்கள். மேகமே ஆடையாகவும், புயலே ஊஞ்சலாகவும், பனிமூட்டமே போர்வையாகவும், காயும் வெயிலே கூரையாகவும், கட்டுமரமே வீடாகவும், மீன்வலையே அரிச்சுவடியாகவும், பிடிக்கும் மீன்களே வாழ்வுக்குரிய பொருளாகவும், வெண்மணலே பஞ்சு மெத்தையாகவும், முழு நிலவே கண்ணாடியாகவும் கொண்டு வாழ்கின்றனர். மீனவரது வாழ்வையே காண்போம். படம் பிடித்துக் காட்டும் இப்பாடல்

'விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா

விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா

அடிக்கும் அலையே நம்தோழன் -ஜலசா

அருமைமேகம் நமதுகுடை - ஜலசா

பாயும் புயல் நம்ஊஞ்சல் ஐலசா

பனிமூட்டம் உடல்போர்வை - ஐலசா

காயும் ரவிச்சுடர்கூரை ஐலசா

கட்டுமரம் வாழும் வீடு - ஐலசா

மின்னல்வலை அரிச்சுவடி - ஐலசா

பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் – ஐலசா

மின்னல் இடிகாணும் கூத்து - ஐலசா

வெண்மணலே பஞ்சுமெத்தை - ஐலசா

முழுநிலாதான் கண்ணாடி - ஐலசா

மூச்சடக்கி நீந்தல் யோகம் ஐலசா

தொழும் தலைவன் பெருவானம் - ஐலசா

தொண்டு தொழிலாளர் நாங்கள் ஐலசா'

**வண்டிக்காரன் பாட்டு**

வண்டியோட்டும் காளையொருவன் ஒருத்திமீது காதல் கொள்கிறான். காதல் வளர்கிறது. அவள் அழகான சேலை உடுத்தி வருகிறாள். யார் கொடுத்த சேலை என வினவுகிறான். நெஞ்சில் முள்ளாகத் தைக்கிறது. பொங்கி எழுகிறாள். உழைத்து வாங்கியது எனக் கூறுகிறாள். அவர்கள் பாடும் பாடல் இது.

'வட்ட வட்டப் பாறையிலே குட்டி

வரகரசி தீட்டையிலே

ஆர்கொடுத்த சாயச்சீலை - குட்டி

ஆலவட்டம் போடுதடி?

ஆருங் கொடுக்கவில்லை - மச்சான்

அவிசாரி தான் ஆகவில்லை

வன்பாடு பட்டுதான் - மச்சான்

வாங்கினேண்டா சாயச்சீலை'.

**5. கொண்டாட்டப் பாடல்கள்**

மனிதன் தன் மகிழ்ச்சியினை ஆடியும் பாடியும் பலரோடு கலந்து கொண்டாடுகிறான். மனிதன் தன் மகிழ்வினைப் பாட்டாகவும் கூத்தாகவும் வெளியிடுகிறான். அவ்வாறு வெளியிடும் போது தொன்மையான கலைச்

சிறப்பையும் நமது நாட்டின் பண்பாட்டுச் சிறப்பினையும் அறியமுடிகின்றது. மனித உழைப்பிற்குப் பின் மனிதனுடைய மனமானது ஆடல். பாடல்களில் ஈடுபட விழைவது இயற்கையாகும். பலர் இணைந்து ஆடும் கும்மி, கோலாட்டம் போன்ற பாடல்களும், பெரும்பாலும் குடும்ப உறவினரே பங்கு கொள்ளும் பூப்புச்சடங்கு, திருமணம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்ளெல்லாம் கொண்டாட்டச் பாடலகள் எனப்படும். பலரும் கலந்தாடும் கும்மி, கோலாட்டம் போன்ற ஆட்டங்களில் பாடப்படும் பாடல்களைப் புறப்பாடல் கள் எனலாம் சமூகத்திலுள்ள பலரும் இணைந்து குழுவாகப் பாடப்படுவது பூப்புச்சடங்குப் பாடல், திருமணம், பரிகாசம், நலுங்கு, ஊஞ்சல், வளைகாப்புப் பாடல்கள் போன்றவற்றை அகப்பாடல்கள் எனலாம். எனவே கொண்டாட்டப் பாடல்களை அகப் பாடல்கள் என்றும், புறப் பாடல்கள் என்றும் இருபிரிவாகப் பிரிக்கலாம்

**மண வாழ்த்து**

திருமணத்தின்போது பெரியோர்கள் மணமக்களை வாழ்த்துவர். அகநானூற்றில் இதன் அரும்பையும், சிலம்பில் இதன் வளர்ச்சியையும் காணலாம். மணமக்கள் வாழ்வும் வளமும் நலமும் பொலிய வேண்டுமெனப் பெரியோர்கள் வாழ்த்துவர்.

'பிள்ளை பதினாறும் பெற்றுப்
பெருவாழ்வு வாழ்ந்திருங்கள்
மக்கள் பதினாறும் பெற்று
மங்களமாய் வாழ்ந்திருங்கள்!

ஆல்போல் தழைத்து
அருகுபோல் வேரூன்றி
நலமுடனே எந்நாளும்
ஞானமுடன் வாழ்ந்திடுவீர்!'

**பரிகாசப் பாடல்கள்**

கறுப்பு நிறமான மாப்பிள்ளை மைத்துனிமார்களிடம் அகப் பட்டுக் கேலிக்குள்ளாகும் நிலையை விளக்கும் பாட்டு இது:

'எண்ணெ கொடத்துலே எளயுதய்யா ஒங்கருப்பு
தண்ணி கொடத்துலே தளம்புதய்யா ஒங்கருப்பு
கொட்டவந்த மேளக்காரன் கூடக் கருப்பென்றான்
ஆடவந்த தேவடியாள் அதிகம் கருப்பென்றாள்

மாலை கொண்டு வந்தவரும் கருப்பென்றார்

தாலி கொண்டு வந்த கருமருங் கருப்பென்றார்'.

**கும்மிப் பாடல்கள்**

பருவமடைந்த பெண்ணுக்கு மஞ்சள் பூசி மாலை போட்டுப் பாட்டுப் பாடிக் கும்மியடிக்கின்றனர்.

'கும்மியடி நல்லா கும்மியடி - அம்மா

குனிஞ்சு நல்லா கும்மியடி

குளக்கரை ஓரத்திலே பொண்ணு

**7. ஒப்பாரிப் பாடல்கள்**

இறந்தவர்களை நினைத்து அவர்கள்மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரி என்பர். இறந்தவர்களின், இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப்பாடுவதும் ஒப்பாரியாகும். வாழ்வில் முன்னுரை தாலாட்டு.ஆனால் முடிவுரை ஒப்பாரியாகும். தாலாட்டு கலங்கரை விளக்கமானால். ஒப்பாரி நினைவுச் சின்னமாகும். தாலாட்டும் ஒப்பாரியும் பெண்குலத்தின் படைப்பாகும். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி ஒப்பாரியை ஒப்ப + ஆரி எனப் பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் எனப்பொருள் தருகிறது' ஒரு தமிழ் ஆங்கில அகராதி ஒப்பாரிக்கு ஒப்புச்சொல்லி அழுதல் என்று பொருள் கூறுகிறது. அதோடு பெண்களால் பாடப்படுவது என்றும். இறந்தவர்க்கும் அடுத்த பிற பொருள்களுக்கும் ஒப்புச்சொல்லிப் பாடுவது என்றும் கூறுகிறது. தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், கையறு நிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு. இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு எனப் பல்வகையாகக் கூறுவர். பாதுகாப்பை இழந்தாலும், பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் கொப்பளிக்கின்றது. கணவனுக்காகவும் பெற்றோர்க்காகவும், உடன் பிறந்தவர்க்காகவும் மாமன் மாமிக்காகவும் இறந்த பொழுயில் பெண்கள் ஒப்பாரி பாடுகின்றனர். 'தலைச்சன் பிள்ளை பெத்தவளுக்குத் தாலாட்டும், புருஷனை இருந்தவளுக்கு ஒப்பாரியும் தானாகவே வரும்' என்ற பழமொழி இக்கருத்துக்கு அரணாக விளங்குகிறது.

நமது தமிழ்ச் சமுதாயத்தில் பென்சமுதாயம் ஒரு சார்புச் சமுதாயமாகும். ஒரு பெண்னானவள் தன் வாழ்க்கை முழுதும் யாரையேனும் சார்ந்தே வாழ்கிறாள்.

குழந்தைப் பருவத்தில் பெற்றோரைச் சார்த்தும், திருமணத்திற்குப் பின்பு கணவனைச் சார்ந்தும், கணவன் இறந்து விட்டால் மகனையோ அல்லது மகளையோ சார்ந்தும் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் நம் சமூக அமைப்பில் இருந்து வருகிறது. நம் சமுதாயத்தில் விதவையின் நிலையை எண்ணிப் பார்த்தால் வேதனைதான் மிஞ்சும் விதவை களைப் பாதிக்கும் சமூகப் பிரச்சினைகளும் நிறைய உண்டு.

இறந்தவரின் பெருமையும் அவரது குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் பேசப்படுவதுண்டு. ஒப்பாரி பாடுகின்றவர்கள் இறந்தவரை நேசித்தமுறையும் தன்னுடைய நிலைமை பற்றியும் குடும்பத்தின் நிலைமைபற்றியும் பாடுகின்றனர். ஈமச்சடங்குகள் பற்றிய விவரங்களும் கூறப்படுவதுண்டு. காலனது கொடுமையும் விதியின வலிமையும் விதவையின் வேதனையும் இறந்தவரால் அடைந்த இழப்பும் ஒப்பாரியின் பொருளாகின்றன. ஒருவருடைய மனக்குறையைப் பிறரிடம் கூறினால் மனப்பாரம் குறையும் என மனிதர்கள் எண்ணுவது இயல்பாகும். ஒப்பாரியை அவற்றின் வெளிப்பாடு (Outlet) என்றே கூறலாம். இறந்தவர்களின் ஆவி ஒப்பாரிகளால் சாந்தியடைவதாகவும், ஒப்பாரி பாடாவிட்டால் ஆவிகள் துன்புறும் என்றும், இவ்வுலகம் விட்டு மறுவுலகம் செல்ல ஒப்பாரிகள் இறக்கைகளாக உதவுகின்றன என்றும், ஆவிகள் மூலம் தீங்குவாராமல் காக்கலாம் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

கணவன் இறந்துவிட்டால் கனவுகளில் மிதக்கவேண்டிய மனைவி கண்ணீரில் மிதக்க வேண்டும். கணவனை இழந்த பெண்கள் படும் துயரம் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. கணவனை இழந்துவிட்டால் அவளுக்குப் பூவும் பொட்டும் சொந்தமில்லை. அணிகலன்களால் அழகு செய்ய முடியாது. நிகழ் கால வாழ்க்கை சரிந்து வருங்காலத்தில் எண்ணற்ற துன்பங்களை எதிர்நோக்க வேண்டியவளாகிறாள்.கணவனை இழந்த

பெண்ணொருத்தி இறந்தபின்பு தாலியை கழற்ற மணம் ஒப்பவில்லையே என்றும். சாப்பாட்டிற்கே வழிபிலலையே ஏன்றும் கூறி ஒப்பாரி வைக்கிறான்;

'தாலி பெருஞ்சாடு

தாழம்பூ நச்சாடு
தாலிமேல் கைவச்சா
தாளாதய்யா எம்மனக!

மாலையோ பெருஞ்சாடு

மகிழம்பூ நச்சாடு
மாலைமேல் கைவச்சன
மாளாதய்யா எம்மளகர்
கொத்தான பெருஞ்சரடு
கோர்வையான செஞ்சரடு
கொத்துமேல் கைபோட்டா
கோணுதய்யா எம்மனக!

......................................

பம்ப புளியமரம்
பந்தடிக்கும் நந்தவனம்
பந்தடிச்சி வீடுவந்தா
பச்சத்தண்ணி யார் தருவா?

கடன் வாங்கிச் சோறுதின்னா
கடன்காரன் நச்சரிப்பான்
கண்கலங்கி நிக்கையிலே
கண்டசனம் பேசுமய்யா!'

கணவன் இறந்து விடுகிறான். கணவனின் இழப்பிற்கு இவர் களெல்லாம் காரணமாக இருக்கலாம் என்று எண்ணி வேதனைப் படுகின்றாள்.

'தாலிக்கு அரும்பெடுத்த
தட்டானும் கண் குருடோ?
சேலைக்கு நூலெடுத்த
சேணியனும் கண்குருடோ ?
பஞ்சாங்கம் பாக்கவந்த
பார்ப்பானும் கண்குருடோ
எழுதினவன் தான் குருடோ?
எழுத்தாணி கூர் இல்லையோ ?'

பெற்றெடுத்த தாய் இறந்து விட்டாள். அத்தாயின் இழப்பை எண்ணி மகள் வருந்துகின்றாள். அவள் நெஞ்சிலுள்ள நெருப்பு என்று தணியும் என ஏங்கி இரங்குகிறாள்.

'தச்சன் ஒலை நெருப்பு
தணியும் ஒரு சாமம்

என் தங்கமடி நெருப்பு
தான் தணிவது எக்காலம்?
கொல்லன் ஓலை நெருப்பு
குளிரும் ஒரு காலம்
என் கொடிய மடி நெருப்பு
தான் குளிருவது எக்காலம்'.

'பனைமரத்து நிழலில் பறவைகள் வந்து தங்கி இளைப் பாறுவது வழக்கம். அந்த மரம் புயலில் சாய்ந்து விட்டால் பறவைகள் தங்க நிழலின்றித் தவிக்கும். அதுபோன்று தந்தையை இழந்து நாங்கள் தவிக்கின்றோம்' என்று ஒரு பெண் புலம்பிப் பாடும் பாடல் இது:

கூந்தல் பனஞ்சோலை
குயிலடையும் மண்டபங்க-நீங்க
கூந்தல் பனைசாஞ்சா-நாங்க
குயிலடைய அஞ்சுறோம்பா
மட்டை பனஞ்சோலை
மயிலடையும் மண்டபங்க-நீங்க
மட்டை பனைசாஞ்சா-நாங்க மயிலாட அஞ்சுறோம்பா.
நீல குளத்தங்கரை-நாங்க
நின்னழுவும் மந்தகரை
நின்னழுது வீடுவந்தா
நீரா தண்ணி யார் கொடுப்பா?
மூன்று கதவிருக்க
முத்திரை போட்டிருக்க
முத்திரையை நான் திறக்க
உத்தரவு யார் கொடுப்பா?

சீராட்டிப் பாராட்டி வளர்த்த அருமை மகளை மணக் கோலத்தில் காணவிரும்புகிறாள் தாய். மணக்கோலத்தில் காண வேண்டிய மகளைப் பிணக்கோலத்தில் காணுகிறாள். அவள்படும் வேதனைக்கு அளவில்லை:

'மணவறைப் பந்தலிலே-உன்

மணக்கோலம் பாராமல்

பிணவறைப் பந்தலிலே-நானும்

பேரிழவே கொள்ளுகின்றேன்'.

**ஒப்பாரி காட்டும் பெண்கள் நிலை**

குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய கணவன் இறந்து போனால் மனைவி பெரும் பாதிப்புக்குள்ளாகிறாள். பேரிழப்பை மட்டுமின்றி அமங்கலி என்ற சொல்லையும் தாங்கிக் கொள்ள வேண்டியவளாகிறாள் கணவனை இழந்த இழப்யைக் காட்டிலும் கைம்மை நோன்பின் கொடூரம் வேதனைக்குள்ளாக்குகிறது. விதவைகள் எந்தச் சுபகாரியத்திலும் பங்கு பெறக்கூடாது அவள் தொட்ட காரியம் துலங்காது. எதிரே வந்தால் சகுனத்தடை என்றெல்லாம் சமூகம் நினைக்கிறது. பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையில் பெண்களுக்கு நேரும் துயரங்களை ஒப்பாரிப் பாடல்களில் காண்கிறோம். பெற்றோருக்குப் பின் பிறந்த வீட்டிலும் வரவேற்பில்லை. தன் வயது ஒத்த அண்ணி கொடுமையின் சின்னமாக நாட்டுப்புறப் பாடல்களில் சித்தரிக்கப் பட்டுள்ளாள். பெற்றோரை இழந்த பெண்ணொருத்தி தனக்குப் பொன்னும் பொருளும் சீதனமும் வேண்டாம். அன்பான வார்த்தை கூறி வரவேற்றால் போதும் என வேதனையால் புலம்புவதையும் காண்கிறோம்:

'அள்ளி கொடுக்க வேண்டாம்

அரண்மனையில் பாகம் வேண்டாம்

அன்பான வார்த்தை சொல்லி-என்னை

அரவணைத்தால் போதும்,

பணங்காசு கொடுக்க வேண்டாம்

பட்டுப்பாய் போட வேண்டாம்

பாசமுள்ள வார்த்தை சொல்லி- என்னை

பராமரிச்சா போதும்

சீர்வரிசை செய்ய வேண்டாம்

சிப்பக்கட்டு கட்ட வேண்டாம்

சாந்தமான வார்த்தை சொல்லி-என்னை

சிரிக்கவைச்சா போதும்.

சுருங்கக்கூறின் பெண்களின் சோக உணர்ச்சிகள் முழுமையும் ஒப்பாரிப் பாடல்களில். பிரதிபலிப்பதைக் காணலாம்.

**நாட்டுப்புறக் கதைகள்**

மனிதகுலம் வளர்ந்த கதை சுவையானது யாவரும் அறிய விரும்புவது மனிதனின் கதை மகத்தானது. மனித வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகிறது. சில நிகழ்ச்சிகள் பெருங் கதையாய் விரிகின்றன. மனிதனின் ஆசைகள். அவலங்கள், தேவைகள், விருப்பு வெறுப்புகள், கனவுகள், கற்பனைகள் கதைகளாகின்றன, கதை கற்பனையை வளர்க்கிறது. கற்பனைக் கதைகளும் மனித வாழ்வின் மகத்துவங்களையே பேசுகின்றன,

கதை சொல்வதும் கேட்பதும் மாந்தர் இயல்பு. கதை சொல்வதும் கேட்பதும் கலை. ஆதிகால மனிதன் நாடோடி வாழ்க்கை நடத்தினான். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றதும் கால்நடை மேய்ச்சலுக்காக அலைந்து திரிந்தபோது அதைக் கதையாகக் கூற ஆரம்பித்தான். ஆதி மனிதன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்குக் கதையாகக் கூற ஆரம்பித்ததே கதையின் தொடக்கம் என்பர். அச்ச உணர்வு, இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணும் முயற்சி, வாழ்வியலில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளால் மக்கள் மனதில் நேர்ந்த பாதிப்பு. உயர்வு, தாழ்வு மனப்பான்மை அறம் உரைத்தல் முதலியவைகள் கதைகள் தோன்றக் காரணம் என்பர். பொழுது போக்கிற்காகவும் நீதிகளை வலியுறுத்தவும் கதைகள் புனையப்பட்டன. உலகமுழுவதும் ஒரே மாதிரியான கதை பரவ தொழில், கொண்டு கொடுத்த உறவுமுறை, விழா முதலியனவும் பிறமொழிக் கதைகள் பரவ வணிகத் தொடர்பு, கலை, இலக்கியம், பண்பாடு, ஆட்சித்தொடர்பு முதலியவைகளும் காரணமாக உள்ளன.

கதைகள் தொல்காப்பியர் காலத்திலே வழக்கிலிருந்ததை அறிகிறோம்.

பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
(தொல். செய்.173)

இச்சூத்திரத்திற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியருமம் பிள வகுமாறு விளக்கம் அளிக்கின்றனர்.

ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்வன. அவை ஓர் யானையுங் குரீஇயுந் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இவ்வாறு செய்தன வென்று அவற்றுக்கியையாப் பொருள் படத் தொடர் நிலையான் ஒருவனுழை ஒருவன் கூற்று

வரலாற்று முறையான் வருகின்றன. பொருளொடு புணர்ந்த நகைமொழியானு மென்பது 'பொய்யெனப் படாது மெய்யெனப் பட்டும் நகுதற் கேதுவாகுந் தொடாநிலை' அதுவும் உரையெனப்படும். அவையாவன 'சிறுகுரீஇயுரையும் தந்திர வாக்கியமும் போல்வனவெனக் கொள்க'. இவற்றுட் சொல்லப்படும் பொருள் பொய்யெனப்படாது உலகியலாகிய நகைசொல் தோற்றுமென்பது ஆகும். உரையாசிரியர் இளம் பூரணர் பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும் என்பது பொருளியல்பில்லாப் பொய்மொழியாலும் உரைவரும் என்ற வாறு'. பொருளொடு புணர்ந்த நகை மொழியானும் என்பது பொருளைப் பொருந்திய நகைவழி மொழியாய் வருகின்றது என்றவாறு. நகை மொழியாவது 'மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாதென இகழ்ந்து கூறல்; அந்நிகழ்ச்சியின் பின்னர்ப் பொருள் உணர்த்தும் உரை பிறக்குமாதலின் பொருளோடு புணர்ந்த நகைமொழியானும் உரை வருமென்றார்'. பஞ்ச தந்திரத்திலுள்ள பார்ப்பினி-கீரிக்கதை சிலம்பில் காண்கிறோம்.

இந்தியா ஒரு கதைக் களஞ்சியம், தமிழ்நாடு கதைகளின் கருவூலம். ஆதிகால மக்கள் உலகத்தைப் பற்றியும் உலகத் தோற்றத்தைப் பற்றியும் கதைகள் புனைந்தனர். இவைகளே காலப்போக்கில் கற்பனைக் கதைகளாகவும் இதிகாசங்களாகவும் புராணங்களாகவும் மாறின. பழங்கால சமுதாயத்தை அறிய இக்கதைகள் பெரிதும் உதவும்,

இயற்கை மாறுதல்களையும் உற்பாதங்களையும் உருவகங் களால் விளக்குவதற்காகக் கதைகள் ஏற்பட்டன என மானிட வியலாரும் சமூகவியலாரும் உளவியலாரும்பொது விளக்கம் அளிக்கின்றனர். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்ற வற்றை விளக்குவது பழங்கதைகள் என்கிறார் பிரேசர் (Frazer). ஆசை நிறைவேறுவதற்குரிய கருவி பழங்கதைகள் என்கிறா உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Fraud). மனித குலத்தின் நனவில் மனக்கனவுகளைக் காட்டுவது பழங்கதைகள் என்கிறார் யுங் (Jung) **என்னும்** பேரறிஞர்.

**நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடு**

நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நாட்டுப்புறக் கதைகளைப் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்துகின்றனர்.

1 வில்லியம் பாஸ்கம் (William Bascom) அவர்கள் மூவகையாகப் பகுக்கின்றார்.

1. புராணக்கதை (Myth)

2 பழமரபுக்கதை (Lcgend)

3. நாட்டுப்புறக்கதை (Folktale)

2. ஆண்டி ஆர்னே (Antti Aarnc) யும் ஸ்டித் தாம்ஸனும் (Stith Thompson) இணைந்து நாட்டுப்புறக் கதைகளை ஐந்தாக வகைப் படுத்துகின்றனர்.

1. விலங்குக் கதைகள் (Animal tales)

2. சாதாரணக் கதைகள் (Ordinaary folktales)

3. நகைச்சுவை மற்றும் துணுக்குக் கதைகள் (Jokes and Anecdots)

4. வாய்ப்பாட்டுக் கதைகள் (Formula tales)

5. வகைப்படுத்தப்படாத கதைகள் (Unclassified folk tales

3. ஸ்டித் தாம்ஸன் (Stith Thompson) அவர்கள் The Talcs'என்ற நூலில் நாட்டுப்புறக் வகைப்படுத்துகிறார். கதைகளைப் பன்னிரண்டாக

1. வீட்டுக் கதைகள் -

2. இயற்கை கடந்த பகைவர்கள்

3. மந்திரங்களும் அதிசயங்களும்

4. காதலர்களும் மணமானவர்களும்

5. கடமை

6.நன்றி

7. உறவினர்கள்

8. மேலான சக்திகள்

9. உண்மைக் கதைகள்

10. விகடங்களும் கட்டுக்கதைகளும்

11. கட்டுக்கதைகளும் மரபுக்கதைகளும்

12. கட்டுக்கதைகளும் மரபுக்கதைகளும்

இப்பிரிவே மேலும் வகைப்படுத்தப்பட்டு உட்பிரிவாக வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு எண்கள் தரப்பட்டுள்ளன. அடிப்படை ஆய்வுக்கு இன்றியமையாததாகும். ஆய்வுகள் பெருகப் பெருக மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

4. போக்ஸ் (Boggs) என்பவர் வகைப்படுத்துகிறார். பதினான்கு பிரிவாக

1.விலங்குக் கதை

2. பொதுவான கதை

3. தந்திரக் கதை

4. சமயக் கதை

5. புனைவியல் கதை

6. அரக்கனின் முட்டாள் கதை

7. நகைச்சுவைக் கதை

8. முட்டாள் ஆண், பெண் கதை

9. திருமணத் தம்பதியர் கதை

10. பெண்கள் கதை

11. ஆண்கள் கதை

12. நீண்ட பொய்க்கதை

13. குறுகிய கதை

14.முடிவில்லாக் கதை

5. கான்ஸ்டன்ஸ் பெரல்ஸி அவர்கள் நாட்டுப்புறக் கதைகளைப் பதினான்காக வகைப்படுத்துகிறார்.

1. மனிதக் கதைகள்:

2. நீதிக் கதைகள்

3. அறநெறிக் கதைகள்

4. அறிவுரைக் கதைகள்

5. தியாகக் கதைகள்

6. அரசர் கதைகள்

7. குடும்பக் கதைகள்

8. வேடிக்கைக் கதைகள்

9. தொழில் கதைகள்

10. பயணக் கதைகள்

11. மிருகக் கதைகள்

12. மந்திரக் கதைகள்

13. தெய்வக் கதைகள்

14. சமயக் கதைகள்

6. பிரிட்டானிகா கலைக் களஞ்சியம் (EncyclopaediaofBrittanica Vol9. p519) மூன்று வகையாகப் பகுக்கின்றது.

1. புராணக்கதை (Myth)

2. பழங்கதை (Legend)

3. பொதுமக்கள் கதை (Popular tale)

7. போத்கர் (Bodgar) இந்திய விலங்குக் கதைகளை ஏழாக வகுத்துப் பல உட்பிரிவுகளை வகுத்துள்ளார்.

1. விலங்குகளுக்கிடையில் பகைமை (Enmity between animals)

2. அறிவுள்ள விலங்கு (Wise animal)

**நாட்டுப்புறக் கதைகளின் தன்மைகள்**

நாட்டுப்புற வழக்கில் கதைக்குக் கால் இல்லை என்பர் இன்னும் ஆராய்ப் புகுந்தால் முடிவே இருக்காது ஒவ்வொரு முறையும் மாறாமல் ஒன்றுபோல் பிழையும் பிறகும் இல்லாமல் கதை சொல்வது என்பது முடியாத காரியம் எனிவே போக்கில் கதைகள் மாறுதலைப் பெறுகின்றன என்கிறார் டாகடர்பாரா சுப்பிரமணியம் அவர்கள் சொல்பவரின் கற்பனைக்கும் கேட்பவரின் பொறுமைக்கும் ஏற்படகதைகள் குறுகியதாகவோ நெடியதாகிவா இருக்கும் சொல்லும் மாறுபடுவதுண்டு. முறையும் கேட்டவர்க்கேற்ப மாறுபடுவதுண்டு.

**கதைகளின் நோக்கம்**

கதைகளின் நோக்கம் மக்களுக்கு அறக்கோட்பாட்டை உணர்த்துவதாகும். நாட்டுப்புற மக்களுக்கு முறைசாராக் கல்வி (to-Formal போன்று உலகியல் அறிவைப் போன்று உலகியல் அறிவைப் புகட்டுகின்றது. அனைத்து மக்களின் வாழ்வியலை விளக்குவதாக உள்ளது. வாழ்க்கைக்கு வழி காட்டியாக அறிவூட்டி ஆக்கவழிப்படுத்துகின்றது. பொழுது போக்குச சாதனமாக மட்டுமின்றி அறநெறியைப் போதிக்கின்றது. வளரும் குழந்தைகட்கு நீதி போதனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. சிவாஜி இளம்வயதில் தாயிடம் கற்ற களை பிற்காலத்தில் சிறந்த வீரனாகத் திகழ வைத்தன. நீதிகளை உணர்த்த கதைகள் புனையப்பட்டன. நம்பிக்கைகள் கதைகளாக வெளிப்படுகின்றன. மொத்தத்தில் கதைகள் பயன்பாட்டிலக்கியமாகின்றன. சமூக வரலாற்றை அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. பண்பாட்டுக் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்யப் பெரிதும் துணைபுரிகின்றன. பழங்காலச் சமுதாயச் செய்திகளையும் அறியமுடிகின்றது. சமகாலச் செய்திகளையும்

**கதைகளின் பொருண்மைகள்**

வாழ்க்கைப் பிரச்சனை, ஆசை, துன்பம், சாதிப்பூசல், காதல், ஒழுக்கம், வேதனை, முட்டாள்தனம், பொறாமை, மன உணர்வெழுச்சி, கள்ள நட்பு, மந்திரம்,

புத்திசாலித்தனம், நீதி, முதலியவற்றின் பொருண்மைகளைப் காட்டுகின்றன நாட்டுப்புறக்கதைகள். படம் பிடித்துக் காட்டுகின்றன நாட்டுப்புறக் கதைகள்.

**அமைப்பியல் ஆய்வு (Structural Analysis)**

அமைப்பியல் ஆய்வு என்பது கதைகளின் உள்ளமைப் பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகள் ஒன்றோடொனது கொண்டுள்ள தொடர்பினையும் அவை ஒருங்கிணைத்து தரும் முழுமையினையும் விளக்குதல் எனலாம்.

இரஷ்ய நாட்டைச் சார்ந்த விளாடிமிர் பிராப்பத்தான் (Vladimir Proop) இக்கோட்பாட்டின் தந்தை எனக் கூறுவர். ஆ ◌ோதாம்சளின் ஆய்வுமுறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்று இக்கோட்பாட்டை உருவாக்கினார். கதைகளின் அமைப்பியல் கூறுகளை வரையறுக்க முயன்றவர். களில் அடாலப் ஸ்டென்டர் பீட்டர்சன் (Adolf stender petenon ஹோன்ஸ் ஹோன்டி (Hons Honti) விளாடிமிர் பிராப (Vladimir propp) லெவி ஸ்டிராஸ் (Levi Strauss) ஆலன் டாண்டிஸ் (Alan Dundes) போன்றோர் முக்கியமானவர்கள்.பிராப்பின் கோட்பாட்டிற்குத் தொடாபாட்டு ஆய்வுமுறை (Syntagmatic analysis) என்றும் லெவிஸ்டிராஸின ஆய்வுக் கோட்பாட்டிற்கு வாய்பாட்டு ஆய்வுமுறை (Paradigmatic analysis) என்றும் பெயர்,ஆலன்டாண்டிஸ் (1964) வட அமெரிக்க இந்தியக் கதைகளைக் குறை (Lack) குறை நீக்கம் (Lack liquidatcd) உழைப்பு (Task) உழைப்பு முற்றுப்பெறல் (task accomplished) குழ்ச்சி (Deccit) சூழ்ச்சிக்கு உட்படல் (Deception) தடை (Interdiction) தடை மீறல் (Violation) விளைவு (Consequences) தப்பிக்கும் முயற்சி (Attempted escape) எனும் பத்து வகை கூறள்கட்கு உட்படுத்தி அவற்றை இரண்டு அடிப்படைக் கதைக் கூறன்களின் வரிசை (Two nuclear motifeme sequence) நான்கு கதைக் கூறன்களின் வரிசையொன்று (A fours motifeme sequence) நான்கு கதைக் கூறன்களின் வரிசை மற்றொன்று (Another four motifeme sequence) ஆறு கதைக் கூறன்களின் தொகுதி (Six motifeme combination) அதிகக் கலவையும் நீண்டதுமான கதைகளின் அமைப்பு (The structure of more complex and extended tales) என்று ஐந்தாக வகைப் படுத்தியுள்ளார்.

நாட்டுப்புறக் கதைகள் அறக்கோட்பாட்டைப் போதிக்கவும் பொழுதுபோக்கிற்கும் சமுதாயத்தை அறியவும் பயன்படுகின்றன. தமிழகத்தில்

வழங்கப்படும் நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து ஆய்வு செய்யின் தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யப் பெரிதும் துணைபுரியும்.

**நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்**

கதையைப் பாடலாகப் பாடப்படுவதைக் கதைப்பாடல் என்பர் அது ஒரு கதையாகவோ அல்லது பல உடகதைகள் கொண்ட கதையாகவோ இருக்கவாம் ஆங்கிலத்தில் இதனை 'Sallad' என்று கூறுவர்.' Ballare என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். நடனம் என்ற பொருளும் உண்டு. மேலை நாட்டில் இச்சொல் பல பொருளில் வழங்கி, பதினாறாம் நூற்றாண்டிறகுப் பீன்னரே இச் சொல்லுக்குக் குறிப்பிட்ட வரையறை ஏற்பட்டது. கதைப்பாடல்கள் முதலில் பாடுவதற்கே எழுந்தனவாகும். எட்டுப்புற இலக்கியத்திற்குரிய அனைத்துக் கூறுகளும் கதைப் பாடலுக்கும் பொருந்தும்.) (கதைப்பாடல்கள் பெரும்பாலும் மக்களது பேச்சு மொழியிலே அமைந்திருக்கும். காப்பியங்கள் தோன்றுவதற்குக் கதைப்பாடல்களே மூல காரணம் எனின் மிகையாகாது. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கதைப் பாடல்களை உலகிலே எங்கும் காணமுடியாது.

கதைப்பாடலின் தோற்றத்திற்குப் பண்பாடு முக்கிய எதிரி, என்பர். வறட்சிப் பகுதியிலும் பின்தங்கிய பகுதிகளிலும் திறைய கதைப்பாடல்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இயந்தர் சூழல், மக்களின் மனப்பாங்கு, சாதிகளின் நடத்தை. போன் றவை. 2 கதைப்பாடல் தோன்ற முக்கியப்பங்கு வகித்தன எனக் கூறலாம்." நாட்டுப்புற மக்களின் கூட்டு முயற்சியால் எழுந்ததே கதைப் பாடலாகும். கிட்ரெட்ஜ் (Kitredge) அவர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு அதில் சில மாற்றம் செய்தார் நாட்டுப்புற மக்களின் கூட்டு முயற்சியால் தோன்றினாலும், அது ஒரு தலைவனின் கீழ் செயலாக்கம் பெற்றது என்று கூறுகிறார்." மத்திய காலத்தில்தான் கதைப்பாடல்கள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பல்லாண்டு காலமாகக் கதையைப் பாடலாகப் பாடியதால் மக்கள் அவற்றில் சில மாற்றங்களைச் செய்திருப்பார். வாய்மொழி இலக்கிய வகையான கதைப்பாட்டு மக்கள் முன் எடுத்துரைக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக இசைக் கருவிகளின் துணைகொண்டு மக்கள் முன் பாடப்படுவதாகும். இக்கதைப் பாடல்களைத் திருநெல்வேலி மாவட்டத்தில் வில்லுப் பாடல்கள். மகுடாட்டப் பாடல்கள் என்றும் கோவை மாவட்டத்தில் உடுக்கடிப் பாடல்கள் என்றும் கூறுவர்.

கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையானது மக்களது நாவில் திகழ்கின்றது. இதை இயற்றியவர் யாராகயிருப்பினும் பாடுபலரது உரிமையாகவே மாறிலிடுகிறது. இதற்கு முன்னுரையும் பின்னுரையும் விளக்கமும் தேவையில்லை என கலைக்களஞ்சியம்' கூறுகிறது.

கதைப்பாடல்கள் வரலாறுகள் அல்ல; அவை வீர காவியங்கள். மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் பாடல் என்றே கொள்ள வேண்டும் என டாக்டர் நா. வானமாமலை அவர்கள்' கூறுகிறார்.

ஆங்கிலத்தில் 'பாலட்' என்று சொல்லும் கருத்தைத் தமிழில் அம்மானை என அழைக்கின்றனர். இதற்குக் காரணங்கள் பல, ஒன்று பாடல்களில் அம்மானை என்ற சொல் பயன்படுத்தப் படுவது. மற்றொன்று செந்தமிழ் இலக்கியமாக இராமல் சொற்ப எழுத்தறிவுடையவர்களே பாடி வைத்தது. பாமரர் இலக்கியம் என்று சொல்லும் மரபுடையது நீண்ட பாடல்கள், நெடுங்கதைப் போக்குடையன; பாமர மக்கள் அநுபவிக்கத்தான் பாடல்கள் என தமிழறிஞர் மு. அருணாசலம் கூறுகிறார்.

குறிப்பிட்டதொரு பண்பாட்டில் குறிப்பிட்ட சில குழல்களில் வாய்மொழியாக ஒரு பாடகளோ அல்லது ஒரு குழுவினரோ சேர்ந்து மக்கள் முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்துகின்ற கதை தழுவிய பாடலே கதைப் பாடலாகும் என 6 டாக்டர் நா. இராமச்சந்திரன் நாயர்' கூறுகிறார்.

டேவிட் புக்கன் (David Buchan) அவர்கள்' பாடலைக் கீழ்கண்டவாறு வரையறுக்கிறார். கதைப்பாடல்கள் இடர்ப்பாடானவை. சில இலக்கிய வகைகள் வகைகள் பெரும்பான்மையான மக்களுக்கு மிகுந்த இன்பத்தை அளிப்பவை. வியப்பு, காதல், கொலை பொருளாகக் கொண்ட இக் கதைகள் கவிதை நடையினின்றும் கூர்மையாக வேறுபட்ட ஒரு வகை நடையில் சொல்லப்படுவன. அவற்றின் ஆசிரியர், வரையறை, வகைப்பாடு குறித்துச் சிக்கல் எழுகின்றது. கதைப்பாடல் புதிராக அமைகின்றது; வாய்மொழி யாகப் பரப்பப்படுவதே கதைப்பாடலாகும்.

மால்கம் லாஸ் (Malcom Laws)' கதைப்பாடலைக் கீழ்க்க கண்டவாறு வரையறுக்கிறார்.

'கதைப்பாடல் என்ற சொல் பல்வேறு பொருள் கொண்டது. அறிஞர்கள் கூட வரையறுப்பதில் மாறுபாடு கொள்கின்றனர். கதைப் பாடலில் கதையே இன்றியமையாதது. கதையைக் கூறாத நாட்டுப்புறப் பாடலைக் கதைப்பாடலாகக் கருத மாட்டேன். கதைப்பாடல் மரபான ஒரு வாழ்வைக் கொண்டிருக்க வேண்டும். மக்களது நினைவில் நிலைத்திருக்க வேண்டும். வாய்மொழியாகப் பரவவேண்டும்' என்கிறார்.

**தமிழ்க் கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும்**

தமிழ்க் கதைப்பாடலின் தோற்ற வளர்ச்சியை ஆராய்வது கதைப்பாடலைப் புரிந்துகொள்வதற்குப் பெருந்துணையாக அமையும். கதைப்பாடலுக்குத் தமிழில் அம்மானை என்ற பெயரும் உண்டு. முதல் கதைப்பாடலே அம்மானை என்ற பெயரில் உள்ளது. அம்மானையின் வளர்ச்சியே கதைப்பாடலின் வளர்ச்சியாகும். அம்மானை கதை தழுவா நிலையிலிருந்து கதை தழுவிய நிலையின் வளர்ச்சியைக் காண்கிறோம்.

'அம்மானை' என்ற சொல் முதலில் சிலப்பதிகாரத்தில் தான் கையாளப்பட்டுள்ளது. அம்மனை என்ற சொல்லிலிருந்து தான் அம்மானை, அம்மானை வரி, அம்மானைப் பாட்டு, அம்மானைக் காய், அம்மானை மடக்கு என்ற சொற்கள் பிறந்தன. அம்மானை என்பதற்குத் தாய், தலைவி, ஆடுங்கருவி, தீ என்ற பொருள்கள் உண்டு. கலம்பக உறுப்பு, வரிப்பாடல், பெண்பால் பிள்ளைத்தமிழ் உறுப்பு என்ற நிலையிலும் அமைகின்றது. பெண்கள் விளையாடும். விளையாட்டு அம்மானை விளையாட்டின்போது பாடப்படும் பாடல் அம்மானைவரி அல் அல் விளையாட்டில் பயன்படுத்துவது அம்மானைத்தாய். அம்மானைப் பாட்டு என்பது கதைப்பாடலைக் குறிக்கும் அம்மானை தோழியையும் விளையாட்டையும் அம்மன் சக்தியையும் குறிக்கிறது. மகளிர் இருவா வினா விடையாக இரு பொருள்பட பாடுவது அம்மானை மடக்காகும்.

த. இராசாராம் அவர்கள் அமைப்பு அடிப்படையில் நான்காகப் பகுக்கின்றார்.

1. சிலப்பதிகார நிலையில் அமைந்த வினாவிடை நிலை.
2. திருவாசகம், பிள்ளைத்தமிழில் வரும் அம்மானை எனும் சொல்.
3. அம்மானைப் பாட்டு எனும் கதைப்பாடல் நிலை
4. அம்மானை ஆட்டத்திற்கேற்ற தாள இசைக்குத்தக அமைந்த நிலை

சிலப்பதிகாரத்தில் அம்மானை வரியைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

'வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்

ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை

ஓங்கரணங் காத்த உரவோன் உயர்விசும்பில்

தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை

சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை பாருதயற்று

வினா, விடை இறுதியில் பொதுக்கூற்று என்னும் நிலையில் அமைந்துள்ளது.

கலம்பக அம்மானையில் வினாவிற்குப் பதில் பொதுக் கூற்றும் பின்னர் வினாவும் அதன்பின்னர் பதிலும் அமைகின்றன.

'வற்றா வளக்காஞ்சி வாழ்ந்தருள் ஏகாம்பரனார்

செற்றார் புரமெரித்த தீயர்காண் அம்மானை

செற்றார் புரமெரித்த தீயரே ஆமாயின்

கற்றார்கள் அந்தணராக் கழலுவதேன் அம்மானை

கழறல் அறுதொழில்சேர் காரணத்தால் அம்மானை'.

தனிப்பாடல்களாகவும் அம்மானை உள்ளது. கலம்பக அமைப்பையொட்டி அமைப்பதுடன் பொதுக்கூற்று, வினா, விடை என்ற நிலையில் உள்ளது.

'திருவாரும் தல்லலநகர் செல்வேல் பெருமானார்

இருபாலைக் குயத்தியரோடு இன்பமுற்றார் அம்மானை

தருவாரோ சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை

தருவர்காண் சட்டிகுடம் சாறுவைக்க அம்மானை

சிலப்பதிகார அம்மாளைக்கும் திருவாசக அம்மானைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு திருவ்மானை ஒரு பெண்ணே படி ஆடும் நிலையில் உள்ளது) வினா விடைநிலை. மாறி ஒரு பெண்ணே ஆடிப் பாடுகிறாள்.

பிள்ளைத் தமிழில் அம்மானைப் நிலையில் இல்லாமல் இலக்கிய நிலையில் உள்ளது பெனபால் பிள்ளைத் தமிழில் ஒன்பதாவது பருவும் அம்மானைப் பருவமாகும்.

மனோன்மணிய நாடகத்திலும் வினா, விடை அமைப்பில் அம்மானை ஆட்டம் உள்ளது.

அம்மானைப் பாட்டு கதைப்பாடவைக் குறிக்கும் சிவப்பு. கலம்பசு அம்மானைப் பாடல்களிலமைந்த மடக்கு மோனை வளர்ச்சி பெறுகிறது சிலம்பில்

வினா, விடை, பொதுக் கூற்று என்ற அமைப்பில் உள்ளது. கலம்பகத்தில் பொதுக்கூற்று, வினா, விடை என்ற அமைப்பில் உள்ளது. திருவாசகத்தில் ஆட்ட நிலை வீழ்ச்சியடைந்து கதையமைப்பு மிஞ்சி, கதைப்பாடலாக மலர்கின்றது. பிள்ளைத்தமிழில் அம்மானை தனிப்பருவமாகவே வளர்ச்சி பெற்றது; கதைப்பாட்டும் விளையாட்டு அம்மாணையும் இரு வேறுபட்ட நிலைகளாகித் தனித்தனியே வளரலாயின் தலம்பக அமைப்பு, திருவாசசு அமைப்பு, கதைப்பாட்டமைப்பு, விளையாட்டுப் பாடலமைப்பு என நான்கு நிலைகளில் அம்மானை அமைந்துள்ளது.

1. வினா 'விடை நிலை (சிலம்பு, கலம்பகம், தனிப்பாடவு

2. கதைநிலை (சிலம்பு)

3. சொல் நிலை (திருவாசகம்)

4. எண்ணிக்கை நிலை (கழற்சிப்பாடல்)

என சு. சண்முகசுந்தரம்' அவர்கள் நால்வகையாகப் பகுத்து (1, 3, 4) என்ற நிலைகளில் விளையாட்டுப் பண்பும் இரண்டாவது நிலையில் **கதைப்பண்பும்** உள்ளதாகச் சுட்டிக்காட்டுகிறார்.

**கதைப்பாடலின் மரபும் தன்மையும்**

மாக் எட்வாட் வீ (Mac Edward Lach) கதைப் பாடலி மரயும் தன்மையும் பற்றிக் கீழ்க்கண்டவாறுவிளக்குகிறார்:

1. கதைய்யாடல் வாய்மொழியாக வழங்கப்படுவது
2. பாட்டாகப் பாடப்படுவது
3. பொருளாலும் நடையாலும் பெயராலும் மக்கட்லே உரியது.
4. சிறு கதைகளில் காணப்படுவதைப் போன்று தனிசு சம்பவத்தைப் பிரதியலிப்பது (Abala on on sin incident as does in the short story)
5. நாடக உத்தி அமைந்து காணபடுவது (It is highly dramatic)

மாக் எட்வர்ட் வீக் அவர்கள் கதைப்பாடலின் வரையறையை விரிவுபடுத்தி விளக்குகிறார். எடுத்துரைக்கப்படும் எல்லா வகையான கதைகளுக்கும்,

1. கதையின் நிகழ்ச்சிப் போக்கு (action)

2. பாத்திரங்கள் (characters)

3. பின்புறம் (setting)

4. கரு (theme)

என நான்கு பண்புகள் உள. இந்நான்கு பண்புகளில் கதைப் பாடலுக்கு இன்றியமையாதது நிகழ்ச்சிப்போக்கு ஆகும். நிகழ்ச்சிப் போக்கைத் தொடர்புபடுத்தி இணைப்பதில் கதைப் பாடல் செறிவானது என லீச் குறிப்பிடுகின்றார்.

ஹோல்ஜர் ஒலாப் நிகார்டு (Holger Olob Niygard) கீழ்க கண்டவற்றைக் கூறுகின்றார். கதைப் பாடல்களின் இயல்புகளாகக் கூறுகின்றார்.

1. அமைப்பியல் பண்புகளைக் கொண்டவை

2. வாய்மொழி நிலையிலும் ஓரளவு மாறாத தன்மை

**கதைப்பாடலின் அமைப்பு**

1. காப்பு அல்லது வழிபாடு

2. குரு வணக்கம்

3. வரலாறு

4.வாழி

என்ற நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

கதைப்பாடல் துவங்கும் முன்பு இறைவனை வணங்கிப் பாடும் பாடலினையே 'காப்பு' என்பர் பெரும்பாலும் விநாயகர் பற்றியும் அத்துடன் அந்தந்த ஊர் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பற்றியும் பாடுவர். காப்புப் பாடலையடுத்து இன்ன கதையினைப் பாடப்போகிறோம் என்ற செய்தி இடம்பெறும். இதனைப் பாட்டாகவோ உரைநடையிலோ கூறுவர். பாடும்போதே கூறிவிடுவதும் உண்டு. காப்பு விருத்தம்

தனக்குப் பாடஞ்சொன்ன குருவணக்கம் பாடும் மரபும் உண்டு. இதனைக் 'குருவடி' என்றும் கூறுவர். அவையடக்கம் பெரும்பாலும் உரைநடையில் அமைவதுண்டு. நாட்டுவனம் பெரும்பாலும் கீழ்க்கண்ட அமைப்பிலே இடம் பெறுகின்றது.

'நாடு நல்லநாடு

நாவலர்கள் புகழும் நாடு
இஞ்சி மஞ்சள் பூக்கும் நாடு
இருவாச்சி மலரும் நாடு
கோடைமழை பொழியும் நாடு
குளிர்ந்த தென்றல் வீசும் நாடு

மாதம் மும்மாரி மழை பொழியும் நாடு'

பின்னர் கதையின் வரலாறு தொடங்கப்படும். கதைப் பாடலின் இறுதிப்பகுதி வழிபடுதலாகும். கதை கேட்போரும் மற்றோரும் கடவுளர் அனைவரின் அருளும் பெற்று வாழ்க என வாழ்த்தலும் உண்டு.

**புராணக் கதைப்பாடல்கள்**

புராண - இதிகாசங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கதையைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே புராணக் கதைப்பாடல் என்று பார்த்தோம். இக்கதைப்பாடல்கள் கிராமப்புற விழாக்களில் இரவு நேரங்களில் கூத்துகளாக நிகழ்த்தப்பட்டதாகவும், பாடப்பட்டதாகவும் குறிப்புகள் கிடைக்கின்றன. எனவே புராணத்திற்கும், இக்கதைப் பாடல்களுக்கும் பாடுபொருள் ஒன்றாக இருப்பினும் பாடுகளம் வேறாக இருக்கின்றது.

**வரையறை**

புராணங்களில் வரும் கதை நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் மட்டுமே கொண்டு விளங்குவது புராணக் கதைப்பாடல்களாகும். இவை மகாபாரதம், இராமாயணம் மற்றும் புராணங்களிலிருந்து உள்ளடக்கத்தில் வேறுபடவில்லை. சிவ புராணம், விஷ்ணு புராணம், பாகவத புராணம் போன்றவற்றிலிருந்து கதை நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டுள்ளதை விட மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலிருந்தே கதை நிகழ்வுகள் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**புராணச் சார்புக் கதைப்பாடல்**

இதிகாசங்களில் காணப்படும் ஒரு சிறந்த சிறு நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு பரந்த அளவில் கற்பனை கலந்து பாடலாகப் புனைந்து எழுதப்பட்ட கதைப்பாடல்கள் புராணச் சார்புக் கதைப்பாடல்களாகும். பெரும்பாலான புராணக் கதைப்பாடலின் கதைக் கருக்களே இவற்றுக்கும் மூலக் கருத்துகள் ஆகும். புராணக் கதைப்பாத்திரங்களுடன் யதார்த்தத்தில் உள்ள புவியியல் பகுதிகளும் மன்னர்களும் கற்பனை மனிதர்களும் இவற்றில் இடம் பெறுவது உண்டு.

இவ்விரு வரையறைகளிலிருந்தும் தெரிய வருவது இரண்டிற்கும் அடிப்படைக் கருக்கள் பெரும்பாலும் இதிகாசக் கதைகளே என்பதுதான். இக்காரணங் கருதியே புராணக் கதைப்பாடலும் புராணச் சார்புக் கதைப் பாடலும் ‘புராணக் கதைப்பாடல்’

என்ற பிரிவிற்குள்ளேயே வகைப்படுத்தப் பட்டிருக்கலாம். இந்த அடிப்படையிலேயே இங்கும் பாடம் விரித்துரைக்கப்படுகின்றது.

**அமைப்பு**

அனைத்து வகையான கதைப்பாடல்களும் பொதுவாக ஒரே புற அமைப்புடையனவாகக் காணப்படுகின்றன. பொதுவாக இறை வணக்கம், காப்பு, அவையடக்கம், நாட்டு வருணனை, நகர வருணனை, கதை, வாழி என்னும் அமைப்பில் அமைந்து காணப்படுகின்றன. சில கதைப்பாடல்களில் சற்று வேறுபட்டு முன்னுள்ளது பின்னாகவும் பின்னுள்ளது முன்னாகவும் அமைந்துள்ளன. கதைப்பாடல்களின் அமைப்புப் பற்றிய விளக்கம் முதற் பாடத்திலேயே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்கே நினைவூட்டும் வகையில் ஒன்றிரண்டு கருத்துகளைக் காணலாம்.

பவளக் கொடி மாலையின் தொடக்கம் கலிவிருத்தத்தால் ஆன காப்புச் செய்யுளாக உள்ளது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . .
சோக வாரியி னால்வருந் துன்பமும்
போக ஆனை முகவனைப் போற்றுவாம்
(சோகவாரி = துன்பக் கடல்; ஆனை முகவன் = விநாயகர்)

என்று வரும் முதல்பாடல் இறைக்காப்பை இனிது வேண்டுகிறது.

காப்புப் பாடலைத் தொடர்ந்து விநாயகர் துதி, கலைமகள் துதி, துரோபதை துதி ஆகியவை பாடப் பெறுகின்றன. வருணனைப் பகுதிகள் விரிவாகவும் பலவிதமான சிறப்புச் செய்திகளைத் தாங்கியும் வந்துள்ளன. மின்னொளியாள் குறம் கதைப்பாடலில் வரும் வருணனைப் பகுதி பின்வருமாறு.

தும்பசையத் தேன் சொரியும் சோழன் திருமடந்தை
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
சேற்றால் மடை அடைத்தால் செல்வம் குறையுமென்று
பணத்தால் மடை அடைத்தால் பாசி பிடிக்குமென்று
சோற்றால் மடை அடைக்கும் சோழன் திருமடந்தை
(தும்பு (தும்பி) = வண்டு)

இவ்வருணனைப் பகுதி மிகையாகவும் புதுமையாகவும் இருப்பதைக் காணலாம். இவை கதைப்பாடல்களுக்கு உரிய இயல்புகள் ஆகும். இதே போன்று

மதுரை நகர் பற்றியும் விரிவான வருணனை அல்லியரசாணி மாலை கதைப்பாடலிலும் உள்ளது.

**வரலாற்றுக் கதைப்பாடல்கள்**

வரலாற்று மாந்தர்களாக இன்றும் நிலைத்து விளங்கும் மனிதர்களைப் பற்றிக் கூறும் கதைகளை வரலாற்றுப் பிரிவிற்குள் அடக்கலாம். வரலாற்றுக் கதைப்பாடல்களாக அறிஞர்களால் பின் வருபவை சுட்டப்பட்டுள்ளன:

1) இராமப்பய்யன் அம்மானை
2) தேசிங்குராசன் கதை
3) கட்டபொம்மன் கதைப்பாடல்
4) கான் சாகிபு சண்டை
5) ஐவர் ராசாக்கள் கதை
6) வெட்டும் பெருமாள் கதை
7) சிவகெங்கைக் கும்மி
8) இரவிக்குட்டிப் பிள்ளைப் போர்
9) புலித்தேவன் சிந்து
10) கன்னடியன் படைப் போர்
11) மருது பாண்டியர் கதை
12) குன்றுடையான் கதை
13) வீர வல்லாளன் கதை
14) கட்ட பொம்மன் கூத்து

கதை, கதைப்பாடல், அம்மானை, கூத்து, சிந்து, கும்மி எனும் பெயர் முடிவுகளைக் கொண்டிருப்பினும் இவை அனைத்துமே கதை பொதிந்த பாடல்களேயாகும். இராமப்பய்யன், தேசிங்குராசன், வீரபாண்டிய கட்டபொம்மன், குலசேகர பாண்டியன் முதலிய வரலாற்றுச் சிறப்புப் பெற்ற வீரர்களின் வரலாற்றைக் கதையாகக் கூறுதல் இப்பாடல்களின் தன்மையாகும். அவர்கள் செய்த போர்கள், அப்போர்களில் அவர்கள் காட்டிய வீரம், போற்றுதற்குரிய அவர்தம் இதர பண்புகள் ஆகியவையும் இவற்றுள் காணப்படுகின்றன. வரலாற்று நிகழ்ச்சிகள் பலவும் உள்ளத்துடிப்பை ஈர்க்கும் வண்ணம் பாடப்பட்டுள்ளன. ஒரு தலைவனை உயர்வாகக் கருதிப் பாடுவதே இக்கதைப் பாடல்களின் நோக்கமாகும். தமிழில் கிடைத்த கதைப் பாடல்களுள் காலத்தால் முந்தையது இராமப்பய்யன் அம்மானை என்பர். சிறந்த வரலாற்றுக் கதைப்பாடலாகத் தேசிங்குராசன் கதையைக்

குறிப்பிடுவர். இக்கூற்றுக்களின் அடிப்படையில் இராமப்பய்யன் அம்மானையும் தேசிங்குராசன் கதையும் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

**இலக்கிய நயம்**

இராமப்பய்யன் அம்மானை மூலம் மதுரை நாயக்கர் வரலாற்றையும் எழுபத்திரண்டு பாளையக்காரர்களையும் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. மற்றும் அக்காலத்துச் சமுதாய வாழ்க்கையையும் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் அரசியல் பொருளாதார நிலைமைகளையும் அறியமுடிகிறது. போருக்குச் செல்லும் முன் ஆலயம் சென்று வழிபடுதல், யாகம் செய்து பிளவு உண்டாக்கல், போரில் பிடிபட்டவர்களைச் சித்திரவதை செய்தல், மன்னன் இறந்தவுடன் அரசியர் உடன்கட்டை ஏறுதல் போன்ற பழக்கங்களை இக்கதைப் பாடல் மூலம் அறியலாம். வரலாற்றுக் குறிப்புகளடங்கிய நூலாக அம்மானை இருந்தாலும் இலக்கிய நயங்கள் பலவற்றைக் கொண்டதாகவும் இந்நூல் அமைந்துள்ளது, இந்நூலில் காணப்படும் சொல்லாட்சி, நடை, சொற்றொடர் அழகு, எதுகை மோனை, வருணனை, பழமொழிகள், உவமைகள் ஆகியவை கதைப் பாடலுக்குரிய அமைப்பிலிருந்து இராமப்பய்யன் அம்மானை விலகிச் செல்லவில்லை என்பதனைக் காட்டுகிறது, மிகைப்படக் கூறல், திரும்பக் கூறல் பண்பும் இதில் இடம்பெற்றுள்ளது. சில சான்றுகளைக் காணலாம்.

**இதிகாச கதைப்பாடல்கள்**

நம் இதிகாசங்கள், புராணங்கள் எல்லாவற்றுக்கும, குறிப்பாக ராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றுக்கு மூன்று மரபுகள் இருக்கின்றன – காவிய மரபு, கலை மரபு மற்றும் வழிபாட்டு மரபு. அதிலும் மகாபாரதத்தில் கலை மரபில் பல பிராந்திய அளவிலான கதைகள் கிளைத்திருக்கின்றன அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த மரபு சில சமயம் வழிபாட்டு சடங்குகளாகவும் பரிணமித்திருக்கறது**.**

இதிகாச கதைப்பாடல்களின் பாடுபொருளாக அமைவது புராணம் மற்றும் மகாபாரதம், இராமாயணத்தில் அமைந்துள்ள சிறு சிறு நிகழ்வுகளே. இவற்றுள் புராணம் மற்றும் இராமாயணத்தைவிட மகாபாரதக் கதைகளே பெருமளவில் இடம் பெற்றுள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற பழைய இலக்கியங்களிலும் பாரதக் கூறுகளே அதிகம் இடம் பெற்றுள்ளன. இதற்குரிய காரணங்களாவன.

மகாபாரதத்தில் கதை மதிப்புடைய பல கிளைக் கதைகள் உண்டு. ஒவ்வொன்றும் தம்மளவில் தனித்த கதையாகவும் விளங்கும். மூலக் கதையில் காணப்படும் பல்வேறு திருப்பங்கள், பங்காளிகளுக்கு இடையிலான சொத்துப் பிரிவினையை மையமாகக் கொண்டிருத்தல்; கதை மாந்தர்கள் முழுமையும் கெட்டவன் என்றும் முழுமையும் நல்லவன் என்றும் இறுகலான தன்மையில் இல்லாமல் நல்லதும் கெட்டதும் கலந்த தன்மையில் இருத்தல்; பல்வேறு புத்தி, யுத்தி, சாதுர்யம், குயுக்தி போன்ற முறைகளினால் பிரச்சினைகளைத் தீர்க்க முயலும் கதைப்போக்கு; மிகவும் முக்கியமாகப் பாலியல் மதிப்பு என்பவற்றைக் கூறலாம். இவற்றோடு சேர்த்துப் பாரதக் கதைகளில் வரும் வீர சாகசங்களும் பராக்கிரமங்களும் மாயா ஜாலச் செயல்களும் மக்களைப் பிரமிப்பில் ஆழ்த்தத் துணை செய்கின்றன. மேலும் பாரதக் கதை சகோதரர்களுக்கிடையே ஒற்றுமை வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகின்றது எனினும், பங்காளிகளுக்கு இடையிலான சொத்துப் பிரிவினை குறித்த முரண்பாட்டையும் வலியுறுத்துகின்றது. இத்தகைய பன்முக மதிப்புகள் இராமாயணக் கதைகளில் இல்லை. இவையே புராணக் கதைப்பாடல்களில் மகாபாரதக் கதைகள் கூடுதலான செல்வாக்கைப் பெற்றிருப்பதற்கான காரணங்கள் என்பதில் தவறில்லை

**மரபுக் கதைகள்**

ஒருவரால் எடுத்தாளப்பட்டது பலரால் பின்பற்றப்பட்டால் அதற்கு மரபு என்று பெயர். மரபு இரு வகைப்படும். ஒன்று சமுதாய மரபு, மற்றொன்று இலக்கிய மரபு. ஒரு குறிப்பிட்ட இனத்தாரிடம் காணப்படும் பழக்க வழக்கங்களும், சடங்கு முறைகளும் சமுதாய மரபு எனப்படும். ஒரு குறிப்பிட்ட மொழியினர் இலக்கியத்தில் வழிவழியாகப் பின்பற்றி வரும் உத்திகள் இலக்கிய மரபு அல்லது இலக்கிய இயல்பாகும்.

கதைப் பாடல்கள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினர்க்கு வழிவழியாக வருபவை. ஒரு கலைஞன் தன் குருவிடமிருந்தோ வேறோரு கலைஞனிடமிருந்தோ கதைப் பாடலை அறிகின்றான். ஆதலின் தான் பாடுவதற்கேற்ப, வேண்டிய கூறுகளை எடுத்துக் கொண்டு வேண்டாதவற்றை விட்டுவிடுகிறான். ஆகையால் சில செய்திகளும் சில நிகழ்ச்சிகளும் வருணனைகளும் திரும்பத் திரும்ப வருகின்றன.

கதைப் பாடல்களில் நாட்டுவளம், பன்னிரண்டு வருடப் பஞ்சம், மலட்டுத் தன்மை, தவமிருத்தல், சோதிடம் பார்த்தல், பிள்ளையை ஆற்றில் விடுதல், தீ நிமித்தம் காணல், போர் வருணனை போன்றவை திரும்பத் திரும்ப வருகின்றன. புராண, இதிகாசக் கதைப்பாடல்களில் இயற்கை கடந்த நிகழ்ச்சிகளைக் காணலாம். இத்தகைய நீண்ட மரபு கொண்டதாகக் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன. வழி வழியாகப் பாடப்பட்டு வரும் கதைப்பாடல்களில் பெரும்பான்மையாகப் பின்பற்றப்படும் இத்தகைய இலக்கிய மரபுகளைக் கதைப்பண்பு முனைப்புக் கூறு அல்லது எடுத்துரைக்கப்படும் கூறு என்று கூறுவர். அவற்றைக் காணலாம்**.**

**கதைவகை அடைவு**

தமிழ் நாட்டில் நாட்டார் கதைப்பாடல்கள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருப்போர் ஏதேனும் ஒரு மாவட்டத்தில் செயற்கை சூழல்களில் கதைகளைத் தொகுத்து அம்மாவட்ட மக்களின் வாழ்வை பண்பாட்டை பிரதிபலிப்பதாக எழுதிவிடுகின்றனர்.ஆனால அக்கதை வடிவம் வேறு மாவட்டங்களில், வேறு மாநிலங்களில், உலகின் பல்வேறு நாடுகளில் காணப்பட்டால் என்ன செய்வது?இத்தகைய தவறுகளைத் தவிர்த்து ஒப்பீட்டு ஆய்வு செய்யக் கதைவகை அடைவு உதவும்.

ஆரணியின் முறையைப் பின்பற்றி ஸ்டித் தாம்சன் என்னும் அமெரிக்க ஆய்வாளர் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கதைகட்கு அவற்றின் கதைக் கூறுகளைஅடிப்படையாக கொண்டு கதைவகை அடைவை உருவாக்கினார். இவ்வகை புகழ்பெற்ற அடைவு ஏழு பகுதிகளாக வெளியிடப்பட்டது.

**பழமொழிகள்**

மக்கள் வாழ்க்கை அனுபவங்களின் வெளிப்பாடுகளே பழமொழிகள். பழமொழியைச் சுட்டுவதற்குத் தமிழில் முதுசொல், முதுமொழி, பழமொழி, பழஞ்சொல், சொலவடை, சொலவாந்திரம் போன்ற பல சொற்கள் வழங்கி வருகின்றன. (இவற்றுள் பின்னவை இரண்டும் தென் தமிழ்நாட்டின் வழக்குச் சொற்கள்.) இவையனைத்தும் பழமை, சுருக்கம், உவமைப்பண்பு என்ற அடிப்படையிலே அமைகின்றன. இவை காலங்காலமாக மக்களின் பேச்சுக்களால் பயின்று வருகின்றன. அனுபவம் வாய்ந்த முதியவர்கள் இன்னும் தங்களின் பேச்சுகளுக்கு ஊடாக மிகுதியான பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு பயன்படுத்துவது அவர்களின் பேச்சுகளைப் பொருள் பொதிந்ததாகவும்

செறிவாகவும் மாற்றுகின்றன. இத்தகைய பேச்சுகள் அவர்களை மதிப்பு வாய்ந்தவர்களாக ஆக்குகின்றன.

**வரையறை**

தமிழில் பழமொழி இலக்கியத்திற்கு முதன் முதலாக வரையறை தந்தவர் தொல்காப்பியர்.

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி
குறித்த பொருளை முடித்தற்குவரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப

என்பது தொல்காப்பிய நூற்பா. இந்நூற்பாவிற்கு தே. லூர்து (1988: 5) பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்:

(நுண்மை - நுண்மை, ஆழ்ந்த அறிவு; சுருக்கம் - சுருங்கக் கூறுதல்; ஒளியுடைமை - விழுமியது (தெளிவாக விளங்கச் செய்தல் (clarity); எண்மை - எளிமை; குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம் - ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரும்; ஏது நுதலிய - ஒரு சூழலில் (சந்தர்ப்பத்தில்) காரணம் காட்டுவதற்கு; முதுமொழி - பன்முறையும் வழக்கில் வழங்கி வந்த பழமையான மொழி.)

இந்த விளக்கத்தினைப் பின்வருமாறு தொகுத்துச் சுட்டலாம்.

"ஏதேனும் ஒரு சமூகச் சூழலில் ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரக்கூடிய (அல்லது பயன்படுத்தக் கூடிய) ஆழ்ந்த அறிவினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் கூறும் பழமையான மொழி பழமொழி எனலாம்." இந்த வரையறை பழமொழியை விளங்கிக் கொள்ளத் துணை செய்கிறது.

**இயல்புகள்**

இக்காலத்தில் அறிஞர்கள் பலரும் பழமொழியை வரையறை செய்யவும் விளக்கவும் முற்பட்டுள்ளனர். அவர்களுள் ஆர்.சி. ட்ரென்ச் (R.C. Trench) என்பவரின் கருத்துகள் தொல்காப்பியரின் கருத்துகளை ஒத்துள்ளன என்றும், பழமொழிகளின் இயல்புகள் என்று கூறும் அளவிற்கு அமைந்துள்ளன என்றும் தே. லூர்து (1988 : 5) குறிப்பிடுகின்றார். அக் கருத்துகள் வருமாறு:

1. பழமொழி ஒரே மூச்சில் சொல்லக் கூடியதாய் இருக்க வேண்டும்.

2. சுருக்கம் அதன் மூலப் பண்பாகும்.

3. சிறந்த பொருள் தருவதாய், செறிவு மிக்கதாய் இருக்க வேண்டும்.

4. காராசாரமாகக் கூர்மையுடன் திகழவேண்டும்.

5. எல்லாவற்றையும் விட மக்களால் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரும்பப்பட்டு அன்றாட வாழ்க்கையில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். பழமொழி மீண்டும் மீண்டும் சொல்லப்படும் போதே (currency) பழைய மொழியாகும் என்பதே மேற்கண்ட கருத்தாகும். பழமொழியின் இயல்பாக தே. லூர்து மேலும் சிலவற்றைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

6. கோட்பாட்டளவில் பார்க்கும்போது ஒரு பழமொழியில் இரு சொற்கள் இருந்தே தீரும். ஒரு சொல்லில் பழமொழி அமையாது. ஆனால் ஒரு சொல்லைக் கொண்டமையும் வழக்காறுகள் உண்டு. எனினும் அவற்றைப் பழமொழி என்று கூறுவதில்லை.

7. பழமொழிகள் வாய்மொழி இலக்கிய வழக்காறுகளில் நிலைத்த தொடர்புடையனவையாம். (Fixed phrasegenre)

8. பழமொழி உரைநடை சார்ந்தது. எனினும் கவிதைக்குரிய எதுகை, மோனை, முரண்தொடை போன்ற ஒலிநயங்களைப் பழமொழியிலும் காணலாம்.

9. பழமொழி, பிறிதுமொழி அணிகளைப் போலக் கருதிய பொருளை மறைத்து ஒன்று சொல்லி மற்றொன்றை விளக்குவனவாக அமையும்

10. பழமொழி, அது வழங்கும் இயற்கைச் சூழலைப் பொருத்தே பழமொழியாகும்.

11. பழமொழி உருவகமாகவும் அமையும்.

12. பழமொழி உவமைப் பண்பு கொண்டது.

13. பழமொழி நேர் பொருளும் உணர்த்தும்

14. பழமொழி தற்சார்பற்றத

15. வாழ்க்கை அனுபவத்திலிருந்து சிக்கலைத் தீர்க்க உதவுவது பழமொழி.

16. சில பழமொழிகள் சில கதைகளைப் பிழிந்தெடுத்த சாறு போல அமைகின்றன.

பழமொழியின் இயல்புகளாக மேலே கூறப்பட்ட கருத்துகள் பழமொழிகளைப் புரிந்துகொள்ள, பிற இலக்கிய வகைகளிலிருந்து வேறு பிரித்து அறிய உதவும் என்பதில் ஐயமில்லை.

**பழமொழியின் கருப்பொருள்**

உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்கள் பற்றியும் பொருளே இல்யும் கருத்துக்கள் ககள் எக் காலத்திற்கும் மமொழியில் காணப்படும் எனலாம். பொருந்துவனவாகக் காணப்படுவது குறிப்பிடத் சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கை, பழக்க பழமொழி விளக்குகின்றது. மனித சமுதாய வழக்கங்களையும் வரலாற்றை விளக்கும் வாயிலாகவும் உள்ளது.

பழமொழியின் கருப்பொருளை 1. மக்கள் இனம் (Human beings) 2. விலங்கினம் 3. மரம், செடி, கொடி, இனம் * 4. பண்பாடு 5. பல்பொருள் பற்றியது எனப் பிரிக்கலாம். இப்பெரும் பிரிவில் பல உட்பிரிவுகளும் உண்டு.

1. இயற்கை
2. மனித உலகம்
3. விலங்குகளும் பறவைகளும்
4. மரம், செடி, கொடிகள்
5. குடும்பம்
6. சாதி
7. வேளாண்மை
8. கல்வி
9. பொருளாதாரம்
10. தத்துவம்
11.தெய்வம்
12. நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்
13. மாதமும் கிழமையும்
14. வானிலை
15. பல்பொருள் பற்றியது (Miscellaneous)

**இயற்கை பற்றிய பழமொழிகள்**

1. சூரியனைக் கண்ட பனி போல
2. பூமியைப்போல போறுமை வேண்டும்
3.ஆடியில் காற்றடித்தால் ஐப்பசியில் மழை

**மனித உலகம்**

1. பாம்புக்குப் பல்லில் விஷம் பங்காளிக்கு உடம்பெல்லாம் விஷம்
2. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்
3. மச்சினன் உண்டானால் மலையேறிப் பிழைக்கலாம்

**விலங்குகளும் பறவைகளும்**

1. ஆட்டுக்கு வாலை அளந்து வைத்தாற்போன
2. நாயைக் கண்டால் கல்லைக் காணோம் கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
3. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
4. உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது
5. காகம் வலமானால் ஆயுள் விருத்தியாகும்

**மரம், செடி, கொடிகள்**

1. கொடிக்குக் காய் பாரமா?
2. தென்னை வைத்தவன் தின்றுவிட்டுச் சாவான் பனை வைத்தவன் பார்த்துவிட்டுச் சாவான்
3. இஞ்சி லாபம் மஞ்சளிலே
4. மிளகு சிறுத்தாலும் வீரியம் போகுமா?

**குடும்பம்**

1. தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்
2. கை நிறைந்த பொன்னைக் காட்டிலும் கண் நிறை கணவன் மேல்
3. உள்ளூர்ப் பெண்ணும் அயலூர் மண்ணும் ஆகாது
4. தாய்க்குப் பின் தாரம்
5. மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்

**சாதி**

1. எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமல் செய்கிறவன் மட்டி
2. தாய்ப்பவுன் ஆனாலும் மாப்பவுன் எடுப்பான் தட்டான்
3. இடையன் புத்தி பிடரியிலே

**வேளாண்மை**

1. அகல உழுவதை விட ஆழ உழு
2. அந்தி ஈசல் அடைமழைக்கு அறிகுறி
3. உழுதவன் கணக்குப் பார்த்தால் தார்க்குச்சி மிஞ்சாது
4. சோம்பேறிக்கு சோளம் வெள்ளாண்மை
5. நன்செய்க்கு ஏழு உழவு, புன்செய்க்கு நான்கு உழவு
6. கை காய்த்தால் கழுகு காய்க்கும்

7. வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசிக்கு மஞ்சளும் போல

8. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை

9. உள்ளூர் மருமகனும் உழுகிற கடாவும் சரி

10. கன்றைக் காணத பசுபோல

**கல்வி**

1. இளமையிற் கல்

2. கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு

3. கல்வியில்லாச் செல்வமும் கற்பில்லா அழகும் பிரகாசிக்காது

**பொருளாதாரம்**

1. திரை கடலோடியும் திரவியம் தேடு

2. வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்

3. வட்டிக்கு ஆசை முதலுக்குக் கேடு

4. வரவுக்குத் தகுந்த செலவு மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சம்

5. மலிந்த சரக்கு சந்தைக்கு வரும்

**மருத்துவம்**

1.சுக்கு இல்லாத கசாயம் உண்டா?

2. வேலப்பட்டை மேகத்தைப் போக்கும் ஆலம்பட்டை பித்தத்தைப் போக்கும்

3. கோழையை அறுக்கும் குப்பைமேனிச்சாறு

4.ஆலும் வேலும் பல்லுக்குறுதி

**இலக்கண இலக்கியம்**

1. கல்லாடம் படித்தவனிடம் சொல்லாடாதே

2. வில்லுக்கு விசயன்

3. ஆற்று மணலை எண்ணினாலும் அர்ச்சுனன் மனைவியை எண்ண முடியாது.

**நுண்கலை**

1. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இராது

2. கைப்பட்டால் கண்ணாடி

3. பாடப் பாட ராகம் மூட மூட ரோகம்

**உளவியல்**

1. ஆசைக்கு ஓர் அளவில்லை

2. மனக்கவலை பலக்குறைவு

3. நார் அறுந்தால் முடியலாம் மனம் அறுந்தால் முடியலாமா?

**தத்துவம்**

1. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்
2. செத்த பிணங்களைக் கண்டு சாகும் பிணங்கள் அழுகின்றன
3. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
4. இன்றிருப்பார் நாளை இல்லை

**தெய்வம்**

1. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
2. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்
3. தெய்வமே துணை

**பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்**

1. பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்
2. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
3. சனிப்பிணம் தனியே போகாது
4. மாலைசுற்றிப் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது
5. தாரமும் குருவும் தலைவிதிப்படி

**வானிலையியல்**

1. தட்டாள் தாழப்பறந்தால் தப்பாமல் மழை வரும்
2. ஐப்பசிமாதம் அடைமழை கார்த்திகை மாதம் கனமழை
3. அந்தி ஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்

**மாதம், கிழமை**

1. சித்திரை மாதம் சீர் கூட்டும்
2. ஆடிப்பட்டம் தேடி விதை
3. தை பிறந்தால் வழி பிறக்கும்
4. ஞாயிறு பிறப்பு நாய் பிறப்பு
5. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
6. வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது
7. வெள்ளிக்கிழமை கொள்ளிக்காகாது

**பல்பொருள்**

1. வல்லான் வகுத்ததே வாய்க்கால்
2. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
3. மனம்போல வாழ்வு
4. தாய் செத்தால் மணம் மகள் செத்தால் பிணம்
5. கறந்த பால் முலை ஏறுமா?

6. தலை எழுத்து சிரைத்தால் போகுமா?

7. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்

8. கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போகும்?

9. நாக்குக்கு நரம்பில்லை

10. தன் கையே தனக்குதவி

**பழமொழியால் அறியலாகும் செய்திகள்**

பண்பாட்டுக் கூறுகளை விளக்கும் பழமொழிகளின் வாயிலாக, சாதி, சமயம், தொழில், உறவுமுறை, மொழி, மிருகங்கள், பறவைகள், செடி கொடிகள், இயற்கை, குடும்பம். நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், தத்துவம், பொருளாதாரம். வானிலை, மருத்துவ நம்பிக்கை, சகுனங்கள், வேளாண்மை, திருமணம் போன்றவற்றைப்பற்றி அறியலாம். பழமொழிகள் மூலம் வாழ்க்கையில் நிலவும் அங்கதச் சுவையும் வாழ்க்கை அநுபவமும் புலப்படுகின்றன. இலக்கியங்களின் பின்னணியில் அறிய இயலாத மக்களின் சமுதாய நம்பிக்கைகள், வழக்குகள், பழக்க வழக்கங்களைப் பழமொழி மூலம் அறியலாம். சுருக்கமாகக் கூறின் வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் பழமொழி மூலம் அறியலாம்.

**விடுகதைகள்**

விடுகதை எனபது விடுவிக்கப்பட வேண்டியது மறை பொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதை யாகும். விடுகதை என்னும் சொல்லுக்குப் புதிர்மைய பண்புடையது என்றும் விடுவிக்கப்பட வேண்டிய பொருள் கதையாக அமைந்துள்ளது' வகையாகவும் என்றும் தெளியலாம். வினா எழுப்பும் விடையிறுக்கும் தன்மையாகவும் விடுகதைகள் உள்ளன. தமிழிலே புதிர்ப்பண்பை அடிப்படையாகக் கொண்டு எதிர்மறையிலேயே பெரும்பாலும் விடுகதைகள் தோன்றுகின்றன. குறிக்கோளாகும். கதைக்கு ஆதாரமாகவும் செய்யுளுக்கு உயிராகவும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் உள்ளது. பெரியோர்க்கும் சிறியோர்க்குமிடையே தொடர்பை ஏற்படுத்து கிறது. விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும்.) விடுகதைகளுக்கும் உருவகங்களுக்குமுள்ள தொடர்பினை முதன் முதலில் உலகுக்கு உணர்த்தியவா கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் ஆவார்.

விடுகதையால் கூறுபவனின் உளப்பான்மை வளர்கிறது; ஆர்வத்தினின்றும் விடுதலை கிடைக்கிறது. சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தொடர்பை

ஏற்படுத்துகிறது என ஜேம்ஸ் என்ற அறிஞர் கூறுகிறார். 'கனவு மனிதனது அடிமன உணர்வுகளுக்கு வெளியீடு தருவதுபோல விடுகதைகளும் வெளியீட்டிற்கு உதவி வருகின்றன' என கார்லோசு கூறுகிறார். 'சில விடுகதைகள் கதையைப் போலவே விரிவாக இருக்கும். சின்னச்சின்ன விடுகதைகட்குப் புதிர் என்ற பெயரே மிகவும் பொருந்தும். கதைபோல் வருவனவற்றை விடுகதை என்று குறிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்' என நாட்டுப் புறவியல் அறிஞர் கி.வா . ஜெகந்நாதன் கூறுகிறார்.

விடுகதையின் வரலாறு தொல்காப்பியத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்கிறது. இனிமேலும் தொடரும். உரையாசிரியர்கள் விளக்கம் தந்தனர். இடைக்காலப் புலவர்கள்

விடுகதைகளைச் செய்யுள் வடிவில் பாடினர்.

தொல்காப்பியர் யாப்பு முறையைக் குறிப்பிடும் போது விடுகதை பற்றியும் குறிப்பிடுகிறார்.

பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே
அங்கதம், முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்'. செய்யுளியல் -79

அடிவரையில்லாத ஆறுவகை யாப்பினையும் தொய் காப்பியர் உரைக்கிறார்.

நூலி னான உரையி னான
நொடியோடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான'. செய்யுளியல் -165

இவற்றில் 'பிசி' என்பது விடுகதையாகும்.

'ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளர்ந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே'.

என்று பிசிக்கு விளக்கம் தருகிறார். உவமையாக அமைவதும் தெளிவுபட வருவதும் என விடுகதை இருவகையில் அமையும் என்கிறார் தொல்காப்பியர். விடுகதையை விளக்கியவர் தொல்காப்பியரே ஆவார்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் உவமை விடுகதைக்குக் கீழ்க்கண்ட சான்றைத் தருகிறார்.

'அச்சுப்போல பூப்பூக்கும்

அமலேயென்னக் காய்காய்க்கும்'

விடைபேராசிரியர் மூன்று விடுகதைகளும் தாடு அவற்றிற விடையும் தருகிறார். விடுகதைகளைத் தொகுத்தவர்களில் பராசிரியரே முதலாவர்.

'பிறை கவ்வி மலை நடக்கும்' - யானை
முத்துப்போல் பூத்து

முதிரில் களாவண்ண

நெய்த்தோர் குருதி

நிறங்கொண்டு வித்துதிர்த்து' - கமுகு
'நீராடான் பார்ப்பான்

நிறஞ்செய்யான் நீராடின்

ஊராடு நீரிற் காக்கை' - நெருப்பு

தமிழில் பிசி, நொடி, புதிர், விடுகதை என்றும் வழங்கப் படுகின்றன விடுகதை என்ற சொல்லாட்சி பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில்" சொல்லாட்சி காணப்படவில்லை. எக்காலத்துப் புகுந்தது என்பதற்குச் சான்றில்லை. ஒள் என்ற சொல்லே பின்னாளில் 'பிதிர்' என்றாகிப் பின் 'புதிர்' என்றாகியிருக்க வேண்டும்) கிராம மக்களின் அன்றாடப் பேச்சில் என்ன புதிர் போடுகிறாய் எனக் கூறுவதைக் கேடகிறோம். மிக குறுகிய காலத்தில் கூறத்தக்கவாறு சுருங்கிய அமைப்புடையது என்ற கருத்தில் 'நொடி' என்ற சொல் கையாளப்பட்டிருக்க வேண்டும். (திருச்சி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் 'வெடி' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் விடு கதையை அழிப்பாங்கதை என்கிறார்கள். ஒருவர் விடுகதை போட, மற்றவர் அதனை விடுவித்து விட்டால் அவர் அதனை அழித்துவிட்டார் என்று பொருளாகும். எனவே 'அழிப்பாங் கதை" என்கிறார்கள். கதையில் ஏற்படும் சிக்கலை, புதிரை அவிழ்த்தல்

என்ற பொருளில் அவிழ்ப்பாங்கதை என மாறிற்று எனக் கூறுவாருமுளர். பேச்சு வழக்கில் விடுகதை என்றும் இலக்கிய வழக்கில் 'புதிர்' என்றும் கொள்ளலாம்.

உலகில் பல்வேறு மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி பற்றி இங்குக் காண்போம். அவ்வம் மொழிகளில் வழங்கும் சொல்லாட்சி அதன் தன்மையை விளக்குவது போல் காணப் படுகின்றது.

தமிழ்
பிசி
நொடி
புதிர்
விடுகதை
வெடிபோடுதல்
அழிப்பாங் கதை
தெலுங்கு
விடிகதா, பொதபுக்கலு
கன்னடம்
ஒடகதா, விடிகதா
மலையாளம்
விடிகதா, கடன்கதா
மராத்தி
உகானா
வங்கமொழி
பிராஹெல்இகதந்தா
குஜராத்தி
வரத்
இராஜஸ்தானி
பஹேலி
அஸ்ஸாமி
சதுர்
பிரிட்டானியா கலைக்களஞ்சியம் இரண்டாகப் பகுக்கின்றது.

விளக்க விடுகதைகள்

நகை வினாக்கள்

**விடுகதைச் சூழல்**

புதிரையும் நொடிவினாவையும் உலகிற்கு வழங்கி பெருமை இலத்தீன் மொழிக்கு உண்டு, ஜெர்மனியில் ஒரு காலத்தில் மணப்பெண்ணை விடுகதை மூலம் தோததெடுத்தார அறிகிறோம். தொடக்க காலத்தில் விநோதப் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள் காலப்போகி சமயஞ்சார்ந்த விடுகதைகளாக மாறின. பைபிளிலும் குர்ரானிலும் விடுகதைகள் காணப்படுகின்றன. திருமணச்சடங்கு இறப்பு விழாக் காலங்களில் விடுகதைகள் போடப்பட்டன் விடுகதைகள்தான் உலகில் சிறந்தவை எனக் கூறுகின்றனர்.

விடுகதை இரவிலேதான் போடப்படுகின்றது இதற்குரிய காரணம் விட்டால், விடுகாற்போரட்டில் காரணம் வழக்கத்தைச் சில கிராமங்களில் நகர்ப்புறச் சிறுவர்களைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கது காட்டுப்புறச் சிறுவர்களிடையேதான் இவ்வழக்கம் ஓரளவு உள்ளது. விடுகதைகளுக்கு உரிய செய்தியைய பெரும்பாலும் சிறுவர்களிடமிருந்துதான சேகரித்தேன். கடினமான விடுகதை களுக்குப் பெரியவர்கள் விளக்கம் கூறி, விளம கூறுகின்றனர். பழமொழிகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவது போன்று விடுகதைகள் பயன்படுத்தப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் பயன்படுத்தப்படுகின்றன. விடுகதைகளைச் சொற்போராகவும் விளையாட்டாகவும் பொழுதுபோக்காகவும் பயன்படுத்துகின்றனர். விடுகதை உள்ள சமுதாயத்தில் நிச்சயம் பழமொழி இருக்கும். பழமொழி உள்ள சமுதாயத்தில் யும் இருக்கும். விடுகதையும் எனவே ஏறத்தாழ எல்லாச் சமுதாயத்திலும் பழங்குடி சமுதாயம் உட்பட பழமொழி களையும் விடுகதைகளையும் காணலாம்.

**விடுகதையின் கருப்பொருட்கள்**

மக்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் பிரதி பலிப்பனவான விடுகதைகள் வாழ்க்கையின் பயன்படுபொருள் களான கருப்பொருள் யாவற்றையும் விளக்கும் வகையினவாக அமைகின்றன.

1. இயற்கைப் பொருட்கள்
2. விலங்குகள் மற்றும் பறவைகள்
3. தாவரங்கள் (மரம், செடி, கொடிகள்)
4. உடல் உறுப்புக்கள் (Human body parts)
5. உணவுப் பொருட்கள்
6. பண்ட பாத்திரங்கள்
7. அணிகலன்கள்
8. வாகனங்கள்
9. தத்துவம்
10. அறிவியல்
11. புராணம் இதிகாசம்

**இயற்கைப் பொருட்கள்**

1. அம்மா புடவையை மடிக்க முடியாது - விணமீன், வா

2. அலை அலையாய் ஆடிவரும் கடலும் நிலையாக இருக்காது நிலவும் அல்ல அது என்ன – மேகம்
3. அள்ளலாம். கிள்ள முடியாது – தண்ணீர்
4. அறிவின் மறுபெயர் இரவில் வருவது-அது என்ன? மதி
5. உலகுக்கெல்லாம் ஒரே துப்பட்டி – வானம்
6. உருவம் இல்லாத மனிதன் உலகம் எல்லாம் சுற்றுகிறான - காற்று
7. ஊருக்கெல்லாம் ஒரே கூரை வானம்
8. ஆதவன் உதித்தால் மறைந்திடுவான் ஆயிரம் விளக்கை அணைத்திடுவான் - இருள்
9. மோதிய பின் மின்னும் மின்னிய பின் வெடிக்கும் - மின்னல், இடி, மழை
10. கோடி கோடி வெள்ளிப்பணம் ஓடி விடுது சாலைப்பணம் - நட்சத்திரம்
11. ஏழை படுக்கும் பஞ்சணையை எடுத்துச் சுருட்ட ஆளில்லை பூமி
12. ஒரு குளத்தில் ஒரு தட்டு நனையாமல் கிடக்கிறது – நிலவு

**பறவைகள்**

1. அத்திக கட்டை முள் எடுத்து அடைப்பாரும் இல்லை அழகான பூ எடுத்து முடிப்பாரும் இல்லை - சேவல்
2. அது ஓர் அழகு தேவதை ஆடும் தேவதை - அது என்ன? மயில்
3. அவளொரு தாசி அதிகப் பிள்ளைக்காரி பால் இல்லாமல் பிள்ளை வளர்ப்பதில் பலே கெட்டிக்காரி - கோழி
4. அவள் ஒரு பாடகி ஆனால் பெண் அல்ல - அது யார்? குயில் அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணன் - மயில்
5. தங்க உடற்காரி தரமான ஆட்டக்காரி மேகம் இரண்டு வந்தால் மோகம் கொண்டு ஆடுவாள் மயில்
6. அங்கம் முழுவதும் தங்க நிறம் பகலில் துயிலுவான் இரவில் அலறுவான் - ஆந்தை
7. கறுப்புச் சட்டை அணிந்தவன் கபடம் அதிகம் உள்ளவன் கூவி அழைத்தால் வந்திடுவான் தன் கூட்டம் அனைத்தும் சேர்த்திடுவான் - காகம்
8. பட்ட மரத்தில் பச்சை அதிலும் சிவப்பு
9. மாட மாளிகையில் வசிப்பான் மன்னன் அல்ல கூட கோபுரத்தில் இருப்பான் கடவுள் அல்ல மாடப்புறா

10. குட்டியும் போடும் குவலயத்திலும் பறக்கும் – வௌவால்

**விடுகதையால் அறியலாகும் செய்திகள்**

விடுகதை மூலம் வட்டார வழக்குகள் மக்களின் பழக்க வழக்கங்கள். நம்பிக்கைகள், காலமாற்றத்தின் சாயல்கள் முதலிய வற்றை அறிய முடியும் மனித வாழ்வில் காணப்படும் கருப் பொருட்கள் அனைத்தையும் விளக்குகின்றன. 'மக்களிடையே காணும் ஒழுக்கம், அவர்கள் வழிபடும் தெய்வம், தொழில் முறைகள். சாதி வேறுபாடுகள் போன்ற பலவும் விடுகதையின் பின்னணியில் உணர்த்தப்படுகின்றன. மனித இனத்தின் சிந்தனைத் திறனை அளவிட்டு அறிவிக்கும் கருவியாக நிற்பதோடு மட்டுமின்றி மக்களின் செயல்முறைகள், பழக்க வழக்கங்கள். நம்பிக்கைகள், சிந்தனைப் போக்கு, கொள்கைகள், கோட்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் வரலாற்றுச் சான்றாகவும் விடுகதைகள் விளங்குகின்றன என டாக்டர் ச.வே. சுப்ரமணியம் கூறுவது குறிப்பிடத்தக்கது. மனித சமுதாய வரலாற்றை அறிய விடுகதைகள் துணை புரிகின்றன.

**வினாக்கள்**

1. நாட்டுப்புற பாடல்களின் வகைபாடுகளை விளக்குக
2. தாலாட்டுப் பாடல்களை எழுதி அதன் சிறப்புகளை விவரிக்க
3. குழந்தைப் பாடல்களின் பொது பண்புகளை ஆராய்க
4. நாட்டுப்புற இலக்கியத்தில் காதல் பாடல்களின் உறவினை வரையறுக்க
5. தொழிலின் களைப்பை போக்கும் தொழில் பாடல்கள் குறித்து விளக்குக
6. மனிதனின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் கொண்டாட்ட பாடல்கள் குறித்து விளக்குக
7. மனிதனின் துயர நிலையை காட்டும் ஒப்பாரி பாடல்கள் குறித்து விவரிக்க
8. கதைகள்,கதைப்பாடல்கள்,மரபுக் கதைகள் பற்றி கட்டுரை வரைக.
9. பழமொழிகள், விடுகதைகள் குறித்து விரிவாக எழுதுக.

## அலகு 3

## நாட்டுப்புற நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும்

### மக்களின் வாழ்வியல்

தமிழ் மக்களின் நாட்டுப்புற வாழ்வியல் கூறுகளை ஆயும் இயலே தமிழர் நாட்டுப்புறவியல் ஆகும். இலங்கையில் இத் துறை தமிழர் நாட்டாரியல் என்று பெரிதும் அறியப்படுகிறது. தமிழர் நாட்டுப்புற வழக்காற்றியல் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. தமிழரின் அன்றாட வாழ்வில் பெரும்பாலும் வாய்மொழியாக வழங்கி வந்த பாட்டுக்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள் ஆகியவையும், பார்த்துச் செய்தல் மூலம் பகிரப்பட்ட ஆடல்கள், கூத்து, இசை, விளையாட்டுக்கள், வழக்கங்கள், கைத்தொழில்கள், நுட்பங்கள் மற்றும் கலைகள் ஆகியவையும் தமிழர் நாட்டுப்புறவியலில் அடங்கும்.

குறிப்பாக பெரும் மரபுகள் அல்லது கதையாடல்களைத் தாண்டி வாழும் கிராமத்து மக்கள், தலித் மக்கள், விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை இத் துறை கவனமெடுத்து ஆய்கிறது. இது நகரச்சூழலிலும் வெளிப்படுகின்றது. சென்னை நகரப்புறச் சேரிகளில் இருந்து தோன்றிய கானா பாடல்கள், ஈழத்தில் போராளி மகளை/மகனை இழந்த தாயின் ஒப்பாரிப் பாடல்களையும் இவ்வாறு சுட்டலாம். பல சந்தர்ப்பங்களில் நாட்டுப்புறவியல் செவ்விலக்கியங்களோடும், பெரும் மரபுகளோடும் ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுவர்.

### தொழில்

தொழில் புரியும் போது தங்கள் வேலைகளுக்கு இடையே களைப்பும், சலிப்பும் தோன்றாதிருக்க நாட்டுப்புறத்து மக்கள் பாடல்களைப் பாடி தொழிலைச் செய்து முடிக்கின்றனர். ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று திரையிசையிலும் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழிற்பாடல்கள் தனக்கென சில அமைப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன. ஏலேலேக் குயிலே, ஏலேலோசாமி, ஐலசா, ஏலேலோ அன்னக்கிளி என்று முடிவு கொண்டதாக அமைகின்றன. உதாரணமாக,

''குட்டைப்பிள்ளை நட்ட நாத்து ஏலேலோ சாமி

குலுங்குதடி சீனிச்சம்பா ஏலேலோ சாமி''

சொல்லியடிச்ச அரிவாள் ஏலேலோ அன்னக்கிளி

சுழட்டுதம்மா நெல்லம் பிள்ளை ஏலேலோ அன்னக்கிளி

''ஆம்பிளைங்க கட்டும் வேட்டி ஏலேலேக்குயிலே

அசடுபட்ட வெள்ளை வேட்டி ஏலேலேக்குயிலே''

தொழிற்பாடல்களில் தனித்துப் பாடுவதும் உண்டு. கூட்டமாகப் படுவதும் உண்டு. குழுவாகப் பாடும் பொழுது ஒருவர் பாடல்பாட மற்றவர்கள் பக்கப்பாட்டு பாடுவதும் உண்டு.

உழவின்போது நாற்றடிக்கும்போது, நடவின்போது, ஏற்றத்தால் நீர் இறைக்கும்போது, அறுவடையின்போது, கதிர் சுமக்கும்போது, கதிர் அடிக்கும்போது, வண்டி ஓட்டும்போது, சுண்ணாம்பு இடிக்கும்போது, நெல்குத்தும்போது, ஆயலோட்டும்போது, ஓடம் ஓடும்போது, சாலை அமைக்கும்போது, துணி வெளுக்கும்போது, மீனவர்கள் படகோட்டும்போது, உப்பளத்தில் உப்பு எடுக்கும்போது, தேயிலை பறிக்கும்போது, கல் தூக்கும்போது தொழிற் பாடல்கள் சிறந்து விளங்குகின்றன.

**நாட்டுப்புற நம்பிக்கைகள்**

நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்' நாட்டுப்புறவியல் என்பது மக்களது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தாகும் நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு (CommonDenominator) எனப்படும். மசகளின் அறிவு, நம்பிக்கை கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெயலர் (Taylor) அவர்கள், வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கை பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி (Malionowski). பண்பாட்டினை வாழ்முறையாகக் கருதினால் மனிதனின் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இதன்கண் அடங்கி விடுகின்றன. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கை களும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு

படிக்கற்கள் எனலாம். வளர்ச்சியின் அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர்.

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, அம் மக்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்து வரக் காண்கிறோம். நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும். இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுது மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன. மனித மனத்தின் விளையாக நம்பிக்கை தோன்றுகின்றது. மனிதன், அச்சத்தின் காரணமாக இயற்கையின் தோற்றத்தினையும் செயற்பாடுகளையும் தனது வாழ்வோடு இணைத்து நோக்கிய நிலையில் தோற்றம் கொண்டன எனக் கூறலாம். நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிட மிருந்து மற்றொரு தலைமுறையினர்க்குப் பரவி வருகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறுமளவிற்கு அவன் வாழ்வில் பெரும். பங்கு வகிப்பதையும் காண்கிறோம். மனித வாழ்வில் நம்பிக்கைகள் என்று தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. எனினும், மக்கனின நடைமுறை வாழ்வில் இந் நம்பிக்கைகள் தொடர்ந்து வருவதைக் கூர்ந்து நோக்கின இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம். காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை (Belief) என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ, காரண காரியத தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை (Superstition) என்றும் வகைப்படுத்துவர். மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்குக் காரணம் அறிய முடியவில்லை என்றாலும் மனித சமுதாயம் நம்பிக்கை வயப்பட்டுச் செயல்படுவதைக் காண்கிறோம். ஒரு சமுதாயத்திடம் காணப்படும் நம்பிக்கைகளைக் கொண்டு அச் சமுதாயத்தினைப்பற்றி அறிய முடிகின்றது. தனி

மனித நம்பிக்கை (Individual bclicf) காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக (Society belief) மாற்றம் பெறுவதுண்டு.

பழங்குடி நிலையிலிருந்து மனிதன் நாகரிகம் அடைந்தாலும் பழங்குடி மனநிலை (Tribal mind) அவனை விட்டுப் போகவில்லை. பழங்கால மனிதன் தன்னைச்சுற்றி நடக்கின்ற காரியங்களுக்குக் காரணங்கள் கண்டுபிடிக்க இயலாத நிலையில் இருந்தான். பின்னர் இயற்கையைக் கட்டுப்படுத்த விரும்பிச் செய்வினையில் (Magic) ஈடுபட்டான். செய்வினை ஆதிக்கம் குறைந்த சமுதாயத்தில் செய்வினை பற்றிய நம்பிக்கைகள் நாட்டுப்புற நம்பிக்கைகளாக மாறின. சமூக ரீதியானது சமூக மாற்றத்திற்குப் பின் நாட்டுப்புற நம்பிக்கையாக மாறிற்று நாட்டுப்புற மருத்துவமே (Folk medicine) பல நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும். நாட்டுப்புற மருத்துவத்தில் நம்பிக்கை குறைந்து மேலை நாட்டு மருத்துவம் ஆதிக்கம் உள்ள சமுதாயத்தில் நாட்டுப்புற மருத்துவம் கூறும் விதிகளும் நடைமுறைகளும் நாட்டுப்புற நம்பிக்கையாயிற்று. நாட்டுப்புற நம்பிக்கைகள் தோன்றிய வரலாற்றைத் தமிழவன் அவர்கள் தமது 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' என்ற நூலில் எடுத்துக் காட்டுகளுடன் விளக்குகின்றார்.

பழக்க வழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை அறிவியல் கருவி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது அவை சடங்காக மாறுகின்றன. 'சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான தடத்தைகளின் வடிவமாகும். இது தனி மனிதனின் அயமான ஆக்கமாகிலோ பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன' என்கிறார் ரூந் பெனிடிக்ட் (Ruth Benedict)'. புனிதப் பொருள்களின் முன்னால் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனக்கூறும் ஒழுக்க விதிகளே சடங்குகள் என்கிறார் டூர்கைம் (Durhcim) எனும் சமூகவியல் பேரறிஞர். சடங்குகள் பற்றிய ஆரம்ப காலத்தில் பண்பாட்டு மானிடவியல் பேரறிஞர்களே ஆராய்ந்தனர். தற்போது நாட்டுப்புறவியலிலும் ஆராயத் தொடங்கி விட்டனர். நம்பிக்கைகளையும் இலட்சியங்களையும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான சடங்கு நாட்டுப் புறவியலில் முக்கிய இடம் வகிக்கின்றது. சடங்குகளின் சமூகப் பயன்பாட்டை

நோக்குதல் இன்றியமையாதது. மாலினோவ்ஸ்கி (Malinowski), ரெட் கிளிப் பிரௌவ்ன் (Redcill Brown) போன்றோர் பயன்பாட்டாய்வுக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தினர். 'வெவ்வேறு நாகரிகங்களில் நம்பிக்கைகளும். இலட்சியங்களும் அவற்றின் சடங்குகளில் மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இது சடங்கு பற்றிய ஆய்வுக்கு ஆழமான வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை அளிக்கின்றது என நரேந்திரநாத் பட்டாச்சாரியா (Narendranath Bhattacharya) குறிப்பிடுகின்றார். இவண்கண் சடங்குடன் நம்பிக்கைகளையும் இணைத்து நோக்க வேண்டும்.செயல் வகை, அறிவியல் வகை மொழி வகை, இலக்கிய வகை என்ற நான்மினுன் நம்பிக்கைகள் எண்ணங்கள், சகுனங்கள் முதலியன் அறிவியல் வகையிள்கள் அடங்குமென்பர்

**பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும்**

பண்டைக்கால முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடியைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின? உலகெங்கிலும் வாழும் பழங்கும் சமுதாய வரலாற்றை நோக்கினால் இவவுண்மை புலனாகும். பண்டைத் தமிழரிடையே நிலவிய நம்பிக்கைகளையும் சகுனங் களையும் இவண்கண் சுருக்கமாகக் காணபோம் (கி.பி. நூற்றாண்டைச் சார்ந்த `ஆசாரக்கோவை' மூலம பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளைப் பற்றி அறிகிறோம்.

தொல்காப்பியத்திலே 'நாளும் புள்ளும் பிறவந்தி னிமித்தமும்' (தொல். பொருள் - 91] எனக் குறிக்கப் பட்டுள்ளது. ''புள்' எனக் குறிப்பிட்டது முன்னர் பறவையையும் பிற்காலத்தே சகுனங்களைப் பற்றியும் குறிப்பனவாக அமைந்துள்ளதை 'வாய்ப்புள், பறவாப்புள்' எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். கூகை அவறினால் சாவு வரும் என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது.

'அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்

(புறம்.280)

'காகம் கத்தினால் விருந்தினர் வருவா' என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும்.

'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை

அன்புடை மரபினின் கிளையோ டார்'

(குறுந்தொகை 391)

ஏதேனும் நல்ல காரியத்திற்குப் புறப்படும்பொழுது காகம் ப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லுதல் நல்லது என நம்புகின்றனர்.

பண்டைக் காலத்தில் காட்டிடையே மக்கள் செல்லும் நடமாட்டத்தைக் போது ஆறலை கள்வர் மிகுந்த தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பர். 'கணந்துள்' என்ற ஆறலை பறவை கள்வர் சத்தம் எழுப்பி மற்றவர்கட்கு எச்சரிக்கை விடுத்த செய்தியையும் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை
நெடுங்காற் கணந்துள் ஆளறி வறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்

(குறுந்தொகை -350)

ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும்போது நல்ல வார்த்தை கேட்பதும் நல்ல சகுனமாகக் கருதப்பட்டது. இந்த நம்பிக்கை இன்றும் நிலவுவதைக் காணலாம். தொல்காப்பியர் இதனைப் 'பாக்கத்து விரிச்சி' எனக் குறிப்பிடுகின்றார். இதனை விரிச்சி நிற்றல், வாய்ப்புள், பறவாப்புள், நற்சொல், வாய்ச்சொல் என்றும் வழங்குகின்றனர். இதனை அசரீரி என்றும் கூறுவர். கனவு. காணல், பல்லி சொல்லுதல், கண் துடித்தல் பற்றிய நம்பிக்கை களையும் காண்கிறோம். உடம்பிலுள்ள ஒரு பகுதி துடிப்பது முதலியவற்றைக் கொண்டு எதிர் காலத்தைக் கணிப்பதும் உண்டு. இடது கண் துடிப்பது பெண்களுக்கு நல்லது என எட்கர் தெர்ஸ்டன் (Edgar Thurston) கூறுவதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. தலைவனை எதிர்நோக்கும் தலைவிக்குக் கண் துடித்தால், தலைவன் விரைவில் வருவான் என நம்புகிறாள்.

'நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே'

(கலித்தொகை -11)

'நுண்ணேர் புருவத்த கண்ணு மாடும்

(ஐங்குறுநூறு - 218)

அடியார்க்கு நல்லார் 'கனாநூல்' பற்றியும் குறிப்பிடு கின்றார். இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவதை இன்றும் காண்கிறோம்.

தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும் என்ற நம்பிக்கையைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

'சென்றவர் உள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்து ஒள்ளிய தும்மல் வரும்'

(ஐந்திணை எழுபது - 40)

குழந்தை தும்மினால் தாய் 'நூறு' எனக் கூறுவது 'நூறாண்டு. 'வாழ்க' என்ற பொருளில் ஆகும்.

சுப காரியங்களைப் பற்றிய பேசிக் கொண்டிருக்கும்போது விளக்கு அனையந்தால், நல்ல சகுளமாகக் கருதுவதில்லை. இந்த நம்பிக்கை இந்தியா முழுவதும் உள்ளது.

'நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா'

யாரேனும் ஒரு காரியத்திற்குப் புறப்படும்பொழுது
தலைவிரி கோலமான
பெண்ணை
கண்டால் கெட்ட
சகுனமாகக் கருதுகின்றனர். 'பல்லி சொல்லுதல்' தமிழர்களது வாழ்வில் முக்கிய இடம் பெற்றுள்ளது எனலாம்.

'பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி நல்ல கூறென நடுங்கிப் புல்லென் மாலையொடு பொருங்கொ றானே'

(அகநானூறு289)

'நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றம்

(நற்றிணை-246)

பச்சோந்தி இடமிருந்து வலம் சென்றால், நல்ல சகுனமாகக் கருதினா.

'நாவி சிச்சிலி யோந்திதான் வழிப்பயண மாகை நன்றாம்' ... வலமாயின்

**(அறப்பளீச்சர சதகம்**)

பெண்களிடையே கூடலிழைத்தல் இருந்தது. காதலன் வருகையை நினைத்துக் காதலி மணலில் விரலால் வட்டமிடுவாள். வட்டத்தின் இரு முனைகளும்

நேராகச் சந்தித்தால் நல்ல அறிகுறி என்றும், அப்படியில்லாவிட்டால் நல்ல அறிகுறி இல்லையென்றும் சங்க கால மக்கள் (அகம் - 351), கலித்தொகை -142) நம்பினர்.

எதிர்காலத்தைக் குறி சொல்லுபவர்மூலம் அறிந்து கொண்டார்கள் தமிழர்கள். குறி சொல்லும் பெண்களைக் 'கட்டுவிச்சி' என்றும் 'அகவன் மகள்' என்றும், குறிசொல்வோனை 'வேலன்' 'என்றும் குறிப்பிட்டனர். குறி கேட்கும் நம்பிக்கையுள்ள மக்களை அன்று மட்டுமல்ல இன்றும் கிராமப்புறங்களில் காண்கிறோம்.

பண்டைத் தமிழர் இயற்கையோடியைத்த நடத்திரை என்பதும் பறவை விலங்குகளின் நடத்தைகளைக் கண்டுணர்ந்தனச என்பதும் சஇலக்கியங்கள் மூலம் அறிகிறோம் என்என்பது பன்னெடுங்காலமாக மக்கள் வாழ்விலே இருந்து வந்துனதை நாம் அறிகிறோம் இன்சளின் கருத்து இங்கு நினைவுகரதத வழக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் உண்மை யாகவோ பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் நம்பிக்கை இருப்பது உண்மை, அவை மெயபபிக்கத் தக்கவை" அந்த அடிப்படையில் நம்பிக்கைகளை ஆராய வேண்டும்.

**நம்பிக்கைகளின் வகைகள்**

நாட்டுப்புற மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. அவற்றில் சிலவற்றைத் தொகுத்தும் வருந்தம் காண்போம்

**1. குழந்தை பற்றிய நம்பிக்கைகள்**

**பிள்ளைப் பேற்று நோன்பு**

திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்து விட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனின் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆனாக வேண்டுமே என எண்ணினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினா. அதற்காகப் பெண்கள் அரசமரத்தைச் சுற்றி வருதல் உண்டு. 'அரசமரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம்' என்ற பழமொழியே வழங்குகிறது. அரசமர வழிபாடு மவட்டுத் தன்மையைப் போக்கவல்லது எனச் சங்கர் சென்குப்தா தமது நூல்' ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். வெள்ளிக் கிழமை விரதமும் பாம்புப்புற்று வணக்கமும் பிள்ளைப் பேற்று நோன்புகளாகும்.

**கண்ணேறு கழித்தல்**

குழந்தைகளுக்குக் கண்ணேறு கழிப்புச் செய்வதுண்டு. சில கண்களுக்குத் தீமை விளைவிக்கும் சக்தி உண்டு. எனவே அத்தகையோரது கண்பட்டால் குழந்தைக்கு நோய்நொடி வரும். என்று நம்புகின்றனர். எனவேதான் 'கல்லடி

பட்டாலும் கண்ணடி படக்கூடாது' என்று கூறுவர். கண்ணேறு பட்டதைக் கழிப்பதற்காகச் சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சுற்றி வீதியில் எறிவார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு கழித்தல் விடுமென மக்கள் நம்புகினறனர்.

கண்ணான கண்ளார்க்கு கண் நோக்கும் வாராமல்
சுண்ணாமப்பும் மஞ்சளும் சுற்றி எறி கண்ணார்க்கு
என்ற பாடல் கண்ணேறு கழிக்கும் முறையை கூறுகின்றது.

புதுவீடு கட்டும்போது கருப்புள்ளி இடுதலும் வினைந்த முதலியாற்றால் உருவும் செய்து இறுத்தும் கழித்தல் என்ற நம்பிக்கையில் செய்வதாகும்

**காது குத்தல்**

குழந்தைக்குச் சிறுசி குழந்தையைத் காரணமாகக் காதுகுத்தும் வழ விருக்க வேண்டும். காது குத்தும் வழக்காடு ஆசியா, எகிப்து போன்ற நாடுகளிலும் குத்தும்போது ஏதேனும் ககோசத்தையும் நிமைதரும் ஆவிகள்மூக்குகாக வழியாக எளிதில் புகுந்துவிடும் எனது துளையிட்டுத் தீய ஆவிகளை விரட்டும் சதிலாக ஏதேனும் ஓர் உலோகத்தை அணிவிததால் காது வழில அவி நுழைவதைத் தடுத்துவிடமாய் என் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் கண்ணது பட்டுவிடுது என்பதாலும் காது குத்துகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலா குத்தும் சடங்கிற்கு இத்தகைய நகைகள் காரணமாக இருக்கலாம் என்று தமிபங்கடுள்ளது.

**குழந்தை கொடி சுற்றில் பிறத்தல்**

குழந்தை கொடி சுற்றிப் பிறந்தால் அதன் தகப்பனார்க்கு ஆகாது என்ற நம்பிக்கை மக்களிடையே நிலககிறது சற்றிப் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆழாது மாண பிறந்தால் மாமனுக்கு ஆதாது என்ற பழமொழி இந்து நம்பிக்கையின் அடிப்படையில தோனறியிருக்கலாம்.

- முதல் குழந்தை பெண்ணா குடும்பத்திற்கு வளம் சேரும்.
- மூன்று பெண் பிள்ளைகளுக்கு அடுத்துப் பையன் பிறத்தலும் மூன்று பிள்ளைகளுக்கு அடுத்து பெண் பிள்னை பிறத்தலும் அழகல்ல.
- குழந்தையின் அருகே இரவில் வெளவால் பறந்தால் நல்லதல்ல
- கர்ப்பிணி படுத்து எழுத்திருக்கும்போது வலது கையை ஊன்றினால் ஆண் குழ்ந்தை பிறக்கும்
- குழந்தை பிறக்கையில் தலைமயிர் அடர்ததியாக யிருந்தால் பெற்றோர்க்குக் கடன் தொல்வை அதிகமாகயிருக்கும் என்பர்.

**பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்**

- திங்கள், புதன், வியாழன், வெளனி புதிய நாட்களில் பூப்படைந்தால் நல்லது.
- செவ்வாய்க்கிழமை பருவமடைத்தால் நல்ல கணவள் கிடைக்க மாட்டான்.
- ஞாயிற்றுக்கிழமை பூப்படைந்தால் குழந்தைப்பேறு கிட்டாது.
- சித்திரை மாதம் பருவமடைந்தால் கணவனுக்கு நல்வதல்ல
- வைகாசி மாதம் பருவமடைந்தால் செல்வம் செழிக்கும்
- ஆனிமாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும்.
- ஆடிமாதம் பருவமடைந்தால் பொருள் சேரும்.
- ஆவணிமாதம் பருவமடைந்தால் வாயாடியாக யிருப்பாள்.
- புரட்டாசி மாதம் பருவமடைந்தால் பொருட்சேதம் உண்டாகும்.
- ஐப்பசி மாதம் பருவமடைந்தால் பிள்ளைக்குட்டி நிறைய பெறுவாள்.
- கார்த்திகை மாதம் பருவமடைந்தால் புண்ணியவதியாக இருப்பாள்.
- மார்கழி மாதம் பருவமடைந்தால் பதிபக்தி யுள்ளவளாக இருப்பான்
- தை மாதம் பருவம் அடைந்தால் செல்வம் செழிக்கும்.
- மாசிமாதம் பருவம் அடைந்தால் கர்ப்பத்தை அழித்திடுவாள்.
- பங்குனி மாதம் பருவமடைந்தால் பதிவிரதையாக இருப்பாள்.

**திருமணம் பற்றிய நம்பிக்கைகள்**

- இரண்டு திருமணங்கள் ஒரே வீட்டில் ஒரே நேரத்தில் நடந்தால் ஒரு குடும்பம் சிறக்கும். மற்றொரு குடும்பம் தாழ்நிலை அடையும்.
- திருமணத்திற்குப் பின் மணப்பெண்ணை வெள்ளியன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக்கூடாது.
- திருமணம் பற்றிய கனவு நல்லதன்று.
- மணமான பெண் மாப்பிள்ளை வீட்டில் நுழையும் போது வலது காலை எடுத்து வைத்து நடக்க வேண்டும்.
- ஆடி மாதத்தில் பெண் பார்த்தல் நல்லதல்ல
- சுமங்கலிகள்தாம் திருமணச் சடங்கில் பங்கு பெற வேண்டும்.
- திருமணமான மணமக்களை மஞ்சள் கலந்த அரிசியால் வாழ்த்த வேண்டும்.

- கணவன் வீட்டிற்கு வந்தவுடன் மணப்பெண்ணானவள் உப்பிலோ அல்லது நெல்லிலோ கை வைக்க வேண்டும்.
- புதுமணத் தம்பதிகள் புதுவீட்டில் குடியேறக் கூடாது.

ஆடி மாதத்தில் கணவனும் மனைவியும் ஒன்றாக இருக்கக்கூடாது. ஆடி மாதத்தில உறவு ஏற்படின் கோடைக் காலமான சித்திரையில் குழந்தை பிறக்கும். அது தாயுக்கும் சேயிக்கும் உடல்நிலை கருதி (health point of view) நல்லதல்ல என்ற எண்ணத்தில் இப்படியொரு நம்பிக்கை தோன்றியிருக்கலாம்.

**கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்**

- கர்ப்பமாக உள்ளவர்கள் தலைவாசலில் தலை வைத்துப் படுக்கக்கூடாது.
- கர்ப்பிணிப் பெண்கள் விரும்பும் பொருளை வாங்கிச் கொடுக்காவிட்டால், குழந்தையின் காதில் சீழ் வடியும் என நம்புகின்றனர்.
- கர்ப்பிணிப் பெண்கள் வலதுகையை ஊன்றினால் ஆஸ் குழந்தையும் இடது கையை ஊன்றினால் பெண் குழந்தையும் பிறக்கும் என நம்புகின்றனர்.
- கர்ப்பிணிப் பெண்கள் அதிகமாக வாந்தி எடுத்தால் ஆண் பிள்ளையும் குறைவாக வாந்தி எடுத்தால் பெண் குழந்தையும் பிறக்கும் என நம்புகின்றனர்.
- வலது பக்கம் சாய்ந்து படுத்தால் பெண்; இடது பக்கம் சாய்ந்து படுத்தால் ஆண்.

**வேளாண்மை பற்றிய நம்பிக்கைகள்**

- வியாழன் நாற்று நடுவதும் வெள்ளி அறுப்பதும் நல்லது
- திங்கள், வெள்ளி நெல் அவிக்கக்கூடாது.
- சந்திரனில் பிறை வடகோடு உயர்ந்திருந்தால் வரப் பெல்லாம் நெல் என நம்புகின்றனர்.
- நிலத்தில் முதலில் ஈசானத்தில் ஆரம்பித்துக் கன்னியில் உழுது முடிக்க வேண்டும். கிழக்கு மேற்காக சால் அடிக்க வேண்டும்.

**மழை பற்றிய நம்பிக்கைகள்**

- வடக்கே, தெற்கே மின்னல் தோன்றினால் மழை வரும் என நம்புகின்றனர்.
- நிலவைச் சுற்றிப் பெரிய வட்டமாக இருந்தால் மழை பெய்யும் என்றும் சிறியதாக இருந்தால் சில நாட்கள் ஆகும் என்றும் நம்புகின்றனர்.

- ஆடு கூடிகூடி அலைந்தால் மழை வரும்.
- கறுப்பு எறும்பு முட்டைத் தூக்கிச் சென்றால் மழை
- தட்டான் தாழப் பறந்தால் மழை வரும்.
- கோழி சிறகை விரித்து மண்ணில் பதுங்கினால் மழை வரும்.
- கழுதை இரண்டு காது தூக்கியிருந்தால் மழை வரும்.
- தவளை கத்தினால் மழை வரும்.
- நரி ஊருக்குள் வந்தால் மழை வரும்.
- அந்திமழை அழுதாலும் விடாது.

**விலங்கு, பறவை பற்றிய நம்பிக்கைகள்**

- தஞ்சுக் கொடியை நாய் தின்றால் மாட்டின் பால் வற்றிவிடும்.
- கருடன் வட்டமிடல் நல்லது.
- இரண்டு ஆந்தைகளை ஒன்றாகக் காண்பது நல்லது.
- கழுதைக்கு ஊடே போகக்கூடாது.
- அணில் வந்தால் நல்லது; ஓணான் வந்தால் கெட்டது.
- எருமை மாடு சனிக்கிழமை ஈனக்கூடாது.
- தேள் கடித்தால் தேளைத் தலைகீழாகத் தொங்க லிட்டால் விஷகடி நீங்கும் என நம்புகின்றனர்.
- ஈன்ற பசுவின் இளங்கொடியை ஆலமரத்தில் கட்டித் தொங்கவிட்டால் நிறைய பால் தரும் என நம்புகின்றனர்.
- விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்
- காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை உள்ளது.
- அடுப்பு இரைந்தாலும் விருந்தினர் வருவர்.
- விருந்தினர் விளக்கு வைத்த பின்பு செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நம் வீட்டு இலட்சுமி அவர்களோடு போய்விடும் என நம்புகின்றனர்.
- வந்த விருந்தினர்கள் ஊர் செல்லும்போதும் வீட்டி லுள்ளவர்கள் ஊர் செல்லும்போதும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக்கூடாது.
- முதன்முறையாக வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு அசைவ உணவு படைக்கக்கூடாது; உறவு முறிந்துவிடும்.

- முதன் முதலாக விருந்தினர்கள் வியாழனன்றும் ஞாயிறு அன்றும் ஒரு வீட்டில் உண்ணக்கூடாது.
- விருந்தாளி வாழை இலையை உள்பக்கம் மடித்தால், திரும்ப வந்து சாப்பிடும் பாக்கியம் கிட்டும்.
- விருந்தினர்க்குச் சேவல்கறி படைக்கக்கூடாது.
- விருந்தினர்கள் சென்றதும் வீட்டைப் பெருக்கக் கூடாது; அவ்வாறு செய்யின் அவர்களது தொடர்பு அறுந்து விடும்.

**எண் பற்றிய நம்பிக்கைகள்**

- மூன்று நல்ல எண்ணாகக் கருதப்படுகின்றது.
- ஒற்றை எண் (odd numbers) நன்மை பயக்கும் என நம்புகின்றனர்.
- அஞ்சாவது பெண் அடுக்களையேல்லாம் பொன்
- நான்காவது பெண் நடைகல்லைப் பெயர்க்கும்.
- எட்டாவது ஆண் வெட்டும் சேவகன்
- எட்டாவது பெண் பிறந்தால் எட்டிப் பார்த்த இடமெல்லாம் கஷ்டம்.
- ஆறாவது ஆண்மகன் ஆனைகட்டி வாழ்வான்.
- ஆறாவது பெண் பிறந்தால் குடும்பம் சீரழியும்.

**நட்சத்திர நம்பிக்கைகள்**

- பரணி பிறந்தவன் தரணி ஆள்வான்.
- அவிட்டம் நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் தந்தைக்கு ஆகாது சித்திரையப்பன் தெருவிலே
- அங்க பலன் பற்றிய நம்பிக்கைகள் என்பர். மாறுகண் அதிர்ஷ்டம்; 'மாறு கண் மாறி மாறி யோகம்
- முன்பல் நீண்டிருந்தால் எதிர்காலத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.
- இடுப்புக்குக் கீழே முடி இருந்தால் தரித்திரம்.
- சுருட்டை சோறு போடும்.
- கோரைமுடி கோத்திரத்திற்காகாது.
- பரட்டைமுடி பாடு பார்க்கும்
- கையில் ஆறுவிரல் இருந்தால் யோகம்
- மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள்
- நெற்றியில் மச்சமிருந்தால் சிறப்பான பலன் கிடைக்கும்.

- உச்சந்தலையில் மச்சமிருந்தால் இலட்சியப் பிடிப்பு உள்ளவராக இருப்பர்.
- கண்ணில் மச்சமிருப்பின் அறிவாளியாக இருப்பான்.
- மூக்கின் நுனிப்பகுதியில் மச்சமிருப்பின் வக்கிரபுத்திக் காரனாக இருப்பான்,
- மூக்கின் வலதுபுறம் மச்சமிருப்பின் அறிவாளியாக இருப்பான்.
- உதட்டில் மச்சமிருப்பின் நல்ல நடத்தை உள்ளவளாக இருப்பான்.
- நாவில் மச்சமிருப்பின் கலைமகள் குடியிருப்பாள்.
- கழுத்தில் மச்சமிருந்தால் துரதிருஷ்டசாலி என்று நம்புகின்றனர்.
- தொப்புளில் மச்சமிருப்பின இன்பமான வாழ்வு அமையும்.
- மார்பில் மச்சமிருப்பின் வாழ்க்கை சிரமமாக இருக்கும்.
- தொடையில் மச்சமிருப்பின் நன்கு உழைப்பர்.
- முழங்காலில் மச்சம் இருப்பின் மனைவி மூலம் சுக வாழ்வு அமையும்.
- பாதத்தில் மச்சமிருப்பின் சமூகநலச் சேவையில் ஈடுபாடு இருக்கும்.
- மறைவான இடத்தில் மச்சம் இருப்பின் இன்பமான வாழ்வு அமையும்.
- கிழமை பற்றிய நம்பிக்கைகள் 13.1 செவ்வாய் முடிவெட்டல் வறுமை தரும்.
- செவ்வாயும் வெள்ளியும் தையல் கூடாது.
- பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது.
- புதன்கிழமை பணம் கிடைப்பது நல்லது.
- புதன்கிழமை ஈன்ற மாட்டைச் சம்பந்தக்காரருக்குத் தானமாகக் கொடுத்துவிட வேண்டும்.
- வெள்ளிக்கிழமை இரவு ஒரு பொருளையும் கொடுக்கக் கூடாது.
- வெள்ளி, செவ்வாயில் 'கருத்து கறுப்பு' லாந்தும்.
- செவ்வாய் வெறுவாய்.
- வெள்ளிக்கிழமை ஆண் பிறந்தால் கொள்ளிக்கு உதவாது.
- வெள்ளி, புதன் தான்யங்களை எடுக்கக் கூடாது.
- சனிக்கிழமை சாவுக்குச் சென்றால் அங்கே தங்கக் கூடாது.
- சனிக்கிழமை பிணம் புதைத்தால் கோழியையும் சேர்த்துப் புதைக்க வேண்டும்.

**திசை பற்றிய நம்பிக்கைகள்**

- ஞாயிற்றுக்கிழமை கிழக்கே போளால் விருந்து சாப்பிடலாம்.
- திங்கட்கிழமை கிழக்கே போனால் வரவு உண்டாகும். 4.8 வெள்ளிக்கிழமை கிழக்கே போனால் அடிதடி உண்டாகும்.
- சனிக்கிழமை கிழக்கே போசுக்கூடாது.
- கோலம் பற்றிய நம்பிக்கைகள்
- வெளியே இருந்து உள்நோக்கிக் கோலம் போட வேண்டும். தெருப்பகுதியில் ஆரம்பித்து வாசற்படியில் முடிக்க
- கோலத்தில் இலட்சுமி இருப்பதாக நம்புகின்றனர்.
- கோலமிடும் செம்மண்ணைத் திருமாலாகக் கருது கின்றனர்.
- கோலமிட்டால் கோடிச்செல்வம் பெருகும் என நம்புகின்றனர்.
- உயிர்களை மீட்கும் சக்தி கோலத்துக்கு உண்டு என நம்புகின்றனர்.
- கோலத்தைத் தாண்டி பேய், பிசாசு வராது என நம்புகின்றனர்.
- நீர்க்கோலம் அழிவைக் கொடுக்கும்.
- பின் வாசலைத் தெளித்துப் பின்னர் முன் வாசலைத் தெளிக்க வேண்டும்.
- முற்றம் தெளித்தேன் மூதேவியே போ; வாசல் தெளித்தேன் மகாலட்சுமியே வா' என்பது மக்கள் நம்பிக்கையாகும்.
- வாசலில் கீழிலிருந்து மேல்நோக்கிப் புள்ளிகள் வைத்து கோலமிட்டால் செல்வம் பெருகும்.
- அழகாகக் கோலமிட்டால் கிடைப்பான் என நம்புகின்றனர். நல்ல கணவ
- கதிரவன் தோன்றும் முன் போட்டால் அருள் கிட்டு
- வீட்டிலுள்ளோர் வெளியே புறப்படும் மு கோலமிட்டால், செல்லும் காரியம் வெற்றி பெறும்.
- தாமரையும் சங்கும் இணைந்து கோலமிட்ட சங்கநிதியும் பதுமநிதியும் கிட்டும்.
- ஐசுவரிய லட்சுமி கோலமிட்டால் ஐஸ்வரியம் பெருகும்.
- ஏகாதசியன்று பாம்புக் கோலமிட்டால் ஆயுள் பெருகும்
- திருமணத்தின்போது கோலமிட்டால் பேய், பிசாசுகள் வராது.
- குழந்தை பிறந்தவுடன் கோலமிட்டால் கண்ணேறு கழியும்.

- கோலமிடாத வீட்டு முக்காடிட்டு அழும் என நம்புகின்றனர். வாசலில் தேவதைகள்
- விலக்கு (Taboo) பற்றிய நம்பிக்கைகள்
- இரவில் பாம்பைச் 'செடி' எனக் கூறுவர்.
- உப்பை 'ரவணம்' 'பெரிய சீனி' எனக் கூறுவர்,
- கணவன் பெயரை மனைவியும் மருமகள் பெயரை மாமியாரும் கூறக்கூடாது.

**கடவுள் பற்றிய நம்பிக்கைகள்**

இறைவன் அருளால் மக்கட்பேறு கிட்டுமென அனைவரும் நம்புகின்றனர்.

**அபிஷேகம் செய்தல்**

வாழ்வில் துன்பம் நேரும்போது இறைவனிடம் முறையிட்டுப் பால், தேன் போன்றவற்றை இறைவனின் படிமத்திற்கு அபிஷேகம் செய்தால் துன்பம் தீரும் என மக்கள் நம்புகின்றனர். பழனி முருகன் கோவிலுக்கு மக்கள் அபிஷேகம் செய்வது இங்குக் குறிப்பிடத்தக்கது. பால்

**மாரியம்மனைப் பற்றிய நம்பிக்கைகள்**

நாட்டில் மழை பெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வேண்டுமென நம்பினர் மக்கள். மாரியை வேண்டி வரங்கிடந்தமையால்தான் மாரி எனப்பட்டாளோ என எண்ண வேண்டி உள்ளது. நாட்டில் உண்டாகும் அம்மை முதலிய நோய்களுக்கு மாரிதான் காரணம் என்றும், அதனை நீக்குவதும் மாரிதான் என்றும் மக்கள் நம்புகின்றனர். அத்தகைய மாரிக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாவிட்டால் பிழைக்க முடியாது என்று மக்கள் நம்பினர் என்பதை

'ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆவாது

மாரிகடன் தீர்த்தவர்க்கு மனக்கவலை தீருமம்மா'

என்ற வரிகள் காட்டுகின்றன.

கோயிலில் பூக்கட்டிப் போட்டுச் சிறு குழந்தைகளை எடுக்கச்சொல்லி நல்லதா, கெட்டதா என்பதைப் பற்றி அறிந்து கொள்வார்கள்,

தும்பிக்கையானைப் பாடினால் துன்பங்கள் என்று மக்கள் நம்பினர். வாரா

'தும்பிக்கை உள்ளவரே துன்பங்கள் வாராமல் நம்பிக்கை வைத்தெந்தன் நாவில் குடியிருந்து வாக்கருளும்'

மாரியம்மன் போ நினைத்தால் பில்லி, பிசாசு, சூன்யம், வைப்பு முதலியவை பறந்தோடும் என மக்கள் நம்பினர். ' உன்பேர் நினைத்தால் பில்லி பிசாசு பறந்தோடுமம்மா

**நோய்கள் பற்றிய நம்பிக்கைகள்**

நாட்டுப்புற மேலை நாட்டு மருத்துவ நாட்டுப்புற மருத்துவம் (Folk medicine) பல நம்பிக்கைகளுக்குத் தாய் ஆகும். முறைகளினால் நாட்டுப்புற மருத்துவம் கூறும் விதிகளும் நடை முறைகளும் நாட்டுப்புற நம்பிக்கையாகக் காட்சி தருகின்றன. நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற மருந்தினை நம்பிக்கை அடிப்படையில் பயன்படுத்துகின்றனர்.

- அம்மை நோய் தெய்வக்குறை என நம்பி மாரிக்கு வழிபாடு செய்து, வேப்பிலையைப் பயன்படுத்துகின்றனர்.
- இரட்டையர் தடவினால் சுளுக்குப் போய்விடும் என நம்புகின்றனர்.
- நோய்களைத் தெய்வங்கள் தீர்க்குமென்றும் அதற்கு நேர்த்திக் கடனே நல்ல மருந்து என்றும் நம்புகின்றனர்.

ஆயிரம் பேரை (வேரை)க் கொன்றவன் அரை வைத்தியன்' என்ற பழமொழி நாட்டுப்புற மருத்துவத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. ஆயிரம் மூலிகையைக் கொன்றாலும் அரை வைத்தியன்தான் ஆக முடியும். என நம்புகின்றனர்.

**வீடு பற்றிய நம்பிக்கைகள்**

- இரவில் வீடு பெருக்கினால் குப்பையை வெளியே கொட்டக் கூடாது.
- ஐந்தாவது பெண்ணும் ஆறாவது ஆணும் பிறந்தால் வீடு சிறப்புறும்..
- மாடு அசைந்து தின்னும்; வீடு அசையாமல் தின்னும் நம்பிக்கை பழமொழியாகிவிட்டது
- கர்ப்பமான பெண்கள் இருக்கும் வீட்டில் குளவி கூடு சுட்டும்.
- காப்பிணிகள் எட்டாம் மாதம் தாய் வீடு செல்லக்கூடாது.
- சிவப்பு எறும்பு சாரிசாரியாக வந்தால் வீட்டிற்குக் கெட்டது.
- செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கோ, புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்கோ வரக்கூடாது.
- தென்திசை நோக்கி வீடு இருப்பது நல்லது என்பர்.

- தை மாதத்தில் புது வீட்டில் குடியேறுவது நல்லது.
- பிணம் வீட்டில் இருக்கும்போது அடுப்பு மூட்டக்கூடாது.
- வடதிசை நோக்கி வீடு கட்டுவது நல்லதல்ல.
- விருந்தினர் சென்றதும் வீட்டைப் பெருக்கினால் அவர்களது தொடர்பு அத்துடன் அறுந்து விடும்.
- விறகுச் சுமையை அவிழ்த்த பின்னரே வீட்டினுள் கொண்டுவர வேண்டும்.
- புதுவீடு கட்டி முடிந்தால், எலுமிச்சையையும் பூசணியையும் வீட்டின்முன் உடைத்தாலோ அல்லது இரண்டாக்கினாலோ, கெட்டது விலகும்,
- புது வீட்டிற்குச் செல்லும்போது உப்பையும் எடுத்துச் செல்ல வேண்டும்.
- நிலைப்படியில் தலையை வைத்துப் படுத்தால், லெட்சுமி தங்கமாட்டாள்.
- காலையில் வீட்டின் பின்கதவுகள்தான் முதலில் திறக்கப்பட வேண்டும்.
- இரவில் உப்பைச் சர்க்கரை எனக் கூறுவர்.
- இரவில் உப்பு, அரிசி, எண்ணெய் முதலியவற்றை மற்றவர்கட்குத் தரக்கூடாது. தந்தால் தரித்திரம் வரும்.
- உணவு, ஆடை, அணிகலன்கள் பற்றிய நம்பிக்கைகள்
- காலால் உணவை உதைத்தால் போஜனம் கிடைக்காது.
- கைராசிப்படி உணவின் சுவை அமையும்.
- பெண்களுக்கு மாறுகண்ணும் நோன் அரிய அல்லது நீல திறத்தில் நீண்ட நிறத்தில் நீண்ட மச்சமும் இருந்தால் உணவுக் கூடம் ஏற்படாதென்பர்
- மனைவி தன் பாத்திரத்திலுள்ள உணவ பாத்திரத்தில் இடலர்காது. கணவல் மனைவிக்கு இடலாம்.
- வாலிலிட்ட உணவைத் திரும்ப தட்டில் ஓடக்கூடாது 20.6 ஆடைகளுள் அதிர்ஷ்டத்தையும் வேறும்.. தாதிரஷ்டத்தையும் தரும் என நம்புகின்றனர்.
- சுமங்கலிகள் வெண்ணிற ஆடை அணியலாகாது
- திருமணப் பெண்ணிற்கு அனுப்புமளி குறுப்பு, வெள்ளை நிறங்கள் இருத்தலாகாது.
- நகத்தில் பூ வளர்ந்தால் புத்தாடை கிடைக்கும்.
- புத்தாடைகளைச் உடுக்கவும் மாட்டார்கள். செவ்வாயன்று வாங்கவும்

- புத்தாடைகளை அணியப் புதன் நல்லநாள்:
- புத்தாடைகளைச் சனியன்று உடுப்பது நல்லதல்ல
- புத்தாடையை அணிந்து கொண்டு உறங்கக்கூடாது.
- விதவைகள் புத்தாடையை நனைத்து உடுக்க வேண்டும்.
- நடுவிரலில் மோதிரம் அணிவது நல்லதல்ல.
- பெண்கள் கைவளையலின்றி இருக்கக்கூடாது.
- தங்கவளையல் அணிந்தாலும் ஒரு வளையலாவது அணிந்திருக்க வேண்டும். கணணா
- பெண்கள் நெற்றியில் திலகம் எப்பொழுதும் வேண்டும்.
- தலையில் சூடும் மலர் நீண்ட நேரம் மணமுடையத இருந்தால், வருகிற மாமியார் நல்லவராகயிருப்பார்.
- மோதிரக்கல் தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்கள் நட்சத்திரத்திற்கேற்றாற்போல் நிறங்களைத் தேர்ந்தொ வேண்டும். இல்லாவிட்டால் கெடுதி நேரும்.

**மரணம் பற்றிய நம்பிக்கைகள்**

ஒருவர் மார்கழித் திருவாதிரை நாளிலோ, யன்றோ இறந்தால் அவர் பெரும்பேறு செய் நம்பப்படுகின்றது.

- சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தால் மற்றொரு சாவு விரைவில் நடைபெறும் என்று நம்பினர். எனவேதான் சனிப்பிணம் தனியே போகாது' என்று கூறுகின்றனர். சில இடங்களில் சனியன்று இறந்த பிணத்துடன் கோழியையும் புதைப்பர்.
- மூத்த குழந்தை இறப்பின் வீட்டினுள்ளே புதைப்பர்.
- இறந்த அன்று மழை பெய்தல் நல்லது.
- இறந்தவர் வாயில் அரிசி போட வேண்டும்.
- இறக்கும் முன்னர் ஒருவர் விரும்பும் பொருளை அளித்தால் அவர் உயிர் எளிதில் பிரியும் என்பர்.
- இறந்தவர்க்குரிய சடங்குகளை அனுஷ்டிக்கா விட்டால் தீங்கு நேரும்.
- இறந்தவர்களோடு அவர்கள் விரும்பிய பொருள்களை யும் புதைப்பர்.
- மரண ஊர்வலம் எதிரே சென்றால் போகும் காரியம் வெற்றியடையும்.

- மரண வீட்டில் இரவு முழுவதும் விளக்கு எரிய வேண்டும்.
- மரண வீட்டிற்குச் செல்பவர்கள் குளித்த பின்புதான் வீடு திரும்ப வேண்டும்.
- மரணம் அடைந்த நேரம் பகல் என்றால், நிறைநாழி நெல் பிணத்திற்கருகில் வைக்க வேண்டும்.
- மரண வீட்டிற்குச் சென்று 'போய் வருகிறேன்' என்று கூறக்கூடாது. அப்படிக்கூறினால் அந்த வீட்டில் அடுத்து ஒரு சாவு நிகழும் என்று நம்புகின்றனர்.
- மரண வீட்டில் பெண்கள் மாரடித்து அழுதால், மறு உலகம் கிட்டும் என நம்புகின்றனர்.
- இறந்தவர்க்குச் செய்யும் ஈமக்கிரியையால் இறந்த உயிர் வீடுபேறு அடையும் என நம்புகின்றனர்.

**பயணம் பற்றிய நம்பிக்கைகள்**

- பயணத்திற்குப் புறப்படும்போது 'போய் வருகிறேன். எனக் கூற வேண்டும்.
- வருடப் பிறப்பன்று பிரயாணம் மேற்கொள்ளக் கூடாது.
- ஞாயிற்றுக்கிழமையன்று பயணம் மேற்கொள்ளக் கூடாது.
- வெளியூர்ப் பயணம் செல்லும்போது சீயக்காய்த்தான் எடுத்துச் செல்லக்கூடாது.
- பயணம் மேற்கொள்ளும்போது 'எங்கே போகிறாய்' எனக் கேட்கக்கூடாது.
- ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும்போது மூவராகச் சேர்ந்து செல்லக்கூடாது.
- மழை தூறும்போது வீட்டை விட்டுப் புறப்படக் கூடாது.
- கடவுளைத் தொழுதுவிட்டுப் கொள்ளுதல் வேண்டும். பயணம் மேற்
- பயணம் புறப்படும்பொழுது ஏதேனும் கெட்ட சகுனத்தைக்காண நேரிட்டால், மீண்டும் வீட்டிற்கு வந்து சிறிது நேரம் அமர்ந்து தண்ணீர் அருந்திவிட்டு மீண்டும் புறப்பட வேண்டும்.
- பயணம் புறப்படும்போது எண்ணெய் வணிகனையோ ஒற்றைப் பார்ப்பனனையோ காண்பது கெட்ட சகுனமாகும்.
- பயணம் புறப்படும்போது தாயையும் சேயையும் காண்பது நல்லது.
- பயணம் புறப்படும்போது சவ ஊர்வலத்தைக் காண்பது நல்லது.

- பயணம் புறப்படும்போது அழுக்குத் துணியோடு வரும் வண்ணானைக் காண்பது நல்லது.
- பயணம் புறப்படும்போது வெளுத்த துணியைக் கொண்டுவரும் வண்ணானைக் காண்பது நல்லதல்ல.
- பயணம் செல்லும்போது கன்னிப்பெண்கள் நிறை குடத்துடன் வருதல் நல்லது.

**ஊழ்வினை, பிறவிக் கொள்கை பற்றிய நம்பிக்கைகள்**

முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினைப் பயனாக இப்பிறப்பில் இன்ப, துன்பங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. ஊழ்வினை பற்றிப் பண்டைத் தமிழர் கொண்டிருந்த கோட்பாடு களைத் திருக்குறளிலும் சிலம்பிலும் காண்கிறோம்.

உயிர்களின் வினைக்கேற்பப் பிறவிகள் எடுக்கின்றன. என்பது பிறவிக் கொள்கையின் அடிப்படையாகும். பிறப்பு

சோதிடம், பஞ்சாங்கம், இராசிப் பொருத்தம் பற்றிய நம்பிக்கைகள்

சோதிடம் பார்க்கும் பழக்கம் நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் இன்றும் உள்ளது. பிறந்த நேரத்தை வைத்து அதன் வருங்காலத்தைச் சொல்லுவார்கள். திருமணம் செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சாதகப் பொருத்தம் பார்ப்பதுண்டு. சோதிடங்கள் தெய்வங்களின் பெயர்களைக் கோள்களுக்கு இட்டு வழங்குகின்றன. திருத்தக்க தேவர் காலத்திலேயே குழந்தை பிறந்தவுடன் சாதகம் எழுதுவதும் திருமணத்திற்குச் சாதகம் கேட்பதும் இருந்தது என்பதால் அக்கால மக்கள் சோதிடத்தில். வைத்திருந்த நம்பிக்கை தெரிய வருகிறது. கையிலுள்ள ரேகையைப் பார்த்து வருங்காலத்தைப் பற்றிக் கூறுவதுமுண்டு. இதனை 'ரேகை பார்த்தல்' என்பர். விண்ணியல் நிகழ்வுகளே வாழ்வியல் நிகழ்ச்சிகளை நிச்சயிக்கின்றன என்று மக்கள் நம்பத் தொடங்கிய நிலையில் சோதிடம் வளர்ச்சியுற்றது.

பஞ்சாங்கத் துணை கொண்டும் கணிப்பார்கள். பஞ்சாங்கத்தில் கூறப்படும் சந்திர கிரகணம், சூரிய கிரகணம் போன்றவை அறிவியல் முறைப்படி ஆராயும் வானவியல் கூறுவதுபோல் ஒத்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் எல்லாக் காரியங்களுக்கும் இராசி பார்த்தல் உண்டு. கைராசியில் நம்பிக்கைக் கொண்ட ஒருத்தி தான் பண்ணிய ஆசாரி,

திருமணச்சேலை நெய்த சேணியன் பஞ்சாங்கம் பார்த்த பார்ப்பான் முதலானவர்கள் கைராசி இல்லாதவர்கள் என்று கணவனை இழந்த பெண்ணொருத்தி ஒப்பாரிப்பாட்டு ஒன்று பாடுகின்றாள்,

தாலிக்கு அரும்பெடுத்த தட்டானும் கண்குருடோ ? சேலைக்கு நூலெடுத்த சேணியனும் கண்குருடோ? பஞ்சாங்கம் பார்க்கவந்த பார்ப்பானும் கண்குருடோ? எழுதினவன்தான் குருடோ ? எழுத்தாணி கூர் இல்லையோ ?

பஞ்சாங்கம், சாதகம், ராசி ஆகியவற்றைப் பார்த்தும் பொருத்தம் பார்த்தும் திருமணம் செய்து வைத்தால் நல்லபடியாக வாழ்வார்கள் என்று மக்கள் நம்பினர்

**கனவு பற்றிய நம்பிக்கைகள்**

கனவுகள் மக்களுக்கு வாழ்வில் பின் நிகழப்போவதை முன்னர் உணர்த்துகின்றன என்று நம்புகின்றனர். உளவியல் பேரறிஞர்கள் (Psychologists) அடக்கி வைக்கப்பட்ட விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடே கனவு என்பர். வேறு சிலர் கனவு உளநோயால் தோன்றுகிறது என்றும் கூறுவர். கனவுகளையே நல்ல கனவு, கெட்ட கனவு என இரு வகையாகப் பிரிப்பர். மக்களுக்கு நன்மையோ தீமையோ வருவது கனவு மூலம் தெரிந்துவிடும் என நம்புகின்றனர். மரப்பெட்டி உடைதல், ஏற்றி வைத்த தீபம் அணைதல், தேங்காய் உடைதல் போலக் கனவு கண்டால் தீமை விளையும் எனக் கருதுகின்றனர். தங்களுக்கு நிகழப் போவதைத் தெய்வமோ அல்லது முன்னோர்களின் ஆவியோ கனவில் தோன்றி கூறுவதாக நம்புகின்றனர். தமிழில் 'கனாநூல்' என்றொரு நூல் இருந்ததே தமிழ் மக்கள் அளவிற்குக் கனவு பற்றிச் சிந்தித்துள்ளனர் என்பதற்குச் எந்த சான்றாகும். கனவில் மரணம் என்றால் சுபம்; திருமணம் என்றால் இழவாகும். அதாவது கனவுக்கும் நேரில் காண்பதற்கும் பலன்கள் எதிரிடையாக உள்ளதைக் காணலாம்.

- அதிகாலை கனவு பலிக்குமென நம்புகின்றனர்.
- கனவில் சாவைக் காண்பது நல்லது.
- கனவில் திருமணத்தை காண்பது நல்லதன்று.
- கனவில் மலத்தைத் தொட்டதாகக் கண்டால் செல்வம் பெருகும்.
- கனவில் பன்றி, பூ பெண்கள், ஆடு, பச்சைமரம், விறகு முதலியவற்றைக் காண்பது நல்லதல்ல

- கனவில் ஆகாயவிமானத்தைக் வரவிருக்கின்ற ஆபத்தைக் குறிக்கும். கண்டால்
- கனவில் ஆமையைக் கண்டால் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும்.
- கனவில் ஆப்பிள் வாழ்க்கையில் வெற்றி ஏற்படும். பழங்களைக் கண்டால்
- கனவில் இரும்பைக் கண்டால் துன்பங்கள் நேரும்.
- கனவில் உப்பைக் கண்டால் செல்வம் சேரும்.
- வெள்ளியைக் கனவில் கண்டால், வாழ்க்கையில் வெற்றியும் வேசியர் உறவும் ஏற்படும்.

**நம்பிக்கை பற்றிய ஆய்வு**

மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளுக்குக் காரணம அறிய முடியவில்லை என்பர். நமது நாட்டில் நசேகைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை ஆய்வேடுகள் மலரவில்லை ஆய்வுக் கட்டுரைகள்தாம். வெ கெளி வந்துள்ளன. இந்நிலையில் தமிழில் தமிழ்வன் அவர்கள் 'நாட்டுப்புற நம்பிக்கைகள்" என்ற நூலை வெளியிட்டுள்ளார். நாட்டுப்புற நம்பிக்கை பற்றிய இதநூல் முதல்நூல் மட்டுமினர் முதன்மையான நூல் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தலை அடிப்படையாக வைத்து டாக்டர் மு சண்முகம் பிள்ளை அவர்களும் எரிக்கா எஇ. கிளாஸ் (Arics AR Clas) என்பவரும் இணைத்து 'Folk Bclicfs of the Tamilc' என்ற நூலை வெளியிட்டுள்ளார்கள். தமிழவன் நூலின் முக்கியத்துவம் இதன்மூலம் நன்கு தெரிகிறது தமிழவன் எழுதிய நாட்டுப்பது நம்பிக்கைகள் என்ற நூலின அடிப்படையில், நம்பிகைகைகளுக் சூரிய தோற்றம் பற்றி ஆராய்வோம்.

'கண்ணாடி உடைந்தால் கேடு வரும்

என்பது நம் நாட்டில் மட்டுமின்றி உலகின் பல பாகங்களிலும் காணப்படும் நம்பிக்கையாகும். இத்தகைய நம்பிக்கை சமுதாயத்தில் எழக்காரணம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். மனிதனுடைய பிம்பம் தண்ணீர், கண்ணாடி போன்றவற்றில் பிரதிபலிப்பதால் அதற்கு ஓர் ஆபி இருக்க வேண்டும் என்பது பழங்குடிகளின் நம்பிக்கையாகும். சமய வாதிகளும் ஆவி மனிதனுக்கு உள்ளதென்பர். கண்ணாடி மனிதனின் ஆவியைக் காட்டும் கருவி. ஆவி குடி கொண்டுள்ள கண்ணாடி உடைவது அவன் உயிருக்கே நேரும் கெடுதி என நினைத்ததால், கண்ணாடி உடைந்தால் கேடு வரும் என்ற நம்பிக்கை உருவாயிற்று.

சமூகம் வளர்த்து மாறிய பிறகும் மனித சமுதாயத்தில் இது நாட்டுப்புற நம்பிக்கையாக உள்ளது'

தமிழகத்தில் கிராமப்புறங்களில் இன்னும் பெண்கள் தமது கணவன்மார்களது பெயர்களைக் கூறுவதில்லை. பழங்குடி மக்கன் சமுதாயத்தில் பெயர் ஒரு விலக்காக (Taboo) இருந்துள்ளது. பெயர் குறியீடாக மட்டுமின்றி ஓர் உறுப்பாகவும் கருதப்பட்டது.

**நாட்டுப்புறத் தெய்வங்கள்**

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சிற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதனடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வயப் படுத்தி விடலாம் என்ற அடிப்படையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இவ்வாறு மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பழங்கால மனிதன் இடி, மழை, மின்னலைக் கண்டு அஞ்சினான். நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென எண்ணினான். அவ்வாவிகளை வழிபட ஆரம்பித்தான். உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Fraud) அவர்களும் இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார்.

'கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழ மொழியே தமிழகத்தில் வழங்குகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புறமக்கள் நாட்டுப் புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடு கின்றனர்.

**இயற்கை வழிபாடு**

ஆதிமனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டான். இயற்கையை வழிபட ஆரம்பித்தான். இயற்கையை வழிபட ஆரம்பித்து விழாவெடுத்து நன்றிக்கடன் ஆற்ற விரும்பினான். நாட்டுப்புற மக்களிடையே இன்றும் இயற்கையை வழிபடுவதைக் காணலாம். சிலம்பில் கூட 'ஞாயிறு போற்றுதும்' என்ற இயற்கை வழிபாட்டைக் காணலாம்.

ஞாயிறு சத்திரன், மாழி மாம். செடி, கொடிகள் முதலிய வற்றை வழிபடுவதைக் காண்கிறோம் நாட்டுப்புற மக்கள் நிலவைக் கும்மியடித்து வழிபடுவதைக் காண்கிறோம் கதிரவனின் பேரொனியையும் காற்றின் சீற்றத்தையும் மழையின் பொழிவையும் இருனின் மறைப்பையும் கண்டு ஆரம்பித்தார்கள். பழங்கால மக்கள் அஞ்சி அவற்தை வழிபட இயற்கையில் கண்ட பெருநிகழ்ச்சிகளை உள்ளத்தே கொண்டு அஞ்சியதாலேயே இவ்வழிபாடு தோன்றியது. 'இயற்கைத் தோற்றங்களாகிய பொருள்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக காரணமாயின' எனக் கூறும் மாக்ஸ் முல்லரின் கருத்து இங்கு சிந்திக்கத் தக்கது. நலன் பெருகவும் நன்றிக்கடன் செலுத்தவும் வழிபாடும் விண் வழிபாடும் மண் வழிபாடும் இப்படித்தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இயற்கையின் ஒழுங்கமைவு அளும் நுட்பமும் மனிதனை சமய நம்பிக்கைக்கு அழைத்துச் செல்கின்றன. கதிரவனின் இயக்கமும் மதியின் இயக்கமும் பருவங்களின் மாறுதல்களும் இயற்கை நியதியின் விளைவு மனிதனின் மனதில் ஒரு பாதிப்பை உண்டாக்கிச் சமய வாழ்வுக்கு நம்பிக்கை அளிக்கின்றன.

**சிறு தெய்வ வழிபாடு**

நாட்டுப்புறத் தெய்வங்களைத்தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். வீட்டில் யாரேனும் துன்புற்றாலும் நோய்வாய்ப்பாட்டாலும் குடும்ப தெய்வத்திற்குப் பூஜை செய்வர், குடும்ப தெய்வத்தின் பெயரைப் பிள்ளைகட்கு வைப்பர். ஒவ்வொரு சாதியினரும் பல குலங் ஊனாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களில் அந்தந்த குலத்துத் தெய்வத் துணை எனத் திருமண அழைப்பிதழில் அச்சிடுவதைக் காணலாம். ஒரே குல தெய்வத்தை வழிபடுபவர்கள் அனைவரும் பங்காளிகளாவர்.

'குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்'

'குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி'

என்பது குல தெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகிறது. சில நேரங்களில் செல்வாக்குமிக்க குலதெய்வம் ஊர்த்தெய்வமாகவும் பின்னர் பல ஊர்த்தெய்வமாகவும் மாறுவதுண்டு.

சிறு தெய்வங்கள் வேதக்கடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை. முழுமுதற் கடவுளாகக் கருதி வணங்கப்படாதவை. பூசை, திருவிழா, முதலியவற்றில் திட்ட வட்டமான வரையறை கிடையாது. பிராமணர் அல்லாதோர் பூசாரியாக யிருப்பர். கோவில் போன்ற அமைப்பும் பெரும்பாலும் கிடையாது. செவிவழிச் செய்திகளும் காண பரம்பரைக் கதைகளும் உண்டு. அச்சத்தின் காரணமாகவும் வளமைக்காகவும் இயற்கையின் சீற்றம் தணியவும் அம்மை காலரா போன்ற நோய்களைத் தடுக்கவும் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர். சிறு தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை (great tradition) நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடை *நிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர்.' பிராமணர் பூசாரி, உயிர்ப்பலி இன்மை, திட்டவட்டமான பூசை, திருவிழா. ஆகமவிதிப்படி கோயில், உருவச்சிலையில் மாற்றல் முதலிய வற்றால் ஜோஸ்பின் கலா அவர்கள் இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்கிறார். இத்தெய்வ வழிபாடுகளை ஆழ்ந்து நோக்கின் ஆரியமயமாகும் காண்கிறோம். தன்மையைக் (Aryanization)

நாட்டுப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள்தான் அதிகம் உள்ளன அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்து விட்டன. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணமெனின் மிகையாகாது. தமிழக மெங்கும் மாரியம்மனின் வழிபாடு காணப்படுகிறது. 'ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது' என்ற நம்பிக்கையை மக்களிடம் காண்கிறோம். மாரியம்மனை வேண்டுவது போல் காளி யம்மனையும் வேண்டுகின்றனர். மாரியம்மன் வழிபாட்டைப் போன்ற அய்யனார் வழிபாட்டையும் காணலாம்.

'ஊருக்கு நேர்கிழக்கே உறுதியுள்ள ஐயனாரே

'சத்தத்தை நீ கொடய்யா சரளிவிட்டு நான்படிக்க'

என்று ஐயனாரைப் பற்றிப் பாடுகின்றனர். அய்யனார் காவல் காக்கும் தெய்வமாகக் கருதப்படுகிறார். நாட்டுப்புறத் தெய்வங் களில் வேளாண்மையோடு தொடர்புடைய பெண் தெய்வங்கள் தான் அதிகம். நாட்டுப்புறத் தெய்வங்கள் தங்களுடைய விருப்பங்களையும் நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல் களையும் தெய்வநிலைக்குட்பட்ட பூசாரி, அருள்வந்தோர் மூலமாக அறிந்து

கொள்கிறார்கள். நாட்டுப்புறத் தெய்வங்களை வளமையைக் கொடுப்பனவாகவும் ஆறு, குளம் முதலியவற்றைக் காப்பனவாகவும் கொடிய நோயிலிருந்து காப்பனவாகவும் கால்

நடைகளை நோயிலிருந்து காப்பனவாகவும் கிராமத் தெய்வமாகவும் கருதுகின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்கட்கு வேண்டுதலை நிறைவேற்றாவிட்டால் துன்பம் நல்கும் என நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் பெருந்தெய்வங்களை வழிபட்டாலும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் வேறுபாடு அதிகம் காணமுடியாது. நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறையை நுணுகி ஆராய்ந்தால் அது தனித்து விளங்குவதைக் காணலாம்.

**பெருந் தெய்வ வழிபாடு**

நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை மட்டுமின்றி பெருந்தெய்வங்களையும் வழிபடுகின்றனர், சிவன், திருமால், முருகன், பிள்ளையார் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் வேதக் கடவுளோடும் அதனொடு தொடர்பு கொண்ட கடவுளாகவும் கருதப்படு கின்றன. ஆகம விதிப்படி கோயிலும் திட்டவட்டமான பூஜை, திருவிழாக்களும் உண்டு. வழிபாட்டு முறையில் பிராமணிய முறை பின்பற்றப்படுவதோடு திருவிழாக்களும் குறித்த காலத்தில் நடை பெறுகின்றன.

தெய்வங்களில் சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்களுக் கிடையே மிகுந்த வேறுபாடு உண்டு, 'சமூகத்தில் உயர்வு, தாழ்வு, அதிகம், குறைவு போன்ற பாகுபாடுகள் தோன்றி வளர்ந்துள்ளன. அதுபோல மனிதப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் தெய்வ வழிபாடும் பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாடு என இருவகையாகப் பிரிந்து காணப்படுகிறது. நாட்டுப்புறத் தெய்வங்கள் நாட்டுப்புற மக்களோடு ஒன்றி காணப்படும் சக்தியாக விளங்குவதோடல்லாமல், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதால், கிராமப்புறத் தெய்வங்கள் அன்றாடம் நினைந்து வழிபடப்படு கின்றன. அதனால் இங்கு கிராமப்புறத் தெய்வங்கள், கிராம மக்களுக்கு ஒரு பாதுகாவலாக வழிகாட்டியாக இணைந்து காணப்படுகின்றன' என டாக்டர் கைலாசபதி கூறுவது சிந்திக்கத் தக்கதாகும்.

இயற்கை வழிபாட்டில் தொடங்கிய வழிபாடு சிறு தெய்வ வழிபாடாக மலர்ந்தது. பின்னர் சிறு தெய்வ வழிபாடு, பெருந் தெய்வ வழிபாடு என இருவகையான வழிபாடுகள் தோன்றின. இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமைகளை நோக்கின், அதன் தனித் தன்மை நன்கு புலனாகும். சிறுதெய்வ, பெருந்தெய்வ வேறுபாடு கலைக் கீழ்க்கண்டவாறு நுணுகிக் காணலாம்.

டாக்டர் துளசி ராமசாமி அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஆறாக வகைப்படுத்துகிறார்.

1. ஊர்த் தெய்வங்கள்
2. இனத் தெய்வங்கள்
3. குல தெய்வங்கள்
4. மாலைத் தெய்வங்கள்
5. சமாதித் தெய்வங்கள்
6. துணைத் தெய்வங்கள்

**கோயில் அமைப்பு**

கல்லாலும் பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள் பீடங் களாகும். பீடங்களே கோயில்களாகக் கருதப்படுகின்றன. பீடங்களும் மண்ணாலும் சிமெண்டாலும் அமைந்திருக்கும். விழாக் காலங்களில் மட்டும் பந்தல் போட்டுத் தோரணங்கள் கட்டுவர். சில தேவதைகளுக்கு மண்ணாலான மண்டபம் கட்டுவர். சில இடங்களில் கல்லாலான மண்டபம் கட்டியுள்ளனர். கோயில்கள் அதில் உறையும் தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. சில நாட்டுப்புறத் தெய்வங் களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை, முன்மண்டபம், கொடிக் கம்பம், சுற்றுச் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு இத்தகைய கோயில்களைக் காணலாம். கர்ப்பக் கிரகத்தைச் சுற்றிப் பல துணைத் தெய்வங்கள் இருக்கும். கிராமக் கோயில்கள் மரங்களுடன் தொடர்புடையனவாக உள்ளன. மரங்கள் வளமைக்குறியீடாகக் கருதப்படுகின்றன. பெரும் பாலான நாட்டுப்புறத் தெய்வங்கள் நீர் நிலைக்கருகில் இருக்கும். மக்களது வாழ்வில் நீர் முக்கிய பங்கு வகிப்பதால் நீர் நிலைக் கருகிலேயே வைத்துள்ளனர்,

உருவ அமைப்பு

நாட்டுப்புறத் தெய்வ உருவ அமைப்பை ஏழு வகையாகப் பகுத்துக் காணலாம்.

1. மரத்தையே தெய்வமாக வழிபடல். இதனின் எச்சமாகத் தான் பெருங்கோவில்களில் ஸ்தலவிருட்சத்தைக் காண் கிறோம்.

2. வடிவமற்ற கல் i.தரையில் ii. மரத்தின் கீழ் iii.மாடத்தின் மேல்

3. வேல், சூலம், கத்தி

4. பீடங்கள்

4.1. சதுரமான மண் பீடம்

உயரமான வடிவமுடைய பீடம்

43. உயரமான வடிவமுடைய பீடத்தில் தெய்வ உருவம் வரைதல்

4.4.உயரமான வடிவமுடைய பீடத்தில் முக உருவம்

4.5. உயரமான வடிவமுடைய பீடத்தில் முழு உருவம்

4.6. உயரமான வடிவமுடைய பீடத்தில் கல் சிலைகள்

4.7. வட்ட வடிவமான பீடத்தில் சிலைகள்

5. மாடத்தில் விளக்கு வைத்து வழிபடல்

6. பந்தல் அல்லது ஓடு போன்ற அமைப்பு கொண்ட தெய்வ உருவங்கள்

6.1. மண் உருவம்

6.2. மர உருவம்

6.3. கல் உருவம்

7. கோயில் போன்ற அமைப்புடைய இடத்திலுள்ள தெய்வ உருவங்கள்

7.1. மண்ணாலான உருவம்

7.2.கல்லாலான உருவம்

7.3. செம்புப்படிவ உருவம் அல்லது வெண்கலச் சிலை உருவம்.

**வழிபாட்டு முறைகள்**

நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் கொண்டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத்தில் 'கொடை' என்றும் மற்ற மாவட்டங்களில் 'பொங்கல் வைத்தல்' அல்லது 'சாமி கும்பிடுதல்' என்றும் அழைக்கின்றனர். வழிபாட்டு முறைகள் தெய்வத்திற்குத் தெய்வம் வேறுபடுவதுண்டு, திருநெல்வேலி மாவட்ட நாட்டுப் புறத் தெய்வ வழிபாட்டு முறைகள் மற்ற மாவட்டங்களினின்றும் வேறுபட்டு நிற்கின்றன. ஆண் தெய்வங்களுக்கு வெள்ளிக் கிழமையும் பெண் தெய்வங்களுக்குச் செவ்வாய்க்கிழமையும் கொடை நடைபெறும். இம்மாவட்ட வழிபாட்டு முறையை மிக மிகச் சுருக்கமாகக் காண்போம்.

1. ஊர்க்கூட்டம்

2. கால் நாட்டுதல்

3. விரதமிருத்தல்

4. குடி அழைப்பு

5. காப்பு சுட்டுதல்

6.கொடை நிகழ்ச்சிகள்

7. மத்தியானப் பரண்

8. சாமக் கொடை

9. திரளை எறிதல்

10.படைப்பு

11. பரண் வெட்டு

12. இரத்தத் துடைப்பு

மற்ற மாவட்ட நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறைகள் திருநெல்வேலி மாவட்ட வழிபாட்டு முறையினின்றும் வேறுபடுகின்றன. மற்ற மாவட்ட வழிபாட்டு முறைகளில் வேற்றுமைகள் இருப்பினும் அவற்றில் ஓர் ஒற்றுமையைக் காண்கிறோம்.: வழிபாட்டு முறைகள் ஊருக்கு ஊர் தெய்வத்திற்குத் தெய்வம் வேறுபடுவதைக் காண்கிறோம்.

மழை இல்லாக்காலத்து மழை வேண்டியும் விளைச்சல் பெருகவும் நோய்நொடி வராதிருக்கவும் பகை ஏற்படின் பகைக்குப்பின் சமரசமுயற்சியாகவும் சாமி கும்பிடுவது உண்டு சாமி கும்பிடுவது என முடிவு செய்து விட்டால் பல்லி சகுலம் கேட்பர். பூக்கட்டிப் பார்ப்பர். நல்ல சகுனம் கிடைத்த பின்பு ஊர் சாற்றுவார்கள். கோயில் கும்பிடுவதற்கு அடையாளமாகக் காப்பு கட்டுவர்.

சாமி கும்பிடுவதற்கு வீட்டுவரி போடுவர். சில இடத்தில் தலைக்கட்டு வரி போடுவர். இதற்கிடையில் மேளக்காரருக்கும் குசவர்க்கும் அச்சாரம் கொடுப்பர். கோயில் முன்பும் ஊரி நடுவிலும் பந்தல் போடுவர். நேர்த்திக்கடன் உள்ளோர் விரதமிருப்பர். .

சாமி கும்பிடும் நாளன்று மண்ணால் செய்த தெய்வ உரும் சிலையைக் கொணர்ந்து கண் திறப்பர். சிலையைக் கோயிலின் வைத்தவுடன் கிடா வெட்டிப் பொங்கல் வைப்பர், பொங்க வைத்துத் தேங்காய் பழம் வைத்துச் சாமி கும்பிடுவதைச் 'சிறப் நடத்துதல்' என்பர். பின்னர் மாவிளக்கு, முளைப்பாரி கொண்ட வருவர். முளைப்பாரியைச் சுற்றிப் பெண்கள் கும்மியடிப்பு நேர்த்திக் கடன் உள்ளோர் செலுத்துவர். கவர் குத்தி ஆடு சிலர். மரத்தொட்டில் செய்து கோயிலில் வைப்பர், நேர்த் கடனுக்காக மொட்டையடிப்பதும் அங்கமளித்தும் காணிக்க

செலுத்தலும் அக்னிச் சட்டி எடுப்பதும் உண்டு. சில இடங்கள் 'தீக்குழி' இறக்குவதும் உண்டு.

மறுநாள் காலையில் கிடா வெட்டி ரத்தத்தைப் பிடித்துச் சோற்றில் தோய்த்துச் சோற்றுத் திரளையைக் காவு கொடுப்பர். இந்து மயானத்தில் நடைபெறும். கடலை மாடன் கோயிலில் பளறியைப் பலியிடுவர். பலியிட்ட பின்பு அனைவருக்கும் விருந்து அளிக்கப்படும். குழந்தைகளுக்குக் காதுகுத்திப் பெயர் வைப்பர். மாலையில் பள்ளயம் பிரிப்பர். அன்றிரவு கலை நிகழ்ச்சியோ. நாடகமோ நடைபெறும். இதில் கிராமப் பெருந்தனக்காரரும் கிராமப் பூசாரியும் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

காணிக்கை செலுத்தல், அங்கமளித்தல், காவடி எடுத்தல், கரகமெடுத்தல், பால்குடம் எடுத்தல், மொட்டையடித்தல், மிருகங்களை நேர்ந்து விடல் போன்ற சடங்குகள் உண்டு. சிறு தெய்வங்களுக்குக் கருவாடு. சுருட்டு, கஞ்சா, முதலியவற்றைப் படைப்பது உண்டு. சில தேவதைகளுக்கு ஆடு, சாராயம் கோழி. பன்றி பலியிடுவதுண்டு. சங்ககால மக்கள் பசுவினைப் பலியிட்டதாக அகநானூறு மூலம் அறிகிறோம். பின்னர் எலுமிச்சை, பூசணி பலி கொடுப்பதைக் காண்போம், உயிரில் பலி தொடங்கிய கால கட்டத்தில் இம்மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். நேர்த்திக்கடன் தேர்ந்தோர் தெய்வத்தைப் போன்ற உருவம் செய்து நேர்வதுண்டு. பொங்கல், சித்திரை நாள், ஆடி, கார்த்திகை நாட்களில் கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவர். சாமி கும்பிடும் நாட்களில் கரகமெடுத்தல், காவடி எடுத்தல் நையாண்டி மேளம், கணியன் ஆட்டம், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். திருநெல்வேலி மாவட்டக் கொடை விழாவில் கணியன் ஆட்டமும் வில்லுப்பாட்டும் விழாவோடு தலை இணைந்ததாகும். இவ்விரண்டும் இல்லாமல் கொடையே கிடையாது. கணியன் ஆட்டமும் வில்லுப்பாட்டும் வழிபாட்டுச் சடங்குடன் இணைந்து விட்டன. திருநீறு, குங்குமம், பூ, தீர்த்த நீர், வேப்பிலை, துளசி முதலியவற்றைக் கோயில் பிரசாதங்களாக வழங்குவதுண்டு. விழாக்காலங்களில் சாதி வேறுபாடின்றி அனை வரும் பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்லும் மாரியம்மன் போன்ற தெய்வங்கலுக்குத் திருவிழா நடைபெறும். சில தெய்வங் களுக்குத் தேர்த்திருவிழா நடைபெறும். மாரியம்மனுக்குத் தீமிதி விழா நடைபெறுகின்றது. திருவிழாக்களில்

மாவிளக்குப் போடல், செடல் குத்திக் கொள்ளல், தீ மிதித்தல், பாடை கட்டி இழுத்தல், வேம்பாடை தரித்தல் போன்ற வேண்டுதல்கள் நிறைவேற்றப் படும். திரௌபதியம்மன் கோவில் விழாவில் தெருக் கூத்து நடை பெறும். வீரபாண்டி மாரியம்மன் விழாவில் மாட்டுத்தாவணி இருக்கும். திருவிழாக்களின் போது சந்தை (Fair), கடைகள்

போடப்படுவதையும் காண்கிறோம். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு மக்களின் எண்ணங்களையும் நம்பிக்கையையும் வழி பாட்டு முறைகளையும் தொன்மை சமயத்தின் கூறுகளையும் பிரதிபலித்து நிற்பதைக் காண்கிறோம்.

நாட்டுப்புற மக்களின் வாழ்வில் 'ஏற்படும் இன்ப துன்பங் களுக்கும் நோய்நொடிக்கும் 'நாட்டுப்புறத் தெய்வங்களையே தஞ்சமடைகின்றனர். படையல்களும் பலியும் இட்டுத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். விழா எடுப்பதன் மூலம் உள்ளத்திற்கு மகிழ்வும் உறவுக்குத் தொடர்பும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டை நன்கு ஆராயின் தொன்மை மதத்தைப் பற்றி (Primitive religion) நன்கு அறிந்து கொள்ளலாம்.

**நாட்டுப்புறத் திருவிழாக்கள்**

'விழா என்னும் திறந்த வாசல் வழியேதான மக்களை அறிந்து கொள்ள முடியு

மனித சமுதாயம் பல்வேறு காரணங்கள்ர் பிரிவுகளாக வாழ்ந்திருந்த ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும் முழுவதும் உழைத்த மனிதன் ஓய்வு நேரத்தில் மாள்ளர் இருக்க விரும்புவது இயல்பு. தமிழகத்தில் இரண்டாயிரம் களாகத் திருவிழாக்கள் நடைபெற்று வருவதை அதிரதா சமுதாய மாற்றத்தால் புதிய திருவிழாக்களும் தோன்டுண இவ்விழாக்கள் மூலம் கலையும் கலையனுபவமும் tam வளர்கின்றன. கலைகளின் வளர்ச்சிக்கே திருவிழாதான் காரணமெனின் மிகையாகாது. திருவிழாக்கள் அனைத்தும் கோயிலுடன் பின்னிப் பிணைந்துள்ளன. கோயில் என்தாே திருவிழா திருவிழா என்றாலே கோயில்விழாக்கள் சவத்தின் கூறாக மட்டுமின்றி கலைகளின் வளர்ப்புப் பண்ணையா திகழ்கின்றன. திருவிழாக்கள் பண்பாட்டு உறவை ளர்க ஒருமைப் பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன.

விழாக்கள் பெரும்பாலும் மதச் சார்புடையனவாகேள தொழில் சார்புடையனவாகவோ இருக்கும். தொழில் சார்யுடைய விழாக்கள் தொழில்

சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில கொண்டாடப்படுவன. சமயச் சார்புடைய விழாக்களில் தெல்ல வழிபாடு கலந்திருக்கும். பொழுது போக்காக மட்டுமின்றிப் பயன கருதியும் நடத்தப்படுகின்றன. நாட்டுப்புற விழாக்கள் மூலம் நாட்டுப்புற மக்களின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் நாகரிகமும் வெளிப்படுகின்றன.

வருடாந்திர விழாக்கள் என்றும் கோயில் விழாக்கள் என்றும் வகைப்படுத்துவர். இவ்விழாக்களில் சிறுபாரம்பரிய மரபும் பெரும்பாரம் பரிய மரபும் கலந்துள்ளன. இவ்விழாக்களை முழுக்க முழுக்க நாட்டுப்புற விழாக்கள் எனக் கூற முடியாது.

ஆனால் நகர்ப்புற மக்கள் மட்டுமின்றி நாட்டுப்புற மக்களும், இவ் விழாககளைக் கொண்டாடுகின்றனர். நாட்டுப்புற மக்களில் ஒரு காரார் சமஸ்கிருதமாதல் (Sanskritisation)" புதுமையாக்கம் (indentisatina) காரணமாகப் பெரும்பாரம்பரிய மரபுடன் இணைந்த விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அதே மக்கள் சிறுபாரம்பரிய மரபுடன் இணைந்த விழாக்களையும் கொண்டாடுகினறனர். எனவே, இம் மக்கள் கொண்டாடும் முககிய விழாக்கள் பற்றி இவண் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. வருடாந்திர விழாக்கள் பெரும்பாலும் பெரும்பாரம்பரிய மரபுடன் இணைந்தவையாகும். கோயில் திருவிழாக்களையும் ஆகம தெய்வத் நாட்டுப்புறத் தெய்வத் தொடர்புடையது தொடர்புடையது. எனப் பகுத்துக் காண்ணம் வருடாந்திர விழாக்கள் குறிப்பிட்ட கால கட்டத்தில் நடத்தே திரும் நாட்டுப்புறத் தெய்வ விழாக்கள் தெய்வத்தின் அருள் கேட்ட பிளயே நடத்தப்படும். கோயில் திருவிழாக்களில் பாட்டும் கூத்தும் பண்ணும் பரதமும் களிநடனம் புரியக் காணலாம். பத்துநாள் திருவிழா, இருபது நாள் திருவிழா, முப்பது நாள் திருவிழா, ஆண்டுக்கு இரண்டு பெரிய திருவிழா: திங்கள் தோறும் திருவிழா தேர் இருந்தாலே திருவிழா உண்டு.

**1. தமிழ் வருடப் பிறப்பு:**

சித்திரை முதல் நாள் தமிழ் வருடப் பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. புத்தாடை அணிந்து விருந்துண்டு வருடசி பிறப்பைக் கொண்டாடுகின்றனர். முதல்

நாள் மகிழ்ச்சியாகவிருப்பின் ஆண்டு முழுதும் மகிழ்ச்சி நிலவும் என்ற நம்பிகக்கை மக்களிடையே உண்டு.

**2. சித்திரா பௌர்ணமி**

சித்திரை மாதம் பௌர்ணமி நாளில் கொண்டாடப் படுகின்றது. சித்திரா பௌர்ணமி நாளன்று சிலர் சித்திரகுப்தனை வளர்ந்து அவளை வழிபடுவது வழக்கமாகும்.

**3. வைகாசி விசாகம்**

வைகாசி மாதம் முழு நிலாவன்று முருகன் கோயில் அனைத்திலும் மிக விமரிசையாக இவ்விழா நடைபெறும். உல போற்றும் புத்தர்பிரான் பிறந்ததும் விசாகமே இந்தியா முழுவதும் வைகாசி விசாகம் புத்த பூர்ணிமா என்ற பெயரில் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

**4. ஆடி பதினெட்டாம் பெருக்கு**

ஆடி மாதம் பதினெட்டாம் நாளில் காவிரிக் கரையில் வாழும் மக்கள் காவிரித் தாய்க்குப் பெருவிழா எடுப்பார். ‘ஆடிப் பட்டம் தேடி விதை’ என்பதற்கேற்ப உழவர்கள் உழவுத் தொழிலை ஆரம்பிக்கும் காலமாகும். ஆடி மாதம் காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பதினெட்டாம் நாளில் ஆணும் பெண்ணும் காவிரித் தாயை வணங்கி வழிபடுவர். புதிதாக திருமணமான மணமக்கள் மணமக்கள் மாலையை காவிரிப் பெருக்கில் விடுவர்.

**5. வரலெட்சுமி விரதம்**

ஆடி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று கொண்டாடம் படுகின்றது. பெண்கள் இலட்சுமியை வழிபடும் விழாவாகும் தங்களுக்காகவும் கணவன்மார், குழந்தைகளுக்காகவும் நல்லாசி வேண்டி வணங்கும் விழாவாகும். விரதமிருந்து கொண்டாடுவர்.

**6. பிட்டுத் திருவிழா**

ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தில் கொண்டாய படுகின்றது. சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து வைகையின் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தியதாக மக்களிடையே நிலவுகின்றது. மதுரையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

**7. விநாயக சதுர்த்தி**

ஆவணி மாதம் வளர்பிறையில் சதுர்த்தி தினத்தன்று பிள்ளையாருக்குச் செய்யப்படும் வழிபாடாகும். மகாராஷ்டிரா மாநிலத்தில் கணேஷ் சதுர்த்தி என மிக

விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. விநாயகர் உருவத்தை வைத்து, கொழுக்கட்டை, கடலை, சுண்டல், அவல், பொரி, பால், பழம், வெற்றிலைப் பாக்கு வைத்து வணங்குவர். பின்னர் ஆற்றில் விட்டு விடுவர்.

**8. நவராத்திரி**

நவராத்திரி விழா ஒன்பது இரவுகளைக் கொண்டது. சக்தியின் பெருமையினை உலகுக்கு உணர்த்தவும் வாழ்வில் மகிழ்ச்சி பெறவும் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி விழாவின் போது கொலுவும் வைப்பர். ஒன்பது நாட்கள் தேவி ஊசிமீது தவமிருப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

**9. சரசுவதி பூஜை**

நவராத்திரியின் ஒன்பதாம் நாள் சரசுவதி பூஜை கொண்டாடப்படுகிறது. சரசுவதி பூஜையை ஐப்பசிமாதம் கொண்டாடுகின்றனர். சரசுவதி பூஜையன்று புத்தகங்களை வைத்து வழிபடுவது உண்டு.

**10.தீபாவளி**

தீப ஒளியான தீபாவளியை நாட்டுப்புற மக்களைக் காட்டிலும் நகர்ப்புற மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடு கின்றனர். விஷ்ணு அவதாரம் எடுத்து நரகாசுரனைக் கொன்ற நாளாகும். எண்ணெய் தேய்த்து நீராடி, புது ஆடைகளை அணிந்து பலகாரங்களை உண்டு வெடி வெடித்து மிக விமர்கையாகக் கொண்டாடுகின்றனர். இந்தியா முழுதும் கொண்டாடப்படும் விழாவாகும்.

**11. கந்த சஷ்டி**

ஐப்பசி மாதம் வரும் கந்த சஷ்டி மிக விமர்சையாக கொண்டாடப்படுகின்றது. முருகன் அசுரர்களை வதம் செய்து அழித்து ‘சூரசம்ஹாரம்' செய்த நாளாகும். முருகன் கோவில்களில் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

**12. கார்த்திகை தீபம்**

கார்த்திகை தீபம் கார்த்திகை மாதம் முழு நிலா நாளன்று நடைபெறும். வீடுகள் தோறும் விளக்கேற்றி அலங்கரிப்பர். கார்த்திகை மாதம் முழுவதும் விளக்கேற்றுபவர்களும் உண்டு. கிராமங்களில் 'சுளுந்து' சுற்றுவர். சோளத்தட்டையை ஒன்றாகக் கட்டியும் சுளுந்து சுற்றி. பின்பு ஓரிடத்தில் வைத்து நெருப்பூட்டி அதனை மக்கள் தாண்டுவர், அச்சாம்பலை எடுத்துச் சென்று நிலங்களில் இடுவர். நிலங்கள் நன்கு விளையும் நம்புகின்றனர். இச்சாம்பலை

வீட்டில் வைத்துப் பாதுகாத்தால் பேய், பிசாசு வராது என நம்புகின்றனர். திருவண்ணாமலையில் தீபத்தைக்காண இலட்சக்கணக்கில் மக்கள் கூடுவர்.

**13. ஆருத்ரா தரிசனம்**

சிதம்பரம் நடராசருக்கு வருடத்தில் இருதடவை தேர்த் திருவிழாவும் தரிசனமும் நடைபெறும். ஆனி மாதமும் மார்கழி மாதமும் நடைபெறும். ஆனித் திருமஞ்சனம் என்றும் ஆருதரா தரிசனம் என்றும் முறையே குறிப்பிடுவர். பத்து நாட்கள் நடை பெறும். கொடியேறிய நாளிலிருந்து நடராசரும் அம்மனும் வாகனத்தில் நான்கு வீதிகளில் வலம் வருவர். ஒன்பதாவது நாளன்று தேர்த்திருவிழா நடைபெறும். நடராசர் மக்களுக்குத் 'தரிசனம்' கொடுப்பதால் தரிசனம் என்பர். பதினொன்றாம் நாளில் பூப்பல்லக்கு நடைபெறும். திருவிழாக் காலங்களில் தெய்வங்கள் நான்கு வீதிகளையும் வலம் வரும்.

**14. வைகுண்ட ஏகாதசி**

மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி திதி அன்று வைகுண்ட ஏகாதசி நடைபெறும், அன்று விரதமிருந்து இரவு முழுவதும் கண் விழித்திருப்பர். ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி மிகச் சிறப்பாக நடைபெறும். வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறக்கும் |என்ற நம்பிக்கையால் ஸ்ரீரங்கம் செல்கின்றனர். சொர்க்கப்பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது.

**15. தைப்பூசம்**

தைமாத முழுநிலா நாளில் நடைபெறும் தைப்பூசத்தன்று முருகன் கோயிலுக்குச் சென்று வணங்குவது வழக்கம். வடலூ வள்ளலார் ஆலயத்திலும் மிகச் சிறப்பாக விழா நடைபெறும்.

**16. பொங்கல் விழா**

தமிழ் மக்கள் அனைவராலும் மிகச் சிறப்பாகக் கொண்ட டப்படும் விழா. ஞாயிற்றுக்கும் மழைக்கும் மாடுகளுக்கும் நன் விழாவாக இப்பொங்கல் திருநாளை மக்கள் கொண்டா கின்றனர். மார்கழித் திங்களின் இறுதிநாளைப் 'போ விழாவாகக் கொண்டாடுகின்றனர். இந்திரனுக்கும் 'போகி' என் பெயர் உண்டு. பழைய பொருட்களைப் போக்கிப் பு பொருட்களால் வீட்டை அலங்காரம் செய்வர்.

பொங்கல் வந்தால் வயிறுநிறைய சோறு தின்னலாம்' என்பது நாட்டுப்புறத்தில் வழங்கும் பழிமொழியாகும்.

பொங்கல் விழா தைத்திங்கள் முதல்நாள் கொண்டாடப் படுகினறது. தமிழர் திருநாள் என்றும் உழவர் திருநாள் என்றும் அழைக்கின்றனர். இந்து உழவர் பெருமக்களுக்குப் பொன்னான அள் உழைப்பின் உயர்விளான உலகுக்கு உணர்த்தும் உள்ளதத் திருநாள். தமிழர் கண்ட பொங்கல் விழா தரணிக்கோர் புதுவிழா. வேளாண்மைப் பெருக்கத்திற்குக் காரணமாக ஞாயிற்றையும் வணங்குகின்றனர். புதுப்பாளையில் பொங்கலிட்டுப் பொங்கலோ பொங்கல்' என முழங்குவர். கதிரவனுக்குப் பொங்கலைப் படைத்து, உண்டு மகிழ்வர். மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் பொங்கல் வாழ்த்துக் கூறி மகிழவர்.

தைத்திங்கள் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலாகும். மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, குங்குமம் இட்டு மாலை சூட்டிச் சோறு படைப்பர், சில இடங் களில் அன்று சல்லிக்கட்டு நடைபெறுவதும் உண்டு. தமிழக அரசு இத்தாளைத் திருவள்ளுவர் திருநாளாகக்' கொண்டாடி வருகின்றது.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாளை, 'காணும் பொங்கல்' என அழைக்கின்றனர். பெரியவர்களைக் கண்டு வாழ்த்துப் பெறுவர். 'காணும் பொங்கல்' என்றும் 'கன்னிப்பொங்கல்' என்றும் அழைக்கின்றனர்.

வீடெல்லாம் தூய்மையும் ஊரெல்லாம் உவகையும் தாடெல்லாம் மகிழவும் உழவர் உள்ளமெல்லாம் உயர்வும் அடையும் ஒப்பற்ற விழா, தமிழர்கள் அனைவரும் ஒருமித்துக் கொண்டாடும் ஒரே விழா பொங்கல் விழாவாகும்.

**17. மாசிமகம்**

மாசி மாத மக நட்சத்திரத்தன்று மாசிமகத் திருவிழா நடை. பெறும். மக்கள் கடலில் நீராடிக் கடவுளை வணங்குகின்றனர். பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறை கும்பகோணத்தில் மகாமகம் கொண்டாடப்படுகின்றது.

18. மகா சிவராத்திரி

மாசிமாத அமாவாசை இரவுக்கு மகாசிவராத்திரி என்று பெயர். சிலபெருமான் விஷத்தை உண்டு உலகைக் காப்பாற்றி னார் என்பது புராண வரலாறு சிவராத்திரியன்று மக்கள் விரதமிருந்து கண் விழித்து ஓம் நமசிவாய என்று கூறி மறுநாள் குளித்துச் சிவனை வழிபட்டு விரதத்தை முடித்துக் கொள்வர்.

19. பங்குனி உத்திரம்

பங்குனி மாத முழுநிலாவன்று பங்குனி உத்திரம் பத்து நாட்கள் வரை நடைபெறும். பங்குனி உத்திரத்துக்கு மறுநாள் இடும்பன் விழா நடைபெறும். இடும்பனை வழிபட்டு வணங்குவர். முருகன் கோயில்கள் அனைத்திலும் பங்குனி உத்திரம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

டாக்டர் சாந்தி அவர்கள்' நாட்டுப்புறத் தெய்வங் களோடு தொடர்புடைய திருவிழாக்களாகக் கீழக்கண்டவற்றைக் குறிப்பிடுகின்றார்.

1. தேர்த் திருவிழா
2. செடல் போடும் திருவிழா
3. தீமிதி உற்சவம்
4. கம்பம் திருவிழா
5. மொந்தையன் திருவிழா
6. ஊரணிப் பொங்கல்
7. மயானக் கொள்ளை
8. காத்தவராயன் கழுவேற்றும் திருவிழா...

**1. தேர்த் திருவிழா**

நாட்டுப்புறத் தெய்வங்களான மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்குத் தேர் திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழா முதல் நாள் காப்புக்கட்டிப் பின் கொடி ஏற்றுவார்கள். தேர்த் திருவிழா கொடியேற்றிய ஒன்பதாவது நாள் நடைபெறும். ஒன்பதாம் நாளில் தெய்வத்தைத் தேரில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். மக்கள் தெய்வத்திற்குப் படைப்பர். தேர் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேரும்.

**2. செடல் போடும் உற்சவம்**

மாரியம்மன் கோயிலில் மிக விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றது.

**3. தீமிதி உற்சவம்**

மாரியம்மனுக்கு எடுக்கப்படும் விழா, சில இடங்களில் காளியம்மனுக்கும் தீமிதி நடைபெறுகிறது. தீமிதி உற்சவம் ஆரம்பிப்பதற்கு ஒன்பது நாட்கள் முன்பே காப்புக் கட்டுவர். காப்புக் கட்டிய பின்பு வெளியூர் செல்லக்கூடாது. தீமிதி உற்சவத்தன்று கரகம், காவடி எடுப்பர். தீ மிதிப்பவர்கள் விரத மிருந்து கோயிலுக்குச் சென்று காப்பு கட்டி வருவர். மாலையில் குளித்து ஈர ஆடையுடன் மாலை அணிந்து குங்குமம் இட்டுத் தீக்குழியை மிதித்துச் செல்வர். தீமிதி விழா மாரியம்மனுக்கு

எடுக்கும் விழாவாக அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் மாரியம்மனை மிகப் பயபக்தியுடன் வழிபடுகிறார்கள்.

**4. கம்பம் திருவிழா**

இவ்விழா அய்யனாருக்கு எடுக்கும் விழாவாகும். அலரிப் பூவைப் பறித்து அய்யனார்க்குப் படைத்து வேப்ப மரத்தின் மூன்று கொம்புள்ள கிளையைக் கோயில் வாயிலில் ஊன்றுவர். மாலைப் பொழுதில் அக்கம்பத்தைச் சுற்றி மகிழ்ச்சிக் கூத்தாடுவர். செவ்வாய்க்கிழமையன்று பொங்கலும் புதனன்று தேரோட்டமும் நடைபெறும். வியாழக்கிழமையன்று உடலில் ஊசிகளைக் குத்திக் கொண்டு ஊர்வலம் வருவர். அன்றிரவு விக்கிரக ஊர்வலம் வரும். மறுநாள் திருவிழா முடியும். அன்று கோயிலில் ஊன்றிய கம்பத்தை, கிணற்றுக்குள் போடுவர் பத்தாம் நாளில் மீண்டும் மாவிளக்கும் காணிக்கையாகச் செலுத்தி, கும்பத்தைக் கிணற்றுக்குள் போடுவர். பண்டாரம் தன் கையில் கட்டிய காப்பையும் கிணற்றில் எறிவார். அன்றிரவு தெருக்கூத்தோ அல்லது சதிராட்டமோ நடைபெறும்.

**5. மொந்தையன் திருவிழா**

மதுரை மாவட்ட ஆலவாய் நல்லூரில் ஆடிமாதம் நடை பெறும் விழா, பல்லி சகுனம் கேட்டு விழா நடத்துவர். புரவிகள் செய்ய அய்யனார் கோவில் குளத்தில் மண் எடுப்பர். புரவிகளை மொந்தையன் கோயிலில் வைத்து வண்டியில் ஏற்றி அய்யனார் கோவிலுக்குக் கொண்டு செல்வர். சக்கிலியர் சோணச்சாமி கோயிலிலிருந்து மொந்தையன் கோயிலுக்கு வருவர். கோயில் ' பூசாரி நெல்லைப் பரப்பி சேவலைப் பலி கொடுத்து அதன் இரத்தத்தைப் புரவியின் கண்களில் தடவுவர், பின்னர் புரவிகள் அய்யனார் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்படும். அன்று நாக்கில் செடல் குத்திக்கொள்வர். வேண்டுதலுக்காக இவ்வாறு செய்வர்.

**6. ஊரணிப் பொங்கல்**

அய்யனாருக்குச் செய்யும் விழாவாகும். ஊரணிப் பொங்கல் சில இடங்களில் தை மாதமும் சில இடங்களில் ஆடி மாதமும் நடைபெறும். ஊர்மக்களனைவரும் அய்யனார் கோயிலில் கூடிப் பொங்கல் வைத்துப் படைப்பர். ஊர் மக்களனைவரும் ஒரே நாளில் ஒரே இடத்தில் செய்யும் விழாவாகும். பெரும்பாலும் அய்யனார் ஊரணிக் கரையில் வீற்றிருப்பதால், இப்பெயர் பெற்றிருக்கலாம். இதுபோன்ற

விழாக்கள் மதுரை வீரன், கருப்பன், முனீஸ்வரன் போன்ற தெய்வங்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும்.

**7. மயானக் கொள்ளை**

இவ்விழா அங்காள பரமேஸ்வரிக்கு நடைபெறும் விழாவாகும். வருடா வருடம் மயானக் கொள்ளை என்ற விழா அங்காள பரமேஸ்வரிக்கு நடத்தப்படுகின்றது மாசிமாதம் மஹா சிவராத்திரி முதல் நாள் நடத்தப்படுகின்றது. இவ்விழா பத்து நாட்கள் நடைபெறும். முதல்நாள் காப்புக்கட்டி கொடியேற்றுவர். ஒன்பது நாள் அம்மன் அலங்கரிக்கப்பட்டுத் தெருவழியே எடுத்துச் செல்லப்படும். பத்தாம்நாள் மயானக்கொள்ளைத் திருவிழா நடைபெறும், அன்று பூசாரி குளித்து முழுகி, கரகம் எடுப்பதற்குரிய பொருட்களுடன் ஆற்றங்கரைக்குச் செல்வர். சக்திகரகத்துடன் ஆற்றங்கரையிலிருந்து கோயிலுக்கு வருவார். பின் தெய்வத்தைப் பல்லக்கில் எடுத்துவைத்துச் சுடுகாட்டிற்குச் சென்று அங்கு படைப்பர். அந்தப் படையலை உண்டால் குழந்தைப்பேறு கிட்டும் நம்புகின்றனர். நோய்கள் என குணமாகும் என்றும் நம்புகின்றனர். மயானத்தில் படைக்கப் படுவதால் மயானக் கொள்ளை எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

**8. காத்தவராயனைக் கழுவேற்றும் திருவிழா**

முத்துமாரியம்மன் திருவிழாவின் ஒரு பகுதியாகக் கொண்டாடப்படுகின்றது. ஐந்தாம் நாள் திருவிழாவாக இது நடைபெறுகின்றது. ஐந்தாம் நாளன்று ஒருவர் காத்தவராயனா கவும் ஒருவர் காளியாகவும் வேடமிட்டுக் கொள்வர். கழுமரம் போன்று கட்டியிருப்பர். காத்தவராயன் சிலையும் காளி சிலையும் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் அவ்விடத்திற்கு வரும். திரை போட்டு மறைத்திருப்பர். காத்தவராயன் வேடமிட்டவனைக் கழுமரத்தில் ஏற்றுவர். கழுமரத்தில் தொங்கப் போகின்ற

**சந்தைகள்**

விழாக்களும் சந்தைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பின்னனந்தவைகளாகும். எனவேதான் ஆங்கிலத்தில் (Fair and Festival) என்கின்றனர். விழாவையொட்டிப் பெருஞ்சந்தைகள் கூடுவது மரபாகும். கிராம மக்கள் தங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்கவும் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கவும் செய்கின்றனர். சில இடங்களில் வாரச்சந்தை கூடுவது முண்டு.

பொள்ளாச்சிச் சந்தை, தேனிச் சந்தை, வடசேரிச் சந்தைகள் மிகப் புகழ்பெற்றவையாகும். திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீபத்தையொட்டி மாட்டுச் சந்தை கூடுகிறது. மதுரை மாவட்ட வீரபாண்டி மாரியம்மன் திருவிழாவையொட்டி மாட்டுச் சந்தை கூடுகிறது. நாட்டுப்புற மக்களுக்குத் திருவிழாவும் சந்தையும் ஒன்றறக் கலந்ததாகும். இன்று சமுதாய மாற்றத்திற் கேற்பத் திருவிழாவையொட்டி நடைபெறும் சந்தைக்குப் பதிலாகப் பொருட்காட்சி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவிழாக்கள் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றிப் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நிகழவும் உறுதுணையாக உள்ளன. ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நாட்டுப்புற விளையாட்டுக்கள்**

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற விளையாட்டுக்கள் அவத்தின் ஒரு கூறாகும். நாட்டுப்புற மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்ததாகும். விளையாட்டு என்பது வெளித்தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டை மனமகிழ்ச்சி ஊட்டும் செயல் என்பர். அவ்விளையாட்டு பொழுது போக்காக மட்டுமின்றி உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. விளையாட்டில் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம் பெறுகின்றன. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப் படுகின்றன. வேலைக்கும் விளையாட்டுக்குமுள்ள வேற்றுமை செயல்படுபவனின் மனப்போக்கில் உள்ளது எனலாம், வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்றும் விளையாட்டைக் கூறுவர்.

மற்ற சமூக நிறுவனங்களைப் போல விளையாட்டும் வரையறுக்க இயலா மூலத்திலிருந்து தோன்றியதாகும். மனித இன வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் மனிதன் இன்றைய நிலையை எய்துவதற்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறு காலகட்டங்களில் கடந்து முன்னேறியுள்ளான். வேட்டையாடி வாழ்ந்த காலத்திலும் நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கியபோதும் வேட்டை, போர் போன்றவற்றில் ஈடுபட்டான். அவற்றிற்காகப் பல பயிற்சிகளை மேற் கொண்டான். 'சமுதாய மாற்றத்தின் விளைவாக

விளையாட்டு என்பது அனைத்து மனிதர்களிடையேயும் பொதுவான மற்றும் அனைத்து கலாச்சாரங்களிலும் வெளிப்படையாக வெளிப்படும் வெளிப்பாட்டு நடத்தை வடிவமாகும். கலையைப் போலவே, மொழி மற்றும் மத விளையாட்டு என்பது ஒரு சிக்கலான நிகழ்வு ஆகும், அதை சுருக்கமாக வரையறுக்க முடியாது. வயதிலேயே அவற்றை எதிர்நோக்கும் பயிற்சியை விளையாட்டு அளிக்கிறது.

**புனராக்கக் கொள்கை**

ஸ்டான்லி ஹால் (Stenley Hall) இக்கொள்கையை நன்கு விளக்கியுள்ளார். விளையாட்டின் வழியே ஒரு குழந்தை தன் இனத்தின் பண்டைய செயல்களையும் அனுபவங்களையும் மீண்டும் பெறுகிறது என்பது இக்கொள்கையின் சாரமாகும்.

**பொழுது போக்குக் கொள்கை**

விளையாட்டு வெறும் பொழுது போக்கு என்ற கொள்கையும் நிலவுகிறது. விளையாட்டுச் செயல்கள் காலச் எளியனவாகவும் மனித இனத்தின் தொடக்கக் எனக் கருதப் செயல்களை ஒத்திருப்பனவாகவும் இருத்தலால் விளையாட்டுச் செயல்கள் பொழுது போக்குச் செயல்கள் படுகின்றன.

**காலுதற் கொள்கை**

பிறருக்குத் துன்பமளிக்கும் இரக்கமற்ற செயல்களில் ஈடுபடும் பண்டைய நோக்கு மனிதனிடமிருந்து இன்னும் முழுமையாக மறைந்தொழியவில்லை. தீய விளைவுகளை நீக்கி அவற்றை உயர்நிலைப் படுத்துவதற்கு விளையாட்டு உதவுகின்றன. விளையாட்டு மூலம் உளப்போராட்டங்களுக்குத் தீர்வு காணும் முறையும் உள மருத்துவ முறைகளில் ஒன்றாகும்.

**போட்டி மனப்பான்மை**

போட்டி மனப்பான்மை விளையாட்டின் அடிப்படை யாகும்.'

இன்று விளையாட்டுக்களை அக விளையாட்டு, புற விளையாட்டு என இரண்டாகப் பிரிக்கின்றனர். விளையாட்டுகளை,

1. கால அடிப்படையிலும்
2. கருவிகள் அடிப்படையிலும்
3. வயது மற்றும் விளையாடுவோர் அடிப்படையிலும்
4. தன்மை அடிப்படையிலும் இருப்பினும் விளையாட்டுகள் மற்ற விளையாட்டு நடவடிக்கைகளிலிருந்து வேறுபடுகின்றன, அதில் குறைந்தது இரண்டு நபர்களுக்கிடையேயான போட்டியை உள்ளடக்கியது.
5. போட்டி அடிப்படையிலும்

6. செயல்கள் அடிப்படையிலும் வகைப்படுத்துகின்றனர் விளையாட்டை, 1) தனிநபர் விளையாட்டு 2) இருவர் வந்து விளையாடும் விளையாட்டு 3) குழு விளையாட்டு என்றும் பிரிப்பர்.

விளையாட்டைப் பால் அடிப்படையிலும் வயது அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துவர்.

1. சிறுவர் விளையாட்டு
2. சிறுமியா விளையாட்டு
3. சிறுவர் சிறுமியர் விளையாட்டு
4. ஆடவர் விளையாட்டு
5. மகளிர் விளையாட்டு

தன்மை அடிப்படையில் விளையாட்டை வகையாகப் பகுக்கின்றனர். நான்கு

1. உடல் திறன்
2. அறிவுத்திறன்
3. வாய்ப்புநிலை
4. மனமகிழ்ச்சி நிலை

மானிடவியலார் இதனையே மூன்று வகையாகப் பகுக்கின்றனர்.

1. உடல் திறன் விளையாட்டு
2. மனத் தந்திர விளையாட்டு
3. வாய்ப்புநிலை விளையாட்டு

விளையாட்டுக்களை, (i) பாடலுள்ள விளையாட்டு (ii)பாடல் இல்லா விளையாட்டு என இரு வகையாகப் பகுக்கலாம். சிறுமியர் விளையாட்டில் பாடல் மிகுதியாக இருக்கும்.

ஆடவர் விளையாட்டுக்கள் புறவிளையாட்டுகளாகவும் உடல் திறன், அறிவுத்திறன், வாய்ப்புநிலை வாய்ந்த விளையாட் டுகளாகவும் உள்ளன. ஆனால் அதே நேரத்தில் மகளிர் வினை யாட்டுக்கள் அகவிளையாட்டாக உள்ளன. சிறுவர் சிறுமியர் விளையாட்டு போலச் செய்தலை (Imitation) அடிப்படையாகக் கொண்டது. மரபு வாயிலாகப் பாதுகாக்கப்படுகின்றது. சிறுவர் சிறுமியர் உடல் திறன், **மனமகிழ்ச்சி** விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர். சிறுவர்களைக்காட்டிலும் சிறுமியர்கள் இத்தகைய விளையாட்டுக்களில் அதிகம் ஈடுபடுகின்றனர். சிறுவர்கள் போட்டி விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர். அதிக சக்தி செலவிடக்கூடிய

தீவிரமான விளையாட்டுக்களைச் சிறுவர் களும் மென்மையான விளையாட்டுக்களைச் சிறுமியர்களும் விளையாடுகின்றனர். வயது வந்தோர் விளையாட்டு கடின உழைப்பினின்றும் ஓய்வு பெறத் தோற்றுவிக்கப் பெற்றிருக்க வேண்டும். பொதுவாக ஆடவர் விளையாட்டை அறிவுத்திறன் சார்ந்தது என்றும் மகளிர் விளையாட்டை மனமகிழ்ச்சி, பொழுது போக்குச் சார்ந்தது என்றும் கூறுவர். குழந்தைகளின் பருவத்தில் கேற்ப விளையாட்டுக்கள் வேறுபடுகின்றன.

விளையாட்டு குழந்தையின் முழுவளர்ச்சிக்கு இன்றியமை யாததாகிறது. விளையாட்டின் வழியே புலப்பயிற்சி (Sensctraining) இயற்கையாக நிகழ்கிறது. படைப்புச் செயல்களின் சிறந்த வெளிப்பாடே விளையாட்டு, குழந்தைகள் இயல்பூக்கங்கள் விளையாட்டில் வெளிப்படுகின்றன. விளையாட்டு சமூக ஒழுகலாறுகளைக் கற்பிப்பதற்குப் பயன்படுகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகளிடையே கட்டுப்பாட்டுணர்வு வளர்கிறது. ஒற்றுமையுணர்வு ஏற்படுகின்றது. குழந்தைகளிடையே தலைமைப் பண்பும் (Leadership) வளர்கிறது.' அதே நேரத்தில் பணிவும் பிறவுக்கு உதவும் மனித நேயமும் குழந்தைகளிடையே வளர்கின்றன.

நாட்டுப்புற விளையாட்டுகளைப் பால், அடிப்படையில் வயது 1) சிறுவர் விளையாட்டு 2) சிறுமியர் விளையாட்டு 3) சிறுவர், சிறுமியர் விளையாட்டு 4) ஆடவர் விளையாட்டு 5) மகளிர் விளையாட்டு எனப் பாகுபடுத்தி ஆராயலாம். கட்டுரை பெரிதாகும் என்பதால், விளையாட்டுக்க களின் பெயர்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. விளையாட்டுக் களைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

**சிறுவர் விளையாட்டுக்கள்**

1. கால் தூக்கிக் கணக்குப் பிள்ளை
2. ஆவியம்
3. பம்பர விளையாட்டு
4. தவிட்டுக் குஞ்சி
5. கிளித் தட்டு
6. தெல்லு
7. கிந்தான்
8. சைக்கிள் கிந்தான்
9. ஆயிரம் கிந்தான்
10.உப்பு விளையாட்டு
11. கள்ளன் போலீஸ்
12.கோலி
13. கால் தாண்டி
14. வண்ணாம் பொதி
15.கிட்டிப்புள்
16.மந்தி ஓடுதல்
17. பந்து விளையாட்டு

18.மாக்கொளக் கட்டை
19. ஒச்சிய்யான்
20. தலைவனைக் கண்டுபிடித்தல்
21. உருண்டை திரண்டை விளையாட்டு
22. மாட்டுக்கால் திரி விளையாட்டு
23. சைக்கிள் விளையாட்டு
24. தேர் அல்லது சப்பர விளையாட்டு
25. மாட்டு விளையாட்டு
26. குருட்டுக் கொக்கு விளையாட்டு
27. ஐஸ்பால் ரெடி விளையாட்டு
28. கல்லெடுக்கும் விளையாட்டு
29.காற்றாடி
30.பட்டம்
31. சூடிசுப்பி
32. ஒத்தையா ரெட்டையா?
33. தைத்தக்கா தை
34. வட்டத்திரி
35. எலியும் பூனையும்
36.காக்காக் குஞ்சு
37. குண்டு விளையாட்டு
36.ஆடு ஓநாய் விளையாட்டு
39. சக்கர விளையாட்டு
40. ஆனைத்திரி பூனைத்திரி
41. காட்டு கண்ணாமூச்சி

**சிறுமியர் விளையாட்டுக்கள்**

42. பூப்பறிக்க வர்றோம்
43. பூசணிக்காய் விளையாட்டு
44. உன் புருஷன் பெயரென்ன?
45. பூச்சொல்லி விளையாட்டு
46.ஒருபத்தி இருபத்தி
47. குச்சு குச்சு ராக்கம்மா
48. சோற்றுப்பானை விளையாட்டு
49. கழற்சிக்காய் விளையாட்டு
50. திரித்திரி பொம்மக்கா
51. ரானா மூனா தண்டட்டி
52. என் தலைக்கு எண்ணெய் ஊத்து
53. கரகர வண்டி

**சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்கள்**

54. நொண்டி
55. நிலாப் பூச்சி
56. கிறுகிறு மாம்பழம்
57. சாட்டு பூட்டு
58. கண்ணாமூச்சி
59. ஒரு தலையிலே ஆடு மேயுதாம்
60. யாருக்கு வேட்டை?

**மகளிர் விளையாட்டுக்கள்**

61. பல்லாங்குழி
62. தட்டாங்கல்
63. தாயம்

**ஆடவர் விளையாட்டுக்கள்**

64. சடுகுடு
65. பதினைஞ்சாம் புலி
66. உறியடி விளையாட்டு
67. சேவல் கட்டு
68. எருது கட்டு

**1. சிலம்பாட்டம்**

கையிலுள்ள கம்பினை வீசி ஒலியெழுப்பி விளையாடும் விளையாட்டிற்குச் 'சிலம்பாட்டம்' என்று பெயர், கம்பு வீசுந்திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாக வீசுந்திறன் இம்மூன்றும் சிலம்ப விளையாட்டின் அடிப்படைக ளாகும். இது வீரத்தின் அடிப்படையில் எழுந்த விளையாட் டாகும். இச்சிலம் பாட்டத்தினை

மராட்டிய மொழியில் 'லாட்டி' என்றும், அஜராத்திய மொழியில் 'டல்லாக்கடி என்றும், வங்க மொழியில் 'லாடிலோ' என்றும், தெலுங்கு மொழியில் 'கரடி ஆட்டமு' என்றும், மலையாள மொழியில் 'நெடுவடி' என்றும் வழங்குவர்'

**2. சடுகுடு**

சடுகுடு விளையாட்டைப் பழந்தமிழரின் விளையாட் டென்பர் இதனைப் 'பலிஞ்சடுகுடு' என்றும் 'பலின்சடுகுடு என்றும் 'கபடி' என்றும் கூறுவர். இதனைப் 'பலிஞ்சப்பளம்' என தெலுங்கு மொழியிலும், 'குடுடுடு' என மராட்டிய மொழியிலும் 'குடுடூடு' என வங்க மொழியிலும் வழங்குவர். இவ்விளையாட்டு குறித்து நவராஜ் செல்லையா அவர்கள் 'பழந்தமிழரசர்களிடையே நிரைகளைக் கவாவதும் (வெட்சி)' கவர்ந்த நிரைகளை மீட்பதுமாகிய செயல்கள் இருந்தன. இதனடிப்படையில் போரும் எழுந்தது. போரில் வெற்றி கிட்டக் காளியை வணங்கினர். சடுகுடுப்பை அல்லது குடுப்பை என்ற பறையால் ஒலியெழுப்பி, காளியை வழப்பட்டிருப்பர். போரின் செயல்பாடு விளையாட்டிலும் இருப்பதால் 'பலிசடுகுடு' என்று மாறி வந்திருக்கலாம்' என்கிறார்.' 'பலிஞ்சடுகுடு' என்ற சொல் மூச்சை அடக்குவதற்காகப் பயன்படுத்தும் **சொல்லாகும்**. இரண்டு பிரிவுகளாக பிரிந்து ஊறு விளையாடுவர்ஒரு பக்கத்தின்றது பாடிப்போகும் அப்பக்கத்திலுள்ளதொட்டுவிட்டுக கோட்டைத்தாண்டு விதாடப் பட்டகள் விளையாட்டிலிருந்து வெளியேற் விடவேண்டும். இவ் விளையாட்டு இன்றும் ராமபுதங்களில் இரவிலும் பாஸ்லூம் பெறுவதுண்டு தமிழினம். தமி காக்க விழைவோர் இவ்விளையாட்டித்து ஊக்கப்படுத்து வளரச் செய்யவேண்டும்.

**3. பதினைந்தாம் புலி**

இக்கட்ட விளையாட்டினைப் 'பதினைந்தாம் புலி என்றும் 'ஆடு புலி ஆட்டம்' என்றும் கூறுவர். இருவர் பங்குகொள்ளும் இவ்வாட்டத்தில் ஒருவர் (ஆது. ாக ஒருப்பலா) பதினைந்து காய்களையும் மற்றொருவா (புலியாக மிருப்பவர்) மூன்று காய்களையும் வைத்து விளையாடுவர். அடாகவிருப்பா காய்களை வைத்துக்கொண்டேயிருக்க, புலியாக இருப்பவர் காய்களை நகர்த்திக் கொண்டேயிருப்பார், ஒரு காழ் லக்குமிடத்திலிருந்து ஒருபுள்ளிதாளி காய் இல்லாவிட்டால், அக்காயை 'வெட்டலாய்! புலியின் காய்களை நகர்த்தமுடியாத அளவிற்குக் காய்களை சுவத்துவிட்டால், ஆடாகயிருப்பவர் வெத்தி பெத்தவராவர். காய்களைப் பார்த்து அடைபடாகம் தப்பித்து எதிரியின் காய்களை வெட்டிமுடித்து

விட்டால், புலியாகயிருப் பவர் வெற்றி பெற்றவராவார். வேலையில்லாத காலத்து ஈராமத்துப் பெரியவர்கள் பொது இடங்களில் இன்றும் இவ் விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

**4. தாயம்**

மகளிர் விளையாடும் இவ்விளையாட்டினைத் 'தாயம்' என்றும், விளையாடுவதற்கு வரையப்படும் கட்டத்தினைத் 'தாயக்கட்டம்' என்றும், உருட்டும் பகடையைத் 'தாயக்கட்டை' என்றும் கூறுவர் சோளிகள் முதலியவற்றை வைத்து விளையாடுவர். நான்கு கட்டத் தாயம், எட்டுக் கட்டத்தாயம், பத்துக் கட்டத்தாயம் எனப் பலவகையுண்டு. குறைந்தது இருவர் இவ் விளையாட்டில் பங்கு கொள்வர்.

**5. பல்லாங்குழி**

'பல்லாங்குழி' என்பதனைத் தமிழ்ப் பேரகராதி பதினான்கு +குழி என்றும், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பண்ணை +குழி என்றும், எஸ். நவராஜ் **செல்லையா** 'பல்-அம்-குழி என்றும் இ.பாலசுப்பிரமணியம், 'பால்-ஆடும் குழி' என்றும் பிந்த்து விளக்க முயன்றுள்ளார்கள்' பண்ணை என்பதற்கு 'நிலம்' அன்ற பொருளும் உண்டு நிலத்தில் குழிகள் தோண்டி ஆடிய விளையாட்டு என்பதால் 'பண்ணைக்குழி' என்பது 'நிலம்' என்ற பொருளும் உண்டு நிலத்தில் குழிகள் தோண்டி ஆடிய விளையாட்டு என்பதால் 'பண்ணைக்குழி' என்பது 'பண்ணாங்குழி' எனத் திரிந்து இன்று 'பல்லாங்குழி' என வழங்கப் படுகிறது. இன்றுகூட தமிழகத்திலும் ஆப்ரிக்காவிலும் குழிகளைத் தோண்டி, இவ்விளையாட்டு விளையாடுவதால் இப்பெயர் பொருந்தும் என்றே தோன்றுகிறது. நிலத்தில் குழிகள் தோண்டிப் பல்லாங்குழி அடுவது வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே கிராமங்களில் நடைபெற்று வருகின்றது.

'பல்லாங்குழியை' மலையாளத்தில் 'பல்லாங்குழி' என்றும், தெலுங்கில் 'ஓமன் கூடது' என்றும், கன்னடத்தில் 'சென்னமனே' என்றும், துளுமொழியில் 'ஜோடுபொகா', 'அரசாட்டம்' சென்னே ஆட்டம், என்றும் பஞ்சாபி மொழியில் 'குட்கா போய்யா' என்றும், ஒரியா மொழியில் 'கஞ்குடி' என்றும் வழங்குகின்றனர்.

ஆப்பிரிக்க நீக்ரோ மக்களின் தேசிய விளையாட்டு என மானிடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். சூடான், கென்யா உகண்டா, தான்சானியா, ரொடீஷியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் இவ்விளையாட்டு விளையாடப்படுகின்றது.

எகிப்து பிரமிடுகளிலும் பல்லாங்குழி செதுக்கப்பட்டுள்ளது. ௌௌவென்ய் பாத் எனும் மானிடவியல் அறிஞர் மத்திய ஆப்பிரிக்காவில் தோன்றி, அரபு வியாபாரிகளால் மற்ற இடங் களுக்கும் பரவியிருக்கும் எனக் கருதுகிறார், வெஸ்ட் இண்டீஸ், டச்சு சுயானாவில் வாழும் பழங்குடிகள் இரவில் இவ்விளை யாட்டை விளையாடுவதில்லை. இவ்விளையாட்டை மரணச் சடங்கோடு இணைத்துப் பார்க்கின்றனர். பிணத்தைத் திருப்திப் படுத்த பிணத்தின் முன் ஆடுகிறார்கள். அடியார்க்கு நல்லார் உரையில் மட்டும் இவ்விளையாட்டு பற்றிய குறிப்பு காணப்படு கிறது. இவ்விளையாட்டை நன்கு ஆராயின் இது தமிழரின் விளையாட்டா? அல்லது மற்றவர்களிடமிருந்து பெறப்பட்டதா? என்பது தெரிய வரும்.

**6. தட்டாங்கல்**

கல்லை மேலே தூக்கிப்போட்டு அது கீழேவந்து விழுவதற்கு முன்பாக கையால் தரையில் தட்டிக் கல்லைப் பிடிக்கும் விளையாட்டைத் தட்டாங்கல் விளையாட்டு என்பர். இலக்கியங் களில் காணப்படும் கழங்காடுதலுக்கும் இதற்கும் தொடர்பு உண்டு என்பர்.

**7. கண்ணாமூச்சி**

சிறுவர் சிறுமியர் இணைந்து கண்ணை மூடிக்கொண்டு விளையாடும் விளையாட்டிற்குக் 'கண்ணாமூச்சி' என்று பெயர். ஓடி ஒளிந்திருப்பவர்களைக் கண்டு பிடித்து விளையாடும். விளையாட்டாகும்.

**8. நொண்டி விளையாட்டு**

ஒரு காலினைப் பயன்படுத்தி ஆகும்ஆட்டம் நொண்டி விலையாட்டாகும். ஒருவர் தொண்டியடித்துக் கொண்டு. மற்றவர்களைத் தொட்டு விளையாடும் விளையாட்டாகும்.

**9. கிட்டிப்புள்**

இது சிறுவர்கள் விளையாடும் விளையாட்டாகும். நீளக் குச்சி, கிட்டி என இரண்டு வைத்திருப்பர் நிலத்தில் சிறிது பள்ளம் தோண்டி அவற்றில் கிட்டியை வைத்து நீளக்குச்சியினால் அடிப்பர் எதிரே உள்ளவன் அதனைப் பிடித்துவிட்டால், அடித்தவன் காயாகிவிடுகிறான். இவ்வாறு இருவர் மாறிமாறி விளையாடுவர்,

**10. பம்பரம்**

பம்பரம் எனும் விளையாட்டுப் பொருளைக் கொண்டு ஆடும் ஆட்டத்திற்குப் 'பம்பர ஆட்டம்' என்று பெயர். வட்டமிட்டு அதனுள் ஒரு பம்பரத்தை வைத்து அதனை

வெளியேற்றுவர். வெளியேற்றியவுடன் அனைவரும் சாட்டை யால் பம்பரத்தைச் சுற்றிக் கையால் எடுக்க வேண்டும். யார் எடுக்கவில்லையோ அவனது பம்பரத்தை வட்டத்தில் வைக்க வேண்டும்.

**11. குண்டு விளையாட்டு**

சிறுவர்கள் விளையாடும் இவ் விளையாட்டினைக் 'குண்டு விளையாட்டு என்றும் 'கோலி விளையாட்டு' என்றும் கூறுவர். நிலத்தில் குழி தோண்டி அதனை நோக்கிக் குண்டை அடித்து அதில் விழச் செய்ய வேண்டும். கிராமத்துச் சிறுவர்களிடையே இவ்விளையாட்டினைக் காணலாம்.

**12. ஒத்தையா ? இரட்டையா ? விளையாட்டு**

கிராமங்களில் புளியங்கொட்டை, முத்து அல்லதுஅவரையைக் கையில் வைத்து மறைத்து விளையாடும்

விளையாட்டை 'ஒத்தையா' இரட்டையா? என்பர். கையில் மறைத்துக் கொண்டு ஒத்தையா, இரட்டையா என்பார். ஒத்தை என்று கூறின், கையிலுள்ளதைக் கணக்கிட்டு ஒற்றைப்படை எண் வரின் கூறியவர்க்குக் கொடுக்க வேண்டும். இரட்டைப்படை எண்ணாகவரின் ஒத்தை என்று கூறியவர் அவ்வளவு முத்துக்களை யும் கொடுக்கவேண்டும்.

**13. பட்டம் விடுதல்**

கிராமங்களில் மட்டுமின்றி நகரங்களிலும் காற்றுக் காலத்தில் பட்டம் விடுவது சிறுவர்களுக்குப் பொழுதுபோக்கான விளையாட்டாகும்.

**14. கரகர வண்டி**

சிறுமியர்கள் பலர் நின்று கொண்டு சுற்றிக்கொண்டே யிருப்பர். யார் கடைசிவரை சுற்றுகின்றார்களோ அவரே வென்றவராவர். 'கரகரவண்டி காமாட்சி வண்டி' எனப்பாடிக் கொண்டே ஆடுவர்.

**15. கிளித் தட்டு**

தட்டுக்கு ஒருவராக நிற்க, ஒருவன் கிளியாக நடுக் கோட்டிலும் ஊடுகோட்டிலும் ஓடுவான். எதிர்தரப்பினர் உள்ளே இறங்கி, கடைசித் தட்டுக்குப் போக முயற்சிப்பர். முத்தட்டுப் பாய்ந்தவன் தட்டுக்குள் நுழைந்துவிட்டால் பழம்; எதிர்த் தரப்பினர் கிளியை மறிப்பர். மற்றவர்கள் ஒரு தட்டு விட்டு மற்ற தட்டுப் போகும்போது எதிரியைத் தொடலாம்.

**16. கிந்தான் அல்லது ஐந்தாங் கிந்தான்**

இவ்விளையாட்டில் நான்குபேர் விளையாடலாம். எதிர் தரப்பிலும் நான்கு பேர். ஓட்டாஞ் சல்லியை ஒவ்வொரு கட்டத்திலும் போட்டு அதை மிதித்து வெளியே தள்ளிக் காலால் மிதிக்கவேண்டும். ஐந்து கட்டத்திலும் போட்டு இவ்வாறே செய்ய வேண்டும். ஐந்து கட்டம் முடிந்த பிறகு 'ஒண்ணாம் போட்டு மண்டாசலம்' என முதல் கட்டத்தில் போட்டு விளையாட வேண்டும். ஐந்தாவது கட்டத்திற்கு வெளியே போட்டு ''மண்டாசலம்' எனக் கூறி அதையும் வெளியே தள்ளி மிதிக்க வேண்டும். கோட்டில் மிதித்துவிட்டாலும் ஓட்டாஞ்சல்லி மாறி விழுந்தாலும் 'சப்பை' என்பர். பூவா கொடையா எனக்கேட்டு எதிர்ப்பு பூ என்று சொன்னால், ஐந்தாவது கட்டத்திற்கு வெளியே குனிந்து நின்று கவுக்குள்ளாக ஐந்து ஒன்று தவிர மற்ற கட்டத்திற்குள் விழச்செய்யவேண்டும். கொடை என்று சொன்னால் தலைக்குமேலே ஓட்டாஞ் சல்லியை ஐந்து, ஒண்ணு தவிர மற்ற சுட்டத்தில் விழச்செய்ய வேண்டும். அப்படி விழுந்தால், அந்த விழுந்த கட்டம் மட்டும் 'பழம்'. இரண்டு, மூன்று, நான்கு கட்டங்கள் முடிந்தபின்பு ஒரு பழம். அடுத்து ஒண்ணு, ஐந்தாவது கட்டத்தில் போடலாம். அவ்வளவு 'பழம்' ஏறிவிட்டால், ஜெயித்துவிட்டதாகக் கருதப்படும்.

**17.ஆயிரம் கிந்தான்**

எல்லையிலிருந்து ஓட்டாஞ் சல்லியை ஏதாவதொரு கட்டத்தில் போடவேண்டும். போட்ட இடத்திலிருந்து நொண்டி வந்து நூறாம் கட்டத்தில் நொண்டியடித்து 200,300 என வரிசையாக ஓட்டாஞ்சல்லி இருக்கின்ற கட்டத்தில் மிதிக்க வேண்டும். ஓட்டாஞ்சல்லியை எத்தி வெளியேற்றவேண்டும். வெளியேறிய ஓட்டாஞ்சல்லியை நொண்டியடித்து மிதித்து எல்லையில் மிதிக்கவேண்டும். 1000 போட்டால்தான் பழம். ஒவ்வொரு ஆயிரத்திற்கும் ஒரு பழம். கோட்டில் விழுந்தாலோ கோட்டில் மிதித்தாலோ 'சப்பை': இப்படியே மாறி மாறி விளையாடுவர்.

**18. கள்ளன்-போலீஸ் விளையாட்டு**

சிறுவர்களில் ஒருவள் படுத்துத் தூங்குவது போல் நடிப்பாள், இரண்டு சிறுவர்கள் இவனிடம் திருடுவது போல் தடித்து ஓடி ஒளிந்து கொள்வர். படுத்தவன் போலீஸ் போன்று நடிக்கும் பையனிடம் முறையிடுவான். போலீஸ் போன்று நடிப்பவன் விளையாட்டு, அவர்களைத் தேடமுயற்சிப்பான். இதுதான் கிராமங்களில்

பெரியவர்கள் திருடர்களின் வீரசாகசங்களையும் திறமையையும் அறிவையும் பற்றிக் கதை கதையாகக் கூறுவர். விளையாட்டாகும். அதன் அடிப்படையில் எழுந்த

**19. கால் தாண்டி**

இவ்விளையாட்டைப் 'பச்சைக் குதிரை' என்றும் கூறுவர். நீட்டி உட்கார்ந்து கால்மேல் கால் வைப்பான். பின் கால் காலை மேல் விரல் வைப்பான். பின் இரண்டு விரல் வைப்பான். பின்பு குளிவான். மற்றவர்கள் அவனைத் தாண்டுவார்கள். அவன் மீது படாமல் தாண்டவேண்டும். பட்டுவிட்டால் அவன் குனிய வேண்டும்.

**20.உருண்டை திரண்டை விளையாட்டு**

இவ்விளையாட்டில் ஒருவன் குனிந்து கொள்வான். அவன் முதுகின்மீது மற்ற பையன்கள் ஒருவன் கைமீது ஒருவன் வைத்துக் கொள்வான். தலைவனாயிருப்பவன் யாரிடமாவது ஒருவனிடம் துரும்பு கொடுப்பான். பின்பு அனைவரும் 'உருண்டை திரண்டை உள்ளங்கை பிரண்டை' எனப் பாடிக் கொண்டே கையைத் தேய்ப்பர். குனிந்தவன் யாரிடம் துரும்பு உள்ளது எனக்கூறி விட்டால் அவன் குனியவேண்டும். இவ்வாறு மாறிமாறி விளையாடுவர்.

**21. மாட்டுக்கால் திரி விளையாட்டு**

இரண்டு பிரிவாகப் பிரிந்து கொண்டு பத்துபாக இடை வெளியில் எதிர் எதிராகக் கால் நீட்டி உட்கார்ந்து கொள்வர். ஓரணித்தலைவன் ஏதாவது ஒரு மச்சத்தை (திரியை). அமர்ந்திருக்கும் ஏதாவதொரு சிறுவன் பின்னால் வைப்பான். கையைப் பின்னால் வைத்திருப்பான். எதிரணித் தலைவன் யார் கையில் திரி உள்ளது எனக் கூறவேண்டும். சரியாகக் கூறிவிட்டால் அவனது அணியிலிருந்து ஒரு பையன் இரு காலையும் ஒன்று சேர்த்து வைத்து குதித்து நடுவில் உட்காருவான். இரு அணிகளைச் சேர்ந்த ஜோடிகள் ஒன்று சேரும்போது கல்யான மாகிவிட்டது என்று கூற, அவர்கள் ஆட்டத்திலிருந்து எழுந்து கொள்வார்கள். இது தொடர்ந்து தடைபெறும்.

**22. சைக்கின் விளையாட்டு**

இரண்டு பையன்கள் நின்றுகொண்டு கைகளைக் கோத்துக் கொள்வர். மூன்றாவது பையன் கைகோத்திருப்பவன் மீ அமர்ந்து கொள்வான். அமர்ந்த பையன் சைக்கின் ஓட்டுவது போன்று காலை ஆட்டுவான். ஒரு எல்லைக்குப் போக வேண்டும் எல்லைக்குப் போனவுடன் மாறி மாறி 'உட்காருபவர்' முடிக செய்யப்படும்.

**23. கல்லெடுக்கும் விளையாட்டு**

ஒரு வட்டத்தில் ஒரு கல் இருக்கும். எத்தனைபே வேண்டுமானாலும் பங்கு பெறலாம் (இரட்டை எண்ணாகயிருங் வேண்டும்). ஒவ்வொரு பக்கத்தில் உள்ளவருக்கும் எண்கள் உண்டு விளையாட்டுத் தலைவன் ஒன்று கூறினால், ஒரு எண பக்கத்திலுள்ள அதே எண் உள்ளவன் கல்லை எடுக்கவிடாமல் தடுப்பான். கல்லை எடுத்துவிட்டால் தோற்றவன் பக்கத்தி லுள்ளவன் ஜெயித்தவன் பக்கம் போய் நிற்கவேண்டும். இதே போன்று ஒரே பக்கத்திலுள்ள நான்கு பேரும் கல்லை எடுத்துவிட்டால் அவர்கள் வெற்றி பெற்றவர்களாவர்.

**24.சூடி சுப்பி**

மூன்று பையன்கள் உட்கார்ந்திருக்க, அவர்கள் பக்கத்தில் இருவர் நிற்பர். நிற்பவர் ஒருவரை ஒருவர் விரட்டிப் பிடிக்க வேண்டும். அவர்கள் இருவரும் மூன்று பையன்களைச் சுற்றிச் சுற்றி வருவர். பிடித்து விடுவான் எனத் தெரிந்தால் உட்கார்ந்தவனை எழுப்பிவிட்டு அவன் உட்கார்ந்து கொள்வாள். இவ்விளையாட்டில் சிறுவர்களுக்கு நல்ல உடற்பயிற்சி ஏற்பாடுகிறது.

**25. வட்டத்திரி**

பிள்ளைகள் வட்டமாக உட்கார்ந்துகொள்வர். ஒருவன் திரியை கையில் வைத்துக் கொண்டு அவர்களைச் சுற்றிச் சுற்றி வருவான். 'குலை குலையாய் முந்திரிக்காய்' என்பான். மற்றவர்கள் 'நிறைய நிறைய கொண்டு வா' என்பர். திரியை யாரேனும் ஒருவருக்குப் பின்னால் போட்டுவிட்டுச் சுற்றிச் சுற்றி வருவான் திரியை எடுத்தவன் இவனைப் போல் சுற்றி வருவான். திரியை எடுக்காவிட்டால், திரி யாருக்குப் பின் உள்ளதோ அவனைத் திரியால் அடிப்பான்.

**26. எலியும் பூனையும்**

எலியாக இருப்பவன் வட்டத்தினுள்ளேயும் பூனையாக இருப்பவன் வட்டத்திற்கு வெளியேயும் இருப்பான். பூனையாக வெளியே சுற்றிக்கொண்டிருப்பவன் உள்ளே நுழைய முயற்சிப்பான். பூனை உள்ளே வந்து விட்டால், எலி வெளியே சென்று விடும். பூனையாகயிருப்பவன் எலியைத் தொட்டு விட்டால் விளையாட்டு முடிந்து விடும். இவ்வாறு மீண்டும் மீண்டும் விளையாடுவர்.

**27. ஆடு-ஓநாய் விளையாட்டு**

சிறுவர்கள் வரிசையாக ஒருவர் இடுப்பினை ஒருவர் பிடித்துக்கொண்டு நிற்பர். ஒருவன் மட்டும் சுற்றிச்சுற்றி வருவான். 'என் ஆட்டைக் காணோமே?" என நிற்பவர் கூறுவர். வரிசையிலிருந்து பிரிந்து நிற்பவனைத் தொடுவான். பின்பு தொடப்பட்டவன் சுற்றி வரவேண்டும். வரிசையாக நிற்பவர்களை ஆடுகளாகவும் சுற்றி வருபவனை ஓநாயாகவும் கருதுவதால், இவ் விளையாட்டிற்கு ஆடு-ஓநாய் ஆட்டம் எனப் பெயர் வந்தது.

**28.நிலாப்பூச்சி**

நிலாக் காலங்களில் விளையாடும் விளையாட்டாகும். சிறுவனோ சிறுமியோ பிடித்து வருவாள். அவள் நிலா வெளிச் சத்தில் நின்று கொள்வாள். மற்றவர்கள் நிழலில் நின்று கொள்வர். வெளிச்சத்திற்கு வந்தால் தொடுவர். வெளிச்சத்திலுள்ள நிழலைத் தொட்டாலும் தொடுபட்டவன் பிடித்து வர வேண்டும்.

**29. பூசணிக்காய் விளயாட்டு**

சிறுமியர்கள் விளையாடும் விளையாட்டு. அமர்ந்த ஒருவர் இடுப்பை மற்றொருவர் பிடித்துக் கொள்வர், தரையில் முதலில் இருக்கும் சிறுமி தோட்டக்காரன். கடைசியில் இருக்கும் சிறுமி பூசணிக்காய். ஒரு சிறுமி இராஜாவாகவும் மற்றொரு சிறுமி சேவகனாகவும் நடிப்பர். இராஜா சேவகனிடம் தோட்டக் காரனிடம் கூறிப் 'பூசணிக்காய் வாங்கி வாட் என்பர். தோட்டக்காரன் இப்பொழுதுதான் விதை நட்டிருக்கிறோம் என்பான். இராஜா 'அதை வாங்கிட்டு வா' என்பார். இப்பத்தான் இலை விட்டிருக்கு' என்பான் தோட்டக்காரன். 'அதையும் வாங்கி வா' என்பார். பூசணிச்செடியின் வளர்ச்சி முறையாகக் கூறப்படும். கடைசியில் காயாக உள்ளது என்பர். 'தண்ணீர் விட்டு வேலி அடைத்துப் பூசணிக்காய் பிடிங்கிக் கொண்டு போ' என்பான் தோட்டக்காரன். சேவகன் பிடுங்கப் போகும்போது உட்கார்ந் திருக்கும் பிள்ளைகள் நாய்போல் குரைப்பர்.

சேவகனின் காலைக் கிள்ளும். சேவகன் தேன் கடித்து விட்டது என்பான். கடைசியிலிருக்கும் பூசணிக்காயைப் பிடுங்கிக கொண்டு செல்வாள். இராஜா 'இது அழுகி இருக்கு வேறொரு பூசணிக்காய் பிடுங்கி வா' என்பார். 'எரு போட்டுத் தேங்காய் உடைத்துப் பிடுங்கிப் போ' என்பான், இப்படி இராஜா எல்லாக்

காய்களையும் பிடுங்கிக் கொண்டு வரச்சொன்னார். கடைசி பூசணிதான் நல்ல பூசணி என்று எல்லாப் பூசணிக்காவையும் பிடுங்கிக் கொண்டு வந்து விடுவார்.

அரசன் குடிமக்களிடம் எப்படி வசூலித்தான் என்பதையும். குடிமகன் எவ்வளவோ பதில் கூறியும் மறுக்க முடியவில்லை என்பதையும் இவ்விளையாட்டு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

**30. ஒருபத்தி இருப்பத்தி விளையாட்டு**

சிறுமியர்கள் வட்டமாய் அமர்ந்து கைகளைத் தரையில் வைத்துக் கொள்வர். தலைவியாக உள்ளவள் ஒவ்வொரு கையையும் தொட்டு, கீழ்க்கண்டவாறு பாட்டுப்பாடுவான்.

'ஒருபத்தி இருப்பத்தி ஓரிய மங்கலம் செப்பு செவந்திமாடு கண்ணு வார வேளெ மஞ்சத்தண்ணி கரைக்கிற நேரம் புட்டுகிட்டு அவிக்கிற நேரம் பூமாதேவி கையெடு

உங்கள் ஐயா பெயரென்ன? எனக் கேட்பாள். முருக்கந்தண்டு எனப் பதில் வரும்.

'முருக்கந்தண்டு தின்னவரே முள்ளிச்சாறு குடிச்சவரே தார்தார் வாழைக்காய் தமுர்குத்தி வாழைக்காய் பூப்பூ மண்டலம், பூமாதேவி கையெடு' என ஒவ்வொரு கையின் மீதும் தனது விரலை வைத்து வருவாள். 'பூமாதேவி கையெடு' என்ற வரி யார் மீது வருகிறதோ, அவன் தனது கையை மலர்த்திக் கொள்வாள். தலைவி மீண்டும் பாட்டுப் பாடுவாள். மலர்த்திய கையின்மீது 'பூமாதேவி கையெடு' என்ற தொடர் வரும்போது அவள் கையை எடுத்துக்கொள்ளலாம். இப்படி இரு கைகளையும் எடுத்துக் கொண்டவள் விடுதலை பெற்றவளாகிறாள். ஒவ்வொருவரும் விலகிய பின்பு கடைசிப் பெண்ணிடம் 'பானம் வேணுமா? பூமி வேணுமா? எனக் கேட்பாள். அவள் கூறும் பதிலிலிருந்து பாட்டைத் தொடர்வாள்.

**வட்டாரச் சொற்கள்**

மொழியானது மனிதன் வாழுமிடம், தட்பவெப்பநிலை, அன்றாட வாழ்க்கை ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. இயற்கைச் சூழல், போக்குவரத்துக் காரணமாக, ஒரே மொழி பேசும் குழுவினரிடையே மொழியை ஒலிப்பதில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனால் ஒரு மொழியிலிருந்து கிளை மொழிகள் தோன்றுகின்றன. இத்தகைய கிளை மொழிகள் வட்டார வழக்கு என்று

அழைக்கப்படுகின்றன. சங்க காலத்திலேயே வட்டார வழக்கு இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. பன்றி நாடு, குட்ட நாடு, குடநாடு, அருவா வடதலை நாடு என்று செந்தமிழ்சேர் பன்னிருநிலம் என்ற நாட்டுப் பிரிவினையானது வட்டார அடிப்படையில் நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் பின்னர் உரையாசிரியர்கள் ஒரு உயிரினம் அல்லது ஒரு பொருளைக் குறிப்பிடும் பெயரானது நாட்டினுக்கு நாடு வேறுபடுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர். இன்று தமிழ்நாட்டினை வட்டார வழக்கு மொழி அடிப்படையில் ஐந்து பிரிவுகளாக மொழியியலாளர் பிரிக்கின்றனர். இவ்வாறு பிரிக்கப்படும் பிரிவினை நுட்பமாக ஆராய்ந்தால், ஒவ்வொரு பிரிவினுக்குள்ளும் குறைந்தபட்சம் மூன்று பிரிவுகள் இருப்பதனைக் கண்டறிய முடியும். நெல்லை வழக்குத் தமிழுடன் குமரி மாவட்டத் தமிழ் வேறுபடுகிறது. குமரி மாவட்டத் தமிழுடன் நாஞ்சில் நாட்டுத் தமிழ் வேறுபடுகிறது. இவ்வாறு பல்வேறு வட்டார வழக்குகள் நிரம்பிய தமிழகத்தினைக் காணமுடிகின்றது. எழுத்து வழக்கென்னும்போது தமிழகமெங்கும் பொதுத் தமிழே வழக்கிலுள்ளது. பேச்சு வழக்கு வட்டாரந்தோறும் மாறுபடும் நிலையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் தனிப்பட்ட சொற்களஞ்சியத்தினைத் தொகுக்க முடியும். இது தவிர, கரிசல் வட்டார வழக்குச் சொற்கள், கொங்கு வட்டாரச் சொற்கள், செட்டிநாட்டு வழக்குச் சொற்கள், நாஞ்சில் நாட்டுச் சொற்கள் என்று ஏதோ ஒரு அடையாளத்தினை முன்னிறுத்தி, ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியை வட்டாரமாக அடையாளப்படுத்துவது சொற்கள் சார்ந்தது ஆகும். இத்தகைய வட்டாரங்களில் புழங்கும் வட்டார வழக்குச் சொற்கள் தொகுக்கப்பட்டு, தனி நூலாக அண்மையில் வெளியாகியுள்ளன. இவை போன்ற நூல்களும் கள ஆய்வின் மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும் சேகரிக்கப்படும் சொற்களும் சொல் மூலங்களாக விளங்குகின்றன.

**சமய வழக்குச் சொற்கள்**

சமய அடிப்படையிலும் தமிழானது தனித்த அடையாளத்துடன் வழக்கிலுள்ளது. ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்க்கப்பட்ட கிறிஸ்தவ வேத மறையான விவிலிய காணப்படும் சமஸ்கிருதம் தழுவிய சொற்கள், இன்றும் கிறிஸ்தவர்களிடையே வழக்கிலுள்ளன. கிறிஸ்தவர்கள் வழிபாட்டுக் கூட்டங்களிலும் ஜெபக் கூட்டங்களிலும் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் அவர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அவர்கள் இறைவனிடம் அருள்

வேண்டி மன்றாடும் பல சொற்கள் இன்று பொதுத் தமிழில் வழக்கிறந்து விட்டன. என்றாலும் அத்தகைய சொற்களுக்கு நிகரான புதிய சொற்களை வழிபாட்டில் பயன்படுத்த அவர்கள் தயாராக இல்லை. விவிலியத்தில் உள்ள சொற்கள் புனிதமாக்கப்பட்டு விட்டன.

**தொழில் வழக்குச் சொற்கள்**

ஒருவர் செய்கின்ற தொழில் காரணமாக அவர் தொழில் செய்யும் வட்டாரத்தில் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவது இயல்பாகும். அடிப்படைத் தொழில் நுட்பம் சார்ந்து கைவேலைக்கு முக்கியத்துவம் தரப்படும் மரவேலை, சிற்ப வேலை, இரும்பு வேலை, கொத்து வேலை போன்ற வேலை செய்திடும் தொழிலாளர்கள் தாங்கள் புழங்கிடும் கருவிகள், தொழில்நுட்பம் சார்ந்த வேலையினுக்குத் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்துகின்றனர். உழவர்கள், மீனவர்கள், உப்பளத் தொழிலாளர்கள், கோயில் அர்ச்சகர்கள் போன்றோரும் தொழில் அடிப்படையில் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். புதிய சொற்கள் உருவாக்கிட வேண்டும்போது, ஏற்கனவே தொழிலாளர்கள் கைவினைஞர்கள் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துவது ஏற்புடையது. ஏனெனில் இத்தகைய சொற்கள் ஏற்கனவே தமிழில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் மட்டும் வழக்கிலிருந்தவை என்பதனால், அவற்றைப் பொதுத் தமிழில் கொண்டு வரும்போது விரைவில் பரவலான ஏற்பு கிடைத்து விடும்.

Screw driver என்ற கருவிக்குத் தமிழில் துறை வல்லுநரால் புரி முடுக்கான் என்ற கலைச்சொல் உருவாக்கப்பட்டது. ஆனால் மரவேலை செய்யும் கைவினைஞர்கள் அதனைத் திருப்பு உளி என்று குறிப்பிட்டு வருகின்றனர். இந்நிலையில் ஒப்பிட்டு ஆராய்கையில் திருப்பு உளி என்ற சொல் பொருத்தமானது என்ற முடிவுக்கு வரலாம்.

பிற வழக்குச் சொற்கள்

மங்கலம் அல்லாதவற்றை மங்கலமான சொற்களால் குறிப்பிடுவது மங்கல வழக்கு என இலக்கணம் குறிப்பிடுகிறது. அவையில் சொல்லத்தகாத சொற்களை மறைத்து வேறு சொற்களால் நாகரிகமாகக் கூறுதல் இடக்கரடக்கல் எனப்படும். ஒவ்வொரு குழுவில் உள்ளோரும் யாதேனும் ஒரு பொருளினது சொற்குறியை மறைத்து வேறு சொற்குறியால் குறிப்பது குழூஉக்குறி எனப்படும்.

மங்கல வழக்கு, இடக்கரடக்கல், குழூஉக்குறி ஆகிய மூன்று வழக்குகளிலும் சொற்கள் வேறு தளத்தில் புழங்குவதனைக் காணலாம். இத்தகைய சொற்கள் ஒரு வகையில் சொற்களஞ்சியமாக விளங்குகின்றன.

**நாட்டுப்புற மருத்துவம்**

ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. அதனைச் சமூக நிறுவனம் என்றே கூறலாம். நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்கமுடியாதன ஆகும். நாட்டுப்புற மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்பா இவை 'Folk medicine, Ethno Medicine, 'Popular medicine', 'Popalar health culture Ethnoiatry' 'Ethnoiatrics' எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன. தமிழகக் கிராமப் புறங்களில் நாட்டு வைத்தியம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம் என்றெல்லாம் கூறுவர். மிகப் பழமையான மருத்துவ முறை என்று ஆயுர்வேத மருத்துவ முறையைக் குறிப்பிடுவர். நாட்டுப்புற மருத்துவம் அதர்வனவேத காலத்திலேயே நடை முறையில் இருந்தது. அறிவியல் நாகரிக, இயந்திர வளர்ச்சி பெற்ற இக்காலத்திலும் கூட, கிராமப் புறங்களில் நாட்டுப்புற மருத்துவ முறை வழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற மருத்துவ முறை பற்றி இந்திய நாட்டில் விரிந்தளவு ஆய்வு மேற்கொள்ளப் படவில்லை. பழங்குடிகளை ஆராய்ந்த மேலைநாட்டு மானிடவியலறிஞர்கள் நாட்டுப்புற மருத்துவம் பற்றிச் சில குறிப்புக்களை எழுதியுள்ளனர். கிராமப்புற மக்களின் பண்பாட்டோடும் பழக்கவழக்கத்தோடும் சமூக அமைப்போடும் பின்னிப் பிணைந்துள்ளது. அவர்களது நம்பிக்கைக்கேற்ப நவீன மருத்துவ முறைகளையும் மேற் கொள் கின்றனர். பழங்குடி மக்களிடையேயும் நாட்டுப்புற மக்களிடையே யும் இன்றும் நாட்டுப்புற மருத்துவம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நாட்டுப்புறப் பாடல்களில் பல அரிய மருந்துமுறைகள் பாலில் பெருமளவில் அடங்கியுள்ளன. மருத்துவப் புலமை என்னும் மத்தினால் வெண்ணெய்போல் கடைந்தால் வெண்ணெய் திரள்வதுபோல் பிணி தீர்க்கும் மருத்துவ முறைகள் வெளிப்படும், என சு. வேங்கடேசன் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மரியட் (Marriott, 1955) அவர்கள் மருத்துவ நம்பிக்கை கொண்ட கிராமப்புறமக்கள் நாட்டுப்புற மருத்துவத்தைக் கையாளுகின்றனர் எனக் கூறுகிறார். லெஸ்லே ஏ. ஒயிட் (Leslie A. Whitc, 1967) அவர்கள் சிறுபாரம்பரிய மரபில் காணப்படும் மருத்துவ முறைகள் பெரும்பாரம்பரிய மரபில் ஒன்றாவது, இணைவது மாற்றம் பெறுவது குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்கிறார். எல்லின் (Elwin, 1955) அவர்கள் பழங்குடி மக்களிடையே காணப்படும் மந்திர சமய மருத்துவ முறைகளையும் ஆராயவேண்டும் என்கிறார். பிரேசர் (Frazer முதற்கொண்டு மாலினோவ்ஸ்கி (Malinowski) வரை மந்திரச் சடங்குபற்றி கூறியவற்றை நன்கு ஆராயின், நாட்டுப்புற மருத்துவத்தின் கொள்ளலாம். முன்னைய வடிவத்தை நன்கு அறிந்து கொள்ளலாம்.

**மந்திர சமய மருத்துவம் (Magic - religions medicine)**

மனித இன வரலாற்றை நோக்கின் நோய்கள் ஏற்பட சில காரணங்கள் இருந்தன என ஆரம்பகாலத்தில் மனிதன் நினைத்தான். காணிக்காரன் போன்ற பழங்குடி. சமுதாயத்தில் பிலாத்தி என்பவனே பூசாரியாகவும் மந்திரவாதியாகவும் வைத்தியனாகவும் உள்ளான். அவனுக்கு அச்சமுதாயத்தில் மிக்க மதிப்பு உண்டு. இன்றும் நோயினைத் தீர்ப்பதற்கு மருத்துவரை நாடுவதற்குப் பதிலாகப் பூசாரியையும் மந்திரவாதியையும் நாடுவதைப் பழங்குடிச் சமுதாயத்திலும் நாட்டுப்புறச் சமுதாயத்திலும் காணலாம். ஆவியுலகக் கோட்பாட்டின் அடிப்படையில் மந்திரம் தோன்றியது. மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றலொன்று உலகைக் கட்டுப்படுத்துகிறது. அவ்வாற்றலை வழிபாட்டின் மூலமும் பலியிடுதல் மூலமும் ஈர்க்கமுடியும் என்ற நம்பிக்கை அடிப்படையிலமைந்த செயல்பாடு கொண்ட அமைப்பைச் சமயம் என்கிறோம். வழிபாட்டையும் பலியிடுதலை யும் அடிப்படையாகக் கொண்டது சமயமென்றும் பாவனைச் செயல்களையும் கட்டளையிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது மந்திரம் என்றும் வரையறுக்கலாம். மந்திரம் சமயத்துடன் இணைந்து சில சடங்கு வடிவில் தோற்றமளித்தது. இதனை மந்திர சமயச்சடங்குகள் (Magic-religious rites) என்பர். மந்திரம் நிகழ்த்தப்படுவதை அடிப்படையாகக் கொண்டு தூய மந்திரம் (Whitemagic) தீய மந்திரம் (Blackmagic) உற்பத்தி மந்திரம் (Protective magic)பாது காப்பு அழிப்பு மந்திரம் (Productive- Destructive magic) 67607 வகைப்படுத்துவர். மந்திரசமயச்

சடங்குகளில் மந்திரித்தல், பேயோட்டுதல் முதலியவற்றைத் தூய மந்திரமாகவும் செய்வினை செய்தல் முதலியவற்றைத் தீய மந்திரமாகவும் கருதுவர். ஒன்றாக இணைந்த பொருட்களை வேறாகப் பிரிப்பினும் ஒன்றாகவே இருக்கும். ஒன்றின் தாக்கம் மற்றவற்றில் இருந்து கொண்டே யிருக்கும் என்ற தொத்து மந்திரம் (Contagious magic) இச்சடங்குகளில் ஆராயப்பட வேண்டிய தொன்றாகும். இதன் அடிப்படையிலும் மந்திரசமயச் சடங்குகளை ஆராயலாம். பாவனை மந்திரம் ஒத்த விதி அடிப்படையிலும் தொத்து மந்திரம் தொடர்புவிதி அடிப்படையிலும் அமைந்துள்ளன. குழந்தையற்ற பெண்கள் மரத்தொட்டிலைக் கிராம தேவதைக்கு நேர்த்திக் கடனாக அளித்தல் பாவனை மந்திரத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். ஈன்ற பசுவின் நஞ்சுக் கொடியை ஆலமரத்தில் கட்டும் வழக்கம் தொத்து மந்திரத்தின் அடிப்படையாகும்.

**இயற்கை நாட்டுப்புற மருத்துவம்** (Natural Folk medicine)

மூலிகை, தாதுபோன்ற பொருட்கள் மருந்துகள் முதலிய வற்றை இயற்கை நாட்டுப்புற மருத்துவம் என்பர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உட்கொள்ளும் மருந்து, வெளிப்பூச்சு மருந்து என இருவகையுண்டு. இயற்கை நாட்டுப்புற மருத்துவம் மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே உள்ளது. பண்டைய மனிதனின் மருத்துவ அறிவை நம்பிக்கையை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1.மஞ்சள் காமாலை நோய்

அ) கீழாநெல்லி, மஞ்சள் கரிசலாங்கண்ணியை அரைத்துமோரில் கலந்து ஒன்பது நாள் சாப்பிடவேண்டும்.உப்பில்லாத பால்சோறு சாப்பிடவேண்டும்.

ஆ) சித்திரமூலம் மஞ்சள் காமாலையைக் குணமாக்கும்.

இ) கரிசலாங்கண்ணி இலையைக் கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து நான்குநாள் சாப்பிடவேண்டும். உப்பு, புளி நீக்கவேண்டும்.

ஈ) அதிமதுரம், சங்கம் வேர், கீழாநெல்லி ஆகியவற்றை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் காயவைத்து மாத்திரை களாக்கிச் சாப்பிட வேண்டும்.

2.நெஞ்சு வலி

மான் கொம்பினை வெண்கடுகு பெருங்காயம் முதலியவற்றைச் சேர்த்து அரைத்து மார்பில் பூச வலி குறையும்.

3. மண்டை வலி

மாதுளம் பூ லேகியம், சுக்கு முதலியவற்றைச் சேர்த்து அரைத்து உண்ணவும்.

4. தொண்டை வலி

தூதுளம்பூ லேகியம் சப்பிடவும்

5.உடம்பு வலி

ஏலம், இஞ்சிச்சாறு சாப்பிடவும்

6.பல்வலி

அ) நாயுருவியால் பல் விளக்கவும்

ஆ) கருவப்பட்டைத்தூள், படிகாரபஸ்பம், கல்நார் பஸ்பம் முதலியவற்றைச் சேர்த்துப் பல் துலக்கி வந்தால், பல்லசைவு, பல்வலி, பல்லில் இரத்தம் ஒழுகல் முதலியவற்றைக் குணப் படுத்தும்.

7.வயிற்றுவலி

சுக்குப்பொடி ஒரு சிட்டிகை சிலாத்து பற்பம் சேர்த்து சுடு தண்ணீரில் சாப்பிடவும்.

8.பக்கவலி

முட்காவேளை என்னும் மூலிகையைச் சுக்குடன் கலந்து இடித்துக் காய்ச்சி காலையில் உண்டுவர வேண்டும்.

9.கண்வலி

வேக வைத்த பருப்பையும் தேங்காய் தூவலையும் உண்டு வந்தால் கண்வலி நீங்கும்.

10.மார்புவலி

தாமரைப்பூ ரோஜா மொட்டு, பூமிச்சக்கரைக் கிழங்கு, கோரைக்கிழங்கு. செம்பரத்தம்பூ, கொத்தமல்லி, அரைக்கீரை விதை சம எடை எடுத்து அரைப்படி தண்ணீரில் வற்றக் காய்ச்சி பால், மிளகுத்தூள், சித்தரத்தத்தோடு கோழிமுட்டை வெள்ளைக் கரு கலந்து காலை, மாலை கொடுக்கவும். பத்தியம் வாரசாரம் நீக்கவும்.

11.மூட்டுவலி

சதக்குப்பி மூலிகையைப் பயன்படுத்தவும்.

12.கீல்வலி

நீர்ப்பிரமி மூலிகையைப் பயன்படுத்தவும்.

13.இடுப்புவலி

செந்தட்டிவேரை அரைத்துப் பூச, இடுப்புவலி நீங்கும்.

14.மூலநோய்

அ) துத்தி இலை, மஞ்சள்தூள் ஆறுகிராம் நல்லெண்ணயில் குழைத்து ஆசனத்தில் தடவவும்.

ஆ) கருணைக் கிழங்கு லேகியம் சாப்பிடவும்

இ) நாகபஸ்பம் கொடுத்தால் மூல வியாதி வேரோடு போகும்.

ஈ) துத்தி இலை, மஞ்சள் தூளை நல்லெண்ணெயில் விட்டுக் கலந்து ஆசனத்தில் தடவவும்.

உள்மூலம்

குப்பைமேனிச் செடியை இடித்துப் பசு வெண்ணெயில் குழைத்துச் சாப்பிடவும்.

இரத்த மூலம்

அ) சுருள் பட்டையைத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

ஆ) வெள்ளைப்பூண்டை அதிமதுரப் பாலிலிட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சாப்பிடவும். பத்தியம் புளிப்பு உப்பு நீக்கவும்.

முளைமூலம்

பொரிகாரம், வெங்காரம், சவக்காரம் சமமாய் எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துத் தடவவும்.

15. வயிற்றுப் பூச்சி

அ) வேப்ப இலைக் கொழுந்துடன் சிறிது வெல்லம் கலந்து கொடுக்கவும்.

ஆ) துளசியையும் மிளகையும் சேர்த்துக் காய்ச்சிக் குடிக்கவும்

16.1. வயிற்று உளைச்சல்

வெள்ளிலையையும் உப்பையும் **சேர்த்துக்** கொடுக்கவும்.

16.2. வயிற்றுப் போக்கு

மாதுளம் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, மாவிலைக் கொழுந்து இம்மூன்றையும் அரைத்துக் கொடுக்கவும்.

16.3. வயிற்று உப்புசம்

சீரகமும் வெல்லமும் கலந்து சாப்பிடவும்

17.ஆஸ்த்மா

அ) முசுமுசுக்கை இலையைப் பறித்து மிளகைக்கலந்து சாப்பிடவும்.

ஆ) ஆடாதொடை இலையுடன் மிளகு, திப்பிலி கூட்டி கியாழம் பண்ணி உண்ணலாம்.

இ) நஞ்சறுப்பான் மூலிகையும் சேர்த்துக் கொள்ளலாம்.

18. கண்ணில் நீர் வழிதல்

அகத்திக் கீரைச்சாறு, குளிர் தாமரை இலைச் சாறு, பொன்னாங்கண்ணி சீந்தில் இலைச் சாறு எடுத்து 200 மில்லி மிளகு நற்சீரகம், சந்தனத்தூள். வெற்றிவேர், கதம்பப்பூ இவைகளை வகைக்கு ஐந்து கிராம் இடித்துத் தூளாக்கிச் சாறுடன் கலந்து விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், பசுநெய்வகைக்கு அரைக்கால் படி வீதம் ஒன்று சேர்த்து வற்றக் காய்ச்சித் துணியில் வடிகட்டி வாரத்திற்கு இரண்டுமுறை தலைக்குத் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும்.

19. மேக நோய்

செருப்படை (மூலிகை) அரைத்துக் கொடுக்கவும்.

20. மலச் சிக்கல்

காலையில் வெறும் வயிற்றில் குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும்.

21.மூச்சடைப்பு

பூமி சக்கரைக் கிழங்கு இடித்துத் தேனில் கலந்து சாப்பிடவும்.

22. காது குத்தல்

அ) வெள்ளைப் பூண்டை வேகவைத்து அதன் சாற்றை காதில் விடவும்.

ஆ) ஓதிய இலை, ஆமணக்கு இலை, முருங்கை ஜை முள்ளங்கி இலை அடுப்பில் காயவைத்து அத சாற்றைக் காதில் விடவும்.

22.2. காதிரைச்சல்

முசுமுசக்கைத் தைலத்தைக் காதில் விடவும்.

22.3. காதுவலி

சவுரிப்பழம் உண்ணவும்.

23.அக்கி

ஊமத்தம் இவையை அரைத்து எருமை வெண்ணெய்குழைத்துப் பூசவும்.

24. காக்கா வலிப்பு

தும்பை இலையைக் கசக்கி மூக்கில் பத்து துனி விடவும்.

25. சளி

துளசிச் சாறு கொடுக்கவும்.

26. நகச்சுற்று

அ) எலுமிச்சம் பழத்தில் துளையிட்டு அதனை விரலி நுழைத்துச் சில நாட்கள் வைத்து வர், நகச்சுற்று நீங்கும்

ஆ) பேதி உப்புடன் கிளிசரைன் குழைத்து விரல்கள் மீது பூசவும்.

இ) வெற்றிலைக் கொழுந்தில் சுண்ணாம்பு தடவி அரைத்து விரல்கள் மேல் வைத்துக் கட்டவும்,

27. தொண்டை கம்மல்

சுக்குநீர் சாப்பிடவும்.

28. கை, கால் வீக்கம்

அ) கணை எண்ணெய் பூசவும்.

ஆ) காட்டாமணக்கு இலையை ஆமணக் கெண்ணெய் ஊற்றி வதக்கிக் கட்டினால் வீக்கம் குறையும்.

29.பித்தம்

வேலம்பட்டையை அரைத்துக் கொடுக்கவும்.

30.சீதபேதி

மாதுளம் பிஞ்சு அரைத்துப் பாலில் கொடுக்கவும்.

31.மார்புச்சளி

முசுமுசுக்கை இலையை அரைத்துக் கொடுக்கவும்.

32. நாக்குப்பூச்சி

குப்பைமேனி வேரை நசுக்கி நன்கு காய்ச்சிக் குடிக்கவும்

33. தீராத கபம், சுவாச காசநோய் ஆடாதோடா மூலிகையைப் பயன்படுத்தவும்.

34. வயிற்றுக்கிருமி, வாயு வீக்கம்

குப்பைமேனியைக் கசக்கிச் சாறு குடிக்கவும்,

35. மேல்நோய், வாய்ப்புண் &ருடல் புண்

வல்லாரை மூலிகையைப் பயன்படுத்தவும்

36. கபம்

துளசிச் சாற்றைக் குடிக்கவும்

37. இரத்த சோகை

பசலைக் கீரை உண்ணவும்

38. புளியேப்பம், கபரோகங்கள்

தூதுவளை மூலிகைச் சாறு உண்ணவும்

39. கொடிய விஷஜுரம்

நொச்சி இலைச்சாற்றை உண்ணவும்

40. கால் நீரேற்றம்

அ) ஆத்து அரளியை அரைத்துக் கொடுக்கவும்.

ஆ) வெடி உப்பு சீனிக்காரம் அரைத்துப் பூசவும்

41.விஷக்கடி

சீமையகத்தியைக் கொடுக்கக் குணமாகும்.

42. பாம்புக்கடி

அ)நீலி, வசம்பு அரைத்துக் கொடுக்க விஷம் நீங்கும்

ஆ) நல்ல பாம்பு கடித்தால், கோழியைப் பிடித்து அதன் ஆசனவாயைப் பாம்பு கடித்த இடத்தில் வைத்தால் அதன் விஷத்தை உறிஞ்சி அது இறந்து விடும் பாம்பு கடிபட்ட மனிதர் பிழைத்துக் கொள்வார்.

43. நாய்க்கடி

எருக்கம் வேரைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் கலந்து ஆறுநாள் பூச நாய்க்கடி விஷம் தீரும்.

44. தேள்கடி

மூட்டுக்குக் கீழே கயிற்றால் சுட்டுப்போடவேண்டும். கொட்டிய இடத்தில் வெங்காயத் துண்டுகளைத் தேய்க்க வேண்டும். நாயுருவி வேரைப் பச்சையாக மெல்ல, அதன் விஷம் இறங்கும்.

45. நட்டுவாக்காலி கடி

அ) தேங்காய்ப் பாலைப் பருகச் செய்யவேண்டும்.

57. அழற்சி, பேதி, வேர்கபம்

ஆதொண்டை மூலிகையைப் பயன்படுத்தவும்.

58. மேகநோய் மேகக்கிரந்தி சங்கக்குப்பி மூலிகையைப் பயன்படுத்தவும்.

சங்குகுப்பி மூலிகையைப் பயன்படுத்தவும்

59. வீக்கம், விக்கல் மூலக்கடுப்பு.

சதக்குப்பி மூலிகையைப் பயன்படுத்தவும்

60.மூச்சடைப்பு கபம்

சஞ்சில் மூலிகைச் சாறு குடிக்கவும்.

61. சூதக வாய்வு

சடாமாஞ்சில் பயன்படுத்தவும்.

62. நாக்குப்பூச்சி

சதுரக் கள்ளியைப் பயன்படுத்தவும்.

63.இருமல், வயிற்றுப்புண்

பனை வெல்லத்தைப் பயன்படுத்தவும்.

64. தாது விருத்தி

பாதாம்பருப்பை நீரில் நனையவைத்துத் தோலை நீக்கிப் பாலில் கலந்து ஒரு மண்டலம் (48 நாள்) உண்ணவும்.

65.விந்துகட்ட

சாதிக்காய் பயன்படுத்தவும்.

66. விந்து உற்பத்தி

சாமை அரிசி பயன்படுத்தவும்.

67 சுக்ல நஷ்டம்

தூதுவளை உணவில் சேர்க்கவும்.

68.புண் ஆற

சித்திரமூலம் பயன்படுத்தவும்

69. மண்ணீரல் நோய்

சீந்தில் கொடியைப் பயன்படுத்தவும்

70.கண்கட்டி

திருநீற்றுப் பச்சிலைச் சாற்றில் சங்கை நன்றாக உரைத்துப்

பூசவும்.

71.தீராத கபம்

ஆடாதோடை இலையைச் சுருக்காக்கிக் குடித்தால் இந் நோய் நீங்கும்.

நாட்டுப்புற வைத்திய முறை

இம்மருத்துவ முறையில் 'பத்தியம் இருத்தல்' மிக முக்கிய மானது. உப்பில்லாத பத்தியம் கண்டிப்பாக அனுசரிக்க வேண்டும் நோயின் தன்மையையொட்டி உணவில் சிலவற்றை உண்ணவும் சிலவற்றை நீக்கவும் வேண்டும்.

**நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகள்**

1. அம்மைநோய் தெய்வக்குறை என எண்னி மாரியம்மனுக்கு வழிபாடும் நேர்த்திக்கடனும் பண்ணுகின்றனர்.

2. அமாவாசை நாளில் நோயின் குணம் தீவிரமாகும். என எண்ணுகின்றனர்.

3. கை கால் சுளுக்கிக் கொண்டால் இரட்டையர் தடவினால் போகும் என மக்கள் நம்புகின்றனர்.

4.நெற்றியில் கை வைத்தல்' நெஞ்சில் கை வைத்தல் போன்றவற்றை மருத்துவரை நாடிவரும் ஆட்கள் செய்தால் நோய் குணமாவது கஷ்டம் வைத்தியர்கள் நம்புகின்றனர். என

5. சனிக்கிழமை ரேவதி நட்சத்திரத்துடன் எமகண்டமும் கூடியிருந்தால், மருந்து கொடுக்கக்கூடாது என வைத்தியர்கள் நம்புகின்றனர்.

**நாட்டுப்புற மருத்துவமும் பழமொழிகளும்**

1. வைத்தியன் தகப்பனாரைப் போன்றவன்.

2. வைத்தியன் பாராத நோய் திருமா?

3. வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சிநேகிதம்.

4. வைத்தியத்தில் இரணவைத்தியமும் வயதில் இளமை யும் நன்மை தகும்.

5. வைத்தியனுக்கு அஞ்ச வேண்டும். வம்பனுக்கும் அஞ்ச வேண்டும்.

6. வைத்தியனுக்குத் தன் மருந்து பலிக்காது.

7. வைத்தியனும் கைவிட்டால் ஆண்டவனே கதி.

8. வைத்தியன் பெரிதோ, மருந்து பெரிதோ?

9. ஆயிரம் வேரைக் கொன்றவன்

10. மண்டை உள்ளவரை சளி இருக்கும்.

11. சுக்கு இல்லாத கஷாயம் உண்டோ?

12. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

13. வியாதிக்கு மருந்து உண்டு, விதிக்கு மருந்துண்டா?

14. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்.

15. சாகிற வரையில் விடான் வைத்தியன். செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.

16. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.

17. கறந்த பாலைக் காய்ச்சாமல் குடித்தால் காசநோய் தானாக வரும்.

18. உள்ளங்கை புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?

19. தூங்கினவன் சாகிறதில்லை; வீங்கினவன் பிழைக்கிறதில்லை.

20. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

21. நோய் கொண்டார் பேய் கொண்டார்.

22. நோய்க்கிடங் கொடேல்.

23. நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.

24. எட்டியும் எருக்கும் நஞ்சு போக்கும்: இஞ்சி சுரம் போக்கும்

25. கண்ணுக்குத் தெளிவு பொன்னாங்கண்ணி,

26 . பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.

27. நொறுங்கத் தின்றால் நூறு வயது

28.மூடி வைத்த புண் ஆறாது.

29. உண்டபின் ஒருமைல் நட

30. நாள் இரண்டு (மலம் கழித்தல்). வாரம் இரண்டு (எண்ணெய் குளியல் மாதம் இரண்டு போகம்)

வருஷம் இரண்டு (குடலைத் தூய்மை செய்தல்)

31. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்.

32. விடாச் சுரத்துக்கு விஷ்ணு கரந்தை.

33.தூதுளை ஆயுளை விருத்தி செய்யும்.

34. விஷத்தைக் குடித்தவன் மிளகுநீர் குடிக்க வேண்டும்.

35. வேப்பெண்ணெய் ஆபத்துக்கு உதவும்.

36. வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும்.

37. கொடிமுள்ளி நாறும் கபத்தை அறுக்கும்

38. ஆற்று நீர் வாதம் போக்கும் அருவி நீர் இரண்டும் போக்கும் சோற்று நீர் பித்தம் போக்கும்

39. வலியவனுக்கு இடம் கொடுத்தால் வயிற்று வலிக்கு இடம் கொடுத்தது போல

40. சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை:சுப்பிரமணியருக்கு மிஞ்சிய சாமியும் இல்லை,

நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புற மருத்துவத்தைப் பற்றிச் சில நம்பிக்கைகள் வைத்துள்ளனர். அந்த நம்பிக்கை அவர்களது வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்தவை. பழமை என்று அவற்றை ஒதுக்கக் கூடாது. இன்றும் மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கு நாட்டுப்புற மருத்துவமே சிறந்தது என்று நம்புகின்றனர். எனவே, நாட்டுப்புற மருத்துவம் பற்றி அறிவியல் முறையில் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்வது நம் கடனாகும்.

**பண்பாடு**

பண்பாடு (கலாச்சாரம் அல்லது கலாசாரம்) என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயற்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது. பண்பாடு ஒரு பலக்கியக் கருப்பொருள். அதற்குப் பல நிலைகளில் வரையறை உண்டு. ஒரு நிலையில் பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவு பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில் சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கும்.

பொதுவாக இது மனிதரின் நடவடிக்கைகளைக் குறிக்கிறது எனலாம். இது, பண்பாட்டின் வெவ்வேறு வரைவிலக்கணங்கள், மனிதச் செயல்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கான அல்லது அவற்றை மதிப்பிடுவதற்குரிய அளபுருக்களுக்கான வெவ்வேறு கோட்பாடுகளைப் பிரதிபலிக்கிறது எனலாம். 1952-இல் அல்பிரட் எல். குறோபெர் என்பாரும் கிளைட் குளுக்ஹோனும் பண்பாடு என்பதற்குக் கூறப்படும் 200க்கு மேற்பட்ட வரைவிலக்கணங்களைத் தாங்கள் எழுதிய 'பண்பாடு: எண்ணக் கருக்களும் வரைவிலக்கணங்களும், ஒரு விமர்சன மீள்பார்வை' (Culture: A Critical Review of Concepts and Definitions) என்னும் நூலில் பட்டியலிட்டுள்ளார்கள்.

பண்பாடானது இசை, இலக்கியம், வாழ்க்கைமுறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைப்படம் போன்ற மனிதருடைய கலைப் பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றது. சில அறிஞர்கள் பண்பாட்டை நுகர்வு, நுகர்

பொருட்கள் என்பவற்றின் அடிப்படையில் அடையாளம் காண்கின்றனர். ஆனால், மானிடவியலாளர், பண்பாடு என்பது நுகர் பொருள்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவனவும், அவற்றுக்குப் பொருள் கொடுப்பனவுமான வழிமுறைகளையும்; அப்பொருள்களும், வழிமுறைகளும் பொதிந்துள்ள சமூகத் தொடர்புகள், செயல்முறைகள் என்பவற்றையும் குறிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பண்பாடு என்பது கலை, அறிவியல், நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது.

தமிழ் மக்களின் பண்பாடு ஆகும். தமிழ் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது. தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புற கலை, தற்காப்பு கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள், அறிவியலை வெளிப்படுத்தப்படுகிறது மற்றும் தொழில்நுட்பம். தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

**ஊர்ப்பெயர் ஆய்வு**

ஊர்ப்பெயர் ஆய்வு மேலை நாட்டில் வளர்ந்த அளவிற்கு இந்திய நாட்டில் வளரவில்லை. மேலைநாட்டில் தனித்துறை யாகவே வளர்ந்துள்ளது. இந்திய நாட்டில் இவ்வாய்வு இன்னும் குழந்தை நிலையிலேயே உள்ளது'. தொல்காப்பியத்தில் ஊர்ப் பெயராய்வுக்கு வித்தும் வேரும் இருப்பினும், அண்மைக் காலத்தில்தான் அறிவியல் அடிப்படையில் ஊர்ப்பெயராய்வு தொடங்கப்பட்டுள்ளது எனலாம். மனித இன வரலாற்றை நோக்கின் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் சென்று வாழத்தலைப்பட்ட காலத்தே ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஒரு ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்தப் பெயர் இன்றியமையாததாகிறது. மனித இனம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னரே இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட் பெயரையும் நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும்

வேறுபடுத்திக்காட்ட இடம்பெயர்களையும் அமைத்துக்கொண்டனர். ஆதிகால மக்கள் இடப்பெயர்களை இடவரலாற்றின் காலப் பெட்டகம் (time capsule of local history) எனலாம். ஊர்ப் பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று (fossil remains of the past) மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்றன. ஒரு நாட்டின் பழங்கால வாழ்வையும் வரலாற்றையும் அறிவதற்கு இலக்கியம், கல்வெட்டு, நாணயம் போன்று பெயராய்வும் துணை செய்யும். மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பலபெயர் இருப்பினும் 'ஊர்' என்ற பெயர் அனைத்தையும் சுட்டும் நிலையில் உள்ளது.

இந்தியாவில் இடப்பெயர்கள் பற்றிய ஆய்வு இன்னும் ஆரம்ப நிலையில் உள்ளது. அதற்கு உரிய தீவிர கவனம் பெறப்படவில்லை. இந்திய இடப்பெயர்கள் பற்றிய சில கட்டுரைகள் பிராந்திய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. இடப்பெயர்கள் பற்றிய ஆய்வு இன்னும் தேவையற்றது.

**ஊசிப்பெயர் ஆய்வு**

மனித இனம் ஒரு குழுவாக சமூகமாக ஆங்காங்கே ஏதேனும் ஒரு பகுதியில் சிறிதுகாலம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னர்தான் இடப் பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆ-பெயரையும் ஒரு இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப் பெயரை வழங்கியது போன்று நிலத்தின ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திச் காட்ட இடப்பெயர்களை அமைத்துக் கொண்டனர் ஆதிகால மக்கள்,'

பெயர் மொழியியலில் ஒரு கூறாக இருப்பினும் சில சிறப்பியல்புகளால் பெயராய்வு (Onomastics) என்ற தனித துறையாக வளர்ந்துள்ளது. பெயராய்வை மக்கட் பெயராய்வு (Anthroponymy) இடப்பெயராய்வு (Thoponymy) என இரண்டாகப் பிரிப்பர்.

பெயராய்வு (Onomastics)

மக்கட் பெயர் ஆய்வு (Anthroponym)

இடப்பெயர் ஆய்வு அல்லது ஊர்ப்பெயர் ஆய்வு (Toponym Study)

ஊர்ப்பெயராய்வு வரலாறு. தொல்பொருளாய்வு, பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழியியல் முதலிய துறைகளோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது.

மேலை நாட்டாரே இத்துறையிலும் முன்னோடியாக உள்ளனர்.ஊர்ப்பெயராய்வின் முக்கியத்துவத்தை முதலில் உணர்த்தியவர் கோல் பிரைடு வில்ஹெல்ம் லெய்ப்னிஷ் (1768) ஆவர். பின்னர் மொழியியல் வளர்ச்சி இடப்பெயராய்வுக்கு உந்து சக்தியாக இருந்தது. எக்லி (Egli) இடப் பெயராய்வில் முன்னோடியாவார். அடால்பர்க், ஸ்மித், ஸ்டீவர்ட் (Stewart) கார்டினர் (Gardiner) உட்லி (utley), டிரையே (Draye) போன்றோர்கள் இத்துறை ஆய்வில் முன்னோடியாவர். அமெரிக்கப் பெயராய்வுகள் கழகம் 'Names' (1952) என்ற இதழை நடத்தி வருகிறது. 1945 இல் International committee of onomastic Science அமைக்கப் பட்டது.

இந்தியாவில் ஸ்தல புராணங்கள் இடப்பெயர் ஆய்வுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. காசிநாத் இலட்சுமணன் மாத்தூர், மிதிலா சரண் பாண்டோ, சங்காலியா (Sankalia) சேஷாத்திரி, வாசுதேவ், அகர்வாலா, விஸ்வநாத ரெட்டி, எஸ்கே சட்டர்ஜி, ஹயவதன ராவ், அச்சுதமேனன், கே. எம். ஜார்ஜ். ஹிரேமட், ஜவரே கௌடா தியாகராசு நாராயணராவ் போன்றோர்கள் இடப்பெயரில் ஆய்வைத் துவக்கிய முன்னோடி களாவர். 1979 இல் இந்திய இடப்பெயர் ஆய்வுக்கழகம் தொடங்கப் பெற்று (StudiesinIndian Place names) என்ற ஆய்விதழையும் நடத்தி வருகின்றது.

தமிழ் இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் ஸ்தல புராண ஆசிரியர்கள் இடப் பெயராய்வுக்குத் தோற்றுவாய் செய்துள்ளனர். இராமலிங்க வள்ளலார் (1874) இவ்வாய்வினைத் தொடக்கம் செய்தார் எனலாம். டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளையைத் 'தமிழ் ஊர்ப்பெயரின் தந்தை' எனக் கூறலாம். அவருடைய 'தமிழகம் ஊரும் பேரும்' ஊர்ப்பெயர் ஆய்வு பற்றிய அடிப்படை நூலாகும். இத்துறையில் இந்நூல் குறிப் பிடத்தக்கதொன்றாகும். 1300 ஊர்ப்பெயர்களை 100 பகுதிகளாகப் பகுத்து ஆராய்ந்துள்ளார். நாடும் நகரமும் குலமும் கோவும் தேவும் தலமும் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் ஸ்தல புராணங்களும் ஊர்ப்பெயர் பற்றி அறிய உதவுகின்றன. ஞானமுத்துவின் கன்னியாகுமரி மாவட்ட ஊர்ப்பெயராய்வும் நாச்சிமுத்துவின்

கோயம்புத்தூர் மாவட்ட ஊர்ப்பெயராய்வும் மா. நயினார் சுந்தரத்தின் சுசீந்திரம் கல்வெட்டுக்களில் ஊர்ப்பெயராய்வும் த.கோ. பரமசிவத்தின் தஞ்சை மாவட்ட இடப்பெயராய்வும் மணிமாறனின் மதுரை மாவட்ட ஊர்ப்பெயராய்வும் இத்துறை பற்றிய ஆய்வேடுகளாகும். பகவதி ஆளவந்தார், மெய். சந்திரசேகரன், பழ. அண்ணாமலை போன்றோரின் நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கன.

'மனிதப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றிற்கும் தொல் பொருளாய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அப்பங்கு இடப்பெயராய்வுக்கும் உண்டு. என இன்றைய இடப்பெயராய்வாளர்கள் உணர்ந்துள்ளனர்.' 'தொல் பொருளாய்வில் காணப்படாததும் வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப்படுவதுமான மொழியியல் செய்திகளை இடப்பெயர்கள் முழுமையாகத் தருகின்றன எனக்கூறும் வானிரைட் (waniwright) ற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.' பழங்காலத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியை இடப்பெயராய்வு மூலம் அறியலாம். எல்.வி. ராமசாமி அய்யர் பாரசிகப் பகுதியில் திராவிடர் வாழ்ந்தனர். என்பதற்கு ஊர்ப்பெயர்களைச் சுட்டிக் காட்டுவர். ஊர்ப் பெயர்கள் அரசியல் வரலாற்றையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறியவும் இயற்கை நில அமைப்புக்களை அறியவும் பூகோள அமைப்பு அறியவும். சமூகநிலை அறியவும் இடப்பெயராய்வுகள் துணைபுரிகின்றன. ஊர்ப்பெயராய்வை,

1 முழுநிலை ஆய்வு (Comprehensive Survey)

2) சிறிய நிலையிலான ஆய்வு (Small Scale Survey) எனப் பாகுபடுத்தலாம். மேலும் ஊர்ப்பெயராய்வை ஐந்து நிலைகளாக வகுத்துக் கொள்ளலாம்.

3) இடப்பெயர்களைத் திரட்டல் (Collection of Places)

4) சான்றுச் செய்திகளைத் திரட்டல் (Documentation)

5) அடையாளம் காணல் (Identification)

6) விளக்கம் செய்தல் (Interpretation)

7) வெளியிடல் (Publication)

இந்திய இடப்பெயரியலார் இந்தியச் சூழலுக்கேற்பக் கோட் பாடுகளையும் நெறிமுறைகளையும் உருவாக்கவேண்டும். வரலாற்றுப் பெயர் வடிவங்களைக் காண்கிறோம்.

செங்கழுநீர்பட்டு

செங்கல்பட்டு

இராஜராஜபுரம்

இராதாபுரம்

தாராபுரம்

இளங்கோக்குடி

திருமறைக்காடு

அம்பா சமுத்திரம்

வேதாரண்யம்

ஊரில் பேசப்படும் மொழி, சாதி, தொழில் முதலிய விபரங் களும் ஊர்ப்பெயராய்வுக்குத் துணை செய்யும். ஊர்ப்பெயருக்கு

தொல்லியல் துறையில் இல்லாத மற்றும் பொதுவாக வரலாற்றுப் பதிவுகளில் புறக்கணிக்கப்படும் அல்லது சலசலக்கும் வகையிலான முழு அளவிலான மொழியியல் தகவல்களில் இடப் பெயர் வழங்கல்.

மக்கள் தரும் விளக்கத்தையும் (Flok etymology) சேகரிக் வேண்டும். சமய வரலாற்றை அறியவும் (பள்ளி, பாழி, நிரு பெயர்ச்சிகளை (migration) அறியவும் பொருளியல் மாற்றங்களை அறியவும் அரசியல் வரலாற்றை அறியவும், இயற்கை அமைப்பு அறியவும் சமூகவியல் நிலையை ஆராயவும் ஊர்ப் பெயராய்வு பெருந்துணையாக உள்ளது. ஊர்ப் பெயராய்வு வரலாறு சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், மொழியியல போன்ற துறைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. பகர்ப்பும் பெயர்கள் பற்றியும் பல்வேறு இனங்களின் பண்பாடு, வாழ்க்கை நோக்கு முதலியவற்றையும் இடப் பெயராய்வு மூலம் அறியலாம். தமிழ்நாட்டில் தலைவர்கள் பெயர்களாலே மாவட்டங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது (பெரியார். அண்ணா காமராசர், காயிதே மில்லத், பசும்பொன் முத்துராமலிங்க தேவர். எம்.ஜி.இராமச்சந்திரன்) பெருங்கற்காலப் பண்பாட்டை (Magalithic culture) ஊர்ப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. புரம், பட்டி, ஊர், ஏரி, காடு என முடியும் ஊர்ப்பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன. புரம், பட்டி, ஊர், ஏரி, காடு என முடியும் ஊர்ப் பெயர்களைத் தமிழகம் முழுவதும் காணலாம்.

**ஊர்ப்பெயர்களின் அமைப்புமுறை**

ஊர்ப்பெயர்களின் அமைப்புமுறையை நோக்கினால், இரு வேறு கூறுகளைக் கொண்டவையாக அமைந்திருப்பதைக் காணலாம். அவற்றைச் சிறப்புக்கூறு (Specifics) பொதுக்கூறு (generics) என இரண்டாகப் பிரிக்கலாம். ஊர்ப்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயரின் விகுதியாக அல்லது பின்னொட்டாக (Suffix) வேண்டும் அமைந்திருக்கும் கூறு பொதுக் கூறாகும். இக்கூறுகள்தான் முதலில் ஊர்ப்பெயராக அமைந்திருக்க காலப்போக்கில் ஒரே பெயரில் பலஊர்கள் தோன்றும்போது அவற்றை வேறுபடுத்தச் சிறப்புக்கூறுகள் தோன்றலாயின. சிறப்புக் கூறினை முன்னொட்டு (Prefix) என்று கூறலாம். ஊரின் முன்னொட்டாக அமைந்து ஒரு குறிப்பிட்ட ஊரை இனங்கண்டு கொள்ள உதவுகின்றது. பொதுக்கூறு, சிறப்புக் கூறு என்ற இரண்டு கூறுகளைக் கொண்டு ஊர்ப்பெயர்கள் அமைகின்றன. சில ஊர்கள் ஒரே சொல்லாக அமைவதும் உண்டு. இத்தகைய ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்கவேண்டுமென இடப் பெயராய்வாளர்கள் (Toponymists) கருதுகின்றனர். சிறப்புக் கூறுகளை விளக்கப் பெயரடை, ஆட் பெயரடை, பிறவகைப் பெயரடை என்று மூவகையாகப் பகுக்கின்றனர்.

பொதுக்கூறு (ஜெனரிஸ்)

**புரம்**

அழகப்பபுரம்

சுப்பிரமணிய -புரம் சங்கரலிங்க-புரம்

அழகியபாண்டிய-புரம்

திருமலபுரம்

ராதா-புரம்

வரதராஜ-புரம்

வெள்ளையம்மாள்-புரம்

லட்சுமி - புரம்

கைலாச-புரம்

**குளம்**

செட்டி-குளம்

நயினார்-குளம்

புளியங்-குளம்

மேலக் - குளம்

வீரநாராயணன்-குளம்

அல்லிக்-குளம்

அய்யனார்-குளம்

முள்ளிக்-குளம்

புதுக்-குளம்

**பட்டி**

ஆண்டி-பட்டி

பிச்சம்-பட்டி

முல்லையம் பட்டி

கன்னியப்ப பிள்ளை-பட்டி

கொத்த-பட்டி

போடிதாசன்-பட்டி கொண்டமநாயக்கன்-பட்டி

தெப்பம்-பட்டி

சக்கமநாயக்கன்-பட்டி

ஜக்கம்-பட்டி

மடத்துப்-பட்டி

ரெட்டியார்-பட்டி

புதுப்-பட்டி

**ஊர்**

துறை-யூர்

பழ-வூர்

**சிறப்புக் கூறுகள்** (Specifics)

பொதுக் கூறுக்கு முன் அமைவன சிறப்புக் கூறுகளாகும். பொதுக் கூறுகளை வேறுபடுத்த அமையும் சிறப்புக் கூறுகள் பல அடைகளைக் கொண்டது.

சிறப்புக் கூறுகளை விளக்கப் பெயர், ஆட்பெயர் என வகைப் படுத்துவர். விளக்கப் பெயர்கள் நிகழ்ச்சிப் பெயர்கள், உடமைப் பெயர்கள், நினைவுப் பெயர்கள்,

உருவாக்கப் பெயர்கள் எனப் பலவகையாக வகைப்படுத்துவர். சிலர் விளக்கப் பெயர் ஆட்பெயர், பிற என மூவகையாக வகைப்படுத்துவதும் உண்டு. விளக்கப் பெயரில் இயற்கையமைப்பு, செயற்கையமைப்பு என இருவகை உண்டு. ஆட்பெயரில் தனி ஆட்பெயர் தனிஆட்பெயர் +சாதி, சாதி அல்லது குழுப் பெயர்கள் சிறப்புக் கூறுகளாக அமைவதுண்டு.

**இயற்கை அமைப்புக்கள்**

**தாவரங்கள்**

அத்தி

அரசு

ஆவரை

குவளை

தாமரை

தென்னை

பனை

பருத்தி

வாகை

வேம்பு

**விலங்குகள்**

ஆனை

கரடி

கழுகு

சிங்கம்

மந்தி

மயில்

நீர்நிலைகள்

முன்னீர்

வெள்ளம்

ஊத்து

சுயம்

**நில அமைப்புக்கள்**

கரிசல்

காடு

நத்தம்

**பாறை பொட்டல் -**

மலை

மருதம்

**வயல், தோட்டம்**

காடு

சோலை

ஆட் பெயர்கள்

அண்ணாமலை

அருணாசலம்

அய்யனார்

ஆறுமுகம்

உதயமார்த்தாண்டன் .

உமையம்மாள்

காசிநாதன்

ஏகாம்பரம்

குலசேகரன்

சக்கம்மாள்

சாஸ்தா

சுந்தரபாண்டியன்

தங்கம்மாள்

திருமலையப்பன்

முத்துராமலிங்கம்

முத்தம்மாள்

வீரநாராயணன்

வெள்ளையம்மாள்

வெங்கிடாசலம்

லக்ஷ்மி

ராஜகோபால்

வள்ளிநாயகி

வாசுதேவன்

மகராசன்

பெருமான் -

திருவேங்கடநாதன் -

நாராயணன்

பாலகணபதி

மீனாட்சி

ராதா -

ராமலிங்கம் -

**தனி ஆட் பெயர் + சாதி**

மாட-நாடாள்

பெத்த-நாடாள்

சேது-ராயர்

மழவ-ராயர் -

சென்மை-ரெட்டி-

திருமலை-நாயக்கன்

ஏரகாம-நாயக்கன்

சின்னம-நாயக்கள்

**சாதி அல்லது தொழில் பெயர்**

சேர்வைக்காரன் -

உடையார்

வெள்ளாளன்

வடுகச்சி -

கவுண்டன்

கம்மாளன்

சக்கிலியர்

துலுக்கர் -

ரெட்டியார்

தேவர்

பூசரி

மணியகாரன்

பார்ப்பான்

பரதவர்

செட்டி

ஊர்ப் பெயராய்வை நுணுகி ஆராயின் 'புரம்' என்ற பொதுக்கூறு உள்ள ஊர்ப்பெயர்கள் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் காண்கிறோம். 'குளம்'

'மங்கலம்' பொதுக் கூறு உள்ள ஊர்ப்பெயர்கள் நீலகிரி மாவட்டம் தவிர எல்லா மாவட்டத்திலும் காண்கிறோம். 'பட்டி' விகுதியுடைய ஊர்ப் பெயர்கள் மதுரை, இராமநாதபுரத்தில் அதிகமாக உள்ளன. 'விளை' என்ற விகுதியுடைய ஊர்ப்பெயர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் அதிகம் உள்ளன.

ஒவ்வொரு ஊரின் பெயரையும் ஆய்வுக் கண்ணோட்டத் துடன் அணுகவேண்டும். தமிழகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய இத்துறை பெரிதும் பயன்படும்.

**மக்கள் பெயராய்வு**

மனித இன வரலாற்றில் பெயர் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. ஒரு மனிதனை மற்றொரு மனிதனிட மிருந்து வேறுபடுத்திக் காட்டுவது பெயராகும். பெயரைக் குறியீடாக மட்டும் கருதுவதில்லை. அது மனிதனின் ஆளுமை யையும் இயல்புகளையும் காட்டுவனவாக மட்டுமின்றி சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கை, பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. ஒருவனுக்குப் பெயர் சூட்டிய பின்னர்தான் குடும்பத்தில் ஓர் அங்கமாகவும் சமு சமுதாயத்தில் ஒரு உறுப்பினனாகவும் கருதப் படுகிறான். பழங்குடி மக்கள் பெயரை ஆன்மாவாகவே கருதுகின்றனர். பெயர்கள் பழமை மை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் பிரதிபலித்து நிற்கின்றன.

பெயராய்வினை ஆங்கிலத்தில் (Oncomatics) என்பர். இப் பெயராய்வினை இடப் பெயராய்வு (Toponym study) மக்கட் பெயராய்வு (Anthroponym study) என இரண்டாகப் பிரிப்பர்.

பெயராய்வு (ஓனோமேடிக்ஸ்)

இடப் பெயராய்வு (Toponym study)

மக்கட் பெயராய்வு (Anthroponym study)

பெயராய்வின் தோற்றம் தொல்காப்பியத்திலே காணப் பட்டாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் வளர்ச்சி பெறத் தொடங்கியது. டாக்டர் உ.வே. சாமி நாதய்யர்' அவர்கள் சிலப்பதிகார முன்னுரையில் பெயர்களில் மக்கட் பெயர்களை மட்டும் தொகுத்து மக்கட் பெயராய்வுக்குக் வையாபுரிப்பிள்ளை காட்டினார். இவரைத் தொடர்ந்து பேராசிரியவுக்கு அவர்கள் 'சங்க இலக்கியம்' என்ற நூலின் பெயர்களைப் பல்வேறு பிரிவுகளாகம் தா டாக்டர் மொ. அ. துரை

அரங்கனார்' அவர்கள் சிறப்புப் பெயர்கள்' எனும் நூலில் இலக்கியச் சிறப்புப் பெயர்களையும் குடி பற்றிய சிறப்புப் பெயர்களையும் விரிவாக ஆராய்ந்து. இத்துறைக்கு அடித்தளமிட்டார். டாக்டர் வ.சும் அவர்கள் 'தமிழ்ப் புலவர் வரலாற்றுக்க களஞ்சியம் எனும் நூலில் புலவர் பெயர்களை ணிகரவரிசையில் தொகுத்தளித் துள்ளார். டாக்டர் ந. சுப்பிரமணியம்' அவர்கள் 'பண்டைத் தமிழர் பெயரிடும் முறை' எனும் கட்டுரையில் பண்டைத் தமிழர் பெயரிடும் முறையினை விளக்கியுள்ளார். டாக்டர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் பெயர்களை ஆய்வு செய்து, ஆறு பிரிவாக வகைப்படுத்தியுள்ளார். மா. நயினார் அவர்கள் 'பேரும் பெருமையும்' எனும் நூலில் தற்கால மக்கட் பெயர்களைப் பதினெட்டு வகையாக வகைப் படுத்தியுள்ளார். ச. சந்திரபோசு ' அவர்கள் 'தமிழில் பெயராய்வு முறைகளும் மக்கட் பெயராய்வும்' எனும் ஆய்வுக் கட்டுரையில் இலக்கணக்காரர்களும் பெயராய்வும், உரையாசிரியர்களும் பெயராய்வும், வீரமா முனிவரும் பெயராய்வும், மொழியியலும் பெயராய்வும், உ.வே. சாவும் பெயராய்வும் வையாபுரிட பிள்ளையும் பெயராய்வும், துரை அரங்கனாரும் பெயராய்ட மற்றும் தற்கால ஆய்வாளர்களும் பெயராய்வும் எனப் பகுத் ஆராய்ந்துள்ளார். டாக்டர் சு. சக்திவேல் அவர்களின்'' மக்க பெயராய்வு' எனும் நூல் ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

பிறந்த ஊரை வைத்துப் பெயரிடுவதும் உண்டு, காடாம்பூரில் பிறந்தவனைக் 'காடாம்பூரான்' என்பர். 'நயா பைசா' வழக்கில் வந்த ஆண்டில் பிறந்தவனை 'நயா பைசா' என்றழைக்கின்றனர் நிறத்தையொட்டியும் வைக்கின்றனர். உடலமைப்பையொட்டியும் பெயர் வைக்கின்றனர்.

பெயர்களை வைத்துக் கொண்டு எவ்வட்டார்த்தைச் சார்ந்தவர்கள் என்றும் ஓரளவு ஊகிக்கமுடியும்.

சுடலை முத்து இசக்கி திருநெல்வேலி
அகத்தியலிங்கம் சிதம்பரதாணு குமரிமாவட்டம்
மெய்யப்பன் (நாட்டுக்கோட்டைச் செட்டியார்)

புருஷோத்தம ரெட்டி - நாயுடு

இராமானுஜ நாயுடு குஞ்சிதபாதம் பிள்ளை
போஜன் (செட்டியார்)

ஆண்டித் தேவர்

மாயாண்டித் தேவர்

உலகிலுள்ள பெயர்களையெல்லாம் ஆராய்ந்தபோது கீழ்க் கண்டவற்றின் அடிப்படையில் தான் பெயர்களைப் பெரும் பாலும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர் என்பது தெரிய வருகிறது. தமிழக மக்கட் பெயரும் இவற்றின்கண் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடவுள்

முன்னோர்கள்

இறந்த அரசன்/வீரன்

ஞானி

சமயவாதி

மரம்

செடி

கொடி

விலங்கு

பறவை

நதி

மலர்

உடல் உறுப்பு

உடல் உறுப்புக் குறைபாடு

தோற்றம்

பண்பு

சிறப்புப் பட்டப் பெயர் இயற்பெயர் போன்றே வழங்கல்

மகாத்மா (காந்தி) பெரியார் (ஈ.வெ.ரா)

முத்தமிழ்க் காவலர் ஆபே. விசுவநாதனர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார்]"

சொல்லின் செல்வர் (ரா.பி. சேதுப்பிள்ளை)

சிலம்புச் செல்வர் (ம.பொ.சி)

திருக்குறளார் (முனுசாமி) (கருணாநிதி)

கலைஞர் புரட்சித் தலைவர் (எம்.ஜி.ஆர்) புரட்சித் தலைவி (ஜெயலலிதா)

அடிகளார் (குன்றக்குடி அடிகளார்,பங்காரு அடிகளார்)

மக்கட் பெயர்களை முன்னொட்டு (Prefix) பின்னொட்டு (Suffix) என்ற அடிப்படையிலும் ஆராயலாம்."

இராம - என்ற முன்னொட்டை (prefix) அடிப்படையாகக் கொண்டு பல பெயர்கள் உருவாகியிருப்பதைக் காணலாம்.

(அ) இராம -இராம சந்திரன்

இராம தாஸ்

இராம பத்திரன்

இராம சாமி

இராம துரை

இராம அய்யன்

இராம ஜெயம்

இராம கிருஷ்ணன்

இராம குமார்

இராம லிங்கம்

இராம மணி

இராம மூர்த்தி

இராம நாதன்

இராம னுஜம்

இராம சேவின்

இராம சுப்பிரமணியம்

இராம தயாளன்

இராம கோபால்

இராம ரத்தினம்

ஒருவரை மற்றவரினின்றும் வேறுபடுத்திக் காட்டக் குறியீடாகப் பயன்பட்ட பெயர், காலப்போக்கில் சமுதாயத்தில் பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, சடங்கு அடிப்படையில் வளராலாயிற்று பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரவாற்றையும் பண்பாட்டையும் பிரதிபலித்து நிற்கின்றன. பொதுவாகத் தமிழக வரலாறு, தமிழ் மொழி வரலாறு, பண்பாட்டு வரவாறு முதலியவற்றில் தொல்காப்பியத்திலிருந்து இன்றுவரை ஒரு தொடர்ச்சியைக் காண்கிறோம். ஆனால், மக்கட் பெயரில் இத்தொடர்ச்சியைக் காணமுடியவில்லை. அன்று நிவலிய பெயர்கள் இன்று வழக்கில் இல்லை. இதற்குச் சமூகப்பண்பாட்டு அரசியல் மாற்றங்களை காரணமாகும் ஒரு நாட்டின் பண்பாட்டு அரசியல் மாற்றங்களே காரணமாகும் ஒரு நாட்டின் சமயச்சிந்தனை, வழக்கங்கள், நம்பிக்கை, கடவுட் கொள் அரசியல் மாற்றம். சமுதாய மாற்றம் முதலியவற்றை மக்கட் பெயராய்வு

மூலம் அறியலாம். ஊர்ப் பெயராய்வு போன்று மக்கட் பெயராய்வும் வளர வேண்டும். அறிஞர் பெருமக்கள் இத்துறையில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். இத்துறை தமிழகப் பண்பாட்டு வரலாற்றை அறியப் பெரிதும் துணை புரியும்.

**நாட்டுப்புறத் தொழில்நுட்பவியல்**

மனித இன வரலாற்றில் மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளச் சில பொருட்களை உண்டாக்கினான். அவற்றையே காலப்போக்கில் அழகுணர்ச்சி வெளிப்படும் வண்ணமும் தொழில்நுட்பம் வாய்ந்தவையாகவும் உருவாக்கி மகிழ்ந்தான். நாட்டுப்புற மக்களால் இப்பொருட்கள் படைக்கப் பட்டு, பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம். நாட்டுப் புற மக்களின் அறிவுத்திறனையும் எளிமையையும் திறமையையும் அடிகுணர்ச்சியையும் காண்பதோடு அவற்றில் தொழில் நுட்பம் (technology) அமைந்திருப்பதையும் காண்கிறோம். இதனை நாட்டுப்புறத் தொழில்நுட்பம் (Folk Technology) எனலாம். தொழில் நுட்பம் பற்றிய அறிவு மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தேவைப்படுகின்றது. இந்தியாவில் நாட்டுப்புறத் தொழில்நுட்பம் பற்றி முழுமையாக ஆராயப்படவில்லை. கைவினைப் பொருட்கள் பற்றிய ஆய்வு குழந்தை நிலையிலே உள்ளது எனலாம். திறமையால் பல பல்லாயிரம் ஆண்டுக்காலமாகத் தனது பொருட்களை உண்டாக்கினான அப்பொருட்கள் அவனது தொழில் நுட்பத்தைப் பிரதிபலித்து நிற்கின்றன. இயந்திர யுகத்திற்கு முன்னர் தனது நினைவுகளை நிறைவேற்ற தான் அறிந்த தொழில்நுட்பத் திறனால், திறமையால் பல பொருட் களை உருவாக்குதல், மரபு வழியாகப் பல்லாண்டுக் காலம் அவனிடையே வழங்கி வருகின்றது.

நாட்டுப்புறமக்கள் மரபு வழியாகக் கடைப் பிடித்து வரும் முறைகளைக் கையாண்டு பொருட்களைத் தயாரித்தனர். அந்தந்த இடத்திலுள்ள மூலப்பொருட்களைக் கொண்டு தயாரித்தனர். கைவினைப் பொருட்கள் மரபுவழிக் கூறுகளைப் பெற்றிருக் கின்றன. மரபுவழிக் கூறுகளைப் பெற்றிருப்பதோடு கலையம்சம் மிகுந்தனவாகவும் காணப்படுகின்றன. கைவினைப் பொருட்களாக மண் பாண்டம் செய்தல், துணிநெய்தல், தந்த வேலைப்பாடுகள், சங்கு, எலும்பு போன்றவற்றில் உருவம் செதுக்கல், சிலைசெய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கைவினைப் பொருட்களில் மட்டுமின்றி மனித வாழ்வுக்கும் பயன்படுத்தும் செக்கு கலப்பை, மாட்டு முதலியவற்றிலும் நாட்டுப்புற மக்களின் தொழில் நுட்பத்தைத் காணலாம். இப்பொருட்களெல்லாம் நாட்டுப்புற மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கையிலும் முக்கிய பங்கு வகித்தன.

நாட்டுப்புற மக்கள் அன்றாடம் வாழ்க்கையில் பயன் படுத்தும் எண்ணெய் பிழிந்தெடுக்கும் செக்கு போன்றவறறிலுர். தொழில்நுட்பத்திறன் அடங்கியிருப்பதைக் காண்கிறோம். இந்தியாவின் கிழக்கிலுள்ள பெரும்பாலான பழங்குடிகள் இரண்டு கனமான கட்டைகளை எண்ணெய் எடுக்கப் பயன் படுத்துகின்றனர். இரண்டு கனமான கூடைகளை மரக்கட்டை இடையே, வைத்து இறுக்கி எண்ணெயைப் பாத்திரங்களில் சேகரிக்கின்றனர். சீன நாட்டுப்புறங்களிலும் இதேபோன்ற தட்டையான எண்ணெய்ச் செக்குகள் காணப்படுகின்றன. மரக்கட்டைச் செக்கு பீஹாரிலும் ஒரிஸ்ஸாவிலும் பயன்படுத்தப் படுகின்றது. சுழலும் எண்ணெய்ச் செக்குகள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் இருந்தன. இரண்டு மரத்துண்டுகளாலான எண்ணெய்ச் கின்றனர். செக்கில் இரண்டு எருதுகளைப் பயன்படுத்து எண்ணெய்க் கால்வாய்க்குப் பதிலாக மஹாராஷ்டிரத்தில் எண்ணெய்த் துவாரம் உள்ளது. சிறிது மாற்றங்களுடைய செக்கை 'வார்தா கனி' என்றழைக்கின்றனர். இத்தகைய செக்குகளைக் கிராமோதயச் சங்கங்கள் பயன்படுத்து கின்றன. எண்ணெயைப் பிழிந்தெடுக்க இயந்திரங்கள் உள்ள இக்காலக் கட்டத்திலும் கிராமப்புறங்களில் இன்றும் செக்குகள். பயன்படுத்தப்படுவதைக் காண்கிறோம்.

மனித இனம் நாடோடி வாழ்க்கைக்குப் பின் வேளாண்மையை மேற்கொண்டபோதுதான் நிலையான வாழ்க் கையை மேற்கொண்டது என கூறுகின்றனர். மானிடவியல் பேரறிஞர்கள் இக்காலக் கட்டத்தில்தான் பண்பாடும். தோன்றியது. பயிர்செய்யப் பல்வேறு வேளாண்மை முறைகளைப் பயன்படுத்திய மனித இனம், பின்னர் உழுவதற்குக் கலப்பை போன்றவற்றைப் பயன்படுத்தத் தொடங்கியது. மனித இனம் பயன்படுத்திய பல்வேறு வேளாண் முறைகளை இன்றும் பழங்குடி மக்களிடையே காணலாம். மனித இன வரலாற்றில் ஏர் கலப்பை உருவாக்கல் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். உழுவதற்குப் பயன்படுத்தப்படும் கலப்பையை அமைப்பு அடிப் படையில் நான்காக வகைப்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் மனிதனின் தொழில் நுட்ப அறிவு (teachnological knowledge) பெருகப் பெருக, அவன் **உருவாக்கி**ய பொருட்களிலும்

பல மாற்றங்களைச் செய்தான். அக்காலக் கட்டங்களை நோக்க உண்மையிலேயே இதனைக் கண்டு பிடிப்பாகத்தான் கருத வேண்டும். கொழுவைத் தவிர, தலை, உடல், கைப்பிடி, உத்திரம் எனப் பிரிக்கலாம். கொழு பொருத்தப்பட்டுள்ள பாகம் கலப்பையின் தலையாகும்.

'அ' வகைக் கலப்பை

இந்த வகைக் கலப்பையில் உடலும் தலையும் தொடர்ச்சி யாக இணைக்கப்பட்டுக் கிடைமட்டமாக உள்ளன. கைப்பிடி. உத்திரம் கலப்பையின் உடலோடு தனியாக இணைக்கப் பட்டிருக் கின்றன. இந்த வகைக் கலப்பைகளை ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் காணலாம்.

'ஆ' வகைக் கலப்பை

இந்த வகைக் கலப்பையில் உடலும் கைப்பிடியும் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த வகைக் கலப்பை களை இராஜஸ்தான், இமாசலப்பிரதேசம், மேற்கு உத்திரப் பிரதேசம், மேற்கு மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் காணலாம்

'இ' வகைக் கலப்பை

உடலும் தலையும் ஒரே மரத் துண்டினாலானவை. கைப்பிடி பின்பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இவ்வகைக் கலப்பையை இந்தியா முழுவதும் காணலாம். உடலின் பின் பக்கத்தில் கைப்பிடி உள்ளது. உத்திரமானது உடற்பாகத்தில் கைப் பிடியன் கீழாகச் செல்லும், உடலின் உச்சியில் முன்பாகத்தில் கைப்பிடியைக் கொண்ட கலப்பையை ஒரிஸ்ஸாவில் காண்கிறோம். இந்த வகைக் கலப்பையில் கைப்பிடி உடற்பாகத்தில் முன்னால் பொருத்தப்பட்டுள்ளது கேரளாவிலுள்ள கோட்டயத்தில் காணலாம். உடலின் மேலே பின் பக்கத்தில் கைப்பிடியுடன் கூடிய கலப்பையைப் பீஹாரில் காணலாம்.

'ஈ' வகைக் கலப்பை

தலை உடலோடு சாய்வாகப் பொருத்தப்பட்டுள்ளது.கைப்பிடி உடலோடு தொடர்ச்சியாக இணைக்கப்பட்டிருப்பதேஇதில் காணப்படும் வேறுபாடாகும். உத்திரத்தைத் தவிர இதர பகுதிகள் யாவும் ஒரே மரத்துண்டினால் செதுக்கி உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கு வங்காளம், அஸ்ஸாம், பீஹார், திரிபுராபோன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. நாற்கோண வடிவமுள்ளகலப்பையை அஸ்ஸாமில் காணலாம்.

மண்பாண்டம் செய்யும் தொழில் மிக முக்கிய கைவினைத் தொழிலாகக் கருதப்படுகின்றது. மண்பாண்டம் செய்வதை இரண்டாகப் பிரிக்கலாம்: 1. மண்பாண்டம் செய்தல் 2. சுடுமண் பாண்டப் பொருட்கள் (terracolta) செய்தல், மண்பாண்டம் செய்தல் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தோன்றியது என்பர். ஆரம்ப காலக்கட்டத்தில் கையாலே மண்பாண்டங்கள் செய்யப் பட்டன. மண்பாண்டம் செய்யும் சக்கரம் அக்காலக் கட்டத்தில் தோன்றவில்லை. மண்பாண்டம் செய்யும் சக்கரம் புதிய கற்காலத்தில் (Neolithic age) தான் தோன்றியிருக்க வேண்டும். ஆரம்பத்தில் கையால் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கும் சக்கரத்தால் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கும் அதிக வேறுபாடில்லை. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தை நோக்கினும் மண்பாண்டக்கலை சிறந்து விளங்கியுள்ளதைக் காண்கிறோம். மண்பாண்டக்கலை இந்தியா முழுதும் சிறந்து விளங்கியுள்ளது. காலப்போக்கில் அலங்கரிக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கு மிக முக்கியத்துவம் தரப்பட்டது. மக்களின் தேவைக்கேற்ப உற்பத்தியும் பெருகியது. வண்ணங்கள் பூசுவதைப் பெருங்கலையாகக் கொண்டனர். சுடுமண் பொருள்களாலாக்கப் பட்ட மனித உருவங்கள், விலங்கு உருவங்கள், பொம்மைகள் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டன. சமுதாயம் சமூக பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்த காலக்கட்டத்தில் சுடுமண் பொருட்களின் உற்பத்தி பெருகியது எனக் கூறலாம். மண் பாண்டம் செய்தல் மூலம் மனிதனின் கைத்திறனையும் தொழில் நுட்பத்தினையும் அழகுணர்ச்சியையும் ஒருங்கே காணமுடிகிறது.

உலோக சிற்ப வேலைப்பாடு, மர வேலைப்பாடு உலகில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கின்றது. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பல

பொருட்களிலும் அழகுணர்ச்சியையும் தொழில் நுட்பத்தையும் காண்கிறோம். அன்று கண்ட தொழில் நுட்பம் இன்று பல இயந்திர வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. நாட்டுப்புறத் தொழில்நுட்பம் பற்றிய ஆய்வுகள் பெருகின. பண்டைய மனிதன் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தொழில் மதிநுட்பத்தை எவ்வாறு வளர்த்து வந்துள்ளன என்பதையும் இன்றைய அறிவியல் இயந்திர வளர்ச்சிக்கு அது அடிப்படையாக இருந்துள்ளது என்பதையும் உணரலாம்.

**வினாக்கள்**

1. நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் குறித்து விளக்குக.
2. நாட்டுப்புற தொழில் மற்றும் தொழில் கருவிகள் குறித்து விளக்குக.
3. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் பற்றி விவரிக்க.
4. சிறு தெய்வ, பெருந்தெய்வ வழிபாடு பற்றி வரையறுக்க.
5. நாட்டுப்புற விளையாட்டுகளின் சிறப்புகளை ஆராய்க.
6. நாட்டுப்புற மருத்துவம் குறித்து கட்டுரை வரைக.
7. மக்கள் பெயராய்வு, ஊர் பெயராய்வு விளக்குக.
8. நாட்டுப்புறத் தொழில்நுட்பவியலை ஆராய்க.

## அலகு 4

## நாட்டுப்புறக் கலைகள்

**நிகழ்த்துக் கலைகள்**

நிகழ்த்து கலை (performing art) என்பது அரங்கொன்றில் கலைஞர், ஒருவர் அல்லது பலர், தமது முகம், உடல் அல்லது இருப்பு கொண்டு நிகழ்த்துவதற்குரியதான கலை வடிவம் ஆகும். இது ஓவியம், சிலைவடிப்பு, சிற்பம் மற்றும் எழுத்து போன்ற பிற ஊடகங்களில் தமது கலைத்திறமையை வடிப்பதிலிருந்து வேறுபட்டதாகும். இத்தகைய பாகுபாடு ஆங்கில வழக்கில் இருந்து வருகிறது. இது பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாக நிகழ்த்திக் காட்டும் கலைவடிவையே குறிக்கும்.

நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய திறன்களையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலை. கவிதை, இசை, ஆடல், ஓவியம் முதலியன இதனுள் அடங்கும். ஒரு கலைஞனின் நுண்கலை வடிவின் சிறப்புக் கூறுகள் பார்வையாளர்களின் மத்தியில் வெளிப்படுத்தப்படும்போது அது நிகழ்த்து கலையாக வடிவம் கொள்கிறதெனலாம். பல்வேறு நிகழ்த்து கலைகள் நெகிழ்தன்மை கொண்ட கலைகளாக அறியப்படுகின்றன. அரங்கினில் நிகழ்த்தப்படும் கலைவடிவங்கள் இவ்வகையில் அடங்குகின்றன. நடனம் நவீன நடன சகாப்தத்தில் நெகிழ்தன்மை கொண்ட கலையாகவே சில நேரங்களில் குறிப்பிடப்படுகிறது. நிகழ்த்து கலை என்பது கீழ்க்காண்பவைகளை உள்ளடக்கிய ஒன்றாகும்.

- ❖ நாடகம்
- ❖ கூத்து
- ❖ இசை
- ❖ நடனம்
- ❖ ஒப்புவிப்பு
- ❖ மாய வித்தை
- ❖ மேடை நகைச்சுவை
- ❖ பொம்மலாட்டம்
- ❖ கழைக்கூத்து

**கும்மி**

கும்மி பலர் கூடி ஆடும் ஒருவகைக் கூத்து அல்லது நடனம். இது தொன்று தொட்டு வரும் ஒரு நடனக் கலை ஆகும். பலர் வட்டமாக ஆடிக்கொண்டோ, அல்லது இருபுறமாக சரிசமமாக நின்று ஆடிக்கொண்டோ வரும்போது இசைக்குத் தக்கவாறு தம் கைகளைத் தட்டி கால்களையும் இடுப்பையும், தலையையும் அழகுற அசைத்து, குனிந்தும் நிமிர்ந்தும் கூட்டாக ஆடும் ஒரு கூத்து. இது பொதுவாக முளைப்பாரியின்போது பெண்கள் வட்டமாக நின்று கைதட்டி ஆடும் நடனம் ஆகும்தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் கும்மி வழக்கில் உள்ளது. குரவை என்ற கலையில் இருந்து, கும்மி பிறந்ததாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தின் தொன்மையானக் கலைகளுள் “கும்மி” எனப்படும் கும்மியாட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். கைகளின் ஓசையை மட்டுமே இசையாகக் கொண்டு உருவான ஒருவகை நடனக்கலையே கும்மியாகும். எனவே, இது இசைக் கருவிகள் தோன்றும் காலத்திற்கு முன்னரே உருவான கலையாக அறியப்படுகிறது. ஆதிமனிதன் உழவையும் தொழிலையும் தொடங்கிய காலத்தில் கும்மி ஆட்டம் தோன்றியிருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். தன் உழைப்பின் களைப்பு தீரவும் தொழில் மற்றும் பிற கருத்துகளை எடுத்துக் கூறவும் கும்மி தோன்றியிருக்கலாம் என்பதற்குச் சான்றாக இன்றளவிலும் உழைக்கும் மக்களின் கலையாக கும்மி இருந்து வருகிறது.

தமிழகத்தில் பரவலாக அறியப்படும் இந்தக் கலை கேரளத்தில் ‘கைக்கொட்டிக்களி’ மற்றும் ‘திருவாதிரைக்களி’ என்ற பெயர்களில் வழங்கி வருகிறது. கும்மி என்ற கலையின் தொன்மையை அது சங்க இலக்கியங்களில் சுட்டப்படுவதில் இருந்து அறியலாம். “குரவை ” என்ற ஆதி கலையின் பிரிவாக அறியப்படும் கும்மி என்ற கலை, “கொம்பை ” என்ற பெயரில் அகநானூறு, குறுந்தொகை முதலிய சங்க இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ளது.

பொதுவாக கும்மியடித்தல் என்பது பெண்கள் மட்டும் பங்கேற்கும் நடனக்கலை போன்றே தோன்றினாலும், தமிழகத்தின் சில பகுதிகளில் ஆண்களும் இதில் பங்கு பெறுவதுண்டு. குழுவில் ஒரு பெண் அடியெடுத்துப் பாட, மற்றவர்கள் பின்பாட்டு பாடுவார்கள். அந்தப் பாடலின் மெட்டுக்கேற்ப, கைகளைத் தட்டி, தாளம் எழுப்பி, வட்டமிட்டு ஆடி வரும் வகையில் இன்று கும்மி பரவலாக அறியப்படுகிறது.

மேலும், கும்மியடித்தலுக்கென்றே தனியாக கும்மிப் பாட்டு செவிவழியாக ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு சொல்லப்பட்டு, மக்களால் பாடப்பட்டு வருகிறது. கும்மியடிக்கும் முறை பற்றி குறிப்பிடுகையில், மெல்ல நடந்து நடந்து அடித்தல், நடந்து நின்று அடித்தல், குனிந்து நிமிந்து அடித்தல், குதித்துக் குதித்து அடித்தல், தன் கையைக் கொட்டி அடித்தல், எதிரில் உள்ளவர்கள் கைகளுடன் கொட்டியடித்தல் ஆகிய ஆறு நிலைகள் அறியப்படுகின்றன.

**கோலாட்டம்**

ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை எத்தனை விதமாகச் சொன்னாலும், நடனத்தின் மூலமாகச் சொல்லும் போது அழகு மென்மேலும் அதிகரிக்கின்றது. அந்த வகையில் தமிழர்களின் அழகிய நடனக் கலை “கோலாட்டம்” ஆகும். கோல்களைக் கையில் பிடித்து ஆண்களும் பெண்களும் தனித்தனியாகவோ ஒருங்கிணைந்தோ அடித்து ஆடும் ஆட்டம் கோலாட்டம் எனப்படும். தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் பிற பகுதிகளிலும் கோலாட்டம் ஆடப்படுகிறது. முக்கியமாக, குஜராத் மாநிலத்தின் தாண்டியா நடனம் கோலாட்டத்தை மிகவும் ஒத்திருக்கிறது. புராணக் கதைகள், சமுதாய நிகழ்வுகள் மற்றும் தலைவர்களின் சிறப்புகள் ஆகிய பொருள்களில் கோலாட்டப் பாடல்கள் எழுதப்படுகின்றன. சிறிய அளவிலானக் கோல்களைக் கொண்டு ஆடுவதால் இதனைக் குறுந்தடி சிலம்பு என்றும் அழைக்கின்றனர்.

குமரி மாவட்டப் பகுதிகளில் களியல் அல்லது களியலாட்டம் எனவும் தஞ்சை மாவட்டப் பகுதிகளில் கிட்டியடித்தல் அல்லது கிட்டியாட்டம் எனவும், ஆண்கள் ஆடும் ஆட்டம் வைந்தானை ஆட்டம் எனவும், திருச்சி மாவட்டப் பகுதிகளிலும் இலங்கையிலும் வசந்தன் கூத்து எனவும் கோலாட்டம் அறியப்படுகிறது. மேலும் இந்த வகை நடனமானது கோலாட்டம், பின்னல் கோலாட்டம், கோலாட்டக் கும்மி என மூன்று வகையாக அறியப்படுகிறது. கழிகளைக் கொண்டு தாளத்துக்கும், இசைக்கும் ஏற்ப ஒன்றுடன் ஒன்று தட்டிக்கொண்டே ஆடுவது கோலாட்டம் என்ற முதல் வகை. இரண்டாவதான பின்னல் கோலாட்டத்தில், கோல்களால் அடித்து ஆடிக் கொண்டே துணிகளில் பின்னல்களைப் போடுவதும் அவிழ்ப்பதும் நிகழ்த்தப்படும். மூன்றாவதாக, கோல்களாலும் கைகளாலும் அடித்து ஆடுவது கோலாட்டக் கும்மி

எனப்படுகிறது. கோலாட்டக் கும்மி தென் தமிழகத்திலும், பின்னல் கோலாட்டம் என்ற கயிற்றுப் பின்னலாட்டம் வட தமிழகத்திலும் பரவலாக ஆடப்பட்டு வருகிறது.

தென் தமிழகத்தின் தொல்குடிகளுள் முதன்மையானவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழும் காணிக்காரர்கள் ஆவர். கோலாட்டம் அந்த இனத்தவரின் சிறப்பு வாய்ந்த ஆட்டக் கலையாக இருக்கிறது. கொரண்டி, கன்னங்கயிஞ்சி, சீதவெற்றம் ஆகிய மரங்களின் கம்புகளைக் கோலாட்டத்துக்குரியக் கழியாக அவர்கள் பயன்படுத்துகிறார்கள். காணிக்காரர்களின் கோலாட்டத்தில் காடுகளின் செழிப்பு, மலைகளின் சிறப்பு, இயற்கை, விலங்குகள் மற்றும் அவர்களின் குல தெய்வங்கள் ஆகியனப் பாடப்படுகின்றன.

பெண்கள் மட்டுமே ஆடும் 'பின்னல் கோலாட்டம்', ராஜஸ்தானில் கர்பா நடனம் என்றும் ஆந்திராவில் ஜடைக் கோலாட்டம் என்றும் வெவ்வேறு பெயர்களில், சிறிய மாற்றங்களுடன் அறியப்படுகிறது. இந்த வகைக் கோலாட்டம் சாதாரணக் கோலாட்டத்தில் இருந்து மாறுபட்டது. கூரை உள்ள அரங்கில் மட்டுமே இந்த வகைக் கோலாட்டம் நிகழ்த்தப்படும். மூன்று மூன்று கயிறுகளாக இடைவெளிவிட்டு, கூரையில் வண்ணத் துணிகளைக் கட்டியிருப்பார்கள். கூரையில் கட்டப்பட்ட வண்ண துணிப்பட்டையின் ஒரு பகுதி கோலாட்டம் அடிக்கும் பெண்ணின் கையில் இருக்கும். இந்தப் பின்னல் கோலாட்ட நடனம் பாம்பு பின்னல், பைப்பின்னல், தாம்புக் கயிறு பின்னல், சங்கிலிப்பின்னல் எனப் பல வகைகளில் நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தை நன்றாகப் பயிற்சிப் பெற்றப் பெண்களால் மட்டுமே ஆட முடியும். ஆடிக்கொண்டே துணியில் பின்னல் போடுவதும், பின்னர் அவற்றை ஆடிக்கொண்டே சிக்கல் இல்லாமல் அவிழ்ப்பதும்தான் இந்த ஆட்டத்தின் சிறப்பாகும். குழுவாக ஆடும் இந்த ஆட்டத்தில் யாரேனும் ஒருவர் தவறாக ஆடினாலும் பின்னலைச் சிக்கலின்றி அவிழ்க்கமுடியாது.

தமிழகக் கிராமங்களில், நாட்டார் தெய்வங்களின் திருவிழா சமயங்களில் "கோலாட்டக் கும்மி" நிச்சயமாக இடம்பெறும். நாட்டார் தெய்வங்களின் கதை மற்றும் அருட்சிறப்பு கோலாட்டப் பாடல் வழியாகக் கூறப்படும். நடுவில் விளக்கு அல்லது முளைப்பாரியை வைத்து, பெண்கள் வட்டமாகச் சுற்றி நின்று, கோல்களைக்

கொண்டும் கைகளைக் கொண்டும் அடித்து ஆடுவர். இந்த மரபு இன்று வரையிலும் தொடரப்பட்டு வருகிறது.

**ஒயிலாட்டம்**

ஒயிலாட்டம் (Oyilattam) என்பது ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டம். அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாரம் எனப் பல பொருள் தாங்கி நிற்கும் ஒயில் என்ற வார்த்தையே, இவ் ஆட்டத்தின் பெயராகியுள்ளது. இது முற்றிலும் ஆண்கள் சார்ந்த கலை . ஆண்மையின் கம்பீரத்தை உணர்த்தும் இந்தக் கலையாட்டத்தினைப், பெண்கள் கலந்து கொண்டு ஆடுவதில்லை.[1] இந்த ஆட்ட அடவுகள், ஆண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை ஆகும். பத்து முதல் 12 பேர் கொண்ட இந்த ஆட்டத்தில், எதிரெதிர் திசையிலோ, அல்லது நேர்த்திசையிலோ நின்று கொண்டு ஆடுவார்கள். சிறகை விரித்தால் மயிலாட்டம், சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம் என்று இக்கலையின் தன்மை வர்ணிக்கப்படுகிறது.

பானைத்தாளம், தவில், சிங்கி, சோலக் போன்ற இசைக்கருவிகளை இந்த ஆட்டத்தில் பயன்படுத்துவதுண்டு. பானைத்தாளம் என்பது, குடத்தில் மாட்டுத்தோலைக் கட்டி இசைக்கப்படும் வல்லிசைக் கருவியாகும். பறைக்குப் பதிலாக இந்தக் கருவியை இசைக்கிறார்கள். இவைகளோடு கலைஞர்கள் காலில் அணிந்திருக்கும் சலங்கை இன்னுமொரு கருவியாக மாறி அடவுக்கேற்ப இசைக்கும். இந்த இசைக்கருவிகளைக் கட்டுப்படுத்தி வகைப்படுத்துவதே சிங்கி என்ற இசைக்கருவியின் வேலை. பாடலும், ஆடலும் நிறைந்த இக்கலையில், பாடத்தெரிந்தவருக்கு ஆடத்தெரிந்திருக்கத் தேவையில்லை. பாடலுக்குத் தகுந்தவாறு அடவு வைத்து ஆடற்கலைஞர்கள் ஆடுவார்கள்.

பெரும்பாலும் இராமாயணக்கதைகளே பாடல்களாகப் பாடப்படுகின்றன. இது தவிர பவளக்கொடி கதை, மதுரைவீரன் கதை, முருகன் கதை, சிறுத்தொண்டர் கதை, வள்ளி திருமணக் கதைகளையும் பாடி ஆடுவதுண்டு. ரெட்டியார் மற்றும் முக்குலத்தைச் சேர்ந்த சில இனத்தினர், இக்கலையை மரபு ரீதியாக நிகழ்த்தினர். இப்போது தலித்துகள் உள்ளிட்ட பிற இனத்தினரும் இக்கலையாடலில்

ஈடுபடுகின்றனர். மரபுசார்ந்து இயங்கிய பலர் கிறித்தவ மதத்துக்கு மாறியதன் விளைவாக, கிறிஸ்தவ ஆலயங்களிலும் அண்மைக்காலமாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது. கிறிஸ்தவ ஆலயங்களில் பைபிள் கதைகளைப் பாடி ஆடுகின்றனர்.

**மயிலாட்டம்**

மயில் ஆட்டம் ஒரு தமிழர் நாட்டார் ஆடற் கலையாகும். இது மயிலின் தோகையை உடையுடன் சேர்த்து, ஒடுக்கியும் விரித்தும் ஆடக்கூடியவாறு உடை செய்யப்பட்டிருக்கும். மயிலின் ஆட்டத்தை அல்லது அசைவுகளை ஒத்து இந்த ஆட்டம் அமையும். பொதுவாகப் பெண் சிறார்களே இந்த ஆட்டத்தை ஆடுவர்.

மயில்தோகையைப் பயன்படுத்தாமல் மயிலின் ஆட்டத்தை ஒத்ததாக அமையும் ஆட்ட வகைகளையும் மயிலாட்டம் (Peacock dance) என்று குறிப்பிடுவதுண்டு.கரகாட்டத்தின் துணையாட்டமாகவும், கரகாட்டத்தின் இடைநிகழ்ச்சியாகவும் இவ்வாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

மயில் உருவத்தைக் கொண்டு செய்யப்பட்ட பொம்மையில் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்தின் இசைக்கேற்ப ஆண் கலைஞர்களால் ஆடப்படும் ஆட்டம் மயிலாட்டம். இது மயில் நடனம் எனவும் அழைக்கப்படும். செவ்வியல் கலையான பரதநாட்டியத்தில் பெண்கள் மயிலாட்டம் ஆடுகின்றனர். அவர்கள் பொம்மை மயில் கூட்டினைச் சுமப்பத்திலை. மாறாக பச்சை, நீல வண்ண உடைய அணிந்து பின்புறம் மயில் தோகையைக் கட்டி ஆடுகின்றனர்.

நாட்டுப்புற ஆட்டக் கலைஞர் மயில் கூட்டினுள் மறைந்து கொள்வதால் அவரின் வயது, தோற்றம், பற்றி யாரும் கவனிப்பதில்லை. ஆடக்கூடிய ஆற்றல் பெற்றவராக இருந்தால் போதுமானது. பொழுதுபோக்கிற்காகத் தனியொரு கலைஞரால் நிகழ்த்தப்படும் கலை இது. கரகாட்டத்தின் துணைநிலை ஆட்டமாகவே கருதப்படுகிறது. கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் முதலான ஆட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும் பொழுது மயிலாட்டத்தையும் ஏற்பாடு செய்வர். பிற ஆட்டங்களோடு மயிலாட்டமும் ஆடப்படும். இதனைத் தனித்ததொரு ஆட்டமாக யாரும் ஏற்பாடு செய்வதில்லை.

வட தமிழகத்தின் பல பகுதிகளிலும், மதுரையிலும் மயிலாட்டம் ஆடும் கலைஞர்கள் உள்ளனர். ஆயினும் தஞ்சை மயிலாட்டக் கலைஞர்கள் சிறப்பாகக்

குறிப்பிடத்தக்கவர்கள். திருச்சியைச் சார்ந்த சுந்தரராவ் என்பவரே மயில் நடனத்தை முதலில் கண்டுபிடித்து ஆடிய கலைஞராகக் கருதப்படுகிறார். இன்று இந்நடனம் தஞ்சை கொந்தளக்காரத் தெருவில் வசிக்கும் மராட்டிய குடும்பங்களுக்குரிய கலையாகவும் விளங்கி வருகிறது என்கின்றனர்.

பொய்க்கால் குதிரை செய்வது போலவே மயில் கூட்டையும் செய்கின்றனர். தலை, உடல், இறக்கைகள் முதலியவைகள் தனித்தனியே செய்யப்பட்டு அவற்றின் மீது மயிலைப் போல் வண்ணம் தீட்டுகின்றனர். மயில் தலையில் கம்பியாலான கொண்டைகளும், குவி லென்சு, கண்ணாடியாலான கண்களும் அமைக்கப்படும். திறந்து மூடுவதற்கேற்ப மயிலின் வாய் தகடுகளால் அமைக்கப்பட்டு இருக்கும். இதற்காக வாயிலிருந்து கட்டப்படும் சூத்திரக்கயிறு ஆட்டக் கலைஞரிடம் இருக்கும். மயில் கூட்டின் அடிப்பக்கத்தில் மயிலிறகுகள் பொருத்தப்படும்.

இந்த மயிலிறகுகள், ஆட்டக்கலைஞர் நிமிர்ந்து ஆடும் போது குவிந்தும், குனிந்து ஆடும் போது விரிந்தும் இருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கும். மயில் கூட்டின் வாயும் இறக்கைகளும், மயில் தோகையும் அசைந்து உயிருள்ளவை போலக் காட்டுவதற்கேற்ப அமைக்கப்படுகின்றன.

மயிலாட்ட கலைஞர் மயிலாக ஒப்பனை செய்துகொள்ளும் போது மயிலின் கூம்பு போன்ற கழுத்து பகுதியைத் தன் தலையில் வைத்துக் கட்டிக்கொள்வர். அக்கழுத்துப் பகுதியில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள நீலத்துணி கலைஞரின் கழுத்தினை மறைத்துக் கொள்ளும். மயிலின் உடல் கூட்டினைத் தோளில் சுமக்குமாறு கட்டிக்கொள்கின்றனர். உடல் கூட்டிலிருந்து கட்டித் தொங்கவிடப்பட்ட பச்சை வண்ண துணி ஆட்ட கலைஞரின் கால்களை மறைத்துக் கொள்ளும் சலங்கைகள் கட்டப்பட்ட கால்கள் மட்டுமே வெளியில் தெரியும். இரண்டு கைகளிலும் மயிலின் இரண்டு இறக்கைகள் கட்டப்படும்.

கரகாட்டம் தமிழ் நாட்டின் தலை சிறந்த நாட்டுப்புற நடனங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. கரகம் என்ற சொல் நூல்களில் இடம் பெறுகிறது. தொல்காப்பியத்தில்,

நூலே கரகம் முக்கோல் மனையே

(தொல், பொருள், இளம், நூற்பா, 615)

என்னும் நூற்பாவில் கரகம் என்னும் சொல் துறவிகள் வைத்திருக்கும் நான்கு பொருள்களில் ஒன்றாகிய கமண்டலத்தைக் குறிக்கிறது. எட்டுத்தொகை நூற்களில் ஒன்றாகிய புறநானூற்றில்,

நீரற வறியாக் கரகத்து (புறம். 1)

என வருகிறது. இதற்குக் "குண்டிகை" என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுகின்றனர். குண்டிகை என்பது கரகம் போல, வாய்ப்புறம் குவிந்த ஒரு கலத்தையே குறிக்கிறது.

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு ஆடல்களில் "குடக்கூத்து" என்னும் ஒருவகை ஆடல் கரக ஆடலை ஒத்துக் காணப்படுகிறது. மேலும் பெரியாழ்வார் திருமொழியிலும் இவ்வகை ஆடல் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

மண், செம்பு, பித்தளை போன்றவைகளால் வாய்ப்புறம் குவிந்தும், அடிப்புறம் பெருத்தும் காணப்படும் குடம் "கரகம்" எனப்படும். நீர், அரிசி, மணல் போன்றவைகளால் நிரப்பப்பட்டு வாய்ப்புறத்தை மூடி அலங்கரிக்கப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக் கைகளால் பிடிக்காமல், நையாண்டி மேள இசைக்கு ஏற்ப ஆடும் ஆட்டம் கரகாட்டம் எனப்படும்.

தொன்மையான இந்தக் கரகாட்டக் கலையைக் குறித்துப் பல கதைகளும், நம்பிக்கைகளும் நிலவி வருகிறன. இக்கலை மாரியம்மனின் வழிபாட்டுக் கலையாக இருந்து வருகிறது. இத்தகைய தொன்மை மிக்க இக்கலை தற்காலத்தில் பாமர மக்களின் ஆட்டக்கலையாக மாறியது.

**கரகமெடுத்தல்**

மாரியம்மன் எனப்படும் பெண் தெய்வத்திற்கான வழிபாட்டில் கரகமெடுத்தல் என்னும் சடங்கு நிகழ்ச்சி தொன்றுதொட்டு நிலவி வருகிறது. தூய்மையான மண் கலத்தில் மஞ்சள் நீர், பால், அரிசி போன்ற பொருள்களை நிரப்பி வேப்பிலை, மாவிலை முதலிய தழைகளைச் செருகி அதன் வாய்ப் பகுதியில் ஒரு தேங்காயைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்து இக்குடத்தைத் தலையில் சுமந்து சென்று அம்மனை வழிபடுவர். கரகக் குடத்தில் நிரப்பப்படும் பொருள்கள் அவரவர்களின் வேண்டுதலையொட்டி அமையும். புனிதப் பொருள்கள் நிரப்புதல் என்ற செயலால் அம்மனே குடத்தில் வந்து பொருந்தி இருப்பதாகப் பாவித்துக்

கொண்டு, அதனைத் தலையில் சுமந்து சென்று வழிபடுதல் என்னும் தெய்வச் சடங்கே கரகமெடுத்தல் என்றழைக்கப்படுகிறது. பூங்கரகம் எடுப்பதாக வேண்டிக் கொண்டவர்கள் புதுமட் குடத்தின் மேல் சுண்ணாம்பு நீராலும், செம்மண்ணாலும் அழகான கோலங்கள் வரைந்து அதில் மஞ்சள் நீர் ஊற்றிப் பானையைச் சுற்றிப் பல நிறப் பூக்களால் அலங்கரித்து, அக்குடத்தைத் தலையில் சுமந்து சென்று அம்மனை வழிபடுதல் பூங்கரகம் எடுத்தல் எனப்படும்.

இருவகைக் கரகமுறை வழக்கில் உள்ளது.

சக்திக் கரகம்

ஆட்டக்கரகம்

**சக்திக்கரகம்**

கோவில் திருவிழாவின் பொழுது, பூசாரி கரகத்தை அலங்கரித்துத் தன் தலையில் சுமந்து வருதல் சக்திக் கரகம் எனப்படும். பூசாரி கரகத்தைச் சுமந்து கொண்டு நையாண்டி மேள இசைக்கு ஏற்ப ஆடி வருவார்.

**ஆட்டக்கரகம்**

நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு செம்புக் கரகத்தைத் தலையில் வைத்துக் கைகளால் குடத்தைப் பிடிக்காமல் நையாண்டி மேள இசைக்கு ஏற்ப உடலை வளைத்தும், குனிந்தும், நிமிர்ந்தும் ஓடியும் நடை போட்டும் ஆடுகையில், தலையிலுள்ள கரகம் கீழே சாய்ந்து விழுந்து விடாதபடி பார்த்துக் கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் அவையில் கரகம் ஆடும் பொழுதும் ஆடுபவர்கள் மாரியம்மனை வணங்கியபடி தலையில் கரகத்தை எடுத்து வைத்து ஆடுவர். தலையில் ஒரு கரகத்தை மட்டும் வைத்து ஆடாமல் ஒன்றன் மேல் ஒன்றாக ஏழு கரகங்களை அடுக்கி வைத்து அவைகளைத் தலையில் வைத்துக் கைகளால் பிடிக்காமல் ஆடுவர்.

**தப்பாட்டம்**

தப்பாட்டம் **(அ)** பறை ஆட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரியமான நடனம் ஆகும். பறையாட்டம் உணர்ச்சி மிக்கது. மற்றும் எழுச்சி மிகுந்தது. அதிர்ந்தெழும் பறையின் ஓசைக்கேற்ப ஆடக்கூடியது என்பதால் பறையாட்டம் கிளர்ந்தெழும் உடல் அசைவுகளைக் கொண்டது. ஆதி மனித சமூகம் தங்கள் கூடுதலுக்காகவும், தங்கள் குழுவுக்கு ஆபத்துக்களை உணர்த்தவும், விலங்குகளிடம் இருந்து தங்களை

தற்காத்துக் கொள்ளவும் எழுப்பிக் கொண்ட சத்தம்தான் பறையாட்டத்தின் மூலம் எனக் கருதப்படுகிறது. ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகம் என உணர்ச்சிகளை எழுப்பி, கேட்போரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது இது. பறை என்ற இசைக்கருவியை இசைத்து ஆடப்படுவதால் இது பறையாட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு போர் இசைக்கருவியாகும். போர்ப்பறை என்றும் அழைக்கிறார்கள்.

விலங்குகளைக் கொன்று, தின்று மிஞ்சிப்போகும் தோலை எதிலேனும் கட்டிவைத்து, காய வைத்து மனம் போன போக்கில் அடித்து ஆடிய ஆட்டந்தான் காலப்போக்கில் கலைவடிவனமானது.காலப்போக்கில் வாழ்வியல் உணர்ச்சிகளை உணர்த்தும் சத்தமாகவும் மாறி, திருமணம், இறப்பு, தெய்வ திருவிழா நிகழ்வுகள் என மக்களின் அன்றாட வாழ்க்கையின் அத்தனை சுக துக்கங்களிலும் இடம் பெறும் கலையாகியது. தமிழகத்தில் பன்னெடுங்காலமாக இருந்து வரும் முக்கிய இசைக்கருவி பறை. அதன் மற்றொரு பெயர் தப்பு.

**பொய்க்கால் குதிரை**

பொய்க்கால் குதிரை ஆட்டத்தைச் சித்தரித்து சென்னை கல்லூரி சாலையில் வைக்கப்பட்டுள்ள சிலை இக்கலை தமிழகத்தில் பரவலாக உள்ளது. இக்கலை கோயிலும் சமூகமும் சார்ந்த கலையாகும். முன்பு இந்த ஆட்டத்திற்கு கொந்தளம் என்ற இசைக் கருவியைப் பயன்படுத்தினர். தற்போது நையாண்டி இசைக்கேற்ப இவ்வாட்டம் ஆடப்படுகிறது. இக்கலையை ஆடுபவர்கள் ராஜா ராணி வேடம் பூண்டு ஆடுகிறார்கள். நையாண்டி மேளத்தின் பின்னணி இசைக்கேற்ப நிகழ்த்தப்படும் இக்கலையின் ஆடுகளம், ஊர்வலம் ஆகும். ஊர்வலம் செல்கிற எல்லா பகுதிகளிலும், கோவிலின் முற்பகுதியும் ஆகும். இந்து சமயக் கோவில் விழாக்களிலும், இசுலாமியர்களின் விழாக்களிலும், கத்தோலிக்கரின் சவேரியார் கோவில் விழாக்களிலும் இவ்வாட்டம் பங்கு பெறுகிறது.

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலை வடிவங்களில் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஒன்றாகும். கரகம், காவடியைப் போல வழிபாட்டுக் கலையாக அல்லாமல் பொதுமக்கள் கண்டுகளிக்கும் பொருட்டு ஏற்பட்ட ஆட்டமாகப் பொய்க்கால் குதிரை ஆட்டம் விளங்குகிறது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய காப்பியமான சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில், முன்பு துர்க்கை ஆடிய மரக்காலாடல் ஒன்றாகும்.

மாயவ ளாடிய மரக்கா லாடலும் (கடலாடு காதை, அடி 59)

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

வஞ்சத்தால், பாம்பு, தேள் முதலிய விடப் பூச்சிகளாக உருவெடுத்துத் தனக்கு இன்னலை விளைத்துத் தன்னைக் கொல்லக் கருதிய அï¢îணர்களின் செயலை உணர்ந்து துர்க்கை தன் கால்களில் கட்டையைக் கட்டிக் கொண்டு, அவர்கள் மிதிபட்டு மடியுமாறு ஆடிய ஆட்டமே மரக்கால் ஆடல் ஆகும். மரக்கால் கொண்டு ஆடுதலின் மரக்காலாடல் ஆயிற்று. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடும் மரக்காலாடல் இன்று பொய்க்கால் குதிரை ஆட்டமாக மாறிவந்தது.இவ்வாறு காலில் கட்டை கட்டி ஆடுதல் தமிழ் நாட்டில் மட்டுமின்றி ஆந்திரம், மத்தியப் பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களிலும் காணப்படுகின்றது. குதிரைக் கூடு அணிந்து அதன் மேல் சவாரி செய்வது போல் பாசாங்கு செய்து ஆடப்படும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகும். இந்த ஆட்டம் தஞ்சாவூரில் தோன்றியதாகக் கூறப்படுகிறது. ஆணும் பெண்ணும் இராசா இராணி போன்று வேடமிட்டு ஆடுவதுண்டு.

இது புரவியாட்டம், புரவி நாட்டியம், பொய்க் குதிரை ஆட்டம் என வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. பொய்யான குதிரைக் கூட்டைச் சுமந்து கொண்டு மரக்காலில் நின்று ஆடும் ஆட்டம் என்பதால் பொய்க் கால் குதிரை ஆட்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆட்டம், ஒரிசாவில் சைத்திகோடா அல்லது கெயுதா என்றும், ஆந்திராவில் திலுகுர்ரம் என்றும், ராஜஸ்தானில் கச்சிகொடி என்றும், கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஆட்டம், மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

**தோல்பாவைக்கூத்து**

தோல்பாவைக்கூத்து அல்லது பாவைக்கூத்து (Tholpavakoothu) என்பது உயிரற்ற பாவைகளை, உயிருள்ள பாத்திரங்களைப் போல் இயக்கி நிகழ்த்தப்படும் ஒரு கூத்து ஆகும். பதப்படுத்தப்பட்ட ஆட்டுத் தோலில் வரையப்பட்ட வண்ணப்படங்களை விளக்கின் ஒளி மூலம் திரைச்சீலையில் அதன் நிழல்

தெரியுமாறு ஆட்டி நிகழ்த்துவது தோல்பாவை கூத்து.இக்கலை, தோல்பாவைக் கூத்து, தோல்பாவை நிழல் கூத்து, நிழலாட்டம், தோல் பொம்மலாட்டம் என வெவ்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறதுஇக்கலையானது இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகம், கேரளம், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நிகழ்த்தப்படுகிறது. சரபோஜி மன்னர் காலத்தில் தஞ்சை அரண்மனையில் செல்வாக்குப் பெற்றிருந்த தோல்பாவைக் கூத்துக் கலைஞர்கள், பிற்காலத்தில் பிழைப்புக்காகத் தமிழகம் முழுமைக்கும் இடம்பெயர்ந்தார்கள். இக்காலத்தில் தமிழகத்தில் மதுரை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் நிகழ்கிறது. இக்கலையானது இன்றைய நிலையில் நலிந்து கொண்டே வருகின்ற கலையாக மாறிவருகிறது.மராட்டியைத் தாய்மொழியாகக் கொண்ட ‘கணிகர்’ சாதியின் உட்பிரிவான ‘மண்டிகர்’ சாதியைச் சார்ந்தவர்கள், இக்கலையை நிகழ்த்துகின்றனர்.

தோல்பாவைக் கூத்திற்கான அரங்கு கூத்து நிகழும் இடம், பார்வையாளர்கள் இடம் என இரண்டு பகுதிகளைக் கொண்டது. கூத்து நிகழும் இடம் ஓலைக் கூரையால் வேயப்பட்டிருக்கும். கலைஞர்கள் கூத்து நிகழ்த்தும் இடத்தை இரவில் பெண்கள் தூங்குவதற்கும், பகலில் தங்கும் இடமாகவும் பயன்படுத்தினர். கூத்தரங்கு மழைக்கு பாதுகாப்பாகப் பெரிதாக கட்டப்பட்டது.

கலைஞர்களுக்கு எல்லாம் இலவசமாகக் கிடைத்த காலகட்டத்தில் பார்வையாளர்கள் வெட்டவெளியில் அமர்ந்து நிகழ்ச்சியைப் பார்த்தனர். பார்வையாளர்களின் இடத்தை சுத்தப்படுத்துவது, சமன்படுத்துவது போன்ற வேலைகளை ஊர்க் காவலர்கள், சலவைத் தொழிலாளர்கள் மேற்கொண்டனர். கூத்துக்கு டிக்கட் வசூலிக்கும் நிலை வந்ததும் அரங்கின் அமைப்பும் மாறியது. நாடோடிக் கலைஞர்களான மண்டிகர்கள் கூத்து அரங்கு செய்ய தேவைப்படும் பொருட்களை சுமந்து செல்ல முடியாமல் ஆகினர். அதனால் ஓலைக் கூரைக்கு பதிலாக தார்ப்பாயைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

**புழங்கு பொருள்**

புழங்கு என்பதற்குக் கதிரைவேற்பிள்ளை தமிழ் மொழியகராதி வழங்குதல் என்றும், தமிழ் லெக்சிகன் கையாளுதல், புழங்குதல் என்றும் விளக்கம் தருகின்றன. எனவே புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் தங்கள் தேவைக்காகப்

பயன்படுத்தி வந்த,வருகின்ற பொருட்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.மக்கள் தங்களின் தேவைக்கு ஏற்ப தொன்று தொட்டே செய்துவருகின்ற கைவினைப் பொருட்கள் யாவும் புழங்குபொருள் பண்பாட்டை அடையாளப் படுத்துகின்றன. ஹூர்து, இயற்கை வளங்களைப்பண்பாட்டுப் படைப்புகளாகவும், கலைப்படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்றும்; மானுடக்குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்குபொருள் சார்ந்தகலைத்தொழில் வேலைப்பாடமைந்த பொருட்களும் புழங்குபொருள்பண்பாட்டில் அடங்குகின்றன என்றும் குறிப்பிடுகின்றார்.

புழங்கு பொருட்கள் குறித்து ஆய்வுச் செய்த ரெஜித்குமார் மூன்றாக வகைப்படுத்தி கூறியுள்ளார். அவை, 1.உணவு சார்ந்த புழங்குபொருட்கள், 2. வீட்டுஉபயோகப் புழங்குபொருட்கள், 3. தொழிற்கள புழங்குபொருட்கள்என்பனவாகும்.

**கலன்கள்**

உணவுகளைச் சமைப்பதற்கும், அவைகளைப் பாதுகாப்பாகப் பக்குவப்படுத்தி வைப்பதற்கும், உணவுகளை உண்பதற்கும், கால்நடை, பறவைகளுக்கு உணவு கொடுப்பதற்கும் பல்வேறு விதமான கலன்களை எல்லா மக்களும் பயன்படுத்துகின்றனர். இதற்கு சங்க கால மக்கள் விதிவிலக்கன்று அவர்களும் இயற்கையாகக் கிடைத்த இலைகளையும் மரம் மற்றும் மண்ணால் செய்யப்பட்ட கலன்களையும் பயன்படுத்தியுள்ளனர்.

**தேக்கிலை**

தேக்கு மரத்தின் இலைகளைப் பயன்படுத்தி உணவு உண்ணும் வழக்கம் தற்போது கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களிடம் காணப்படுகின்றது. சங்ககால மக்களும் தேக்கிலையினை உண்கலமாகப் பயன்படுத்தி உள்ளனர்.

**பானைகள்**

பழந்தமிழ் மக்கள் அளவு, பயன்பாடு, அடிப்படையில் பலவகையான பானைகளைப் பயன்படுத்தி உள்ளனர். அவற்றுள், குழிசி, சாடி, கலன், கன்னல், தசும்பு, குப்பி, தடவு போன்றவற்றை குறிப்பிடலாம்.

**தசும்பு**

இப்பானையானது பால், தயிர், கள் போன்றவற்றை நிறைத்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது.

கைவினைப் பொருட்கள் , சில சமயங்களில் கைவினைக் கைவினைப் பொருட்கள் அல்லது கைவினைப் பொருட்கள் என மிகவும் துல்லியமாக வெளிப்படுத்தப்படும் , பயனுள்ள மற்றும் அலங்காரப் பொருட்கள் ஒருவரது கையால் அல்லது கத்தரிக்கோல், செதுக்கும் கருவிகள் போன்ற எளிய, தானியங்கு அல்லாத தொடர்புடைய கருவிகளை மட்டுமே பயன்படுத்தி செய்யப்படும் பல்வேறு வகையான வேலைகள் ஆகும் . , அல்லது கொக்கிகள் . இது கைவினைத் தயாரிப்பின் ஒரு பாரம்பரிய முக்கியத் துறையாகும், மேலும் இது ஜவுளி , வார்ப்பு மற்றும் திடமான பொருட்கள், காகிதம், தாவர இழைகள், களிமண் போன்றவற்றுடன் வேலை செய்வது உட்பட ஒருவரின் கைகளாலும் திறமையாலும் பொருட்களைச் செய்வது தொடர்பான பரந்த அளவிலான ஆக்கப்பூர்வமான மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளுக்குப் பொருந்தும். பழமையான கைவினைப் பொருட்களில் ஒன்று தோக்ரா ; இது ஒரு வகையான உலோக வார்ப்பு ஆகும், இது இந்தியாவில் 4,000 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஈரானிய பலுசிஸ்தானில் , கிராமத்திற்கு அருகிலுள்ள தொல்பொருள் தளமான கல்புர்கனின் 5,000 ஆண்டுகள் பழமையான மட்பாண்ட பாரம்பரியத்தைப் போலவே, புள்ளியிடப்பட்ட ஆபரணங்களுடன் சிவப்பு நிறப் பாத்திரங்களைக் கொண்ட கையால் செய்யப்பட்ட மட்பாண்டங்களை பெண்கள் இன்னும் செய்கிறார்கள். வழக்கமாக, இந்த சொல் நடைமுறை மற்றும் அழகியல் ஆகிய இரண்டையும் உருவாக்கும் பொருட்களை (தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அல்லது தயாரிப்புகளாக) உருவாக்கும் பாரம்பரிய நுட்பங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. கைவினைத் தொழில்கள் என்பது இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் தங்கள் பகுதியில் உள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய கைகளால் பொருட்களை உற்பத்தி செய்வதாகும்.

கைவினைப்பொருட்களுக்கான கூட்டுச் சொற்கள் கைவினைஞர் , கைவினை மற்றும் கைவினைப்பொருட்கள் ஆகியவை அடங்கும் . கலைகள் மற்றும் கைவினைப்பொருட்கள் என்ற சொல் , குறிப்பாக அமெரிக்காவில் மற்றும் பெரும்பாலும் பொழுதுபோக்காளர்கள் மற்றும் குழந்தைகளின் வெளியீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் இந்த வேறுபாடு முறையானது அல்ல, மேலும் கலை மற்றும் கைவினை வடிவமைப்பு இயக்கத்துடன் இந்த சொல் எளிதில் குழப்பமடைகிறது . , இது அழகியல் போலவே நடைமுறையில் உள்ளது.

பழங்கால நாகரிகங்களின் கிராமப்புற கைவினைப் பொருட்களில் கைவினைப்பொருட்கள் அதன் வேர்களைக் கொண்டுள்ளன , மேலும் பல குறிப்பிட்ட கைவினைப்பொருட்கள் பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் உள்ளன, மற்றவை நவீன கண்டுபிடிப்புகள் அல்லது கைவினைப்பொருட்களை பிரபலப்படுத்தியவை, அவை முதலில் வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் நடைமுறையில் உள்ளன.

பல கைவினைஞர்கள் இயற்கையான, முற்றிலும் பூர்வீகப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர், மற்றவர்கள் நவீன, பாரம்பரியமற்ற பொருட்கள் மற்றும் உயர்சுழற்சி தொழில்துறை பொருட்களையும் விரும்புகிறார்கள். கைவினைப் பொருளின் தனிப்பட்ட கைவினைத்திறன் முதன்மையான அளவுகோலாகும்; வெகுஜன உற்பத்தி அல்லது இயந்திரங்களால் செய்யப்பட்டவை கைவினைப் பொருட்கள் அல்ல.

பொதுவாக மற்றும் சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட கைவினை அல்லது வர்த்தகத்தை நோக்கி மாணவர்களின் திறன்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான ஆர்வங்களை வளர்ப்பதாகக் கருதப்படும், கைவினைப்பொருட்கள் பெரும்பாலும் முறைசாரா மற்றும் முறையான கல்வி முறைகளில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. பெரும்பாலான கைவினைகளுக்கு திறமை மற்றும் பொறுமையின் பயன்பாடு தேவைப்படுகிறது, ஆனால் கிட்டத்தட்ட யாராலும் கற்றுக்கொள்ள முடியும்.

கட்டிடக்கலை என்பது கட்டிடங்கள் மற்றும் அதன் உடல் கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்முறைத் திட்டமிடல், மற்றும் கட்டிடங்கள் கட்டுவதை உள்ளடக்கியதாகும். கட்டடக்கலை படைப்புகள், கட்டிடங்கள் பொருள் வடிவம், பெரும்பாலும் கலாச்சார சின்னங்களாக மற்றும் கலை படைப்புகளாக காணப்படுகின்றது. வரலாற்று நாகரிகங்கள் பெரும்பாலும் அவர்களின் கட்டிடகலை சாதனைகளின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

கைவினைப் பொருட்கள்

தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் ஆகும். பெரும்பாலும் இவை கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிப்பது ஆகும்.

**கைவினைக் கலைகளாக அறியப்படுபவை**

மண்பாண்டங்கள் செய்தல், மூங்கில் கூடைகள் வனைதல், பாய் முடைதல், பட்டு நெசவு செய்தல், பிரம்பு பின்னுதல், மண் பொம்மைகள் தயாரித்தல் மற்றும் பரதநாட்டிய நடன கலைஞர்கள் அணியும் கோவில் நகைத்தொழில் போன்றவை கிராமப்புறக் கைவினைக் கலைகள் ஆகும்.

**கைவினைப் பொருட்களின் தொன்மைச் சிறப்பு**

மண்பாண்டங்கள், மூங்கில் கூடைகள், பாய் போன்ற பொருட்கள் மண்பாண்டப் பொருட்கள், மண் பொம்மைகள் தயாரித்தல் பழமை வாய்ந்த கோவில் நகைகள் தயாரித்தல் கைவினை தொழிலாக கருதப்படுகிறது.

**மண்பாண்டங்கள் தயாரித்தல்**

கிராமப்புறங்களில் வேளார் என்று அழைக்கப்படும் குயவர்களால் களிமண் கொண்டு திருவை மூலம் விதம் விதமான பாண்டங்கள் செய்யப்படுகின்றன. தற்காலத்தில் மண்பானையில் தண்ணீர் சேகரித்துக் குடித்தால் உடலுக்குக் குளிர்ச்சி என்ற கருத்து மக்களிடையே பரவி இருப்பதால் மண்பானையில் திருகு குழாய் வைத்து செய்யப்பட்ட மண்பானைகள் சாலையோரங்களில் விற்பனைக்கு வைக்கப் படுகின்றன.

மூங்கில் கூடைகள்

உள்ளூரிலேயே கிடைக்கும் மூங்கில்களைக் கொண்டு வனையப்படும் கூடைகளை குறவர் இன மக்கள் அன்றாடம் விற்பனை செய்வதைக் காணலாம். பொருட்களை சேகரம் செய்து வைக்கவும், பழக்கூடை, பூஜைக்கூடை, விளையாட்டுப் பொருட்கள் எனப் பல்வேறு வடிவங்களில் மூங்கில் தயாரிப்பு பிரசித்து பெற்று விளங்குகிறது. நெகிழி எனப்படும் பிளாஸ்டிக் பைகளுக்குப் பதில் மூங்கில் கூடைகளைப் பயன்படுத்துவது சிறப்பு.

**பாய் முடைதல்**

கோரைப்பாய்-இதன் தனிச்சிறப்பு கோடைக்காலத்தில் குளிர்ச்சியையும், மழைக்காலத்தில் வெப்பத்தையும் தர வல்லது. இது ஆற்றோரங்களில் கிடைக்கும் தரமான புல் வகையைச் சேர்ந்த கோரைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் பத்தமடை பாய் சிறப்பு வாய்ந்தது. பல்வேற வண்ணங்களில் எழுத்துக்கள், படங்கள் இடம்பெற்றுள்ளன.

**கட்டிடக்கலை**

கட்டிடக்கலை என்பது கட்டிடங்கள் மற்றும் அதன் உடல் கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்முறைத் திட்டமிடல், மற்றும் கட்டிடங்கள் கட்டுவதை உள்ளடக்கியதாகும். கட்டடக்கலை படைப்புகள், கட்டிடங்கள் பொருள் வடிவம், பெரும்பாலும் கலாச்சார சின்னங்களாக மற்றும் கலை படைப்புகளாக காணப்படுகின்றது. வரலாற்று நாகரிகங்கள் பெரும்பாலும் அவர்களின் கட்டிடகலை சாதனைகளின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

கட்டிடக்கலை என்பது கட்டிடங்கள் மற்றும் அதன் உடல் கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்முறைத் திட்டமிடல், மற்றும் கட்டிடங்கள் கட்டுவதை உள்ளடக்கியதாகும். கட்டடக்கலை படைப்புகள், கட்டிடங்கள் பொருள் வடிவம், பெரும்பாலும் கலாச்சார சின்னங்களாக மற்றும் கலை படைப்புகளாக காணப்படுகின்றது. வரலாற்று நாகரிகங்கள் பெரும்பாலும் அவர்களின் கட்டிடகலை சாதனைகளின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

ஒரு விரிவான வரைவிலக்கணம், பெருமட்டத்தில், நகரத் திட்டமிடல், நகர்ப்புற வடிவமைப்பு மற்றும் நிலத்தோற்றம் முதலியவற்றையும், நுண்மட்டத்தில், தளபாடங்கள், உற்பத்திப்பொருள் முதலியவற்றை உள்ளடக்கிய, முழு உருவாக்கச் சூழலின் வடிவமைப்பைக் கட்டிடக்கலைக்குள் அடக்கும்.

மேற்படி விடயத்தில், தற்போது கிடைக்கும் மிகப் பழைய ஆக்கம், பொ.ஊ. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோமானியக் கட்டடக் கலைஞரான விட்ருவியஸ் என்பாரது "கட்டிடக்கலை தொடர்பில்", என்ற நூலாகும்.இவரது கூற்றுப்படி, நல்ல கட்டிடம், அழகு, உறுதி, பயன்பாடு ஆகியவற்றைக் கொண்டிருக்கவேண்டும். மேற்படி மூன்றும், ஒன்றின்மீதொன்று அளவுமீறி ஆதிக்கம் செலுத்தாமல், தங்களிடையே சமனிலையையும், ஒருங்கினைப்பையும் கொண்டிருத்தலே கட்டிடக்கலை என்று சொல்லலாம். ஒரு மேலான வரைவிலக்கணம், கட்டிடக்கலையைச், செயற்பாட்டு, அழகியல், உளவியல் என்பன தொடர்பான விடயங்களைக் கையாளல் என்ற விதத்தில் நோக்குகிறது. எனினும், இன்னொரு விதத்தில் பார்த்தால், செயற்பாடு என்பது, அழகியல், உளவியல் உட்பட்ட எல்லா அளபுருக்களையும் தன்னுள் அடக்குவதாகக் கொள்ளலாம்.

கட்டிடக்கலை, கணிதம், அறிவியல், கலை, தொழில்நுட்பம், சமூக அறிவியல், அரசியல், வரலாறு, தத்துவம், பொன்றவற்றுடன் தொடர்புள்ள, ஒரு பல்துறைக்

களமாகும். விட்ருவியசின் சொற்களில், "கட்டிடக்கலையென்பது, வேறுபல அறிவியல் துறைகளிலிருந்து எழுவதும், பெருமளவு, பல்வேறுபட்ட அறிவுத்துறைகளினால் அலங்கரிக்கப்பட்டதுமான ஒரு அறிவியலாகும்: இதன் உதவியைக் கொண்டே பல்வேறு கலைத் துறைகளினதும் விளைவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன". மேலும் ஒரு கட்டிடக் கலைஞன், இசை, வானியல் முதலிய துறைகளிலும் நல்ல பரிச்சயமுடையவனாயிருக்க வேண்டும் என்பது விட்ருவியசின் கருத்து. தத்துவம் குறிப்பாக விருப்பத்துக்குரியது. உண்மையில், அணுகுமுறை பற்றிக் கருதும்போது, ஒவ்வொரு கட்டிடக் கலைஞனதும் தத்துவம் பற்றிக் குறிப்பிடுகிறோம். பகுத்தறிவியம், பட்டறிவியம், கட்டமைப்பியம், பின்கட்டமைப்பியம் மற்றும் தோற்றப்பாட்டியல் என்பன போன்ற போக்குகள், கட்டிடக்கலையில், தத்துவத்தின் செல்வாக்கைக் காட்டும் சில எடுத்துக்காட்டுகளாகும்.

**இசை**

இசை (About this sound)ஒலிப்பு (உதவி·தகவல்)) (music) என்பது ஒழுங்கு செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட, அழகு ஒலியாகும். இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்று பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, பணிய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசை. இசையை சிரவண கலை எனவும் அழைப்பர். சங்கீதம் என்பது செவிக்கு இன்பம் தரும் தொனி(ஒலி)களைப் பற்றிய கலையாகும். இசையை வடமொழியில் நாதம் என அழைப்பர்.

இசை இன்று பல்வேறு பயன்களைத் தருகின்றது. தற்போது படித்தவர் முதல் பாமரர் வரை இசை பரவி நிற்கின்றது. இணையத்தில் அன்றாடம் பார்க்கப்படும் காணொளிகளில் இருபது விழுக்காடு இசை சம்பந்தமாகப் பார்க்கப்படும் காணொளிகளாகும்.

1. மனதை, இசைய வைப்பது இசையாகிறது.
2. இனிமையாகப் பாடும் பாடல்கள் அல்லது ஓசைகள்
3. புகழ் (ஈதல் இசைபட வாழ்தல்)
4. சங்கீதம் என்று வடமொழியினர் அழைப்பர்.

நாட்டுப்புற இசை என்பது பாரம்பரிய நாட்டுப்புற இசை மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் நாட்டுப்புற மறுமலர்ச்சியின் போது முந்தையவற்றிலிருந்து உருவான

சமகால வகையை உள்ளடக்கிய ஒரு இசை வகையாகும் . சில வகையான நாட்டுப்புற இசை உலக இசை என்று அழைக்கப்படலாம் . பாரம்பரிய நாட்டுப்புற இசை பல வழிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது: வாய்வழியாக பரவும் இசை, அறியப்படாத இசையமைப்பாளர்களுடன் இசை, பாரம்பரிய கருவிகளில் இசைக்கப்படும் இசை, கலாச்சார அல்லது தேசிய அடையாளத்தைப் பற்றிய இசை, தலைமுறைகளுக்கு இடையில் மாறும் இசை (நாட்டுப்புற செயல்முறை), மக்களுடன் தொடர்புடைய இசை.

இசை பெரும்பாலும் தேசிய கலாச்சாரத்துடன் தொடர்புடையது . இது கலாச்சார ரீதியாக குறிப்பாக இருந்தது; ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கலாச்சாரத்திலிருந்து. புலம்பெயர்ந்த குழுவின் சூழலில், நாட்டுப்புற இசை சமூக ஒற்றுமைக்கான கூடுதல் பரிமாணத்தைப் பெறுகிறது. கிரேக்க ஆஸ்திரேலியர்கள் , சோமாலி அமெரிக்கர்கள் , பஞ்சாபி கனடியர்கள் மற்றும் பிறர் முக்கிய நீரோட்டத்திலிருந்து தங்கள் வேறுபாடுகளை வலியுறுத்த முயற்சிக்கும் புலம்பெயர்ந்த சமூகங்களில் இது குறிப்பாகத் தெரிகிறது . அவர்கள் தங்கள் தாத்தா பாட்டி வந்த நாடுகளில் தோன்றிய பாடல்களையும் நடனங்களையும் கற்றுக்கொள்கிறார்கள்.

அவை வரலாற்று மற்றும் தனிப்பட்ட நிகழ்வுகளை நினைவுபடுத்துகின்றன. கிறிஸ்துமஸ், ஈஸ்டர் மற்றும் மே தினம் போன்ற விடுமுறை நாட்கள் உட்பட, வருடத்தின் சில நாட்களில், குறிப்பிட்ட பாடல்கள் வருடாந்திர சுழற்சியைக் கொண்டாடுகின்றன. பிறந்தநாள், திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் பாடல்கள், நடனங்கள் மற்றும் சிறப்பு ஆடைகளுடன் குறிப்பிடப்படலாம். மத விழாக்கள் பெரும்பாலும் நாட்டுப்புற இசைக் கூறுகளைக் கொண்டிருக்கும். இந்த நிகழ்வுகளில் கோரல் இசை குழந்தைகள் மற்றும் தொழில்முறை அல்லாத பாடகர்களை ஒரு பொது அரங்கில் பங்கேற்க வைக்கிறது, இது இசையின் அழகியல் குணங்களுடன் தொடர்பில்லாத ஒரு உணர்ச்சிபூர்வமான பிணைப்பை அளிக்கிறது.

பாடல்கள் வழக்கமாக பல தலைமுறைகளாக நீண்ட காலமாக, வழக்கப்படி நிகழ்த்தப்பட்டு வருகின்றன .

**பாரம்பரிய தொழில்நுட்பம்**

இரும்பு, பொன், வெண்கலம், பித்தளை, வெள்ளி முதலிய உலோகங்களை பயன்படுத்தி பொருட்களை உருவாக்கும் தொழில் நுட்பத்தை உலோகத் தொழிநுட்பம் அல்லது உலோகக்கலை எனலாம். தமிழர்களால் இத்துறையில் பயன்படுத்தப்பட்ட நுட்பங்களும் கருவிகளும் முறைவழிகளும் தமிழர் உலோகத் தொழில்நுட்பம் எனலாம். சங்ககாலம் முதற்கொண்டே தமிழர்கள் இத்துறையில் இயங்கி வருகின்றார்கள். "தமிழகத்தில் கி.மு 700 - கி.பி 200 வரை இரம்புக்காலம் எனப்படுகின்றது. பரணிடப்பட்டது.

தமிழ்நாட்டு உலோகத் திருமேனிகள் ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து தற்காலம் வரை தமிழ் நாட்டுக் கோயில் தேவைகளுக்காக உலோகங்களினால் உருவாக்கப்பட்ட கடவுட் சிலைகள் ஆகும். இவ்வாறு உருவாக்கப்பட்ட திருமேனிகளில் பல பல்வேறு படையெடுப்புக்களின்போது அழிந்து போய்விட்டன அல்லது காணாமல் போய்விட்டன.[1] மேலும் பல, குடியேற்றவாத ஆட்சிக்காலங்களில் இந்தியாவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டுவிட்டன. சில இந்தியாவின் பல அருங்காட்சியகங்களிலும், ஏனையவை தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள கோயில்களிலும் உள்ளன.

தமிழர் நீர்பாசனத் தொழில்நுட்பம் என்பது பண்டைக் காலத்தில் இருந்து இன்றுவரை தமிழர்கள் பயன்படுத்தி வரும் நீர்பாசனத் தொழில்நுட்பங்களைக் குறிக்கிறது. தமிழ்ச் சமூகம் பெரும்பாலும் ஒரு வேளாண் சமூகமாகவே இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக வறட்சிக் காலத்தில் பயிர்ச்செய்கைக்கு தேவையான நீரைப் பெறுவதற்கான பல்வேறு தொழில்நுட்பங்களை அது விருத்தி செய்தது. இத் தொழில்நுட்பம் பல்வேறு பொருளாதார அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியது.

இவை பல விலையுயர்ந்த உலோகங்களால் செய்யப்பட்டிருந்ததனால், இந்துக்கள் அல்லாதோர் தமிழ் நாட்டைக் கைப்பற்றிய காலங்களில், உருவச் சிலைகள் அவ்வுலோகங்களுக்காகக் கொள்ளையடிக்கப்பட்டன. சில சமயங்களில் அவை உருக்கப்பட்டு வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

**வினாக்கள்**

1. நிகழ்த்துக் கலைகள் என்றால் என்ன?
2. நாட்டுப்புற ஆட்டங்கள் குறித்து கட்டுரை வரைக.
3. புழங்குப் பொருட்கள் குறித்து விளக்குக.
4. நாட்டுப்புறக் கட்டடக்கலையை ஆராய்க.
5. நாட்டுப்புற இசை மற்றும் பாராம்பரியத் தொழில் நுட்பத்தை விளக்குக.

## அலகு 5

## நாட்டுப்புறவியல் கோட்பாடுகளும், நவீனமும்

### சங்க இலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கிய கூறுகள்

சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கினைக் காணமுடிகின்றது. நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து தமிழிசைப் பாடல்கள் உருவாகியிருப்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. கலித்தொகை, பரிபாடல்போன்ற சங்க இலக்கியங்கள் செப்பம் செய்யப்பட்டநாட்டுப்புறப் பாடல்களைப் போலவே காணப்படுகின்றன.நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய குறிப்புகள் பல சங்கஇலக்கியங்களில் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் பல பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களை அடியொற்றியவை.

### உடன்போக்கு

தமிழிலக்கியங்களில் உடன்போக்குப் பற்றிய செய்திகள் இடம் பெறுவதைக் காணலாம். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் உடன்போக்குப் போன தலைவியைச் செவிலித்தாய் தேடிப்போவதையும், இடையிலே முக்கோற் பகவரைக் கண்டு தன் மகளைப் பற்றிக் கூறுவதையும் அதற்கு அவர்கள் பதில் கூறுவதையும் பின்வரும் பாடல் விளக்குகிறது.

“எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்

… … … … … … … … … …

என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம்அறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ?” (கலித்தொகை 9)

இதே கருத்து பின்வரும் நாட்டுப்புறப்பாடலிலும் இடம்பெறுவதைக் காணலாம்.

“பூ மரம் வச்சவன்

பொன்னாலே சேவகன் பொய்கையிலே - இந்த

மாமரம் வச்சவன்

தருவான் தருவான்என் மக பழியை

வெட்டின பஞ்சை மிதிக்கக் கூசுவாள் என் மகள் - மெல்லியரே

கல்லாலே கோட்டையும்

காண்டாவனமும் கடந்திட்டாளே

அருபுனக் கள்ளி

அண்டா நடைக்கள்ளி - ஆசைக் கள்ளி

திருகுபுனக்கள்ளி

தேசக்கள்ளி என் மகள்

கள்ளி போன திசை காணீங்களோ”

**அகத்திணை மரபுகளும் நாட்டுப்புறக் காதல் பாடல்களும்**

இலக்கியக் காதலர்கள் சோலையிலும் திணைப்புனத்திலும் சந்தித்து மகிழ்வதுபோல், நாட்டுப்புறக் காதலர்கள் ஆற்றோரம். குளக்கரை வயற்புறம், தென்னந்தோப்பு முதலிய இடங்களில் சந்தித்து மகிழ்கின்றனர். சங்க இலக்கிய அகத்தி;ணைப் பாடல்களில் இடம்பெறும் பல்வேறு துறைகளை ஒத்த செய்திகள் நாட்டுப்புறப்பாடல்களிலும் இடம் பெறுவதாகக் காணலாம். தோழி கூற்று, பாங்கன் கூற்று முதலியன நாட்டுப்புறப் பாடல்களில் பெரும்பாலும் இடம்பெறுவதில்லை. தலைவனும் தலைவியும் நேராகவே பேசிக்கொண்டு தங்கள் காதலை வளர்த்துக் கொள்கின்றனர். நல்லதையும், கெட்டதையும் நேருக்குநேர் எடுத்துச் சொல்லித் தங்கள் விருப்பு வெறுப்புகளை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்கின்றனர். இலக்கியங்களில் பேரிடம் பெற்ற தோழியை நாட்டுப்புறப் பாடல்களில் காணமுடியாது. ஆண்பாடும் காதற் பாடல்களில் ஆணுடைய கூற்றாக அமையும்; நாட்டுப்புறப் பாடல்கள் சங்க இலக்கிய அகப்பாடல் மரபுகளோடு பல்வேறு வகைகளில் ஒத்தும், ஒரு சில நேரங்களில் வேறுபட்டு விளங்கும் தன்மையினை காணலாம்.

பெண்ணின் அழகுக்கு அழகு தருவது அவளது நீண்டு வளர்ந்த கூந்தலாகும். கூந்தலின் நீளத்திற்கும் செறிவிற்கும் மயில் தோகை உவமையாகக் கூறப்படுவதை

“கலிமயில் கலாவத் தன்ன இவள்

ஓலிமென் கூந்தல் நம்வயி-னானே”

(நற்.265)

என்னும் நற்றிணைப் பாடலால் அறியலாம். நீண்டு வளர்ந்த கூந்தலை அழகிய முறையில் தூக்கி முடிந்து கொண்டை போட்ட செய்தியும் இலக்கியத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது. அவ்வாறு போடப்பட்ட கொண்டாள் தோற்றத்தை,

"··· வாழைப்

பூவெனப் பொலிந்த ஓதி"

என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும்.

**நாட்டுப்புறப்பாடல் : அள்ளிமுடிந்த கொண்டை**

நீண்ட கூந்தலையுடைய பெண்ணொருத்தியைக் காதலியாகப் பெற்ற காதலன் ஒருவன் அவளுடைய கூந்தல் நீளத்தையும், அக்கூந்தலை அவள் அள்ளி முடிந்து கொண்டை போடப்பட்டிருக்கும் முறையையும் பற்றி இப்பாடலில் காணலாம்.

"அறுபத்தி நாலு முழல் அள்ளி முடிஞ்ச கொண்டை

அவிழ்ந்த விபரம் பின்னாடி ஏகுட்டி ஏகுட்டி

வேடுவ பொண்ணே அதஎனக்கு சொல்ல வேனும்டி"

தொங்கும் கொண்டை

கிராமப்புற பெண்கள் கோடாலியின் முடிச்சுப் போன்ற அமைப்புடைய கொண்டை போடுகின்றனர். இக்கொண்டையை கோடலிக்கொண்டை என்று குறிப்பிடுகின்றான்.

"கோடாலிக் கொண்டைபோட்டு

கோயிலிக்கு போற புள்ள – உன்

கோடாலிக் கொண்டைக்குள்ளே அடி

கொழுந்திருந்து பாடுதடி"

என்று கூறுகிறான்.

**திரைப்படங்களில் நாட்டுப்பறவியலின் தாக்கம்**

திரைப்படங்களின் வருகைக்கு பின்னர் நாட்டுப்புற பாடல்கள் அருகிவிட்டன. இப்பாடல்களை அழிப்பதில் இராட்சச பலம் பெற்றிருப்பது திரைப்படப்பாடல்களே என்கிறார் ஆறு.அழகப்பன். நாட்டுப்புறப் பாடல்களின் இனிமை, எளிமை,ஓசை நயம், இசை நயம் மிக்கனவாக உள்ளன. எனவே இந்நாட்டுப்புறப் பாடல்களைப் பின்பற்றி அல்லது அதன் சாயலில் பல பாடல்களை திரைப்படங்களில் ஒலிக்கச் செய்கின்றனர்.

"ஆட்டுப்பால் குடிச்சா அறிவழிஞ்சு போகும்னு

எருமைப்பால் குடிச்சா ஏப்பம் வந்து சேரும்னு

காரம் பசுவோட்டி வராண்டி தாய்மாமன்"

என்ற திரைப்படபாடல் வரிகள் நாட்டுப்புறப் பாடல் சாயல் பெற்றதாக உள்ளன.

நாட்டுப்புற கலைகள் நமது திரைப்படங்கள், இசை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் மற்றும் பிரபலமான கலாச்சாரத்தின் மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும் அவர்கள் இருவருக்குள்ளும் உள்ள குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் தான் காரணம் என்று உறுதியாக கூறலாம். ஆரம்பத்தில், பாப் மற்றும் நாட்டுப்புற கலைகள் உள்ளார்ந்த வசீகரமானவை. அவர்கள் தங்கள் செய்திகளைப் பெறுவதில் மயக்கும் விதத்தில், திகைப்பூட்டும் வகையில் வசீகரமாக இருக்கிறார்கள்: நமது பாதுகாப்பைக் குறைத்து, மிக எளிதாக நம் கற்பனைகளுக்குள் நுழைவது எப்படி என்பது அவர்களுக்குத் தெரியும். இரண்டாவதாக, அவை மனித அனுபவத்திற்கு மிகவும் அடிப்படையான சொந்தம் மற்றும் தோழமை உணர்வை உருவாக்க உதவுகின்றன. இறுதியாக, அவை இரண்டும் சமூகத்தின் சமூக, நெறிமுறை மற்றும் உணர்ச்சித் தேவைகளை வெளிப்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்குகின்றன.

இந்தியத் திரைப்பட இசை மற்றும் நடனங்களிலும் நாட்டுப்புற உருவங்கள் அதன் வழியைக் கண்டறிந்துள்ளன. பல நாட்டுப்புற ட்யூன்கள், எடுத்துக்காட்டாக, யாரா சிலி சிலி, கேசரிய பலமா, நவ்ராய் மாஜி, ஜுக்னி போன்றவை பிரபலமான நாட்டுப்புற பாடல்களை அடிப்படையாகக் கொண்டவை. தொழில்துறையின் இரண்டு சிறந்த இசையமைப்பாளர்களான எஸ்.டி.பர்மன் மற்றும் ஏ.ஆர்.ரஹ்மான் ஆகியோரும் நாட்டுப்புற இசையால் நம்பமுடியாத அளவிற்கு தாக்கம் பெற்றுள்ளனர். சுஜாதா படத்திற்காக, பர்மன் சன் மேரே பந்து ரே பாடலுக்காக காஜி கானின் இசையமைப்பை மீண்டும் உருவாக்கினார்.

**பயன்பாட்டு நாட்டுப்புறவியல்**

நாட்டுப்புறவியல் ஆய்வு மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எண்ணத்திய உருவானதே பயன்பாட்டு நாட்டுப்புறவியல் (Applied Folklore). நாட்டுப்புறவியல் அறிஞர்களில் சிலர் பயன்பாட்டு நாட்டுப் புறவியலைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். அறிவியல் துறைகள் அனைத்தும் பயன்பாட்டினைப் பற்றி (applied) ஆராயத் . Applied Anthroplogy, Applied Linguistics அத்துறைகள் விரிந்து பரந்து செயல்படும் போது, நாமும் நாட்டுப் புறவியலைச் சமுகத்திற்குப் பயன்படும் வகையில் (Social relevant) ஆராயவேண்டிய

காலகட்டத்தில் உள்ளோம். நாட்டுப்புறவியலை அறிவியல் துறையாக ஏற்றுக்கொண்டால், நிச்சயம் அதன் பயன் பாட்டினையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டுப்புறவியலுக்கும் பிற துறைக்குமுள்ள உறவைக் கண்டறி (Applied Folklorists) கடமையாகும்.

சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி ஆராயும் போது, இழப்பு, பெற்றது, மாற்றம் பற்றி மிகக் கவனமாக ஆராயப் படவேண்டும். பயன்பாட்டு நாட்டுப்புறவியலைப் புறக்கணித் தால் இவ்வாய்வைச் செய்யமுடியாது. நாட்டுப்புற வியலையும் பயன்பாட்டு நாட்டுப்புறவியலையும் வேறுபடுத்திக் காண்பது இன்றியமையாதது. ஆராய்ந்தவற்றை மக்களுக்குப் பயன்படுத்தும் முறையைப் பற்றியும் ஆராயவேண்டும். அத்தகைய ஆய்வினைப் பயன்பாட்டு ஆய்வு (Applied research) என்பர். ஆய்வைச் சி செயல்வினை ஆய்வு (Action Research) பயன்பாட்டு ஆய்வு (Applied Research) எனப் பகுத்துக் காண்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பயன்பாட்டு ஆய்வு மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைய வேண்டும். நாட்டுப்புறவியலை சமூகத்திற்குப் பயன்படுத்தாவிட்டால், நமது கடமையினின்றும் தவறியவர்களா வோம். தாமஸ் கீரின் போன்றோர் வகுப்பறையில் போதிக்கும் கல்வி வாழ்க்கையோடு தொடர்புடையது இல்லை என்கிறார். நாட்டுப்புறவியல் கல்வி வாழ்வோடு தொடர்புடையது என்கிறார். மருத்துவம், முதியோர் கல்வி, சமூக நலத்திட்டங்களைப் பொது மக்களுக்கு எடுத்துரைக்க நாட்டுப்புறவியலைக் குறிப்பாக நாட்டுப் புறக்கலையைப் பயன்படுத்தலாம். தற்கால நாட்டுப் புறவியல் அறிஞர்கள் கோட்பாடுகளுக்கும் முறைகளுக்கும் மற்ற துறைகளுக்குக் கடமைப்பட்டுள்ளனர். பயன்பாட்டு நாட்டுப்புறவியலில் மதிப்பீடு மிக முக்கியமான தொன்றாகும்.

இருக்கவேண்டும். மாற்றமின்றி முன்னேற்றமில்லை என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. பழங்குடி, சாதி, குழு பற்றிய தனி நிலை ஆய்வுகள் வந்துள்ளன. அச்சமுதாயத்தில் எப்படி நிகழ்ந்துள்ளன என்பதைப் வாய்ப்புள்ளது. ஆய்வு ஆய்வில் பயன்பாட்டு ஆய்வுக்கு நிறைய ஆய்வினைச் சமூகத்திற்கு எவ்வாறு பயன்படுத்த செயல்படத்துவங்கி விட்டவியல், மொழியியல், கணிதத்துறைக்த

எழுத்துமுறை தோன்றாத காலக்கட்டத்திலே வாய் மொழி இலக்கியங்கள் முறைசாராக் கல்வி (Non-formal education) போன்று செயல்பட்டன. இன்றும்கூட

நாட்டுப் புறங்களில் அவ்வாறே செயல்படுவது குறிப்பிடத்தக்கது. குழந்தைப் பாடல்களான நாப்பயிற்சிப் பாடல்கள், எண்ணுப் பயிற்சிப் பாடல்கள், அறிவு வளர்ச்சிப் பாடல்கள், வினா விடைப் பாடல்கள் அனைத்தும் வாய்மொழியாகக் குழந்தைக்குக் கல்வி புகட்டுவன போன்று அமைந்துள்ளன. நீதியை மக்களுக்குப் புகட்ட நாட்டுப்புறக் கதைகள் பயன்பட்டன. இதுபோன்று வாய் மொழி இலக்கியங்கள் மூலம் முறைசாராக் கல்வி போதிக்கப் படுகிறது எனக் கூறலாம். அடிமைப்பட்டுக்கிடந்த நாடுகளில் அந்நியர்க்கெதிரான இயக்கமாக இருந்தது. தேசீய கலாச்சார எழுச்சிக்குப் பக்கபலமாக இருந்தது. அயர்லாந்து, பிலிப்பைன்ஸ், கியூபா நாட்டு மக்களின் விடுதலை எழுச்சிக்கு நாட்டுப்புறப் பாடல்கள் பயன்பட்டன. வியட்நாம் வீரர்களைக் கிளர்ந்தெழச் செய்தது நாட்டுப்புறப் பாடல்களே. அமெரிக்காவில் வியட்நாம் யுத்த எதிர்ப்பினையும் அதனால் ஆயிரக்கணக்கான அமெரிக்க வீரர்கள் இறந்து படுவதைக் கண்டு அந்நாட்டைச் சார்ந்த ஜோன்பயஸ், பொம்டிலன் போன்றோர் பாடல்கள் இயற்றி மக்களிடையே பரவச் செய்தனர். இப்பாடல்களால் அமெரிக்க மக்களிடையே ஒருவித விழிப்புணர்ச்சி ஏற்பட்டது குறிப்பிடத் தக்கது. 'வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்குக் கப்பமேது?" எனக் கட்டபொம்மன் முழங்கியதை, ஆங்கிலேயக் ஆட்சிக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதையும் அறிவோம்.

நாட்டுப்புறப் பண்பாட்டை உணர்வு பூர்வமாகச் சமூக எழுச்சிக்குப் பயன்படுத்தியவர் பாரதியே. உருவம், உள்ளடக்கம் என இரண்டாகப் பகுத்துச் சமுதாயத்திற்குப் பயன் படக்கூடியது எது என அறிதல் வேண்டும். அஃது பயன்பாட்டு நாட்டுப் புறவியலாளரின் கடமையாரும். சுடலை மாடன், இசக்கி, முத்துப் முதலியவற்றைப் பாடிய வில்லுப்பாட்டு இன்று சமகால பிரச்சனைகளையும் கூறும் வடிவமாக மாறியுள்ளது.

முதியோர் கல்வியின் சிறப்பை வில்லுப்பாட்டு மூலம் விளக்கலாம்.

'சுயதேவைப் பூர்த்தி செய்திடவே
தூண்டுகோல் முறை சாராக்கல்வி
கேள்வி ஞானம் எழுத்தறிவு
கிளர்ந்து எழுந்திடச் செய்திடுமே'

'உழைத்துக் கொண்டே படிப்பதற்கு வழியை வகுக்கும்

முறை சாராக் கல்வி, முதியோர்க் கல்வி

உழைத்து ஓய்ந்திருக்கும் நேரம்-கற்றிடலாமே

முறை சாராக் கல்வி, முதியோர் கல்வி

சுற்றுப்புறச் சூழ்நிலையை ஆய்ந்தளித்திடும்

முறை சாராக் கல்வி முதியோர்க்கல்வி'

'தற்குறி கைநாட்டென்று

தாழ்ந்துள்ள நம்மவர்க்கு

அற்புதச் சக்தியடி கிளியே

அறிவைத் துவக்கும் கல்வி"

நாட்டுப்புறக்கலைகள் மூலம் வயதுவந்தோர் கல்வியைப் புகட்டுவதுபோல், நாட்டுப்புறக்கலைகள் மூலம் மக்களுக்குச் சமூக நலத்திட்டங்களையும் விளக்கலாம். வில்லுப்பாட்டு மூலம் ஐந்தாண்டுத் திட்டங்களும் குடும்பக் கட்டுப்பாடும் தேசிய வளர்ச்சித் திட்டங்களும் தொலைக்காட்சியில் காட்டப்படு கின்றன. அக்காலத்தே கலைவாணர் வில்லூப்பாட்டு மூலம் மதுவிலக்குப் பிரச்சாரமும் சுப்பு ஆறுமுகம் காந்தி மகான் கதையையும் கூறினர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டங்களை விளக்கப் பெரும்பாலும் நாட்டுப்புறக்கலையான வில்லுப் பாட்டைப் பயன்படுத்துகின்றனர். இக்கலைகள் மூலம் சிறுசேமிப்பு (small savings) கூட்டுறவின் நன்மை, பசுமைப் புரட்சித் திட்டம் முதலியவை விளக்கப்படுகின்றன. பொது மக்களின் ஆர்வத்தை தூண்டக்கூடிய கலை நிகழ்ச்சிகளில் இக் கருத்துக்களைக் கூறி மக்களை இதில் ஈடுபடச் செய்வது எளிதானதாகும், பயன்தரக் கூடியதாகும் முடியும். இவ்வாறு திருத்துவதைக் கூத்துச் சிகிச்சை (drama therapy) என அணு க்கின்றனர் நாட்டுப்புறக் கலையில் ஈடுபடும். போது அவர்களது கவனம் வேறு திசையில் திருப்பப்படுகிறது. அது ஆக்கப் பணிக்குப் பயன்படும்.'

வயது வந்தோர் கல்விக்கு (Adult Education) நாட்டுப் புறவியலைப் பயன்படுத்தலாம். வயது வந்தோர் கல்வியில் பாட்டுப்புறப் பாடலும் நாட்டுப்புறக் கலையும் பயன்படுத்தப் படுகின்றன. வயதுவந்தோர் கல்வி மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவதோடு மக்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனை கட்கு வழி காணவும் கிராமப் பொருளாதாரம் உயரவும் வழி வகுக்கின்றது. வயது வந்தோர்

கல்விக்கு வேறுபட்ட அணுகுமுறை தேவைப்படுகின்றது சிந்தனையைத் தூண்டும் விதத்தில் அறிவுப்பூர்வமாக இருத்தல் வேண்டும். நாட்டுப்புறப் பாடல் மூலம் உணர்த்துவது ஒரு வழியாகும். இசையுடன்' பாடலைப் பாடும்போது எளிமையாக அவர்களது மனதில் பதிகிறது. நாட்டுப்புறப் பாடல்களின் இசையையும் மெட்டையும் கையாண்டு உணர்த்தலாம். வயதுவந்தோர் கல்வியின் அவசியத்தை

'ஏமாத்தும் முதலாளி எழுதும் கணக்க நம்பிக்கிட்டு ஓடாக உழைக்கிறீங்க மூணுகாசு மிச்சமில்லை கண்ணிருந்தும் படிக்காமலே கைநாட்டு வைக்கிறீங்க படிப்பு மட்டும் இருந்திச்சின்னா ஏமாத்தமே இருக்காதுங்க' இவற்றின் மூலம் எண்ணறிவு, எழுத்தறிவு முதலியவற்றையும் கற்றுத்தர வேண்டும்.

நாட்டுப்புறக் கலைகள் மூலமும் கல்வி கற்பிக்கலாம். நாட்டுப்புறக்கலைகள் மக்கள் கலைகள். இக்கலைகள் பேச்சு மொழியிலே அமைந்துள்ளன. நாட்டுப்புறக்கலை ஒரு சமூகச் செயல் ஆகும். மக்களது எண்ணங்கள். எழுச்சி, செயல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் கூட்டு முயற்சியாகும். சமூக மாற்றங்களைக் கொணர நாட்டுப்புறக்கலைகளைப் பயன்படுத்தலாம். இக்கலைகளில் நாட்டுப்புற மக்களுக்கு ஒரு ஈடுபாடு உண்டு. ஈடுபாடு உள்ளவற்றின் மூலம் கற்பித்தால் நிச்சயம் அதற்கொருபலன் உண்டு

**நாட்டுப்புறவியலும் பிறவியலும்**

நாட்டுப்புறவியல் இன்று தனியொரு துறையாக அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. இத்துறை ஆய்வு இன்று பல்துறை இணைப்பு ஆய்வாக (Interdisciplinary Study) மலர்ந்துள்ளது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவனவே நாட்டுப்புறவியல். நாட்டுப்புறவியல் துறை மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவ இயல், மொழியியல், வரலாறு முதலிய பலதுறைகளோடும் பின்னிப் பிணைந்துள்ளது. எனவேதான் நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளை ஆராய்பவனைச் சமூக விஞ்ஞானி (Social Scientist) என்கின்றனர். மனித சமுதாயத்தில் காணப்படும் அனைத்து வழக்காறுகளையும் நாட்டுப்புறவியல் பேரறிஞன் ஆராய்வதால், நாட்டுப்புறவியல் துறை அனைத்துத் துறை களோடும் தொடர்பு கொண்டுள்ளது.

நாட்டுப்புற மக்களின் வழக்காற்றின்மூலம் சமூக-பண் பாட்டுக் கூறுகளை ஆராய்கின்றோம். மானிடவியலாரும் சமூக வியலாரும் பண்பாட்டினைப்பற்றி, பல கோணங்களில் ஆராய் கின்றனர். ஓர் இனத்தாரைப் பற்றி ஆராயும் மானிடவியல் பேரறிஞன், அவர்களது பழக்க வழக்கங்கள், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றைக் காட்டும் அவர்களது நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், நடனங்கள் முதலியவற்றைப் பற்றியும் அறிந்திருந்தால் தான் அவர்களது இனவியல் வாழ்வு முறையை (Ethnological) தெளிவாகவும் விரிவாகவும் வரையறுத்துக் கூற முடியும். வரலாற்றை அறியவும் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவும் சமூக அமைப்பை ஆராயவும் நாட்டுப்புறவியல் பெருந்துணை புரிகிறது. புழங்கும் பொருளால் அறியப்படும் பண்பாட்டினை (Material culture) இவ்வியல் மிகத் துல்லியமாகக் காட்டுகின்றது. கதைப்பாடல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் வரலாற்றுப் பேரறிஞனுக்கு உதவியாக உள்ளன. (Mythology) (Primitive Religion) இடையேயுள்ள நெருக்கமான உறவைக் காட்டுகின்றது. நாட்டுப்புற மக்களது சமய நம்பிக்கை களைப்பலத் தெள்ளத் தெளிவாக அறிகிறோம். உளவியல் பேரறிஞர் கௌண்ட் பிராய்டு ஓடிபஸ் மனப்பாங்கினைக் காட்டப் புராணங்களையும் நாட்டுப்புறக் நாட்டுப்புற இயலை மக்களது உணர்ச்சிகளையும் மனப்பாங்கினையும் எடுத்தியம்பும் இயல் என உளவியல் பேரறிஞர்கள் கூறுகின்றனர். நாட்டுப்புற இலக்கியங்கள் அனைத்தும் பேச்சு மொழியில் அமைந்திருப்பதால் இன்றைய மொழியியலாளருக்கு அப்பேச்சு மொழி ஆய்வுக்குப் பயன் படுகின்றது.

**நாட்டுப்புறவியலும் மானிடவியலும் (Folklore and Anthropology)**

தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை மனிதனைப் பற்றிய உருவத்தோற்ற, பண்பாட்டு வளர்ச்சியை ஆராய்வதே மானிட வியலாகும். தொல் பொருள் மனிதனைப்பற்றி ஆராயும் மானிடப் பரிணாமம் (Human evolution) இனக்குழுக்களின் உருவ தோற்றத்தை ஆராயும் உருவத்தோற்ற மானிடவியல் (Physical anthropology), வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனின் சமூகவாழ்க்கையை ஆராய்கிற தொல்பொருளியல், மனிதப்பன் பாடு அதன் மூலக்கூறுகள், அமைப்பு, மாற்றங்கள் போன்றவற்றை ஆராயும் பண்பாட்டு மானிடவியல் அல்லது சமூக மானிடவியல் (Cultural or Social anthropology) ஞா அ பிரிவுகளாகும். பொதுவாக மானிடவியல் எழுத்தறிவிற்கு முற்பட்ட மக்களுடைய பண்பாட்டினை ஆராய்வதுடன் அமைகிறது.

மனிதனுக்கு இருவகையான பாரம்பரியம் உண்டு. ஒன்று உயிரியற் பாரம்பரியம் (Biological inheritance) மற்றது சமூகப் பாரம்பரியம் (Social inheritance). சமூகப் பண்பாட்டு மானிடவியலில் மனிதனின் வாழிடம், கால்வழி, தொழில், சமூக அமைப்பு. இரத்த உறவுமுறை, தனிமனித வாழ்வின் படிகளான பிறப்பு, பூப்பூ திருமணம், இறப்பு என்பன, சமூக வாழ்வில் பெரும் பங்கு, குடும்பம், சொத்துரிமை, சமயம், சடங்குகள், நம்பிக்கைகள் என்பனவற்றை ஆயும் ஆய்வினையே நாட்டுப்புறவியலும் ஆராய் கின்றது. நாட்டுப் புறவியல் மானிடவியலின் ஒரு பிரிவாக இருப்பதுடன் பல்வேறு மானிடவியல் கூறுகளையும் தம்முள் கொண்டு விளங்குகிறது.

ஆரம்ப காலத்தில் மொழியியலை எவ்வாறு மானிடலிய காளர்கள் வளர்த்தார்களோ அதேபோன்று நாட்டுப்புற வியலையும் மானிடவியல் பேரறிஞர்களே முதலில் வளர்த்தனர். நாட்டுப்புற இயலும் மானிடவியலும் மிக நெருங்கிய தொடர் புடையவையாகும். இரண்டிற்கும் ஓர் எல்லை வகுப்புது மிகவும் சிரமமானதாகும். இவ்விரண்டு இயல்களும் மனிதப் பண்பாட்டை ஆராய்வனவாகும்.' ஆன்ட்ரு லாங்க் (AndrewLang) இவ்வியலை மரபு எச்சமாகக் கருதுகின்றார். மக்களது நம்பிக கைகள், பழங்கதைகள், வழக்கங்கள் எச்சக் கூறுகளாகக் கருதப் படுகின்றன. நாட்டுப்புறவியல் மரபுவழி சமூக அமைப்பிலும் புழங்குபொருள் பணபாட்டிலும் கவனம் செலுத்துகின்றது. நாட்டுப்புறவியலாளன் பிறப்பு முதல் இறப்பு (தாலாட்டு முதல் ஒப்பாரி) வரையிலுள்ள சடங்குகளை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் ஆராய்கிறான். பண்பாட்டு மானிடவியலாளன் சமூக அமைப்பின்கீழ் இவற்றை ஆராய்கிறான். மானிடவியலாளர் ஓர் இனத்தின் பண்பாட்டினை ஆராயும்போது அவ்வின மக்களிடையே காணப்படும் பழங்கதைகள், நம்பிக்கைகள் முதலியவற்றை ஆராயாவிட்டால் அவரது ஆய்வு முழுமை பெறாது. மரபு வழிப்பட்ட நம்பிக்கைகள், கலை, கைவினைப் பொருட்கள் சடங்குகள், பழக்கவழக்கங்கள் முதலியன ஆய்வுகள் நாட்டுப்புறவியலுக்கும் மானிடவியலுக்கும் பொதுவானவை யாகும். நாட்டுப்புறவியல் ஓர் இனத்தின் அல்லது குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டை முழுமையாக ஆராய்வதில்லை. இதுவே பண்பாட்டு மானிடவியலுக்கும் நாட்டுப்புறவியலுக்குமுள்ள வேறுபாடு ஆகும்.

பழக்கவழக்கம், நம்பிக்கை, சடங்குகளில் காணப்படும் எழுதப்படாத மரபுகளை நாட்டுப்புறவியல் ஆராய்கின்றது.

**நாட்டுப்புற இயலும் சமூகவியலும்**

சமூகத்தைப் பற்றிய அறிவியல் சமூகவியல் எனப்படும். சோஷியாலஜி' என்ற சொல் சொஸைடாஸ் (சமூகம்) எங்ம்ந்ற சொல்லினின்றும் என்பவர்தாம் 'லோகாஸ்' (படிப்பு) என்ற கிரேக்ன்ற உருவானது. ஆகஸ்ட் காம்டே (கி.பி. 1798-1857) முதன் முதலில் இச்சொல்லைப் பயன்படுத்தினார். தெளியெனித்திக்கேர் எமனித சமுதாயத்தையும் அராய்க்கிறையே குளுக் நடைமுறைகளுகாண்டுள்ளது. நம்பாய்களும். வழக்காறுகளும் நடைமுறைகளும் சமூக நிறுவனங்களும் ஆராயப் படுகின்றன. சமூக நிறுவனங்கள் சமயம். அரசியல், பொருளாதாரம், குடும்பம் இவற்றுடன் நெருங்கிய தொடர் புடையதாகும். இவற்றின் இயக்கத்தையும் இயக்காற்றலையும் ஆராய்வதே சமுகவியலின் தலையாய பணியாகும். நாட்டுப்புற வியலின் சில கூறுகளையும் சமூகவியல் அடிப்படையில் காண்கின்றனர். நாட்டுப்புறவியலாளரும் சமூகவியலாளரும் சமூக அமைப் பினைப்பற்றி ஆராய்கின்றனர். பழமொழிகளும் கதைகளும் சாதி அடிப்படையிலமைந்த சமூக உறவை விளக்குகின்றன. சிக்கலான மனப்பான்மையைக் (Complex attitudes) குறித்து ஆராய, நாட்டுப் புற இலக்கியங்கள் உதவுகின்றன. சமூகத்தில் காணப்படும் பெரும்பாரம்பரிய மரபு (Great tradition) சிறு பாரம்பரிய மரபு (Little tradition) முதலியவற்றிற்கிடையே உள்ள சிக்கலான உறவை நாட்டுப்புறவியல் விரிவாக விளக்கிக் காட்டுகிறது. சமூகவியல் வேளாண்மைத் தொழில் செய்வோரைப் பற்றி ஆய்வதில்லை. ஆனால், நாட்டுப்புறவியல் நாட்டுப்புற மக்களான விவசாயப் பெருங்குடி மக்களைப் பற்றித் தான் முழுக்க முழுக்க ஆய்கிறது. நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் பாடல்கள், கதைகள் பழமொழி விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக்கொண்டு நாட்டுப்புறவியல் பேரறிஞன் அவர்களது வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறான். இந்நிலையில் நாட்டுப்புறவியல் ஆய்வாளன் சமூகவியலாளர்க்கும் மானிடவியலாளர்க்கும் தரவுகளை (data) அளிக்கிறான். நகர்ப்புற மக்களுக்கும் நாட்டுப்புற மக்களுக்கும் இடையே பண்பாடு, பண்டமாற்று முதலிய அனைத்திலும் கொடுப்புவினை உண்டு.

கொள்வினை, சமூக வாழ்க்கையைப் பற்றி முழுமையாக அறியக் குடும்பம், வழக்கம், ஒழுக்கம், மதம் போன்றவற்றை ஆராய்தல் அவசியம். சமூகவியலாளர் இதனை சமூகத்தின் நிறுவன அமைப்பு என்பர்.

குடும்பம் சமூகத்தின் மூலக்கூறு என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். குடும்ப அமைப்புகளைக் கொண்டு கூட்டு குடும்பம், தனிக்குடும்பம் என இருவகைப் தாலாட்டுப்பாடல்கள் மூலம் குடும்ப உறவு சடங்குகளையும் அறிந்து கொள்ளலாம். இன்றைய கூட்டுக்குடும்ப அமைப்பு மறைந்து தனிக்குடும்ப அமைப்பை நோக்கிச் செல்வதை நாட்டுப்புறப் பாடல்கள்மூலம் அறிகிறோம். பலதார மணம் அருகி ஒருதார மணத்தை நோக்கிச் செல்லும் சமுதாயத்தையும் நாட்டுப்புறவியல் மூலம் அறிகிறோம். வாழ்வுத் தெநடர்பான பழக்க வழக்கங்கள் சடங்குகள், சாவுத் தொடர்பான பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றையும் நாட்டுப்புறவியல் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. சின்னத்தம்பி புகழைக்கண்டு மேல் சாதிக்காரர்கள் கொன்ற சாதிப்பிரச்சினையையும், பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையைக் காட்டும் நல்லதங்காள் கதையையும், வாரிசு உரிமையைக் காக்க மகனைக் கொல்கின்ற சின்னநாடான் கதையையும் சமூகத்தில் காண்கிறோம். ஒவ்வொரு சாதியினரின் இயல்புகளையும் பழமொழி படம் பிடித்துக் காட்டுகின்றது. நாட்டுப்புறப் பாடல்கள் சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக உள்ளன. நாட்டுப்புறக் கதைகள் சமூகத்தையும் அதன் உறுப்பான குடும்பத்தையும் அவற்றில் நிலவும் உறவுகளையும் பிரச்சினையையும் சுட்டிக் காட்டுகின்றன. கிராமங்கள் அனைத்தும் சாதி அடிப்படை சமூதாய அமைப்பு என்பது நாட்டுப்புறவியல் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. சமுதாயக்கிளர்ச்சியையும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிகிறோம். நாட்டுப் புறவியல் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது தெள்ளத் தெளிவாக விளங்கு கிறது.

**நாட்டுப்புறவியலும் வரலாறும்**

கதைகளும் கதைப் பாடல்களும் பல வரலாற்றுச் செய்திகளை நமக்கு அளிக்கின்றன. கடந்த காலத்தைப் பற்றிய எந்தச் செய்தியும் பின்னர் வரலாறாகப் பரிணமிக்கின்றது. எனவே தான் 'இன்றைய செய்தி நாளைய வரலாறு' எனக் கூறுகின்றனர். ஆப்ரிக்க நாட்டு வரலாற்றின் ஒரு பகுதி வாய்மொழியாக வழங்கப்

படும் கதைப் பாடல்களை மீட்டுருவாக்கம் செய்ததாகும். வரலாறும் நாட்டுப்புறவியலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன.'

மனிதனுடைய கடந்த காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் நாட்டுப்புறவியலை வரலாற்று அறிவியல் (Historical science) என்று கூறுவர். வரலாற்றிற்குக் கல்வெட்டுக்களும் கூறுவதால், செப்புப் பட்டயங்களும் எழுத்திலக்கியமும் சான்றாகத் திகழ்வன பண்பாட்டு வரலாறு நெருங்கிய தொடர்புடையதாகும். வரலாறும் நாட்டுப்புறவியலும் குறிப்பாக மக்களுடைய வரலாற்றுப் எழுதப்படாத நாட்டுப்புறவியல் பேரறிஞரும் பண்பாட்டு வரலாற்று மீட்டுருவாக்கத்தில் (Reconstruction oகள். cultural history) அதிக ஈடுபாடு உடையவர்கள். இந்திய நாட்டுத் தோல் வரலாற்றையறிய (i) மரபு (ii) தொல் பொருள் ஆய்வு (i) ஒப்பு இலக்கியம் முதலியவற்றைச் சான்றுகளாகவு பயன்படுத்துகின்றனர். மரபு என்பது நாட்டுப்புறவியலுக்கும் வரலாற்றிற்கும் பொதுவானதாகும்." வாய்மொழி நாட்டுப்புறவியலின் உயிர்நாடியாகும். மரபு

நாட்டுப்புறக் கதைகள் மூன்று வகை வரலாற்றினை எழுதத் துணை புரிகின்றன:

i. நாட்டின் பொது வரலாறு

ii வட்டார வரலாறு

iii. குடும்ப வரலாறு

நாட்டுப்புற இலக்கியங்கள் மூலம் ஒரு நாட்டின் வரலாற்றையும் அரசியல், சமூக வரலாற்றையும் அறிந்துகொள்ள லாம். கதைப்பாடல்களில் வரலாற்றுக் கதைப் பாடல்கள் (Historical ballads) வரலாற்றையறிய பெருந்துணையாக உள்ளன. இராமப்பய்யன் கதைப் பாடல் (கி.பி. 1623-59) சடைக்கத் தேவனுக்கும் திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பய்யனுக்கும் நடந்த போரை விவரிக்கின்றது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த முதல் வீரன் கட்ட பொம்மன் (கி.பி. 1761-1799) எனலாம். கட்டபொம்மன் கதைப் பாடல்மூலம் கட்டபொம்மன் கோட்டை கட்டிய வரலாறு. பாஞ்சாலங்குறிச்சிக்கும் எட்டையபுரத்துக்கும் ஏற்பட்ட பகைமை, ஆங்கிலேயருக்கும் கட்டபொம்மனுக்கும் ஏற்பட்ட

மோதல், வெள்ளையம்மாளின் வீரம் அனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கடாக்டர் நா. வானமாமலை அவர்கள் வரலாற்றுக் கதைப் பாடல்களின் துணைகொண்டு மூன்று வரலாற்றுக் கட்டது. களைச் சுட்டிக் காட்டுகிறார்.

I.பாண்டியர்களுக்கும் கன்னடியர்களுக்கும் போர் ஐவர் ராசாக்கள் கதை கன்னடியன் படைப்போர்

II. மதுரை நாயக்கர்களும் மறவர்களும் போரிடல் இராமப்பய்யன் அம்மானை.

III. பாளையக்காரர்களும் பிரிட்டிஷ்காரர்களும் போரிடல் கட்டபொம்மன் கதைப்பாடல்.

வரலாற்றுக் கதைப் பாடல்கள் மூலம் நாட்டுப்புறவியல் வரலாற்றுத் துறையோடு கொண்ட தொடர்பினை நன்கு அறியலாம்.

**நாட்டுப்புறவியலும் உளவியலும் (Folklore and Psychology)**

'மனித நடத்தை' பற்றிய ஆய்வு உளவியல் எனப்படும். சமூக வாழ்வில் மனித உறவுகளைப்பற்றி' அறிந்து கொள்வதற்கு உளவியல் அறிவு துணையாக அமைகிறது. உளவியல் முதலில் தன் ஆன்மாவையும் பிறகு உள்ளத்தையும் பிறகு நனவு நிலையையும் இழந்து தற்போதைய நடத்தையைக் கைக் கொண்டிருக்கிறது என்று உளவியலுக்கு உட்வொர்த் (Woodworth) விளக்கம் தருகிறார். மனிதனைப் பற்றிய உண்மைகளை விளக்கும் அறிவியல் துறைகளுள் ஒன்றே உளவியல் என்பது ஜான்டியூயின் (John Dewey) கருத்தாகும். மனிதனின் ஒவ்வொரு நடத்தையும் ஏதோவொரு குறிக்கோளோடு அமைகிறது என்றும், மனிதனின் எல்லாவித நடத்தைகளையும் இயல்பூக்கங்களே ஆக்குகின்றன. என்றும் வில்லியம் மக்டூகல் விளக்கம் தருகிறார். மனித நடத்தை இயல்பாக மரபினால் பெற்ற நடத்தை, மற்றொன்று சூழ்நிலையின் வாயிலாகக் கற்ற நடத்தை என இரு வகைப்படும். இயல்பாக மரபினால் பெற்ற நடத்தைக் கோலங்களே இயல்பூக்கங்கள் எனப்படுகின்றன. மனிதர்களின் எல்லாச் செயல்களுமே வாழ்க்கை இயல்பூக்கம், இறப்பு இயல் பூக்கம் என்ற இரண்டு இயல்பூக்கங்களின் அடிப்படையில் தான் இயங்குகின்றன என சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud) கூறுகிறார். நாட்டுப்புற இயல் மரபு எச்சங்களைப் பற்றி ஆராய்கிறது.

அழிவது பற்றியும் புது மரபுகள் தோன்றுவது பற்றியும் அவ்வாறு காட்டுப்புறவியலார் மாற்றம் பற்றியும் ஆராய வேண்டும். வழக்கங்களைப்பற்றி ஆராயும்போது ணர்ச்சிகளைப்பற்றியும் மாபெச்சங்களை மானிடவியல் (Emotions)

ஆராயவேண்டும். ஆராயும்போது உளவியல் அடிப்படையிலும் அடிப்படையிலும் ஆராயவேண்டும். தனிப்பட்ட வர்களது வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவைகள் மரபினால் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றை மரபு வழி என்றும், உளவியல் வழி என்றும் இருவகையாகப் பகுப்பர். மரபு வழிப் பழக்கங்களும் நம்பிக்கைகளும் சடங்குகளும் மக்களது வாழ்வில் பெரும் பங்கு வகிப்பதுடன் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வாழ்ந்து வளர்ந்து வருபவைகளாகும். உளவியல் வழியானது நம்பிக்கைகளின் தோற்றத்தைப்பற்றியும் அடிப்படைப் பற்றியும் ஆராய்கின்றது. மக்களது நடத்தையானது மரபு வழிப் பட்டதாகும். வழக்கங்கள் தனிப்பட்டவர்களது செய்கையினைக் கட்டுப்படுத்துகின்றன. பண்பாடு மக்களது நடத்தையினைத் தீர்மானிக்கின்றது. கலை, புராணம், மரபு முதலியவற்றை நம் முன்னோரிடமிருந்து நாம் பெறுகிறோம். ஆப்ரஹாமும் ஒட்டரங்கும் (Abraham and Otta Rank) புராணவியலை உளவியல் பகுப்பாய்வு செய்துள்ளனர். கலைப்பொருட்கள், புரணங்கள் முதலியவை குறியீட்டை அறிவதற்குப் பெருந்துணை செய்கின்றன என உளவியலார் கருதுகின்றனர். நாட்டுப்புறக் கதைகள் மூலம் ஒரு சமூகத்தின் பண்பாட்டையும் மக்களது உணர்வுகளின் வெளிப்பாட்டையும் குறியீட்டையும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

உடல் உழைப்பால் வேலை செய்யும் உழைக்கும் வாக்கத்தினர் உடல் சோர்வு மட்டுமின்றி உளச்சோர்வும் அடை கின்றனர். சோர்வையும் துன்பத்தையும் மறக்க இசைக்கின்றனர். சிற்றின்பத்தையும் இணைத்துப் பாடும்போது, ஏதோ ஒரு வகையில் சுய இன்பம் பெறுகின்றனர். இஃது துன்பத்தைக் குறைக்கிறது எனபதைச் சிக்மண்ட் பிராய்டு அவர்கள், 'லிபிடோ' (Libido) என்ற கோட்பாட்டின்படி விளக்குகின்றார்.

மனித இனம் ஆரம்ப காலத்தில் இயற்கையுடன் போராட வேண்டியிருந்தது. இயற்கையைப் போல் செய்தால் இயற்கை தனக்குப் பணிந்து தன் ஏவல் கேட்கும் என மனிதன் நினைத்தான். இயற்கை தமக்கு உதவி செய்ய வேண்டுமாயின், தாமும் இயற்கையைப் போலவே நடக்கவேண்டுமென்றும், தாம் செய்வதைப் பார்த்து அது போலச் செய்யும் என்றும் நம்பினர்.

**நாட்டுப்புற இயலும் மொழியியலும் (Folklore and Linguistics)**

மனிதனின் பிறப்போடு பிறப்பாய் வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்து நிற்பது மொழி. தமது கருத்தைப் பிறருக்கு அறிவிக்கும் கருவியாக இருப்பது மொழி, மனித வாழ்விலும் நாகரிகத்திலும் மொழியின் பங்கு மிகச் சிறப்பானதாகும். அம்மொழியைப் பற்றிய ஆய்வை மொழியியல் என்கிறோம். ஒரு மொழியின் இயல்பை உள்ளாவாறு ஆராய்ந்து கூறுவது விளக்க மொழியியல், பல்வேறு காலங்களில் அடைந்த மாற்றத்தை ஆராய்வது வரலாற்று மொழியியல் மொழியில் ஏற்படும் மாற்றங் களை ஒலியனியல் மாற்றம், உருபனியல் மாற்றம், சொற்றொடரமைப்பு மாற்றம், சொல் பொருள் மாற்றம் என்ற பிரிவின் கீழ் ஆராயலாம்.

நாட்டுப்புறவியலுக்கும் மானிடவியல், சமூகவியல் முதலிய வற்றிற்குமுள்ள தொடர்பை நோக்க, நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்குமுள்ள தொடர்பு மிகக் குறைவானதேயாகும். அதுவும் ஒரு பக்கத் தொடர்பாகும், 19 ஆம் நூற்றாண்டில் இவ விரண்டு துறைகளும் வளர்ந்தபோது, மொழியியல் அறிஞர்கள் இத்துறையில் ஈடுபாடு கொண்டனர். மொழியியல் ஆய்வு நெறி முறை நாட்டுப்புறவியல் ஆய்வு முறைக்கு மாதிரியாக அமைந்தது. பின்னிஸ் ஆய்வுக் கோட்பாட்டில் மொழியியலில் பயன்படுத்தப் படுத்தப்படுதல் குறிப்பிடத்தச்சது.

நாட்டுப்புறவியலின் தந்தை எனக் கருமப்படும் ஜேக்கப் கிரீம் (கி.பி. 1785-1863) அவர்கள் மொழிநூல் (Philology) துறையைச் சார்ந்தவர். இவர் மொழியியலில் பயன்படும் ஒப்பு ஆய்வை நாட்டுப்புற இயலுக்கும் பயன்படுத்தினார். மொழியை மீட்டுக் வாக்கம் செய்ததுபோன்று, புராணங்களையும் மீட்டுருவாக்கம் செய்து அது தோன்றிப் பரவிய நாடுகளைப் பற்றி ஆய்வு செய்தார்.வட மொழியிலும் ஒப்பாய்விலும் வல்லுநரான மாக்ஸ் முல்லர் (கி.பி. 1823-1900) இத்துறையிலும் ஈடுபட்டு ஜேக்கப் கிரீமின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் புராணங்களை ஆராயலானார்.

ஒப்பு ஆய்வு நெறிமுறைகள் நாட்டுப்புறவியலில் 2 காணப்படுவதை மறுக்கமுடியாது. 20 ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் அமெரிக்க நாட்டு மானிடவியல் பேரறிஞர் போவாஸ் (Boas) போன்றோர்கள் அமெரிக்க இந்தியர்களிடையே

காணப்படும் நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து மொழி ஆய்வு செய்தனர். நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்குமுள்ள தொடர்பு வளரலாயிற்று. நாட்டுப்புறவியலில் பயன்படுத்தப் (Structural method) மொழியியல் முறையானது நாட்டுப்புறவியலுக்கு மாதிரியை வழங்கியது.

நாட்டுப்புற இலக்கியங்கள் பேச்சு வழக்கினை அடிப்படை யாகக் கொண்டிருப்பதால், மொழியியலாளர்கள் பேச்சுத் தமிழை ஆராய்ந்து, விளக்க இலக்கணம் (Descriptive grammar) எழுதுகின்றனர். நாட்டுப்புறப்பாடல்களைக் கூர்ந்து நோக்கின் அந்தந்த வட்டார வழக்கினைக் ணலாம். பேச்சுத்தமிழில் காணப்படும் மாற்றங்களையும் ஆவது நூற்றாண்டைச் சார்ந்த இராமப்பய்யன் அம்மானைமூலம் அக் காலப்பேச்சு வழக்கை நன்கு அறிகிறோம். 'வைப்பாளன்' போன்ற வழக்கிறந்த சொற்களையும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் சேகரிக்க முடிகின்றது. சமூக மொழியியல் ஆய்வுக்கும் இப் பாடல்கள் பெரிதும் பயன்படுகின்றன. சமூகத்தில் காணப்படும் வேறுபாட்டிற்கேற்ப அவர்களது பாடல்களிலும் வேறு பாட்டினைக் காண்கிறோம்.

நாட்டுப்புறவியலுக்கும் மொழியியலுக்கும் உள்ள தொடர் பினை அமைப்பியல் பள்ளி (Structural School) தோன்றியது மூலம் நன்கு அறியலாம். 1960 ஆம் ஆண்டளவில் உருவான அமைப்பியல் கோட்பாடு இன்றைய நாட்டுப்புற ஆய்வில் மிகச் சிறந்த கோட்பாடாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு நாட்டுப்புறவியல், மானிடவியல், சமூகவியல் உளவியல், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. எனவே நாட்டுப்புற இயல் ஆய்வு என்பது இன்று பல்துறை இணைந்த ஆய்வாகப் (Interdisciplinary study) பரிணமித்துள்ளது.

**நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் போன்றவற்றின் இன்றைய நிலை**

நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் போன்றவை நாட்டுப்புறவியல் குறித்து ஆய்வு செய்யும் ஆய்வு மாணவர்கள், கல்வி நிறுவனங்களில் நாட்டுப்புறவியல் குறித்து கல்வி கற்பதன் மூலம் இன்று வரை அழியாமல் பாதுகாக்க முடிகின்றது.

மக்கள் தொடர்புச் சாதனங்களாகக் குறிப்பிடப்படுகின்ற வானொலி, தொலைக்காட்சி போன்றவை நாட்டுப்புறவியலுக்கு மிகவும் பயனுள்ளவையாக விளங்குகின்றன. வானொலியும், தொலைக்காட்சியும் கற்றவர்களிடம்

மட்டுமல்லாது கல்லாத பாமரர்களிடமும் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளன. இம் மக்கள் தொடர்புச் சாதனங்கள் நாட்டுப்புறவியலுக்குப் பயனுள்ளவையாக அமைகின்றன என்பதற்குப் பல சான்றுகள் இருப்பினும் இங்கு நாம் ஒரு சான்றினைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். பேரா.அ.மு.பரமசிவானந்தம் தமது வாய்மொழி இலக்கியம் என்ற நூலை எழுதுவதற்கு வானொலியின் ஊக்கமே காரணம் என்று கூறுகின்றார். எனவே வானொலியின் வழி நாம் இதன் பயனை உணர்ந்து கொள்ள முடிகின்றது. மேலும், திரு.செ.அன்னகாமு திருச்சி வானொலி நிலையத்தில் தம்முடைய ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஒலிபரப்பப்பட்டு ஒலிப்பதிவும் செய்யப்பட்டுள்ளது என்று கூறுவதன் மூலம் வானொலி நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களுக்கும் பயனுள்ளதாக விளங்குவதை அறிய முடிகின்றது.

நாட்டுப்புறவியல் துறையின் வளர்ச்சிக்கு இதழ்களின் பங்கு குறிப்பிடத் தகுந்தது. தொடக்க நிலையில் தாமரை, கலைமகள், மஞ்சரி போன்ற இதழ்களில் நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழி போன்றவை இடம் பெற்றுள்ளன. இவை தவிர அமுதசுரபி, ஆனந்த போதினி, ஆனந்தவிகடன், கல்கி, சுதேசமித்திரன், தீபம் போன்ற இதழ்களிலும் இடம் பெற்றுள்ளன. மேலும், நாட்டுப்புறவியல் துறை சார்ந்தே வெளிவந்த, வெளிவரக் கூடிய சில இதழ்களை நாம் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மக்கள் தொடர்புச் சாதனங்கள், இதழ்கள்,தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் நாட்டுப்புற கதைகள், பாடல்கள் இன்னும் அழியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

**நாட்டுப்புற படைப்புகளின் நவீன வடிவங்கள்**

மரத் தொகுதி (ஜவுளி முத்திரையிடுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது) தயாரிப்பதற்கான இயற்கையான நாட்டுப்புற ஊடகம்அச்சிட்டு . பொதுவாக வெறுமனே வெட்டப்பட்டு, சில சமயங்களில் கசப்பான நிறத்தில் அல்லது ஸ்டென்சில் செய்யப்பட்டவை, அவை பிரபலமான பாடங்களை விளக்குவதற்கு உதவுகின்றன, சித்தரிப்பைக் காட்டிலும் யோசனையில் அதிக ஆர்வத்துடன் பல்வேறு புனிதர்களின் சிறிய அச்சுகள் ஐரோப்பாவில் பரவலாக தயாரிக்கப்பட்டன. காமிக் தீம்கள் பிரபலமாக இருந்தன, அதாவது "மேலாடையான உலகம்" மற்றும்

"மனிதன் தலைகீழானது" (எ.கா. "மீன் மனிதனைப் பிடிக்கிறது" மற்றும் பாத்திரங்கள், விளையாட்டுகள், பயண நிகழ்ச்சிகளுக்கான அறிவிப்புகள் மற்றும் சான்றிதழ்களுக்கான படிவங்களை உருவாக்கவும் பிளாக் பிரிண்டிங் பயன்படுத்தப்பட்டது.

**பிற கலைகள்**

மட்பாண்டங்கள், ஜவுளிகள், ஆடைகள் மற்றும் தளபாடங்கள் போன்ற உலகளாவிய தேவைகளுக்காக, நாட்டார் துறையில், சிறு கலைகளை சிறியதாக அழைக்க முடியாது, மேலும் வானிலை வேன்கள் மற்றும் ஸ்கேர்குரோக்கள் போன்ற அசாதாரண வடிவங்கள் படைப்பாற்றல் வெளிப்பாட்டிற்கு அடிக்கடி வாய்ப்புகளை வழங்குகின்றன மற்றும் பெரும்பாலும் அழகியலை உள்வாங்குகின்றன . உத்வேகம் , அதிநவீன உலகில், நுண்கலைகளுடன் அதிகம் தொடர்புடையது.

மட்பாண்டங்கள் மற்றும் ஜவுளிகள் இரண்டும் அன்றாடம் முதல் விரிவாக அலங்கரிக்கப்பட்ட வடிவங்கள் வரை பெரும்பாலும் குறியீட்டு அல்லது மிகவும் சித்திரமாக இருக்கும்; பொதுவான எடுத்துக்காட்டுகள் கூட ஒரு எளிய சீட்டு (களிமண் மற்றும் தண்ணீரின் கலவை அல்லது நெய்த பட்டையின் வடிவமைப்பால் அலங்கரிக்கப்படுகின்றன.

நாட்டுப்புறக் கலையை நிறுவப்பட்ட, அதிநவீன வகைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதற்கான எந்தவொரு முயற்சியும், ஒப்பிடுகையில் வெளிப்படுத்தினாலும், கலையின் கணிசமான பெரும்பகுதியை கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறிவிடுகிறது. அதிநவீன அழகியல் சிகிச்சைக்கு உட்படுத்தப்படாத பல குணாதிசயமான பொருட்கள் அவற்றின் மீது செலவழிக்கப்பட்ட புத்தி கூர்மையின் காரணமாக குறிப்பிட்ட ஆய்வு மற்றும் சேகரிப்புத் துறைகளாக மாறியுள்ளன - மாங்கல்ஸ் (சலவை பீட்டர்கள்), அச்சுகள், அலங்கரிக்கப்பட்ட முட்டைகள்,வானிலை வேன்கள் , டிகோய்கள், தூள் கொம்புகள், வர்த்தக அடையாளங்கள், ஸ்கேர்குரோக்கள் மற்றும் ஃபிகர்ஹெட்ஸ், ஒரு சில. செயல்பாட்டின் படி வகைப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க பொருள்களும் உள்ளன; எடுத்துக்காட்டாக, கழுதைகளின் நெய்த சேணத்தால் குறிக்கப்படும் விலங்கு கியர்ஸ்பெயின் , செதுக்கப்பட்ட மற்றும் வர்ணம் பூசப்பட்ட எருது நுகங்கள் மற்றும் செம்மறி கழுத்துகள், பித்தளை பதிக்கப்பட்ட மற்றும் குஞ்சம் போடப்பட்ட

தலைக்கவசங்கள் மற்றும் பாதுகாப்பு சக்திகள் கொண்டதாகக் கூறப்படும் ஆபரணங்கள் ஆகியவை நவீன வடிவம் பெற்றுத் திகழ்கின்றன.

**கள ஆய்வுமுறை**

நாட்டுப்புறவியலும் மானிடவியலும் கள ஆய்வு சார்ந்த e (Field oriented subject). சென்னைறி நாட்டுப்புறவியல் பாக்க, கொண்டாங்களஙறைகளும். ஆய்வின்றி நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வே செய்ய முடியாது என்கிறார் கென்னத் கோல்ட்ஸ்டெயின் (Kenneth Goldstein) அவர்கள். ஏனென்றால் நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழி, விடுகதை, நாட்டுப் புறக்கலை, நாட்டுப்புறத் தெய்வங்கள், நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் அனைத்தும் நாட்டுப்புற மக்களிடையே தலைமுறை தலைமுறை யாக வாழையடி வாழையாக நிலவி வருகின்றன. அவைகள் பல்லாண்டுக் காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. அவற்றைச் சேகரித்தால்தான். இத்துறையில் ஆய்வு மேற்கொள்ளப்படும். கள ஆய்வு இன்றி இத்துறையே இல்லை என்று கூறிவிடலாம். கள ஆய்வுதான் இத்துறைக்கு உயிர்நாடி என்றும் கூறலாம். மக்களது நம்பிக்கைகள் பாடல், கதை, கலை, ஆடல், பாடல் முதலியவற்றை விளக்குவதே நாட்டுப்புறவியல் என்றும் அஃது அனைத்து மக்களின் கூட்டுமுயற்சியால் உருவாக்கப்பெற்று தலைமுறை தலைமுறையாக வழங்கப்பெற்று, பயிற்சி பெற்ற ஆய்வாளர்களின் முயற்சியால் எழுத்துருவாக்கம் பெறுகின்றது என்ற கொட்டுத் கூரத் (Gertude P. Kurath) தின் கூற்றும் இங்குக் குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறவியல் வழக்காறு களைச் சேகரிப்பதே முதல் பணியாகும். எந்த அறிவியல் ஆய்விலும் சேகரித்தலும் (collection) வகைப்படுத்தலும் (classifi cation) ஆய்வு செய்தலும் (Analysis) இன்றியமையாத மூன்று முறைகளாகும். நாட்டுப்புறவியல் துறைக்கும் இம்மூன்று முறைகளும் பொருந்தும். இம்மூன்று முறைகளும் தன்னிச்சை யானவைகள் என்றாலும் ஒன்றையொன்று சார்ந்த வைகளாகும். கள ஆய்வில் சேகரிப்புப் பணியைச் (collection) செய்கிறோம்.

**ஆய்வுச்சிக்கலை எடுத்துரைத்தல்(Problem statement and analysis)**

சேகரிக்கும் முன்பு எவ்வகை ஆய்வு சிக்கலைத் தீர்க்கப் பயன்படும் என அறுதியிட்டுக் கொள்ளவேண்டும். எந்தவொரு ஆய்வின் அடிப்படை நோக்கமும் சில இன்றியமையாத வினாக் களுக்கு விடை காண்பதாக அமையவேண்டும் என்கிறார்

நாட்டுப்புறவியல் பேரறிஞர் ஜான் ஹெரால்டு பிரண்வாண்ட் (Jan Harold Brunvand) अ◌ा◌ंक.

i) வரையறை செய்தல்

ii) வகைப்படுத்துதல்

iii) மூலம்

iv) தோற்றம்

v) பரவுதல்

vi) மாற்றம்

vii) அமைப்பு

viii) செயல்-பயன்

ix) பொருளும் நோக்கமும்

x)பயனும் பயன்படுத்துதலும்

கருதுகோளை (Hypothesis) அடிப்படையாக எவத்து ஆய்வு செய்யவேண்டும். ஆய்வுச்சிக்கலே கருதுகோள் வடிவில் அமை கருதுகோள் தெளிவாக அமையவேண்டும். தரவு கட்கு நெருங்கிய தொடர்புடையதாகக் கருதுகோள் இருக்க வேண்டும். கருதுகோளை உருவாக்கிய பின்பு, எந்தச் செய்திகள் ஆராயின் ஆய்வுச்சிக்கலுக்கு முடிவு கிடைக்கும் என்பதே ஆய்வுச்சிக்கலைப் பகுத்தாராய்வதன் நோக்கமாகும். சான்றாக, வில்லுப்பாட்டை ஆராய விரும்பினால், திருநெல்வேலி மாவட்டத்தைக் களமாகக் கொள்ளவேண்டும். ஆய்வுச்சிக்கலைத் தீர்க்கத் தேவையான செய்திகளையும் விளக்கக் குறிப்புக்களையும் தேவையான செய்தி களையும் விளக்கக்குறிப்புக்களையும் வரையறுக்க வேண்டும் கள ஆய்வு செய்ய வேண்டிய கால அளவு (time) பற்றி முன்னரே திட்டமிடல்வேண்டும். ஆய்வுச் சிக்கலை நன்கு உணர்ந்து, அதற் கேற்றவாறு கருதுகோளை உருவாக்கி, தரவுகளைச் சேகரித்துப் பகுத்து ஆராயவேண்டும்.

கென்னத் கோல்டுஸ்டெயின் அவர்கள் சேகரிப்புத் திட்டங் களைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

**1. களஆய்வுத் திட்டங்கள்** (Survey Project)

எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படாத பகுதிகளில் இத்தகைய திட்டங்களை மேற்கொள்ளலாம். ஆங்கிலத்தில் இதனை (Survey Project) என்பர். காலமும் நிதியும் இவ்வாய்வுத் திட்டத்தில் கவனிக்கவேண்டிய தொன்றாகும்.

**2. ஆழ்ந்த ஆய்வுத்திட்டங்கள்** (Depth Project)

ஓரினத்தாரிடமிருந்தோ அல்லது வட்டாரக் குழுவிட மிருந்தோ நிலவும் அனைத்து வழக்காறுகளையும் தொகுக்கும் முயற்சியாகும். பலர் குழுவாகச் சேர்ந்து செய்யும் நீண்டகால ஆய்வாக இருப்பினும் பயனுடைய ஆய்வுத் திட்டங்களாகும்.

**3. உள்ளூர்த் திட்டங்கள்** (Local Projects)

களப்பணி ஆய்வாளன் ஒரு குடும்பம், உறவினர், அல்லது ஊரில் வழங்கும் வழக்காறுகளைச் சேகரிப்பதை இதன்கண் அடக்கலாம். கட்டபொம்மன் வரலாற்றைக் கட்டபொம்மன் வம்சாவழியினரிடமிருந்து சேகரிக்கலாம்.

வினாநிரல் (Questionnaire) நான்கு பகுதிகளைக் கொண்ட தாக இருக்கும்.

i ) நோக்கம்

ii) நெறிமுறைக் கட்டளைகள்

iii) தகவலாளி பற்றிய விவரம்

i iv ) வினானிரலின் உட்பகுதி

களப்பணி ஆய்வாளர் எடுத்துக்கொண்ட ஆய்வின் நோக்கத்தை விவரித்திருப்பார். பின்னர் வினா நிரலைப் பூர்த்தி செய்வதைப் பற்றிய விளக்கம் உண்டு. அதன்பின்னர் தகவலாளி பற்றிய குறிப்பும் வினாநிரலும் அமைந்திருக்கும்.

**ஆய்வு செய்தல்** (Analysis)

கள ஆய்வில் சேகரித்ததைப் பின்னர் வகைப்படுத்தி ஆய்வு செய்யவேண்டும். ஆயவுக்குப் வகைப்படுத்தலும் ஆய்வு செய்தலும் கள ஆய்வுக்கு பின்னர் செய்யவேண்டியவை எனினும் இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். சேகரிப்பும் கெடுத்தரம். தமிழகத்தில் மேற்கொஅமைந்தால், ஆய்வும் சிறப்பாக ஆமையும் தமிழகத்தில் ளகொண்ட பெரும்பாலான் றுய்வுகள் விளக்க ஆய்வாகவே உள்ளன. டாக்டர் பா. ரா. சுப்பு ஆய்வுகள் ஒப்பாரிக்குப் முறையை (Structural method) தாலாட்டு. பயன்படுத்தி ஆராய்ந்தார். நாட்டுப்புற மரபுகளை ஆராய வரலாற்றை அடிப்படையாகக்

கொள்ளவேண்டும் என்கிறார் ரிச்சர்ட் டார்சன் அவர்கள். இத்துறை வளம்பெற சமூக அறிவியல் துறைகளில் பயன்படுத்தப்படும் ஆய்வுமுறைகளையும் பின்பற்ற வேண்டும். பரிணாம வாதிகள் (Evolutionists) ஊடுருவிப்பரவலாளர்கள் (Diffusionists) அமைப்பியலாளர்கள் (structuralists) போன்றவர்களால் இத்துறை ஆய்வு வளர்ச்சி பெற்றது என்று கூறலாம். நிகழ்த்துக்கலை (performing folk arts) மேலைநாட்டில் ஒரு கோட்பாடாக உருவாகி வருகிறது. அதன் அடிப்படையில் கணியான்கூத்து, தெருக்கூத்து போன்றவற்றை ஆராயவேண்டும். முறையான, அறிவியல் சார்ந்த பல்துறை ® (Interdisciplinary approach) மேலைநாட்டில் காணப்படும் கீழ்க்கண்ட நாட்டுப் புறவியல் ஆய்வுக்கோட்பாடுகளை நமது ஆய்வுக்கும் பயன்படுத்த வேண்டும். அமெரிக்க நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சார்ட் எம். டார்சன் அவர்கள் பன்னிரண்டு கோட்பாடுகளைப் பற்றி விளக்கியுள்ளார்.

**வினாக்கள்**

1. சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறவியல் கூறுகள் விள்ளகுக.
2. திரைப்படங்களில் நாட்டுப்புறவியலின் தாக்கம் குறித்து விளக்குக.
3. பயன்பாட்டு நிலையில் உள்ள நாட்டுப்புறவியலை விள்க்குக.
4. நாட்டுப்புறவியலில் உள்ள சமூகவியல் கருத்துகளை ஆராய்க.
5. நாட்டுப்புறவியலில் உள்ள மானுடவியல் கருத்துகளை விளக்குக.
6. நாட்டுப்புறவியலில் உள்ள வரலாற்றியல் கருத்துகளை எழுதுக.
7. நாட்டுப்புறவியலில் உள்ள உளவியல் கருத்துகளை ஆராய்க.
8. நாட்டுப்புறவியலில் உள்ள மொழியியல் கருத்துகளை ஆராய்க.
9. நாட்டுப்புற படைப்புகளின் நவீன வடிவங்களை விளக்குக.
10. கள ஆய்வு முறைகளை விவரிக்க.

**பார்வை நூல்கள்**

1. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் அறிமுகம், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,பாளையங்கோட்டை.
2. டாக்டர்.சு.சக்திவேல்,நாட்டுப்புற இயல் ஆய்வு,மணிவாசகர் பதிப்பகம்,சிதம்பரம்.
3. ஆறு.இராமநாதன்,நாட்டுப்புறக்கலைகள், மெய்யப்பன் தமிழாய்வகம்,சிதம்பரம்.
4. சு.சண்முக சுந்தரம்,நாட்டுப்புறவியல், காவ்யா வெளியீடு,சென்னை.
5. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள்,மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

**முனைவர்ஆ.உஷா.,**
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
9790381487
ushaskv23@gmail.com